www.padippakam.com

# பிரான்ஸ் தமிழர் போராட்டம்

அக்கினிக்கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பிரான்ஸ் தமிழர் போராட்டம்

அக்கினிக் கவிஞர் **மா.கி. கிறிஸ்ரியன்**

விளிம்பு

படிப்பகம்

www.padippakam.com

முதல் பதிப்பு: 2009

© மா.கி. கிறிஸ்ரியன்

வெளியீடு: விளிம்பு

விற்பனை உரிமை: த பாபிரஸ், 1205 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி மாவட்டம், இந்தியா. தொலைபேசி: 04332 273444.

நூல் வடிவம்: த பாபிரஸ், அச்சாக்கம்: மணி ஆப்செட், சென்னை 5.

விலை: ரூ. 200

நன்றி: கே. கோபாலன், ஈரோப்பியன் லிமிடட் (கே. கேசவன்)

படிப்பகம்

www.padippakam.com

உலகமெங்கும் கிளர்ந்தெழுந்துள்ள
தமிழ் இளையோர் அமைப்பின் செயலூக்கத்திற்கு
இந்நூலை அர்ப்பணிக்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


ஆசியுரை 7
நயவுரை 9
அணிந்துரை 12
ஒற்றுமையின் வலிமையில் என்னுரை 14
பிரான்ஸ் தமிழர் போராட்டம் 21
பாரீஸ் மையத்திடலில் குதித்தனர் தமிழர் 28
இனிப் போராடும் நிலைப்பாட்டில் 31
புலம்பெயர்ந்தவர்-இடப்பெயர்வு 37
இரண்டாம் தலைமுறையின் நகர்த்தல்! 41
உண்ணாவிரதமும் கவனயீர்ப்பும்! 45
பகிஷ்கரிப்பு 50
அதிர்ச்சியும் ஆத்திரமும்! 53
வீதிப் போராட்டத்தின் விழிப்பு! 56
கருத்தும் கடமையும் 59
தொழிலாளர் தினம் 62
நினைப்பும் நிலையும் 66
வட்டுக்கோட்டைத் தீர்மானமும் வாக்கெடுப்பும் 69
ஈபில் கோபுரத்தின் முன் வாக்குறுதி 73
தமிழீழத்தில் மரண முகாம்கள் 76
கலைஞர்களின் பங்களிப்பும் கடவுளைப் பணிதலும் 80
தவிப்பும் கொதிப்பும் 83
ஊர்வலத்தின் எழுச்சி 89
அரசியலா? அஞ்சலியா? 96
வணங்காமண் 106
கொடிகளும் சின்னங்களும் 114


படிப்பகம்

www.padippakam.com


தலைமையின் உயிர்த்தெழுதல்! 118

யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கில் புலிகளின் நிர்வாகம் 125

பிரான்ஸ் தமிழர் போராட்டம் பற்றிய கருத்துக்கள் 136

தமிழீழப் போராட்டமும் புலம்பெயர்வாழ் தமிழ் மக்களும் 140

பேசாமல் பேசவைப்பார் பிரபாகரன் 144

அன்பு உறவுகளுக்கு ஒரு வேண்டுதல் 151

'அந்த ஐம்பது நாட்கள்' 153

ஏகோபித்த அபிலாசைகள் 155

தரங்களும் தவறுகளும் 159


படிப்பகம்

# ஆசியுரை

கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மைப் பலவிதமான பணிகளில் ஈடுபடுத்தி அறிவும் அனுபவமும் முதிர்ச்சி பெற்று இன்று புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தமது அர்ப்பணிப்பைத் தொடரும் கிறிஸ்ரியன் இன்றைய நிலைமைகளை எழுத்து மூலமும் படங்கள் மூலமும் ஒரு சிறிய புத்தக வடிவில் வெளிக்கொணரும் முயற்சியை மகிழ்ச்சியுடன் பாராட்டி வரவேற்கிறேன்.

70ஆம் ஆண்டுகள் எமது விடுதலைப் பயணத்தில் பல நிகழ்வுகள், மாற்றங்கள் நடந்த காலம். இளைஞர்கள் சிங்களச் சட்டம், கலாசாலை வசதிகள் வேலைவாய்ப்பு இல்லாமையால் பாதிக்கப்பட்டு இளைஞர்கள் மாணவர்கள் போராட்டக் களத்தில் குதித்த காலங்கள். இவைகளில் இணைந்து ஆசிரியர் கிறிஸ்ரியனும் பல பணிகளில் ஈடுபட்டவர். இவை களிலிருந்து பல அனுபவங்களைப் பெற்றவர்.

1983ஆம் ஆண்டு தொட்டு சிங்களவர்களின் எமக்கெதிராக நடத்திய கொலைகளைத் தொடர்ந்து பிரான்சுக்குப் பெரும்தொகையான ஈழத் தமிழர் புலம்பெயர்ந்தனர். திசையின்றி, தொடர்புகளின்றிப் பலவிதமான பிரச்சினைகளை எதிர்கொண்ட காலங்களில் இந்த நூலாசிரியர் ஈழத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கத்தவனாகவும் எரிமலை என்னும் செய்தித்தாளின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அதைத் தொடர்ந்து இரண்டு நாவல்களையும் இரண்டு சிறுகதைகளையும் மூன்று கவிதை களையும் வெளியிட்டார்.

அத்துடன் தன்னால் இயன்றளவு நாட்டுக்கூத்து அல்லது கவிதை எழுத்தாளரை ஊக்குவித்தார்.

இந்த ஆண்டு முதற்பகுதியில் எமது போர்க்களத்தில் நடந்தேறிய கொடூர நிகழ்வுகளையும் அதே காலத்தில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் மத்தியிலும் நடந்தவைகளைத் தன்னுடைய அனுபவம் நிறைந்த கண்களால் பார்த்து மனத்தில் உள் வாங்கியவைகளைப் பயனுள்ள விதமாகத் தமது வார்த்தையாலும் அதற்கேற்ற படங்களுடனும் இந்நூலில் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுகின்றார்.

www.padippakam.com

ஆசிரியருக்கு வாழ்த்துக் கூறி எனது தமிழ் சகோதரருக்கு இவ் வெளியீட்டைப் பரிந்துரை செய்கின்றேன்.

பணியாளன் எ. யே. இம்மானுவேல்

Prof. Dr. S. J. Emma
Sandweg 4
48720 Rosendahl
Tel. 02545/919574
Fax. 02545/919575
email: es.jay.raj.@hotmail.de



படிப்பகம்

www.padippakam.com

# நயவுரை

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். முகம் என்பது அகத்தின் அழகைத் தெரிவிப்பது மாத்திரமின்றி முகத்தின் அழகையும் முகவரியின் அழகையும் பிரதிபலித்தறியும் ஒன்று. அந்த வகையிலே உலக முகட்டிலே தமிழினத்தின் முகவரியை எழுதியவரும் தமிழினத்தின் அகத்தின் அழகையும் முகத்தின் ஞானியாகவும்-என்றென்றும் உலகத் தமிழர்களின் இதயங்களிலே வாழும் என்றும் எம் தலைவன் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் ஆழமாக நேசிக்கப்படும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சிறந்து நிற்கும் படைப்பாளிகளின் பார்வையில் உயர்ந்து நிற்பவர் அக்கினிக் கவிஞர்! தமிழன் அழிவுக்கு எதிராக பிரான்சில் நடத்தப்பட்ட போராட்டங்களைக் குறிப்பாக ஜனவரி 1, 2009 தொடக்கம் மே 17, 2009 வரையான காலப்பகுதியில் கொடுமையான தமிழின அழிப்பு எமது தாய்நிலத்தில் சிங்கள அரசாலும்-அதன் நண்பர் களாலும் அரங்கேறிக்கொண்டிருந்த வேளையில் பிரான்சில் பல்வேறு இடங்களில் புலம்பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங் களை! பதிவு செய்திருக்கும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமையினைப் பல்துறைக் கலைஞர் அக்கினிக் கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன் அவர்கள் ஆற்றியுள்ளார்.

கவிஞரைப் புலத்தில் அறியும் முன்னே அவரது பெயரையும் சமூகத்தை நேசித்தெழும் செயல்பாடுகளையும் நான் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி யில் கல்வி கற்கும் காலத்தில் நன்கு அறிவேன். திருமறைக் கலா மன்றத்தின் மூத்த பாடகரும் எனது தாய்மாமனுமாகிய திரு என்.எம். பாலச்சந்திரன் அவர்களுடைய நண்பன் என்னும் வகையிலேயும் எனது ஊராகிய நாவாந்துறை மண்ணுக்கும் கவிஞரின் ஊராகிய குருநகர் மண்ணுக்கும் இடையேயான அந்த நீண்ட இறுக்கமான உறவின் மூலமும் அவரது கலைப்பணிகளை நன்கறிவேன். நாட்டுக்கூத்து மூலம் நான் அறிந்திருந்தேன். ஏனெனில் நான் பிறந்த நாவாந்துறை மண்ணில் நாட்டுக்கூத்து புகழ் பெற்றதாக விளங்கியது. பல நாட்டுக்கூத்துக் கலைஞர்களையும்- அண்ணாவி மார்களையும் உருவாக்கிப் பெருமை சேர்த்ததும் குறிப்பிடத்தக்கது.

கவிஞர் மா.கி. கிறிஸ்ரியனை பிரான்சில் சந்தித்தபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். என்னைக் கண்டவுடன் உரிமையோடு புன்னகைத்துக் கைகுலுக்கி கள்ளம் கபடமற்ற வெள்ளையான பேச்சால் என்னை



படிப்பகம்

வெகுவாகக் கவர்ந்து நின்றார். யாழ்ப்பாணம் அலைகடல் கொஞ்சும் குருநகரைப் பிறப்பிடமாக்கிக்கொண்ட இவர் தனது இளம் வயது முதலே தமிழர் தாயக விடுதலை மீது ஆழமான பற்றுக்கொண்டிருந்தார். தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில்தான் எழிச்சிமிகு நகர்வுகளிலே பங்கேற்றவர். குருநகருக்கான இளைஞர் பேரவையின் தலைவராகச் செயலாற்றியவர்.

1975 புரட்டாசி 25ஆம் நாள் சிங்களப் போலீசார் இளைஞர்களைக் கைதுசெய்து சிறையில் வைத்தனர். இவருடைய தாயாரும் அன்று மிக மோசமாக சிங்களக் கைக்கூலிகளால் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது... தமிழகத்திலே தமிழீழத் தேசத்திற்காகவும் தந்தை பெரியாரின் கருத்து களைத் தாங்கி நடந்த அறிஞர் அண்ணாமீது மிகுந்த மரியாதையும் பாசமும் கொண்டு அவருடைய எழுத்துகளை மிகவும் ஆர்வத்தோடு படித்து அவரைத் தனது இலக்கிய பணிக்கான மானசீகக் குருவாக வரிந்து கொண்டவர்.

குருநகர் இயங்கிய கழகங்களில் தனது ஆளுமையைச் செலுத்தி பலரது பாராட்டுகளைப் பெற்றவர். யாழ் திருமறைக் கலா மன்றத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவர். இந்தியாவிலே திருமறைக் கலா மன்றத்தால் மேடையேற்றப்பட்ட நாடகத்தில் இருவேறுபட்ட பாத்திரங்களை ஏற்று நடித்துப் பாராட்டைப் பெற்றவர். இசை நாடகங்கள் - வரலாற்று நாடகங்கள் - தயாரித்து எழுதி மேடையேற்றி உள்ளவர் மா.கி. கிறிஸ்ரியன். இன்று தொலைக்காட்சிகளில் இப்பணியில் தீவிர கவனமெடுப்பவர். பிரான்சில் மேடையேறிய சங்கிலியன் நாட்டுக்கூத்து தயாரித்துப் புதுவடிவில் கொடுத்தவர். தமிழரின் பாரம்பரியக் கலை வடிவமான நாட்டுக் கூத்தின் பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவரானதால் நாட்டுக்கூத்து வடிவத்தில் போராட்ட வரலாற்றை எழுதி மேடையேற்றி உள்ளார். ஒரு கவிஞராகத் தன்னை அடையாளப்படுத்தும் இவர் பல கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இவரது கவிதைத் தொகுதிகளுக்குள் என்னைக் கவர்ந்தது எமது தேசியத் தலைவரைப் பாடிய 'வெண்பாவில் நீண்ட கவி நெருப்புத் தாலாட்டில் நீ பிறப்பாய்' வெண்பாவாகும். எமது தேசியத் தலைவர் கலைஞர்களை எப்படிப் பார்த்தார், எப்படி நேசித்தார், எவ்வாறான நெகிழ்வுத் தன்மையோடு அவர்களை அணுகினார் என்பதை அந்த மண்ணிலே நின்று அனுபவித்தவன் நான்! அவருடைய அன்பை அதிகமாகப் பெற்றவர்கள் குழந்தைகளும் கலைஞர்களும்தான். தமிழ்த் தேசத்துக்காகச் செயலாற்றிய கலைஞர்களை அவர் தன் நெஞ்சிலே சுமந்தவர். தமிழினம் கொடிய அடக்குமுறைகளுக்குள் சிக்குண்டு தவித்த போதெல்லாம் முதன்முதலிலே குமுறியெழுந்து தமது படைப்புகளால் தமிழ் மக்களிடையே எழுச்சியை

ஏற்படுத்தியவர்கள்-தமிழ்த் தேசியக் கலைஞர்கள்! (இது ஓர் ஆய்வுக்குரிய ஒரு வரலாற்றுப் பதிவாக்கப்பட வேண்டிய கட்டாயக் கடமை) யாராவது அதை மனமுவந்து செய்யலாம். அதைக் கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன் மேற்கொள்ளப் பணிக்கிறேன்.

இந்தக் கலைஞர்களை எமது தேசியத் தலைவர் என்றும் பெருமைப் படுத்தத் தவறியதே இல்லை. போராட்டங்களை உருவாக்கலாம். ஆனால் போராட்டக் கலைஞர்களை உருவாக்குவது கடினம் என்பது அவர் கருத்து. அதனால் போராளிக் கலைஞர்களின் வளர்ச்சிக்கு மிகுந்த ஆதரவு வழங்கியவர். மொத்தத்தில் ஒரு கரும்புலி அவருக்கு அருகில் நிற்பது போன்றுதான்! கலைஞர்கள் அவருக்கு நெருக்கமானவர்களாக இருந்தார்கள் அவரது அன்பினால்தான் பல கலைஞர்கள் போராளிகளாகிக் களத்திலே வீரச்சாவடைந்தும் உள்ளார்கள்! இந்த வரலாற்றுக் காலகட்டத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைக்காக ஈழத்தமிழினம் சிந்திய கண்ணீரும்-செந்நீரும்-கொடுத்த விலைமதிப்பற்ற உயிர்களும்-இந்த உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டவில்லை! அதிலும் இதற்குக் கொடுமுடி வைத்தாற்போல் முள்ளிவாய்க்காலில் எனது உறவுகள் துண்டுதுண்டாக கொத்துக்கொத்தாகப் பிஞ்சாகவும்-பூவாகவும் கொல்லப்பட்ட வேளை... உலகமே வேடிக்கை பார்த்து நின்றது..!

புலம்பெயர் தெருக்களில் நாம் கொட்டும் பனியிலும் மழையிலும் குழந்தைகளும் இளையோரும்-முதியோரும் நீதியோடு போராடிய போதும்... இந்த உலகு கண்மூடி நாடகமாடியது! எமது குரல் நீதியோடு ஒலித்த போதும்... அவர்களது இதயக் கதவு ஏனோ திறக்கவில்லை! எமது தேசிய விடுதலையை நசுக்க இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் உலகே பணிந்துபோனது! ஐக்கிய நாடுகள் சபை எமக்கு மட்டும் இல்லாமல்போனது...!

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தர்மத்துக்கான போராட்டத்தை நாளைய உலகிடம் நியாயம் கேட்கப்போகும் எமது அடுத்த தலை முறைக்கான பதிவாகவும் ஆவணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாதலால் கவிஞர் அவர்கள் இதனைப் பதிவாக்கியுள்ளார். இதனால் இந்தக் கவிஞரும் எமது தேசத்தின் ஆன்மாவாகிய என்றென்றும் எம் தேசியத் தலைவரான மேதகு வே. பிரபாகரன் அவர்களுக்கு நெருக்கமாகி... உறவாகி அவருடைய அன்புக்குரியவராகி நிற்கின்றார். இதைவிட இவரை எப்படி வாழ்த்துவது? வாழ்த்தி இவர் பணியை வணங்குகின்றோம்.

அ. மைக்கல் கொலின்ஸ்
முன்னாள் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்

www.padippakam.com

## தமிழ் இளையோர் அமைப்பு
## பிரான்ஸ்

# அணிந்துரை

ஈழத் தமிழர்களது அடிப்படை உரிமைக்கான போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தவும் அடுத்த தலைமுறை அறிந்துகொள்ளவும் உதவும் விதமாக இந்தப் பெரும் முயற்சியில் அக்கினிக் கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன் ஈடுபட்டுள்ளார். அவர்களால் பிரான்ஸ் தமிழ் இளையோர் சார்பாக இந்த நூல் வெளிவருவதையிட்டு ஆசிரியருக்கு முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்: 2009ஆம் ஆண்டு புலம்பெயர் தேசங்களில் ஈழத் தமிழர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் வரலாற்றால் மறக்கப்பட்டுவிட முடியாது! சிறிலங்கா அரசு மேற்கொண்ட பாரியத் தமிழரின் அழிப்பிற் கெதிராக பிரான்ஸ் தமிழ் இளையோர் பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து மேற்கொண்ட இப்போராட்டங்களில் அனைத்துத் தமிழர்களும் உணர்வோடு கலந்துகொண்டு வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினார்கள்.

சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பு யுத்தத்தால் ஈழத் தமிழர்கள் கோபம் கொண்டு புலம்பெயர் தமிழர்கள் அவர்களைக் காப்பாற்றக் கோரி தாம் வாழும் தேசங்களை நோக்கி எழுப்பப்பட்ட அவலக் குரல்களின் பதிவுகள் அவை. இவற்றைப் பதிவுக்குக் கொண்டு வந்துள்ளமை பெரிய பெறுமதி வாய்ந்த பொறுப்பு. மே 06, 2009 அன்று வகை தொகையின்றி ஈழத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட நிலையில் புலம்பெயர் தமிழர்கள் வெடித்துக் கிளம்பினார்கள்!

தமது வரலாற்று ரீதியான தாயகத்தை மீட்க மேற்கொண்ட நீண்டகால அரசியல் போராட்டம் தோல்வியைத் தழுவிய நிலையில் தமிழீழ மண்ணைச் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப் போராடிய விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நிராகரித்த சர்வதேச சமூகம் சிறிய



படிப்பகம்

www.padippakam.com

நிலப்பரப்பில் உள்ள விடுதலைப் புலிகளையும் அவர்களோடு இருந்த தமிழ் மக்களையும் யுத்தம் மேற்கொண்டு கொன்று குவித்த வேளையிலும் மௌனத்தையே அடைகாத்தது. இதன் காரணமாகவே நாங்கள் வாழும் நாடுகளெங்கும் மக்களைக் காப்பாற்றும்படி பெரும் போராட்டங்களை மாதக்கணக்கில் தொடர்ந்து நடத்தினோம். மகிந்த ராயபட்ச ஆட்சிக்கு வந்தது முதலே விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழர்களின் பேரம் பேசும் பலத்தைச் சிதைத்து விடலாம் என்று நம்பினார். அதன் காரணமாக அவர் ஆட்சிக்கு வந்த காலம்முதல் தமிழருக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை வேகப்படுத்தினார்.

தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கடத்தப் பட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டார்கள். தமிழ் யுவதிகள் பாலியல் வதைகளை அனுபவித்தார்கள். மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தமிழ்ப் பெண்கள் துன்புறுத்தப்பட்டார்கள். சிங்கள இராணுவத்தின் குண்டு வீச்சுகளால் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தத் தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்துமாறு உலகநாடுகளைக் கோரி புலம்பெயர் தமிழர்களால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டங்களால் அப்போது சிறிலங்கா நடத்திய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாதுபோயினும், எங்கள் வலிகளை நாங்கள் வாழும் தேசத்து மனங்களில் விதைக்க முடிந்தது.

யுத்தக் களத்தில் விடுதலைப் புலிகள் வெற்றி கொள்ளப்பட்ட போதும் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழீழ மக்கள் அந்தப் போராட்டத்தின் நியாயங்களை உலகநாடுகள் எங்கும் புரிய வைத்துள்ளார்கள். பிரான்ஸ் தமிழ் இளையோர் இந்தப் போராட்டத்தின் மூலம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளையும் அவலங்களையும் பிரெஞ்சு ஊடகங்களுக்குப் புரிய வைத்துள்ளார்கள். எங்களது பிரச்சினைகளைப் பிரெஞ்சு அரசுக்கும் மக்களுக்கும் புரிய வைப்பதில் நாம் வெற்றி பெற்று வருகின்றோம். புலம் பெயர் தமிழர்களால் நிறுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய போர்க்களத்தின் ஊடாக ஈழத் தமிழர்களுக்கு நீதியான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்வரை பிரான்ஸ் தமிழ் இளையோர் உறக்கம் கொள்ளப் போவதில்லை. நாங்கள் நடத்திய இந்தப் போராட்டங்களைப் பதிவாக்கி யுள்ள பிரான்ஸ் தமிழர் போராட்டம் என்னும் இந்த நூலைப் பாராட்டி வரவேற்கின்றோம்.

*நவம்பர் 20, 2009*

த. மகிந்தன்
*தலைவர்*



படிப்பகம்

www.padippakam.com

# ஒற்றுமையின் வலிமையில் என்னுரை

*மனிதர்களின் ஞானமும் புத்திசாலித்தனமும் புத்தகங்களில் இருக்கின்றன. அவை மற்றவர் மனங்களில் விதைகளைத் தூவி வரும் தலைமுறையில் எண்ணற்ற செயல்களையும் சிந்தனைகளையும் ஏற்படுத்துகின்றன - பிரான்சிஸ் பேகன்.*

*எல்லாக் காலத்திலும் எல்லா வகையிலும் மனிதர்களை நம்புவதே உயர்ந்த பண்பாடு. அதுவே ஒப்பற்ற தன்னம்பிக்கை என்றும் சொல்லலாம்! யாரையும் நம்பாமல் உள்ளூர ஐயம் கொள்ளும்போது தன்னையும் நம்பாமல் தன்னம்பிக்கையும் விடுபட்டுப் போய்விடும். சமூகப் பிராணி யான மனிதன் சமூகத்தோடு இணைந்து பிணைக்கப்பட்டவன். இதிலும் தமிழன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் ஒப்பற்ற வார்த்தையில் உயர்த்தப்பட்டவன். மனிதனை மனிதன் - குறிப்பாகத் தமிழன் தமிழனை - நம்பாமல் வாழ்ந்த வாழ்வின் வழி தவறுதலால்தான் தமிழனின் ஒற்றுமை யும் ஒன்றிணைந்த செயல்பாடும் பெரும் வெடிப்புக்கு உள்ளாயின. இந்த வெடிப்பு இன்றுவரை சீரமைக்கப்படவில்லை! இச்சீரமைப்பு வன்னிக் கொலைகளைக் கண்ட பின்பும் ஒரு சிறந்த சீரமைப்புக்கு உள்ளாகுமா என்பதை ஏக்கத்தோடு விருப்பு வெறுப்போடு தான் நோக்கும். நோக்கு தலிலும் ஒற்றுமையும் ஒன்றிணைந்த செயல்பாடும் தொங்கி நிற்கின்றன. பிரான்சில் நடந்த போராடுதல் ஒன்று கூடுதல் கவன ஈர்ப்புகள் ஊர்வலங்கள் அனைத்திலும் எல்லோருடைய முழக்கமாய் இருந்து வந்தது 'ஒற்றுமை' பற்றிய ஒன்றிணைவின் நிலைப்பாடுதான்.*

*ஒற்றுமையின்மை வலிமையைக் கெடுக்கும். ஈழத்தில் வடக்குக் கிழக்குப் பிரதேச வாதத்தின் மூலம் தமிழர்களிடையே நிரந்தரமான பிளவு ஒன்றை உருவாக்குவதன் மூலம் சக்திவாய்ந்த ஒற்றுமைக்கு விழுந்த பேரிடிகளை உருவாக்கியவர்கள் பலர். பல கட்சிகளின் அரசியல் தலைவர்கள். முக்கியமான துரோகி யாரெனத் தெரியும் - இனித் தமிழன் புலத்துவாழ் தமிழன் - முன்னெடுக்கும் செயல்பாட்டில் தமிழன் ஒற்றுமைக் கான வழிகள், சிந்தனை, சக்தி, உறுதி ஆகியன பெறுதியுள்ளவையாகத் திகழ வேண்டும். சாதித் தடிப்புகளும் பிரதேச நீட்டல்களும் வேற்றுமை களும் கைவிடப்பட வேண்டும். இன்றும் பிரதேச நிலைப்பாடு*



படிப்பகம்

தமிழரிடமும் புலத்துத் தமிழனிடமும் புற்றீசல்போல் புரையோடி வருகிறது! மட்டக் களப்பான், திருகோணமலையான், யாழ்ப்பாணத்தான், வடமராச்சியான், தென்மராச்சியான், வன்னியான் அனைவரும் நான் மேலான், அவன் கீழான் என்று சொல்வதை விட்டுவிடுங்கள். 'நான் தமிழன்' என்று சொல்லி நிமிருங்கள். ஒற்றுமையைக் கற்றுக்கொடுக்கக் கையாள வேண்டும். புலத்தில் இப்போது பதவி பொறுக்குதலில் பங்கு போடப் படமெடுத்தாடுகின்றீர்கள்! எல்லாப் பக்கத்தாலும் ஒற்றுமைக் கான ஒருகுரல் உயர்வாகக் கேட்கவில்லை! பிரிவாகவே கேட்கப்படுகிறது. இதன் தாக்கம் ஆரோக்கியமானதல்ல. போராட்டத்தின் பன்முகப் பிரச்சினைகள் - அரசியல் வழிநடத்தல் பிரச்சினைகள் - மிகப்பெரும் கேள்வியாக இன்று எழுந்து நிற்கின்றது. இந்த ஒற்றுமையற்ற இனத்தின் நோய்க்குரிய காரணங்கள் குவிந்து எழுந்து புலத்துத் தலைமுறையையும் துரத்திவரத் தொடங்கிவிட்டது. தலைமுறையின் புத்தியின் சித்திக்கு அறிவு சார்ந்த சாதித்தல் உண்மையைத் தேடி இழுத்துச் செல்கிறது. இந்த ஈர்ப்பில் கோழையாக வேடதாரியாகத் தலைமுறையினர் கீழ்மையடையாது மேன்மை நிலைக்கு ஒற்றுமையின் ஒன்றுகூடலுக்குத் தடையாகவுள்ள துர்ப்பாக்கியத்தின் ஆணிவேரைப் பிடுங்கி எடுக்க வேண்டும். தமிழன் வாழ்க்கையில் மீண்டும் இன்று கிளம்பியுள்ள போட்டா போட்டிகள், பாசாங்குகள், குரோதங்கள், தட்டிக்கழித்தல், தலைக்கனங்கள் எதுவுமில்லாத சமூகக் கட்டமைப்புக்கான ஒற்றுமையின் வலிமை புடமிடப்பட வேண்டும். உலகில் குற்றமில்லாத மனிதன் இன்னும் பிறக்கவில்லை! குற்றம் ஏன் நிகழ்கிறது? எல்லாம் தெரிந்தவர்போல் நடிப்பதால். இத்தகைய இழிகுணத்தோர் புலத்தில், பிரான்சில் அதிகம்பேர் உண்டு!

எதையும் கேட்கவும் ஒத்துக்கவும் மாட்டார்கள். தெரியாததைத் தெரியா தென்று ஒப்புக்கொள்ளும் போது அறிவின் தெளிவைப் பாமரன் அறிய முடியும். பூப்போன்ற வார்த்தைகளைத் தொடுப்பது கண்டு மதிப்புப் பெறும். அந்த மதிப்புரை ஒற்றுமைக்கான பரப்புரைக் கோர்த்தலாக மிளிரும். இத்தகைய சேர்தல் வெற்றியளித்த வேளையில்தான் முயற்சி கைவிட்டுப் போனதை உணர்ந்து, இனியும் எதிர்காலத்தை இருண்டதாக்க வேண்டாம்! புலத்துவாழ் தமிழன் எடுக்கும் ஒற்றுமைக்கான முயற்சி மேலும் மேலும் அதிகரித்தால் மாபெரும் வெற்றியாகிவிடும். முயற்சி செய்யாமல் இருப்பீர்களானால் தலைமுறையினரின் நம்பிக்கை பெரும் தோல்வியைச் சந்திக்க நேரிடும். அதுவே நாம் எழும்ப முடியாத பலவீனத்தை உண்டாக்கும். இனித் தமிழனைக் காப்பாற்ற முடியாத நிலையை உருவாக்கும். தமிழர்களின் நடவடிக்கைகளைப் பல மட்டங் களின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவருவதற்கான திறமைவாய்ந்த புத்திஜீவிகள் சர்வதேசமெங்கும் வாழ்கின்ற தமிழர் மத்தியில் தேவை.

அத்தகையவர்கள் தமிழர் வாழ்க்கையின் முழுத்தோற்றத்தையும் பின்னணி களையும் நடைமுறைச் சாத்தியங்களையும் அரசியல் அணுகுதலையும் உணர்ந்தவர்களாகச் செயல்பட வேண்டும். விரிந்து விவரித்துத் தெரிந்து அறிந்து பரந்து கற்பனையும் கல்வித் திறமையும் மனிதத்துவத்தின் ஆழ்ந்த அனுபவமும் கொண்டவர்களாலேயே தமிழர்களைக் கட்டியாள முடியும். இத்தனையும் இதுவரை கால வரலாற்றில் புலிகளின் நிர்வாகம் சாதித்தது. இருந்தும் சிறப்புமிக்க பல்துறை சார்ந்த அறிஞர்கள் வல்லுநர்கள் நிபுணர்கள் ஆகியோரிடையே ஒன்றிணைந்த இணைவு இல்லாத நிலை தவறென இன்று கூறுவதைக் காண முடிகிறது! இனிமேலும் ஒற்றுமை கைகூடா விட்டால் தமிழனின் ஒற்றுமைப் பலத்துக்கு அது பெரும் சவாலாகவே இருக்கும். தலைமுறையினரின் வழிநடத்தலுக்கு இந்த ஒருங்கிணைப்புப் பணி மிகவும் முக்கியத்துவம் பெறுவதையும் அவதானிக்கலாம். தமிழரின் விடுதலை, சுயநிர்ணயம், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், உரிமை, சமுதாயக் கட்டுப்பாடு, கலை இலக்கிய வளர்ச்சி முதலான பல்வேறு மட்டத்திலான சகல துறைகளிலும் புரட்சிகரமான மறுமலர்ச்சி தோன்ற வேண்டும். விடுதலையடைந்த நாடுகளை முன்வைத்து நமது போரிடுதல் வேகமடைய வேண்டும்.

இந்த ஒன்றிணைந்த கூட்டுறவு வாழ்க்கையின் முக்கியத்துவம் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் ஏற்படாவிட்டால் தமிழனைக் காப்பாற்ற முடியாது என்று சொல்ல நான் வரவில்லை! முயற்சி, நம்பிக்கை, தளராத மனநிலை, நம்மை நாமே நிர்ணயம் செய்யும் குறிக்கோள், தவறாத செயல் பாட்டின் முழுமுயற்சி ஆகியன வெற்றியை நமதாக்கும். இவற்றாலும் முடியாவிட்டால் மேலும் தமிழன் சர்வ நாசத்தையே அடைவான்!

இதற்கு மத்தியிலும் நன்னடத்தையும், இனத்தின் பற்றில் தூய்மையும் நேசிப்பும் கொண்டவர்கள் பொறுப்புகளை ஏற்றுப் பொறுப்புடன் காரியங் களை நிறைவேற்ற வேண்டும். தலைமுறையினருக்கு மன எழுச்சியை, உற்சாகத்தை, ஆர்வத்தை ஊட்டக்கூடிய ஊற்றுகளோடு தொடர்புகள் - அறிவியல் ஈடுபாட்டுடன் வேரூன்றி கிளைபரப்பி விழுதுகள் வீரியமாய்த் தொங்கும் ஒற்றுமைக்கான தொடர்புகள் - ஆரத் தழுவிட வேண்டும். புதிய விழிப்பு, புதிய சமுதாயம், புதிய கண்ணோட்டம், புதிய தேடல், புதிய பரிணமிப்பு ஆகியன வேகமாகப் பரவும். புலம் பெயர்ந்தோரிடையே ஒருவகை சோம்பேறி வர்க்கமும் இருக்கிறது! உழைக்காமல் அலுக்காமல் அலுங்காமல் களைக்காமல் இலவச சுகம் காணும் பேர்வழிகள் இவர்கள். இதற்குக் காரணம் பிரெஞ்சு அரசாங்கத்தின் தர்மப் படியளப்பாகவும் இருக்கலாம். இந்த வர்க்கத்திலிருந்துதான் சில பாரிய பழுதான நோக்குதலும் படுமோசமான தரக்குறைவுகளும் எழுகின்றன! செல்வச் செழிப்பில் மிதக்கும் வேறொரு வர்க்கம் 'நேஷனாலிடி' தலைக்கனம் பிடித்து

www.padippakam.com

அலைகிறது. இத்தலைக்கனத்தில் குடும்பத்தில் எல்லோரும் ஈழத்தை விட்டுப் புலம்பெயர்ந்த இறுமாப்புத் தொனியில் பேசி நடப்பவர்கள். இப்படியானவர்களின் அநீதியும், அநாகரிகமும், அநியாயமும் படுமோச மான விளைவுகளை உருவாக்குகின்றன. இவர்களுக்குள்ளிருந்து எமக்கு எதிரிகள் அதிகமாகப் புறப்பட்டனர்! இவர்களால்தான் பல வடிவான செல்லரிப்புகள் புறப்படுகின்றன! 'ஒற்றுமைப்பட' தடைவிதிக்கும் அதர்ம மான இவர்களின் அணுகுதல் அநாகரிகமாக இருக்கிறது. இந்தவிதமான அநீதியை அகற்றத் துணைநிற்க வேண்டுமாயின் உண்மையான தமிழன் உத்தமமான தர்மம் சார்ந்து இந்தத் தலைமுறைக்கு அவசியமான உத்தம அறநெறியில் நின்றிட வேண்டும். மறம் பெறும் வழிகளைப் பின்பற்றி தலைமுறையின் வாழ்வியலோடு நல்லுறவாகி சமதர்மப் பூங்காவில் நல்மலர்களின் மணம்வீசிடும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பவேண்டும். இஸ்ரவேலரை நினைவில் கொண்டு அவர்கள் கட்டியெழுப்பிய நாட்டின் எழுச்சிக்குத் துணைநின்ற நெறியைக் கிரகித்துத் தமிழன் உறுதியுடன் ஓரணியில் நிற்பானேயானால் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் எந்த ஊடறுப்பும் சிறு தூசிபோல் தட்டப்பட்டு விடும். அமைதியற்ற ஆன்மாவை ஆட்கொள்ளத் திறமை வாய்ந்தது நம்பிக்கைதான் என்பதில் நம்பிக்கை கொள்வது சாலச் சிறந்ததாகும். 'உன்னதமான எண்ணங்கள் மொழியைச் சார்ந்தனவாக இருப்பதில்லை' என்று றஸ்கினே கூறியிருக் கிறார். பிரான்சில் நடந்த போராட்டங்களை ஊர்வலங்களை பிரெஞ்சு மொழியில் எழுதாமல் 'என்னடா இவன் தமிழில் எழுதியிருக்கிறான் என்று கேள்வி எழவும் வாய்ப்பிருக்கிறது'. அதற்கு நான் என் மொழியறிவு போதாமை என்று கூற வரவில்லை! நான் இங்கு வாழும் காலத்தில் என் தமிழ் மொழியில்தான் அதிகளவு ஈடுபாடு கொண்டுள்ளேன். இந்த நேரத்தில் ஆங்கில எழுத்தாளரான சுப்பிரமணியம் சிவநாயகம் அவர்களின் 'பணிவான வேண்டுகோள்' என் நினைவுக்கு வருகிறது.

'ஆயிரமாயிரம் மைல்கள் கடந்து அந்நிய மண்ணில் புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு ஈழத்தமிழனின் இதயத்திலும் ஏதாவதொரு துன்பியல் வாழ்ந்து கொண்டிருக்கும். அது ஒரு சிறுகதையாக இருக்கலாம்; குறுநாவலாக இருக்கலாம்; அல்லது நாவலாகக்கூட இருக்கலாம்- எழுத்தாளன்தான் அவற்றை எழுதவேண்டும் என்றில்லை. இதற்காக நீங்கள் எழுத்தாளனாக மாற வேண்டும். வாசகர்களான நீங்கள் அந்த அவலக் கதையை எழுதி ஈழத் தமிழர் வரலாற்றுப் பதிவுகளாக எதிர்காலச் சந்ததிக்கு ஆவணங்களாக அவற்றைப் பதிக்க வேண்டும். உயிரையும் உடைமையையும் ஏன் உள்ளத்தையும் கசக்கிப் பிழியும் நிகழ்வுகளையும் தாங்கிக்கொண்டு மயிரிழையில் தப்பி வந்தவர்களின் அனுபவங்கள் தமிழ் ஈழ வரலாற்றுக் காவியத்தில் அத்தியாயங்களாக வரவேண்டும். இதுவே நான் உங்களிடம் விடுக்கும் பணிவான வேண்டுகோள். உங்களுக்கும்



படிப்பகம்

எனக்கும் வயதில் வித்தியாசம் இருந்தாலும் பிரான்ஸ் என்னும் அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்த இடத்தில் எந்த வித வித்தியாசமும் இல்லை. ஆங்கிலேயே ஆட்சியில் பிறந்தேன்; அதே ஆட்சியில் 18 வருடங்கள் வளர்ந்தேன். தமிழ் இனத்துக்கே எதிரான அநியாயங்களையும் அட்டூழியங்களையும் மேற்கொண்ட சிங்கள அதிகாரவர்க்கத்தை என் பேனா முனை தட்டிக் கேட்டது! நான்காவது மாடிக்கு அழைத்து எனக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்தபோது தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தேன். அப்பொழுது ஜெயலலிதா ஆட்சியில் கைதாகி ஓராண்டுக்கு மேலாக சிறை வாழ்க்கை அனுபவித்தேன். பிறகு நாடு நாடாக அலைந்து கடைசி யாக பிரான்ஸ் நாட்டில் தஞ்சமடைந்தேன். உங்கள் மனங்களைப் போலவே என் மனத்தோடு வாழும் சோகக் கதையின் சுருக்கம்தான் இது. அதனால்தான் உரிமையுடன் உங்களிடம் கேட்கிறேன். உங்கள் மனங்களில் வாழும் கதைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அவை ஈழ வரலாற்றுப் பதிவுகளாக வரவேண்டும்.'

அவருடைய இந்த வேண்டுகோள் என்னை அசைத்ததன் விளைவுதான் இந்தப் பதிவு. இலக்கியத் தரத்திற்கும் உயிருள்ள எண்ணங்கள் தீ மூட்டும். சிந்தைக்குள் நான் கண்ட காட்சிகளை இதயத்தில் இருத்தி உருக்கி ஆன்மாவை உயர்த்தி, என் நம்பிக்கையின் பிடிதளராமல் சமாதானத்தை வேண்டிய மக்களின் போராட்டங்களும் ஊர்வலங்களும் உண்டாக்கிய நிகழ்வுகளை நீடித்திருக்கச் செய்வதற்காக, முத்தாய்ப்பான வார்த்தைகளைக் கையாண்டு அதிகமான நிழற்படங்களுடன் நிகழ்வின் நிஜத்தை, முக்கியக் கருத்துகளைச் சுருக்கித் தந்துள்ளேன்.

நீங்கள் விரும்பாத ஒப்புக்கொள்ளாத சில கருத்துகள் இப்புத்தகத்தில் இருக்கலாம். பலரது பேச்சுகளும் ஈடுபாடுகளும் விடுபட்டிருக்கலாம். பாதுகாப்புக் கருதிப் பெயர்களும் படங்களும் தவிர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவற்றைத் தவறாக எண்ணி வக்கிரம் கொள்ளாமல் முறையான பணிக்குள் 'ஒன்றுபட்டு நிற்பீர்'. சர்வதேசமெங்கும் நடத்தப் பட்ட போராட்டங்கள் பற்றிச் சுட்டிக்காட்டலாம். நான் பிரான்ஸை விட்டு மற்றைய இடங்களின் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. இத்தோடு தேடல் மிகவும் கடினமானதாக இருந்ததால் மற்றைய நாட்டு நிகழ்வுகளைப் பற்றி நான் இந்த நூலில் குறிப்பிடவில்லை. இக்கட்டுரை ஏப்ரல் 06, 2009 நாளிலிருந்து தொடங்கப்படுகிறது. இக்கட்டுரையை முடிக்க வில்லை; வரலாற்றைப் பதிவாக்கியுள்ளேன். இதை நான் நல்ல முறையில் முயன்று கட்டுக்கோப்புடன் எழுதியிருப்பதாகவும் சொல்லமாட்டேன். காரணம் எப்படியிருந்தாலும் தவறுகள் தலைகாட்டத்தான் செய்யும். ஈழத்தில் இந்தப்பெரும் நிர்வாகப் பரிபாலனக் கோட்டைக்குள்ளேயே தவறுகள் தலைகாட்டி, நடந்தவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தபோது

தாங்க முடியாத வேதனையையும் மனப்பாதிப்பையும் உருவாக்கிவிட்டன. இதன் பயம்தான் என்னை பாரிசில் இடம்பெற்ற சம்பவங்களைச் தரிசிக்க வைத்துள்ளது. இந்த நூலில் சிறப்புகளும் குறைபாடுகளும் இருக்கலாம். என்னால் செய்ய முடிந்தது இவ்வளவுதான். இந்த வரலாற்றை எழுதக் கையாண்ட நடை படிப்போரின் செவிக்கும், இதயத்துக்கும் இன்பம் ஊட்டட்டும்; அஞ்சாமையைத் தூண்டட்டும்; உள்ளங்களில் வீரத்தை எழுப்பட்டும்; ஒற்றுமையை விதைக்கட்டும்; இந்த விழுமிய உண்மைகள் அடுத்த தலைமுறைக்கும் ஊக்கம் அளிக்கட்டும் என்பதற்காகவே காலம் தாழ்த்தாது துணிவுடன் பதிவாக்கியுள்ளேன். இது பிரான்சில் நடந்த தமிழர் போராட்டங்களின் முழுமையான பதிவு அல்ல. முழுமையான வரலாறு பதிவு செய்யப்பட வேண்டும். அடுத்து வரும் காலங்களில் பன்னாட்டளவில் நடைபெறும் போராட்டங்களையும் பதிவு செய்ய முயல்வேன். குறையை நீங்கள் சுட்டிக்காட்டும்போது அது தகுந்ததெனக் கொண்டு பதிவாகும். வரலாறு ‘பழகுவதற்கு’ அல்ல; முடிந்துபோனதும் அல்ல. இன்றும் என்றும் தொடர்வது! நாளைய தலைமுறையினரிடமும் நம்மை அழைத்துச் செல்வது! இதன் பயன்-தேடல்-காப்பு உங்களுக்கே. என்னை வருத்தி உங்களை மகிழ்விப்பதே என் எழுத்தின் விழைவு.

*கல்லறை எழுந்த காவிய நதியில்*
*நீந்திடும் எங்கள் புனிதர்கள்*
*வெடிகுண்டுகளை விதை மண்ணாக்கி*
*வித்தாய் எழுந்த விருட்சங்கள்*

*நினைக்க மறந்து நிலைக்க மறந்து*
*பிரிந்து நிற்கும் தோழர்களே*
*கேலிகள் பேசி கோழைகளான*
*வர்க்கம் சார்ந்த மனிதர்களே*
*கூட்டுறவாகி நாட்டுயர்வு காண*
*எழுந்து வாரீர் தோழர்களே!*

*எங்கள் வானத்தில் சூரியன் உதிக்கும்*
*திங்கள் கானத்தில் பாலும் பொழியும்*

*தலையணை அருகே உன் நினைவுக்கு வரும்*
*உணர்வுக்குப் பெயரென்ன-தமிழா?*
*நாளங்கள் பெருக்கி ஓடும்இரத்தச்*
*சூடுதரும் சுகமென்ன-தமிழா?*
*வஞ்சக நெஞ்ச வார்த்தையைக்*
*கொட்டும் வாய்ச்சொல் வீரம்-தமிழா?*
*கூச்சமும் இன்றி ரோசமும் கெட்டு*
*சோற்றுப் பிண்ட மூச்சும்-தமிழா?*
*ஆடு நனைகையில் ஓநாயின்*
*வேடம்போடும் நாசத்தின் வேசம்-தமிழா?*

www.padippakam.com

*எங்கள் வானத்தில் சூரியன் உதிக்கும்*
*திங்கள் கானத்தில் பாலும் பொழியும்*

*பிளவுபட்டு பிளவுபட்டு*
*பிரிந்து நிற்கும் தோழா*
*கூட்டுறவாகி நாட்டுயர்வு காண*
*எழுந்து வாடா தோழா*
*எங்கள் வானத்தில் சூரியன் உதிக்கும்*
*திங்கள் கானத்தில் பாலும் பொழியும்*
*சிரித்துச் சிரித்து ஜீவனைக் கரைத்துத்*
*தாயகம் காத்திட தலைகொடு*
*சந்திக்கும் வாய்ப்பில் தலைமுறைகாண*
*தள்ளி நில்லாது தோள்கொடு*

*எங்கள் வானத்தில் சூரியன் உதிக்கும்*
*திங்கள் கானத்தில் பாலும் பொழியும்*

*அந்தச் சந்தன வாழ்வைக்*
*கரைத்துக் கரைத்து மணம்கொடு*
*பாடையில் படுக்குமுன் ஒருமுறை*
*இறப்பைப் பிறப்பில் நிமிர்த்தி வாழ்ந்திடு*

*எங்கள் வானத்தில் சூரியன் உதிக்கும்*
*திங்கள் கானத்தில் பாலும் பொழியும்*

*எழுதுகோல் தெய்வம்*
*எழுத்தும் தெய்வம்*

உலகம் ஒரு நாடக மேடை. வாழ்க்கை அனுபவங்களைக் கலந்து தந்துள்ள பாடங்களும் தனிமனிதப் போராட்டங்களும் விதவிதமான புத்தகங்களாக உலகம் முழுவதும் போராட்டங்களின் பதிவுகளாக உள்ளன. இதில் ஒரு அங்கம்தான் பிரான்ஸ் தமிழர் பேராட்டம். இந்நூல் வெளிவர என்னோடு இரவு பகலாகத் தோள் கொடுத்த 'தமிழ்விசை' தீபன் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய எ.யெ. இம்மானுவல் அவர்களுக்கும் நயவுரை வளங்கிய திரு கெலின்ஸ் அவர்களுக்கும் முன்னுரை வழங்கிய மஹிந்தன் அவர்களுக்கும் இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய ஈரோப்பியன் லிமிட்டட் கோபாலன் (கேசவன்) அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்துத் தந்த அடையாளம் பதிப்பகத்தாருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*10.6.2009*
*பிரான்ஸ்*

மா.கி. கிறிஸ்ரியன்



படிப்பகம்

www.padippakam.com

# பிரான்ஸ் தமிழர் போராட்டம்

பிரான்சில் 1980களில் தமிழர்கள் குறைந்த எண்ணிக்கையுடன் அகதிகளாக அநாதைகளாக வாழ்ந்த காலம்! உறங்குவதற்கும் நாட்டில் வாழ்வதற்குமான அனுமதிபெறத் திண்டாடி கவலையுற்றிருந்த காலம்! இக்காலகட்டத்திலும் தமிழர்கள் பிளவுபட்டு நின்றதில் படுசூரர்களாகவே, ஒற்றுமைக்குச் சவால் விட்ட சண்டியர்களாகவே, ஒன்றிணைவதில் ஆர்வமற்றவர் களாகவேதான் இருந்தார்கள். சங்கம்-பேரவை-குழு-அமைப்பு என்று பிளவு பட்டு விளங்காத வில்லங்கம் கொண்ட தமிழர்களாகத்தான் வாழ்ந்தார்கள்! சர்வதேசத்தின் முன் தமிழ் தேசியம் பற்றிய கூறுகள் தொடர்பான முக்கிய மான எதையும் கூறாதவர்களாகவும், சிங்களப் பேரினவாதம் போடும் வேடத்தைப் புட்டுக்காட்டத் தவறியவர்களாகவும் தங்களைத் தாங்களே கீழ்மைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சமூகம் பற்றிய இலட்சியத்தை அலட்சியப்படுத்தி, அதை அப்பட்டமாக மீறியவர்களாகவே இருந்தனர்! இவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் ஒற்றுமையுடன் ஓர் அமைப்பை உருவாக்கி உயரிய காரியங்களைச் செயல்படுத்தத் தவறியவர்களானார்கள்.

ஓகஸ்ட் 13, 1982ஆம் நாள் சிறிலங்கா நீதிபதி தியேட்டர் டீ அல் விஸ் குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் மரண தண்டனை எனத் தீர்ப்பளித்த செய்தி புலம் பெயர்ந்து வாழ்வோர் தலையில் பேரிடியாக விழுந்தது. அன்று, பிரான்சில் தமிழர்கள் மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்தினார்கள். இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களின் தொகை அன்றிருந்த குறைந்த எண்ணிக்கையில் பெரிதாகத் தெரிந்தது. பிரான்சில் இலங்கைத் தமிழர்களால் முதலில் உருவாக்கப்பட்ட மன்றம் 'பாரிஸ் தமிழ் மன்றம்' பின்பு 'இலங்கை நலன்புரிச் சங்கம்'. இதிலிருந்து பிரிந்து 'பாரிஸ் தமிழர் இயக்கம்'. பார்த்தீர்களா, தமிழனின் பிளவின் விரிசலை! இந்த வெடிப்பு தடிப்பினால் வந்த நடிப்பு!

மே 31, 1981ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் சுட்டுக் கொண்டதால் எழுந்த கலவரத்தில் யாழ் நூலகமும், ஈழநாடு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் வீடும் தாக்கப்பட்டு, வன்முறை தலைவிரித்தாடியதைக் கண்டித்து பாரிஸ் தமிழர் மன்றம் - பிரான்ஸ் தமிழர் இயக்கம் - இலங்கை நலன்புரிச் சங்கம் ஆகிய மூன்று அமைப்புகளும் ஒன்றுகூடி ஊர்வலத்தை நடத்தின. பாரிஸ் தமிழ் மன்றமும் இலங்கை நலன்புரிச் சங்கமும் இணைந்து நின்றபோது,



படிப்பகம்

பிரான்ஸ் தமிழர் இயக்கம் இணைய மறுத்த வேளையில், இரண்டு சங்கமும் இணைந்து 'தமிழர் ஒருங்கிணைப்புக் குழு' (T.C.C) உருவாக்கப் பட்டது. அன்றிருந்த குறைந்த தமிழர்களுடன் செயல்பட்டது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பெயரில் மட்டும் ஒருங்கிணைப்புக் குழு. செயல்பாட்டில் தமிழர் ஒற்றுமைக்கான இணைப்புச் செயல்பாடு இன்றுவரை கைகூடி வரமறுப்பதை ஆய்வுக்குட்படுத்திப் பார்க்கும் பக்குவம் ஏறுக்குமாறாகத்தான் விரிகிறது! தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தொடங்கிய காலத்தில் 'கொடுதலை கொடு விடுதலை குமிழ்க்கும்' என்னும் பாரதிதாசனின் வாசகத்துடன் எரிமலை எழுந்தது.

விடுதலைப் புலிகள் சார்பாக இயங்கத்தொடங்கியதும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்னும் வலிமையோடு வலம்வந்தனர். மண்டபங்கள் நிறைந்த மக்களோடு நிகழ்ச்சிகள், மாவீரர் நாள் நிகழ்வு களோடு செயல்பட்டு 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்னும் கோஷத்துடன் நின்றனர். இதற்கிடையில் இயங்கியதாகச் சொல்லும் சங்கப் பேரவை அமைப்பினர் எங்கிருந்து ஒளித்துப் பிடித்து விளையாடுகிறார்கள் என்பதும், பிரான்சில் இருக்கிறானுகளா என்ற கேள்வி எழும்போதும் இதயத்தில் கவலை கனக்கும்!

1983 ஜூலை கலவரம்! இந்தக் கொடிய தமிழின அழிவின் உதைப்பும் வதைப்புமான அடிமையெனும் முத்திரைச் சித்திரவதைப்பின் உச்சமான இனக்கலவரத்தின் பின்னர் புலம்பெயர்ந்தோர் போர்க்குணம் மேவிய விடுதலையும் தனிநாடு காணும் கடுமையும் பெற்றனர். போராட்ட ஊர்வலங்களைப் புலத்தில் நடைமுறைப் பாங்குடன் முன்னெடுத்தனர். விடுதலைப் புலிகளின் போராட்ட முறைகளை நியாயப்படுத்தி நிகழ்வு களை மேற்கொண்டனர். இப்போராடுதல் நிலையில் தேடுதல் என்பதைத் தேடாமலே விட்டுவிட்டனர் என்று நானும் இன்று நினைக்கிறேன்! ஈழத் தமிழரின் விடுதலைக்கான போராடுதலில் உள்ள அரசியல் மயப் பட்ட தேடுதலைத் தொடுதலின்றி இருந்ததாகப் பலர் இன்று விழி பிதுங்குகின்றனர்.

மக்களில் குறிப்பறிந்து செய்பவர்கள் அறிவுடையவர்கள். விளக்கமாகச் சொன்னாலும் புரிந்துகொள்ளாதவர்கள் அறிவற்றவர்கள். பிரான்சில் நடந்த ஊர்வலங்களையும் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் அரசியல் ரீதியாகப் பயனளிக்கும் வழிமுறைகளை முன்வைத்து ஆராய்ந்து பார்த்தால் பிரான்சில் நடத்திய போராட்டங்கள், ஊர்வலங்கள், மண்டபம் நிறைந்த நிகழ்வுகள், பல்லாயிரக்கணக்கானவர் தூக்கிப்பிடித்த சுலோகங்கள், கொடிகள், எழுப்பிய கோஷங்கள் என்ன? அறிக்கைகள் சமர்ப்பித்துவிட்டு (தூதரகங்கள்) கலைந்துபோன சாதாரண சம்பவங்களாக இருப்பதை

www.padippakam.com

அவதானிக்கலாம்! விசாரணைகளோ விழிப்பான விவரங்களோ சர்வதேசத் திடமிருந்து பிரான்சில் நடத்திய போராட்டங்களின் பயனாகக் கிடைத் தனவா என்பதை அக்கறையோடு ஆராய வேண்டிய கட்டாயத்திற் குள்ளாகும்! தேடலைத் தேடவேண்டிய தருணமும் இதுவாகும். இந்த நேரம் விழிப்புப் பெறும் அடுத்த தலைமுறைக்குரிய பதிலாக இக்கட்டுரை இருக்கும். இந்த நூல் தேடலுக்குரிய ஆவணமாக வேண்டும் என்பதற்காகவே ஏப்ரல் 06, இலிருந்து மே 24, 2009 வரையான பிரான்சில் நடந்த ஊர்வலங் களையும் போராட்டங்களையும் சம்பவங்களையும் இதில் சித்திரிக் கின்றேன். தாயக மக்களையும் மண்ணையும் சீரழித்துவரும் பேரினவாத சிங்கள ஆட்சியின் இனவெறிக் கொடுமைகளையும், கொலைகளையும், கருவறுப்புகளையும், அழிப்புகளையும் தட்டிக்கேட்டு, தொன்மை வாய்ந்த இனம் வீதிவீதியாக தர்ம ஸ்தாபனங்கள், மனித உரிமைகள், மண்டபங்கள், அலுவலகங்கள் எனப் படிகளேறி நடத்தும் போரட்டங்களை அக்கறை யுடன் நோக்கி, அந்தத் தேடல் முயற்சிகளைப் பதிவு செய்யும் இப்படி யொரு நூல் இன்றளவும் வெளிவரவில்லை.

சிங்களப் பேரினவாதிகளால் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கர வாதம் உருவெடுக்கும் போதெல்லாம் தமிழர் பிரான்சில் சாந்தமான போராட்டங்களை நடத்திவந்தனர். வன்முறை வடிவமெடுத்த அடக்கு முறை 60 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டவிழ்த்து விடப்பட்டதைச் சுட்டிக்காட்டி இந்தச் சர்வதேசத்திடம் கையேந்தி நிற்கின்றோம். பலனை எப்போது எதிர்பார்த்தோம்? பிரான்சில் அரசியல் அழுத்தங்களோடு இந்தப் போராட்டங்களை முன்னெடுப்பது குறித்து நாம் சிந்திக்கவில்லை. மாறாக மனத்திருப்திக்காக இத்தனையாம் தேதி- இத்தனை மணிக்கு - இந்த இடத்தில் கூடுகிறோம் என்ற சாராம்சம் உப்புச் சப்பற்றதாகப் புதைந்து கிடக்கும். கூட்டத்திற்கு வரும் மக்கள் தொகை கணிக்கப்படும். மக்கள் குறைவாகக் காணப்பட்டதும் ஒலிவாங்கியில் ஒரு குரல், 'உங்களுக்கு விளங்கவில்லை, நாங்கள் ஏன் இப்போராட்டங்களை நடத்துகிறோம் என்று. நீங்கள் வராவிட்டால், நாங்கள் தொடர்ந்து இப்படியான நிகழ்வு களை நடத்தமுடியாது' என்று ஒலிக்கும். ஆத்திரத்துடன் அவர் கொம்பு முளைத்த குதிரை போலாகிடுவார். எனக்கு ஆத்திரம் மீறிவருவது இந்தக் கூட்டங்களில் ஒலிவாங்கி மூலமாக அறிவிப்புச் செய்பவர்கள் மீது. இனிமேலாவது இத்தகைய அறிவிப்புகளைத் தவிர்க்க வேண்டும். மக்கள் கூடுதலாக வந்தால் ஒருவகையான உற்சாகமான பரப்புதல் இடம்பெறும். மக்கள் குறைவாகக் காணப்பட்டால் 'விடுதலைப் புலிகள் வலிந்து பெரிய தாக்குதல் எதுவும் செய்யாமல் இருக்கினம். இதற்குள்ள போய் நின்று என்னத்தப் புடுங்கி நட்டுவிடப் போறோம்' என்பார்கள். இதனால்தான் சனம் வரவில்லை. அரசியல் எங்கே தொனிக்கிறது என்பதைப் பாருங்கள். புலம் பெயர்ந்தோர் மனநிலை இப்படியாகும்போது சோர்வு பரவும்.



படிப்பகம்

www.padippakam.com

மங்கலான விரக்தி மைபூசி வாடிப்போய் விடுவார்கள். முன்பு நடந்த போராட்டங்களை இப்போது நடக்கும் போராட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க மனசுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும்!

பிரான்சில் நடந்த ஊர்வலங்களும், போராட்டங்களும் மனக்கண் முன் வருகின்றன. எண்ணிப் பார்க்கும்போது இப்போது நடக்கும் போராட்டத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் வந்திருப்பதாகவே எண்ணுகிறேன். தமிழ் மக்களுக்கு நேரும் கொடுமைகள் கண்டு நம்முள் சிலநேரங்களில் சாந்தம் போய் வன்மை பிறக்கின்றது! தமிழர்கள் கொலை செய்யப்படும் எண்ணிக்கையைக் கேட்ட மாத்திரத்தில் பொறுக்க முடியாத கோபத்தை உண்டாக்குகிறது. பிரான்சிலிருந்து கொண்டு தமிழர்களை உடன் காப்பாற்று வதற்கும் துன்பத்தைத் துடைப்பதற்கும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக வீதிவீதியாக நின்று கத்துகிறோம். புலத்தில் வாழ்வோரின் மனங்களைப் பாதிக்கும் கவலையின் கனப்பை அதிகமாக்கும் இந்தக் கொடும் விதைப்பு புலத்திலோர் கவனத்தில் கொண்டு செப்பமாக மீட்டெடுக்கப்பட வேண்டும். இதனால் புலத்திலோர் பணியில் உடல் நலம், நோக்கம், பணியின் பரப்புதல் ஆகியன உரம்பெற்றிருக்க வேண்டும். நாமெடுக்கும் போராட்டம் தமிழ் மக்களின் நீதியான தீர்வுக்கு வழிவகுக்கக்கூடிய அளவுக்கு ஆக்க பூர்வமனாதாய் இருக்கவேண்டும். சர்வதேச நடைமுறையில் அரசாங்கங்கள் எடுக்கும் நல்லதையே புலத்திலுள்ளோர் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் மீதான நம்பிக்கை அரசாங்கங்களுக்கு எப்போது உருவாகும்? தமிழன் அழித்தொழிக்கப்பட்ட பின்பா? ஜனநாயக உரிமை மீறப்பட்டு நாசமான பின்பா? பாரபட்சம் காட்டுதல் பயங்கரமான கோர வடிவம் எடுத்தாடி மிச்சமுள்ள தமிழனும் அங்கவீனர்களான பின்பா? பாதுகாப்பிற்குரிய அச்சுறுத்தல் மேலும் மேலும் தீவிரமடைவதைக் கண்டும் காணாதவர்களாகத் தலையீட்டிற்கான நோக்கங்கள் ஏறுக்கு மாறாக ஊடுருவிக்கிடக்கும் நிலையில் சத்தியத்தை எப்படித் தமிழன் காண்பான்? பிராந்திய நிலையில் மிகச் சக்திவாய்ந்த நாடாக இந்தியா இருப்பதால்தான் தமிழன் அழிக்கப்பட்டான்! இக்கணிப்பில் சர்வதேசம் காண்பது யாது? நீங்கள் இப்படியே கேட்டு அப்படியே இருங்கள். நாங்கள் போராடப் பிறந்தவர்கள்; போராடியே ஆகவேண்டிய கட்டயாத்திற்குள் நிற்கிறோம். சர்வதேசமும் உங்களது ஆழமான முரண்பாடுகளின் தாக்கமும் புலத்துவாழ் தமிழனின் போராடும் தாக்கத்தை உணர்த்தும்.

'ஐக்கிய நாடுகள் சபை அதன் நோக்கத்திற்கான அடிப்படையில் சமாதானத்தை உருவாக்கவும் அதனைப் பேணவும் வேண்டப்படுகிறது. இதனை நிறைவேற்றுவதற்காகப் பலமிக்கவரை எதிர்த்து, நீதியை நிலை நிறுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் எங்கும் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்குமான சிறப்பு



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரத்தை அது தன்னகத்தே கொண்டுள்ளது. இறுதியாகக் குறிப்பிட்டது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை அரசியல், சமூக, கலாசார, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான உரிமைகள் சம்பந்தமாக வற்புறுத்தி வருகின்றது. இருந்தபோதும் இன்றைய நிலையில் குடியியல், அரசியல் உரிமைகளுடன் ஒட்டுமொத்தமான உரிமைகளைப் பேணுவதும் முக்கியக் கூறுகளாகும். அடிப்படைக் கோட்பாடுகளைப் பொறுத்தவரை ஐ.நா. சபை சாசனம் அனைத்து மக்களின் சமத்துவம், அவர்களுக்கான சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படைகளைத் தழுவியது. இந்தச் சாசன முறைமை எங்கள் கோஷங்களிலும் போராடும் முறைமையிலும் துல்லிய மாகத் தெரிய வரும். போராடுதலே சிறந்ததெனக் கொண்டு இன்றைய இளையோரின் சாந்தமான போராடுதல் ஆரம்பமானது. அப்படியானால் நாம் எந்தத் திட்டங்களைக் கொண்டு இயங்கப்போகிறோம்? எவர் கீழ்நின்று செயல்படப்போகின்றோம்? ஒன்றுபட்ட சக்தியில் ஒன்றாகத் தொங்கும் வீரமான விழுதுகளைக் கொண்ட ஆலமரம் எங்கே எப்போது யார் வடிவில் பிரிக்கமுடியாதவாறு, பிளவுபடாதவாறு, முரண்படாதவாறு, சிதைவுறாதவாறு தோன்ற வேண்டும்? இதன் ஊடாகப் பாயும் பண்பாடு களை அவதானத்தில் கொள்ளவேண்டும். ‘எங்கள் தேசம், எங்கள் உரிமை, எங்கள் சுதந்திரம்’ எனும் கோஷங்களின் தொனிப்பில் செயல்பாடு முழக்கம் இடவேண்டும். தோல்விகளால் குற்றமில்லை. நம்பிக்கை இல்லாத வாழ்வே குற்றமாகும். எம்தேசத்து விடுதலைப் போராட்ட வாழ்வில் ஏற்பட்ட அற்பச் சலுகையில் இழந்தவையே வன்னிப் போர்க்களத் தோல்வியென நான் கருதுகிறேன். நார்வே நாட்டின் உதவியுடன் 2002இல் யுத்த நிறுத்த உடன்படிக்கையும் அதனைத் தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தமும் சமாதானப் பேச்சுக்கான முன்னெடுப்புகளும் இடம்பெற்றன. இதில் தாயக மக்களைவிட அதிக மகிழ்ச்சிக்கும் சங்கடத்துக்கும் ஆளான வர்கள் புலத்துவாழ் தமிழர்களே! சந்தோஷத்தைக் கைக்கொண்டவர்கள் அங்கும் இங்கும் பறந்து பறந்து தங்கள் மகிழ்ச்சியில் பெரும்பேறென விரும்பிய விருப்பங்களைத் தங்கள் நலன் கருதிக் களித்தனர். பின்னடிக்கு என்னடி விழப்போகின்றது என்பதைத் தமிழ் நிலம் தழுவிய சிந்திப்பில் சித்தம் விட்டுப்போயிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தச் சமாதான நிலைப்பாட்டில் சர்வதேசப் பார்வையை எதிர்பார்த்திருந்தனர் என்பதை அவர்கள் கடைப் பிடித்த வெளிநாட்டுப் பயணங்கள் எடுத்துக்காட்டின. தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதும் இந்தச் சமாதான காலத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றதாக அமைந்திருந்ததும், புலிக்கொடியும் சிங்கக்கொடியும் பேச்சு வார்த்தை மேசைகளில் பறந்தமையினால் தமிழர்களின் நியாயமான குறைகளை எடுத்துக்காட்டிப் போரிடுவதற்கான அதிகாரமும் அங்கீ காரமும் விடுதலைப்புலிகள்தான் என்றனர். சிறிலங்கா அரசுடன் சமமாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்து பேசும் பேச்சுகள் பாங்காக்கில் தொடங்கியபோது தாயகம் காணாத களிப்பில் புலத்துவாழ் தமிழன் மிதந்தான். பேச்சுவார்த்தை குறித்துக் கவலைப்பட்டவர்களும் உண்டு. அவர்களுக்குப் பயம் நாடு சமாதானமாக வந்து எல்லோரும் போராட்டத்தைக் கைவிட்டால் நாடுகள் எடுக்கும் தீர்மானத்தில் எங்களைத் திருப்பி ஊருக்கு அனுப்பி விடுவார்கள். இப்படியொரு கூட்டம் புலத்தில் அதிகம் கவலைப்பட்டதுண்டு. இந்த வேளையில் கூட்டாட்சி முறையின் பல விதமான வடிவங்களைப் பற்றி அறிந்துகொள்ள புலிகளின் பிரநிதிகள் பல நாடுகளுக்கு அழைக்கப்படும் போதெல்லாம் இந்தக் கூட்டம் எதிர்த்துத் தங்கள் சுயநலம் நாடிய தேசப் பற்றற்றவர்களாகவே பிரதிபலித்தனர்! பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப் படும் என்ற நிலையும் சர்வதேச அங்கீகாரத்துக்கு வழிவகுத்தது. இந்த வேளையில் புலிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நீக்கியபோதும் சர்வதேச நாடுகள் சில அந்தத் தடைவிதிப்பை அகற்ற வில்லை. இருந்தும் சிறிலங்கா அரசின்மீது வலிமையான அழுத்தங்களைக் கொண்டுவந்து கூட்டாட்சி அமைப்பினுள் வழிவகுக்கும் சாத்தியங்கள் இருப்பதை வெளிப்படுத்தின. இந்த வெளிப்பாடும் எதிர்பார்ப்பும் எப்படியான மாயமாகக் காட்சியளித்து மறைந்துபோனதைப் புலத்துத் தமிழன்தான் உன்னிப்பாக நோக்க வேண்டும்.

அந்த மாயத்தோற்றத்தில் கண்ட காட்சிகள் பல வண்ண விளக்குகளால் காட்சிப்படுத்தப்படும்போது சமாதான காலத்து நகர்த்தல் நரக வேதனையை இன்று தருகிறது. தாயக மக்கள் அடைந்த நிம்மதியில் வெடிச் சத்தங்கள் ஓய்ந்த வாழ்வின் தித்திப்பினால்தான் இந்த முப்பது வருடப் போராட்டத்தில் வெடிச்சத்தங்களால் இறந்தோரும், மனநிலை பாதிப்புக்குள்ளானோரும், கர்ப்பிணிப் பெண்களின் கருக்கலைப்பும் அதிகமயின. குழந்தைகள் ஊனமடையும் பாதிப்பிலிருந்தும் பொருளாதார அழிவிலிருந்தும் இந்தச் சமாதான காலம் அவர்களுக்குச் சற்று ஆறுதலை அளித்தது. எப்படியான போதும் புலிகளின் அரசியல் நகர்வின் தோல்வியும் இதுவாகும். போராடும் பலத்தில் விழுந்த பேரிடியும் நம்பிக்கையுடன் நடந்துகொண்டனரா இருதரப்பினரும் என்ற சாணக்கிய சறுக்குதலும் இதுவாகும். அமைதியை உருவாக்குவதற்காகச் சர்வதேச தரப்பினர் அதிகமான உள்ளக நோக்குடன் பலவகைக் காரணங்களுக்காக இணைந்தனர். புலிகள் தரப்பில் மிகப்பெரும் பாசத்தையும் நேசத்தையும் மனிதம் என்ற அணுகுதல் வேசத்துடன் நடித்தனர். நடித்ததன் பாத்திரங்களைப் பிராந்தியச் சாடலில் - குறிப்பாக இந்தியா, சீனா, பாகிஸ்தானின் வில்லத்தனமான பாத்திரங்களில் - பாத்திரத் திற்கு உடந்தையாக இருந்தனர் என்பது கதாநாயகர்கள் நகர்த்தலில் 'போக்கஸ்' பண்ணப்பட்டிருப்பதைத் தமிழன் வன்னி போர்முனை நெருக்குதலில் முள்ளிவாய்க்கால் உச்சக்கட்ட நடிப்பில் கண்டு நாடகம் முடிவடைந்தது! வில்லன்களின் நடிப்பில் மயங்கி, சர்வதேசம்



படிப்பகம்

தெளிவில்லாத குழப்பமான குறிக்கோளுடன் வில்லன்களின் பாத்திரம் சிறக்க காய்களை நகர்த்தியது. சூழ்ச்சிமிக்க அமைதி முயற்சி முறிவடைந்ததும் உள்ளுக்குள் இருந்த பிளவுகளையும் ஏறுக்குமாறான சமாச்சாரங்களையும் சிறிலங்காவுடன் கொண்ட ஒப்பந்தங்களயும் வன்னிக் களம் தெளிவாக் கியது! தமிழன் இனிமேல் கவனத்தில்கொள்ள வேண்டியது சர்வதேச சமாச்சாரத்தில் விழிப்பாகச் செயல்படுவதையே. ஆகவே புலத்துவாழ் தமிழனின் போரிடுதல் அரசியல் அணுகுதலோடு சிறப்புற வேண்டும்.

புலிகளை ஒழித்ததாக சிறிலங்காவின் பொய்ப் பிரச்சாரம் புலத்துவாழ் தமிழனைப் பயமுறுத்தி வைப்பதற்குரிய கருவியாகிவிட்டது. அதற்கேற்ப காலமும் இடமும் பலமும் ஏற்றனவாகயிருக்கின்றன! மிகுந்த ஆர்வத் துடனும் வீரியத்துடனும் இலட்சியத்துடனும் நடந்த தமிழர்களின் மாபெரும் போராட்டம் வெளிப்பார்வைக்கு என்ன பலனைத் தந்து மறைந்தது எனும் கேள்வி பாமர மக்களை சோர்வுக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கியது. இந்தக் கவலையையும் குழப்பத்தையும் பயன்படுத்தி, எதிரிகள் மேலும் மேலும் பொய்களைப் பரப்பி நம்ப வைக்க முயல் கிறார்கள். இக்கையாடல் இந்த வேளையில் சாலச்சிறந்ததன்று. இதனால் இணைந்து செயல்பட்டவர்கள் பலர் வெவ்வேறு திசைகளை நோக்கிச் செல்லத் தலைப்பட்டுவிட்டனர்! புலத்திலுள்ளோர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் இதுவாகும். விடுதலைப் பாதையில் கைகோர்த்து நடந்தவர்களின் கதைகள் கவலையை உருவாக்கலாம். ஒத்துழைப்பில் இணைந்த பொதுமக்களிடையே தோன்றிய உற்சாகப் பெருக்கு அமிழ்ந்து போகும் நிலைக்கு வரக்கூடாது. ஒளிந்திருந்தவர்கள் மீண்டும் தலை காட்டத் தொடங்கிவிட்டதால் பசப்பு வார்த்தையால் மயக்கும் மைபூசி கைப்பற்றிக்கொள்ள முயல்கிறார்கள்! குறுக்கே எதிர்த்து நிற்பவர்களுக்கு எச்சரிக்கைக் கையை நீட்டித் தட்டுகிறார்கள். இந்தத் துரோகிகளைக் கூடவொட்டாமல் எப்போதும் விலக்கி விசாரணை செய்வது பாமர மக்கள் மட்டில் விவரமான விடயமாகப்படுகிறது. தீவிரமாகப் பெருகிவருகிற இந்த நோய் நீங்காத தொற்றுநோய்! புலத்தில் இப்போது வலுவெடுத்துப் பரவுகிறது. புலத்துவாழ் தமிழர்களே, கவனத்தில்கொள்வீர்!

'தேசத்தின் தேசிய விழிப்பு ஆண்மை மிக்கவர் வழியில் நடந்தது! நாசத்தை விதைக்கும் நச்சரவுகளின் நஞ்சு புலத்திலுள்ளோர் பாதையைப் பாழ்படுத்தும்'!

அந்தப் பகுப்பைப் பின்வருவன விளக்கும். இப்போது நாம் குதித்த போராட்டத்தைப் பார்ப்போம்.

www.padippakam.com

# பாரிஸ் மையத்திடலில் குதித்தனர் தமிழர்

மாபெரும் மனிதப் பேரவலம் தமிழீழ மக்கள் படுகொலைகள் கண்டு புலத்துவாழ் தமிழர்கள் உடனடிப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி வீதியில் இறங்கினார்கள். சாதிக்க வேண்டியதைத் தடுத்து நிறுத்தக்கூடிய சக்தி களை வலியுறுத்திக் கோஷங்கள் எழுப்பினர். வன்னிப் படுகொலை கண்டு உலகெங்கும் 151பேர் உண்ணாநோன்பு இருந்தனர்.

இந்தப் பெறுமதியும் உறுதியும் வாய்ந்த போராட்டங்களை உலகெங்கும் வாழ்ந்த தமிழ் இளையோர் அமைப்பினரும் பலவித சங்கங்களும் முன்னெடுத்து நடத்தி வருகின்றனர். வன்னியில் சிறிலங்கா அரசு இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் உதவியோடு நச்சுவாயுக் குண்டு, எறிகுண்டு, கொத்து எறிகணைக் குண்டுகள், பல்குழல் வெடிகுண்டுகள், கனரக வான்குண்டுகள் மூலம் பேரினவாத பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்துவிட்டு படுமோசமானதும் நாகரிகமற்றதுமான இன அழிப்பை மேற்கொண்டது!

இந்தச் செய்தி 06.04.2009 ஆம் நாள் திங்கட்கிழமை புலத்துவாழ் தமிழர் களை மிகப் பெரும் அதிர்ச்சிக்கும் ஆத்திரத்திற்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டிய அதிமுக்கியத் தேசப்பற்றுக்குமுள்ளாக்கியது. பாதுகாப்புக்கான வேண்டுதலை முன்வைத்து உரிமைப்போரின் முழுமுதல் கடமை உணர்வுக்குள் முக்கியமாகப் புலத்துவாழ் இளையோரை உட்படுத்தி வீதிக்குக் கொண்டுவந்தது.

6ஆம் தேதி அன்வலிட் (invalide) மெற்றோ முன்பாக உள்ள திடலில் மக்கள் சாரை சாரையாக வந்து குவிந்தனர்! பிரெஞ்சுப் பாதுகாப்பு அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைதோன்ற, மேலதிகப் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டனர். பிரான்சில் மட்டுமல்லாது சர்வதேசமெங்கும் இலட்சக்கணக்கானவர் இரவு பகல் என்று பாராமல் தமிழர்களின் கைப்பேசிகள் அலறி அழுதுகொண்டிருந்தன. அன்வலிட் திடலில் பத்தாயிரத்தைத் தாண்டிய மக்கள் திரண்டனர். அந்தப் பெரும் திடல் அதிர்ந்தது. வான் முட்டி விழும் பெரும் குரல் எழுந்தது. தமிழர் உணர்வுகள் தங்கள் உறவுகளைக் காப்பாற்ற எது வேண்டுமானாலும் செய்துவிடும் வலிமையுடனும் உணர்ச்சித் தெறிப்புடனும் காணப்பட்டன.



படிப்பகம்

கொட்டும் மழையிலும் தாய்மார், தங்கைமார், குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் அழும் கண்ணீரின் பெரும் மழை அடைமழையை ஊடறுத்துப் பாய்ந்தது. இரவும் பகலும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

பிரான்சைக் காட்டிலும் கனடா, லண்டன், சுவீஸ் நகரங்களில் மிகப் பெரிய அளவில், பிரமிக்கும் வண்ணம் வாஞ்சை கொஞ்ச உறவுகளைக் காத்திடக் குரல் எழுப்பி உண்ணாநோன்பிருந்து நீதி வேண்டி நீண்ட போராட்டத்தை இடைவிடாது நடத்திவருகின்றனர்.

பிரான்சில் தமிழர் தொடர்ந்த இடத்திலிருந்து எந்த எதிர்ப்பு வந்தாலும் நீதி கிடைக்கும்வரை அசையாதிருந்து, இப்போராட்டத்தை நடத்த வேண்டும் என்று இளையோர்கள் மேற்கொண்டனர்! பெரியவர்கள் அத்தீர்மானத்தை வழிமொழிந்தனர். இன்று இக்கட்டுரை (27.06.2009) எழுதும்வரை வீதிவீதியாக மாறிமாறி நடக்கும் போராட்டம் முடிய வில்லை. ஏப்ரல் 8, 2009 திங்கட்கிழமை முதல் இருவர், ஏப்ரல் 10, 2009 இருவர் என நான்கு இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக முன்வந்தனர். அவர்கள் முகத்தில் தெறித்த உணர்வினை உள்வாங்கிய இளையோர் அமைப்பினர் அவர்களது தியாக உணர்வினைச் சம்மதித்து அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

எட்டாம் தேதி தொடங்கிய உண்ணாவிரதம் ஏப்ரல் 9, 2009 அன்று ஈபீல் கோபுரம் முன்பாக மாற்றப்பட்டு, பின்பு 10ஆம் தேதி இராணுவப் பாடசாலை (ecole militaire) முன்பாக இடம் மாறியது. அங்கிருந்த சிலையின் கீழ் உண்ணாவிரதம் இருக்கச் சமாதான தூண்களின் திடலில் மக்கள் வெள்ளம் ஆர்ப்பரித்து முழங்கியது. 'சிறந்த பண்பாட்டு அமைப்புடன் செயல்படும் இளையோரின் தமிழின மேன்மையும், அதன் அடையாள மாக அவர்கள் தமிழில் பேசும் மொழிப் பற்றும், மொழியைச் சிறப்புடன் கையாள்கின்ற வளர்ச்சியும் வரலாற்று முத்திரைகளாய்த் துலங்கி நிற்பதைக் காண நேர்ந்தது!'

இந்த வேளையில் இந்த இளையோர் தாய்நாட்டின் நிழலில் சிறு நேரம்கூட இளைப்பாறாத மேலோர்! தமிழீழ தரிசனத்தைக் காண்பதை நேசிக்கின்ற தலைமுறையாகத் தலைகாட்டத் துடிக்கிறார்கள். ஐரோப்பிய அமெரிக்க நாட்டில் பிறந்து வளர்ந்து அந்த நாட்டின் கலாசாரத்திற்குள் ஆட்பட்டிருப்பவர்கள் மத்தியில் தமிழ்ப் பண்பும் பண்பாடுகளும் தமிழீழத் தேசத்தின் மேலான தேசாபிமானமாகப் பீறிட்டுப் பாய்வதைக் கண்டு உலகத் தமிழன் அதிர்ந்து அதிசயித்துப்போனான். 'காரணத்தையும் நிதான நோக்குதலையும் தமிழீழம் காண்பது ஒன்றுதான் தாயினம் வாழ்வதற்கான சிறந்த வழி என்பதைக் கண்டறிந்து பற்றுதல் கொள்ளும் நிதானத்தைத் தோற்றுவித்துள்ளது வன்னிமண் படுகொலைகள்'.

www.padippakam.com

சிறிலங்காப் பயங்கரவாதம் இனஅழிப்பு இதுதான் என நடத்தி நிரூபித்து தமிழர் வாழ்வதற்கான பாதுகாப்பு அழிந்துவிட்டதறிந்தும், இந்த அழிவுக்குக் காரணமான சிங்களப் பேரினவாதத்தின் கொடிய யுத்தத்தின் முடிவைக் கண்ட பின்பும் இனஅழிப்பு முள்வேலிப் பாதுகாப்பிற்குள் முடக்கிய கொடுமையைப் போக்கும்வரை எங்களது போராட்டம் ஓயாது! தமிழர் பாதுகாப்பாக வாழ்வதற்கான அவசியத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் போராட்டங்கள் கட்டியம் கூறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# இனிப் போராடும் நிலைப்பாட்டில்

1983 கலவரத்திற்கு முன்பும் பின்பும் பலவகையான போராட்டங்கள் பிரான்சில் நடைபெற்றுள்ளதை அவதானிக்கலாம். ஆயினும் அந்தப் போராட்டங்கள் தந்த பலன் மேலும் மேலும் அகதிகள் வரவைத்தான் கூட்டிக்கொண்டது. பலரது அரசியல் தஞ்சம் கோரும் மனுக்களுக்குச் சந்தர்ப்பத்தை அளித்ததுடன், பொய் மெய் கூட்டிக் கழித்தலுக்குச் சாதக மாகவும் இருந்தது. இதில் தமிழீழ விடுதலை இயக்கத்ததைச் சாடி தாக்கல் செய்த அகதிக்கான மனுக்கள் மூலமாக அகதி அந்தஸ்து பெற்றவர்கள்தான் இங்குப் பெருகிக் கிடக்கின்றார்கள். இப்படியான பலரின் வாய்களிலிருந்து இன்றும் தமிழீழப் புலிகளைப் பற்றிய பொய்ப்புனைவும் பழிசுமத்தும் வக்கிரமும் மலிந்து கிடக்கின்றன. இன்றைய நிலைப்பாட்டில் அவை இன்னும் பன்மடங்காகப் பெருகி பயம் நீங்கிய பொழிவாகத் திமிரெடுத்து விட்டன! 1983 ஜூலை கலவரத்திற்குப் பின் பிரான்சில் பலவகையான இயக்கங்கள் ஆயுத மேந்தியப் போராட்டத்தின் மூலம் தமிழீழத்தைப் பெறுவதொன்றே எங்கள் இலட்சியம் என்று போராட முன்வந்தன. இவர்கள் பின்னர் எப்படித் துரோகிகள் ஆனார்கள் என்பது நீங்கள் அறிந்தவையே. இதைப் பற்றி நீட்டி எழுதவேண்டிய கட்டாயம் உண்டு. அதனைப் பின்பொரு முறை நீங்கள் காணலாம்.

அதற்குமுன் 1974ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாட்டில் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்த காலப்பகுதியில் தமிழர் தாயகத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பல விடுதலை இயக்கங்கள் பிறப்பெடுத்தன: எல்டிடிஈ, புளொட், டெலோ, ஈரோஸ், ஈபிஆர்எல்எஃப், டிஈஎல்ஏ. இவர்கள் தமிழீழத்தைப் பெற்றுத்தரவென ஆயுதமேந்திப் போராடப் புறப்பட்டவர்கள். காலப் போக்கில் மேற்குறிப் பிட்ட இயக்கங்களுடன் விரக்தியடைந்த சிலர் ஈஎன்டிஐஎஃப் போன்ற அமைப்புகளை உருவாக்கி மேற்குறித்த குறிக் கோளைப் பெற்றுக்கொள்ளவெனப் புறப்பட்டனர். இவர்கள் பற்றிய பிரச்சாரங்களை முடுக்கிவிட்டு வேடிக்கை காட்டியவர்கள் பிரான்சில் அதிமேதாவித்தன பித்தலாட்டக்காரர்களாகக் காணப்பட்டதை அன்று கொஞ்சமாக இருந்த தமிழர்களால் புரிந்துகொள்ள நெடுநாள் ஆகவில்லை.



படிப்பகம்

தமிழீழப் புலிகளின் போராட்ட வெற்றிச் செய்திகள் குவிவதைக் கண்டதும் பலர் மற்றைய இயக்கங்களை இனம் கண்டு விலகியும் தமிழீழப் புலிகளின் ஆதரவாக இயங்கும் குழுவினருடன் இணைந்தும் செயல்பட்டனர். இவர்களால் ஒற்றுமையாக இயங்க முடியாமைக்குப் பலவிதமான காரணங்களை இன்று வெளிச்சத்திற்குக் கொண்டுவர முற்படுகின்றார்கள். புலத்துவாழ் தமிழர்கள் மிகவும் கவனமாக அவற்றை அணுக வேண்டும்! ஒற்றுமைக் குரிய பலம் இனிமேல் வலுப்பெற வேண்டும் என்பதில்தான் உங்களின் பயனுள்ள முன்னெடுப்புகள் இருக்க வேண்டும். இப்பொழுதைய சகல வடிவங்களும் நடவடிக்கைகளும் உங்களின் தலைமேல் வந்துள்ளன. இனி இவற்றைச் சுமப்பதில் சூழ்ச்சிகளும் சாட்சிகளும் நீங்களாகவே விளங்கப் போகிறீர்கள்! கடந்த காலத்தில் படித்தவை பாடமாக விரியும்போது வீரியமாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் புகழை விவரமாகப் பரப்பப் போகிறவர்கள் நீங்கள்தான்.

இனிவரப்போகும் அரசியல் சூத்திரத்திலும் சிக்கிப் பலியாகாத நிதானிப்புத் தேவை. போராளிகளாக இருந்தவர்கள் சிங்கள இந்திய அரசுகளுக்கு ஒத்தாசை புரிகின்றனர், அரசுகளின் விமானங்களில் பயணம் செய்கின்றார்கள். மீண்டும் எம்மிடம் வந்து நல்லவர்கள் போல் நடிக்கிறார்கள். அரசுகளுடன் சேர்ந்து எம்மினத்தை அழித்தொழிக்கவும் அடுத்தகட்ட நகர்வை நசுக்கவும் துரோகம் செய்கிறார்கள். மீண்டும் போராளி போல் வருகின்றார்கள். இந்த பிரான்சு நாட்டுக்குள் பலர் இப்படி வேடதாரிகளாக வேசமிட்டு நடக்கிறார்கள். பலபேர் பணத்திற்காகப் புலத்துத் தமிழனையும் காட்டிக்கொடுத்துப் பாரிய மாற்றுக் காரியத்தில் இறங்கிவிட்டார்கள்! இந்த வேதனைதரும் குழப்பத்தில் யார் தமிழன்? யார் துரோகி? யார் தியாகி? என்ற அடையாள வேட்டையில் குழம்பிப் போய் நிற்கின்றோம்! இச்சோதனைகள் இன்று வந்ததல்ல; நம்மிடையே பலகாலமாய் இருந்து வருபவைதான்.

பிரான்சில் இயங்கிய இயக்கங்களின் பிரச்சாரங்களையும், சம்பவங் களையும் நோக்கும்போது இங்கிருந்த சங்கங்கள், அமைப்புகள், பேரவைகள், குழுக்களின் உறவுகள் நீண்டகாலத்துக்கு நீடித்து இருக்க வில்லை! பிரச்சினைகளைப் பிரச்சினைகளாக்கிப் பிரிந்து பிளவுபட்டு விடுதலை நிலைக்கு இடையுறுகளை விதைத்த வண்ணமே இருந்தனர். திறமையும் ஆற்றலும் அறிவும் விடுதலைப் பற்றும் மிக்கவர்கள் இங்கும் இருந்தனர். இருந்தும் எதையும் சாதிக்கச் சந்திக்க அரசியல் கட்சிகளோடு கலந்தாலோசித்துக் காரியம் ஆற்றும் சித்தி குன்றியவர்களாகவே காட்சி யளித்தனர். இதன் தாக்கம் அன்று தெரியவில்லை. இந்த இளையோர் வீதியில் இறங்கிப் போராட வந்ததன் பின் அதிகத் தவறாகப்படுகிறது. இதில் தெளிவாகத் தெரிவது ஒற்றுமை என்ற பதம்தான்.

www.padippakam.com

*1983இல் மேல்கூறப்பட்ட இயக்கம் சார்ந்தவர்கள் எல்லோரிடம் ஒற்றுமை காணப்பட்டதை மறந்துவிட முடியாது. இனக்கலவரம் பிரான்சிலும் நடந்தது. கூட்டத்தோடு கூட்டமாகத் தங்கள் வீரப்பிரதாபங் களைக் காட்டிக்கொண்டனர். இக்காரியத்தில் சகலரும் இணைந்து செயல் பட்டனர். இந்தக் காலகட்டத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குக் குறைவாகத் தான் இருந்தது. இயக்கங்கள் ரீதியாக இயங்கியவர்கள் சிலருடைய பெயர்களை அடுக்கிக் காட்டலாம். ஒற்றுமைக்கு இடையூறாக இருக்கும் என்பதால் அதனைத் தவிர்த்துள்ளேன். ஐரோப்பிய-அமெரிக்க நாடுகளில் ஜூலைக் கலவரத்தின் எதிர்வினைகள் உக்கிரமானவையாக இருந்தன. பிரான்சில் பயமும் பதற்றமும் தென்பட்டதால் சிங்களன் தமிழன் கொலைகளும் இடம்பெற்றன. பிரான்சில்தான் மற்ற நாடுகளைவிட உக்கிரமானதாக இருந்தது. ஒன்று இரண்டு கொலைகளும் இடம்பெற்றன. சிங்களரும் தாக்கினர். தமிழர்களும் தாக்கினர். அதிக இழப்புச் சிங்களனுக்கே. பாதாள இரயில் பயணத்தில் பலர் இன அடையாளம் தெரியாமலும் தாக்கப் பட்டனர். அப்பாவிகள் பலர் இதனுள் மாட்டிக் கொண்டனர்.*

*இந்தச் செயலில் மட்டும் பிரான்சில் தமிழன் என்னும் இயக்கங்கள் இன்றி எல்லோரும் இணைந்து செயல்பட்டனர். பாரிஸ் நகர் எங்குப் பார்த்தாலும் கைகளில் தடிகள், இடுப்புகளில் கத்திகள், பைகளில் வாயுப் பொருட்கள், கார் டிக்கிகளில் வாள், பாட்டில்கள், பொல்லுகள் என இந்தத் தமிழனுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்திடும் சண்டியர்களாக எல்லா இயக்கக்காரர்களும் சேர்ந்து நின்றனர். இந்த நாளில் இவர்கள் அரசியல் கட்சிகளோடு இணைந்து நின்று வலிமைமிக்கதான அரசியல் நடவடிக்கைக்கு வழிகோல எத்தனிக்கவில்லை. ஒற்றுமையைப் பலப் படுத்த முயலவில்லை. T.C.C தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக இயங்கத் தொடங்கினாலும் பிரான்சில் உள்ள தமிழர்களின் ஒற்றுமையான பலத்திற்கு கூடுதல் கவனமும் அனுசரணையும் எடுக்கவில்லை! குழு குழுவாகப் பிரிந்து நின்றுதான் கலைநிகழ்ச்சிகள், போராட்டங்களைத் தங்களுக்குள் - குறிப்பாக பிரான்சில் உள்ளவர்களுக்குள் பலப்பரீட்சை யாக நிகழ்த்தினார்கள். தமிழீழ மக்களுக்கும் விடுதலைக்கும் பாதுகாப் பிற்கும் உரியதான ஒழுங்கை நிறுவுவதற்கான அரசியல் அணுகுமுறையில் ஈடுபடத் தவறியவர்களாகவே இருந்தார்கள். சர்வதேசத்தின் கண்களையும் நெஞ்சையும் திறக்கவும் தட்டவும் விளங்க வைக்கவும் எந்தக் குழுவினரும் அதிகக் கவனம் எடுக்கவில்லை! அந்த நேரத்தில் இந்தப் பிளவுபட்ட குழுக் களின் வார்த்தையில் 'நாங்கள் ஒன்றிணைந்தால் எங்களது தனித்துவம் பாதிக்கப்படும்' என்று சொன்னார்கள். இந்தத் தனித்துவம் என்ன என்று பின்னாளில் சிந்தித்தேன். அது புலத்துவாழ் தமிழரிடம் பணம் பிடுங்கும் போட்டித் தனித்து வமாகவேதான் இருந்தது!*


படிப்பகம்

www.padippakam.com

இந்த நிலையில் நிமிர்ந்து சிந்தித்தால் இன்று இளையோர் எடுத்திருக்கும் போராட்டத்தின் மகத்துவமும், மனித தர்மமும், நீதியும் வைரம்போல் பிரகாசிப்பதைக் காண்பீர்கள். விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கு மிடையே இடம்பெற்ற கொடிய யுத்த வரலாற்றில் புலத்துவாழ் தமிழர் பிரமிக்கத்தக்க விதத்தில் தங்களுடைய போராட்டங்களைச் சர்வதேசம் புரிந்துகொள்ளும் வகையில் நடத்திச் செல்லத் தவறியவர்களாகவே இருந்துள்ளனர். புலிகளும் சிங்கள அரசாங்கமும் கைச்சாத்திட்ட சமாதான கால நடவடிக்கையின்போது புலத்துத் தமிழர் அரசியல் ரீதியான முன்னெடுப்புகள் எதையும் மேற்கொள்ளவில்லை. சமாதான காலத்தின் மகிழ்ச்சியில் தங்கள் சொகுசு வாழ்வின் கவர்ச்சிக்கும், தாயகத்துக்கும் புலத்துக்கும் பறந்து பறந்து பணத்தைப் பங்கீடு செய்யும் படாடோபக் காட்சிப்படுத்தலுக்கும், திருமணங்களை நிச்சயிப்பதற்குமே அங்கும் இங்குமாகப் பறந்து சென்று வந்து குதூகலித்திருந்தனர். புலத்தில் எந்தவித அரசியல் போராட்டங்களோ, ஊர்வலங்களோ, அரசியல்மயப்பட்ட பங்கினையோ ஆற்றவில்லை. மூடுமந்திரத்தின் திரைமறைவில் பல விடயங்களில் புலிகளுக்கு ஆதரவு என்ற போலிப்புன்னகையைப் புலப் படுத்திவந்தனர். பிரச்சாரப் பீரங்கிகளாக பிரான்சில் தாங்கள் மட்டும்தான் இருப்பதாக வெளிவேடம் இட்டவர்கள் எந்தவிதமான அரசியல் நடவடிக்கை களையும் திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தவில்லை. அவர்களின் நிர்வாகம் இன்று கேலிக்கூத்தாகக் காட்சியளிக்கிறது. மக்களின் வெறுப்புக்கும் ஆத்திரத்திற்கும் உள்ளாகியதோடு புலத்துவாழ் தமிழன் கடுப்படைந் துள்ளதை வெளிப்படையாகத் தெரியப்படுத்தவும் துணிந்துள்ளனர்.

தமிழரின் தேசிய உணர்வின் ஆழத்தையும் அரசியல் விழிப்புணர்வையும் இங்கு நடைமுறைப்படுத்த பல வழிகளிலும் தவறு இழைத்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். போராட்டத்தை வளர்க்கும் பணியில் விடுதலைப் புலிகளைக் கருணைமிக்கவர்களாகக் காட்டும் நிகழ்வு வருடத்தில் கார்த்திகை நாளன்று கொண்டாடப்படும் மாவீரர் நாள். இந்தப் புனிதமான திருநாளில் தான் மேதகு தேசியத் தலைவரின் உரையை மக்கள் ஆர்வமோடும் கண்ணியமான வீரமரியாதையுடனும் எதிர்பார்த்துக் காத்திருந்து கேட்டுக் கொள்ள புலத்து மக்கள் செல்வார்கள். இந்த நாள் நிகழ்வுகள் சர்வதேச மெங்கும் சிறப்பாக நெய் விளக்கேற்றி மாவீரர்களுக்கு அவர்களின் கல்லறைமுன் மரியாதை செலுத்துவர். பிரான்சில் நான் கண்டமட்டில் நிர்வாகக் கடமையில் சரியாகத்தான் நடந்துகொண்டார்கள் என்று இங்குக் குறிப்பிடமாட்டேன்! அந்த நாள் கலை நிகழ்வுகளான கலைத்திறன் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், இசைப் போட்டிகள் இவைதான் மாவீரருக்கு மரியாதை செலுத்துவதற்காக நடத்தினார்கள். தமிழகத்திலும் தாயகத்திலும் இருந்து ஒருவரை சிறப்புப் பேச்சுக்கும் அழைத்து வருவர். தவிர அரசியல் விளக்கங்கள் எதுவும்



படிப்பகம்

கையாளப்படவில்லை. இவை இன்று பூச்சாண்டி காட்டிய நிகழ்வாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்!

காலம் காலமாகத் தலைவரின் மாவீரர் நாள் உரை மக்களை விழிப் படையவும் தெளிவடையவும் வைத்தது. விடுதலைப் புலியின் தலைமையின் செய்தி தெளிவாக இருந்தது. 2008 மாவீரர் நாள் உரை நம்மை பிரமிக்க வைத்ததை நாம் அறிவோம். தமிழீழ நாட்டைக் காண்பதற்காக உயிர் பலியான விடுதலைப்புலிப் போராளிகளைக் கௌரவிக்கும் நாளாக நவம்பர் 27, 1989இல் முதல் ஆண்டு ஞாபகார்த்தம் நடைபெற்றது. போராட்டத்தில் உயிர்ப்பலியான முதல் விடுதலைப் புலிப் போராளி சங்கரின் நினைவாக, இந்தத் தேசிய நாளை மேதகு தலைவர் பிரபாகரன் பிரகடனப்படுத்தினார். அன்றே தலைவரின் உரை தமிழரை மட்டுமல்லாது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும்! 2009 நவம்பர் 27 இருபது மாவீரர் நாள் உரைதனைக் கேட்டோம். இருபது பேருரைகளைக் கேட்டு வந்துள்ளோம். 1989இல் ஒரு நாள் நிகழ்வாகத் தொடங்கி இன்று உலகம் முழுவதும் வாழும் தமிழன் வாரக்கணக்கில் நடைபெறும் நிகழ்வாக்கியுள்ளான். இந்தத் தேசிய எழுச்சிநாள் இந்த ஆண்டும் வரும். உச்சத்தைத் தொடும். மாவீரர்களுக்கு நெய்விளக்கு ஏற்றுவோம். அவர்களின் தியாகத்தையும் வீரத்தையும் மீட்டுவோம்.

இன்றைய இளையோரின் போராட்டம் காட்டும் உண்மையை இந்த வேளையில் நாம் நோக்குங்கால் பழைய நிலைமையைத் திரும்பப் பார்க்கின்ற தலைமுறையினர் புதிய வழியில் செல்வது கண்கூடு. வீதிகள் தோறும் பள்ளிகள்தோறும் புதிய பாதையின் பேச்சு எழுகிறது. ஆயுதப் போராட்டம் தோற்றுவிட்டது என்று கருதுகிறார்கள். தோற்றேவிட்டது என்பார்கள். வரலாற்றை மறைப்பவர்களாகப் போராட்டப் பாதையை எதிர்ப்பவர்களாகவும் மறுதலித்து வந்தவர்களாகவும் கருதப்படுவார்கள். புலத்திலிருந்து குறை கூறியவர்களும் கேலி பேசியவர்களும் இவர் களேயாவர்! தமிழீழப் புலிகளின் உழைப்பெல்லாம் வீணாகுமா? கன வெல்லாம் நனவாகுமா?அவர்கள் வீரத்தில் விவேகத்தில் மூச்சுக் காற்றில் எழுந்த விடுதலைப் போர் எலும்புக்கூடாகிவிடுமா? இனி எழுமா? என்ற கேள்விகள் அரசியல் மயமாக்கத்தின் அடித்தளத்தைத் தட்டி எழும் கேள்விகளாய்ப் பரிணமித்துப் புலத்துத் தமிழனை உலுக்குகின்றன!

தன்னினம் தன்மொழி தன்நாடு தன்கலை
இன்னவற்றின் உயர்வை இழிவெனப்
பிறருளம் மகிழப் பேசி வாழ்பவன்
வேந்தனாயினும் தமிழன் துறைக்குத்
தலைவனாயினும் அந்தத் தமிழன்
செயற்கரு தவறு செய்தவனாவான்

www.padippakam.com

என்றார் பாரதிதாசன். இச்செயலை இன்று பலர் வெளிநாடுகளிலும் தமிழீழத்திலும் மறியல் இருக்கும் ஒரிசாவிலும் செய்து வருகின்றனர். இதில் பெருமாள் கூறும் கருத்துகள் வெட்கக் கேடானது. 'புலிகள் ஒரு தொடர் யுத்தத்திற்குத் தகுதியற்றவர்கள்' என்று மாமிசப் பிண்டம் சொல்லுது. உடம்பை அசைத்துச் செயல்பட முடியாத எருமை எடுத்தியம்பியதைப் பார்த்தபோது வெட்கமாகவும் கவலையாகவும் இருந்தது. இப்படியாகப் பலவடிவங்கள் உள்ளுக்குள் குமுறிக்கொண்டிருக்கின்றன. குமுறலைத் தாங்க முடியாது பேசவந்த தருணம் கிடைத்ததும் வெளியிலும் தலை காட்டுகிறது. இயலாத்தனம் கொண்டவர்களே இவ்வழிகளைப் பின்பற்ற முயல்கின்றனர். அவர்களில் ஒருவர்தான் இந்த எருமை பெருமாளும். யுத்தத்தைத் தடுக்க விரும்பாத சமாதான விரும்பிகள் ஆடும் கபட நாடகங்கள் மத்தியில் ஒட்டுக் குழுக்களும் உண்ணிகளும் தரும் உபத்திரவமும் நீதியற்ற சொற் பிரயோகங்களும் சிங்களப் பயங்கரவாத போர்முறைக்கும் இனப் படுகொலைக்கும் சாமரம் வீசுவதுபோல் பெருகி வருகின்றன. இந்த நிலை களைக் கவனத்தில் கொண்டு புலத்துத் தமிழரின் போராட்டம் கவனிக்கப் பட வேண்டும்!

சர்வதேசத்தின் முன் சிங்களமும் இந்தியாவும் கூறிவந்த பொய்மைக்கும் போலித்தன்மைக்கும் ஆயுத உதவிக்கும் சான்று பகர்வதுபோல் இந்தத் துரோகிகளின் செயல்களும் பேச்சுகளும் சாதகமாக அமைந்து விடுகின்றன. அளவற்ற வீரமும் சக்தியும் நிறைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது நெருக்குவாரத்துக் கடினநிலைக்கு விதியின் மீது பழியைப் போடுவதா? வல்லாதிக்க நாடுகள் மீது சினந்து நிற்பதா? இல்லை! மொத்தத்தில் தமிழனின் ஒற்றுமையின் மீது கோபம் கொண்டெழுவதா என்பதைச் சுட்டிக்காட்டாமலே தங்களது தியாகத்தின் தீபச் சுடரை முள்ளிவாய்கள் களத்தில் நிறுவிவிட்டு நிதானமாகப் பாருங்கள் தமிழீழ மக்களே! முள்கம்பிச் சிறைக்கூடத்தின் நிலைமையையும் நிதானிக்க வைத்தனர் புலத்தில் வாழ்வோரே! சமீபகால நிகழ்வுகளையும் நிகழப்போவதையும் விரிவாக ஆராய்ந்து மாறிவரும் உலகின் தேவையையும் தமிழரின் அரசியல் அணுகுதலின் கோர்வையையும் சர்வதேச சகாக்களின் போக்குகளையும் படித்துப் பார்த்துவிடுங்கள். முக்கியமாக நாம் தோல்வியைத் தழுவியவர் களல்லர் என்பதை உணர்ந்து தேசியத் தலைவர் கூறியபடி நடப்பீர்களாக!



படிப்பகம்

www.padippakam.com

# புலம்பெயர்ந்தவர் - இடப்பெயர்வு

இடப்பெயர்வினைப் பொதுவாக இரு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வர். தன்னிச்சையான இடப்பெயர்வு; தூண்டப்பட்ட இடப்பெயர்வு. ஒரு இறைமையுள்ள நாட்டின் பிரஜை அந்நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று வருதல் அல்லது குடியிருப்பினை அமைத்துக்கொள்ளுதல். இதனைத் தன்னிச்சையான இடப்பெயர்வு எனக் கொள்ளலாம். ஒரு நாட்டின் பிரஜைதான் வாழும் பிரதேசத்திலிருந்து மறைமுகமாகவேனும் நேரடியாக வேனும் உந்தப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்படும் இடப்பெயர்வினைத் தூண்டப்பட்ட இடப்பெயர்வு எனக் கொள்ளலாம். இலங்கையிலிருந்து தமிழன் சர்வதேச இடப்பெயர்வு மேற்கொண்டமைக்கு நீண்டகால வரலாறுண்டு. ஆங்கிலேயர் வருகையால் மலாயாவிற்கான இடப் பெயர்வுண்டு. பொதுவாக ஓர் இடப்பெயர்வாளன் முதலில் சிந்திப்பது 'சேரிடம்' பற்றித்தான். எங்கே போகிறோம் என்பதை நன்கு தெரிந்து புலம்பெயர்ந்த தமிழன், கண்டபடி ஏஜென்சிக்காரரை நம்பி தன்னம்பிக் கையுடன் வெளிநாடுகளில் வந்திறங்குகிறான். வசதிப்பட்ட நாடுகளில் வந்திறங்கி 'சேரிடம்' தவறியவர்கள் தமிழரில் அதிகமான தொகையினர் உண்டு. சிலருக்கு அந்தச் சேரிடம் வசதியளித்ததும் உண்டு. விரும்பத்தகாத மன உளைச்சல்களைக் கொடுத்ததும் உண்டு. எப்போதும் சேரிடம் கவர்ச்சியாகவும் தன் நோக்கத்தையும் தன்னையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் பார்த்துக்கொள்வார்கள்.

பிரான்சில் ஆரம்பத்தில் 1976களின் பின் 1983க்குள் வந்தவர்கள் இருப்பிடத்திற்கும் அனுமதிக்கும் உண்டு உறங்குவதற்கும் பட்டபாடுகள் சிலுவைப் பாடாகயிருந்தன. 1984க்குப் பின் உறவினர் இருப்பில் தொங்கி அவர்கள் மூலமாக வசதியோடு இன்றுவரை தொடரும் கதையாக வாழ்வின் வசதியைப்பெற்று வாழ்கின்றனர்! ஆயினும் சேரிடத் தெரிவு தவறியவர்களும் தவறுகளை மேற்கொண்டவர்களுமே அதிகம். எது எப்படியாக இருந்தாலும் ஈழத்தமிழன் அகதியாக வந்தான் என்ற பதம் எங்கும் முத்திரையாகக் குத்தப்பட்டுவிட்டதால் அது நீங்கப்போவதில்லை! பிரான்சுக்கு வந்தவர்கள் தமக்கு இந்த நாடு பிடிக்கவில்லை என்று வேறு நாடுகளுக்கு இடப்பெயர்வு கொள்வது அதிகம். இப்படியான பண்புகள் இடப்பெயர்வாளர்கள் வசதி கருதி எல்லா நாட்டிலும் கடைப்பிடிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படுகின்றன. இவை பல தவறுகளுக்கும் முரண் பாடுகளுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் ஏதுவாக அமைந்துள்ளன. தமிழரின் இடப்பெயர்வு காலங்காலமாகவே நடந்துவரும் துன்பமாகக் கருதப்படுகிறது.

புலம் என்னும் பதம் சொந்தநாடு எனப்படும். பெயர்வு என்பது இன்னொரு அயல்நாட்டுக்குப் பிரவேசிப்பதெனப்படும். புலம் நம் தாயகம், பெயர்வு பிரான்ஸ். 1958களுக்கு முன்னமே வரலாற்றுக் காலத்திலும் சிங்களர்களாலும் தமிழர்களாலும் இடம் பெயர்வுகள் நடந்துள்ளதைக் காணலாம். இலங்கையில் இனக்கலவரங்களால் நடைபெற்ற இடப் பெயர்வுகளே அதிகமாகும். இதில் தமிழன் சர்வதேசத்தில் இடப்பெயர் வினை மேற்கொண்டது ஆங்கிலேய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து. மலாயா விற்கு ஆங்கில அறிவின் காரணமாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் அரச கரும சேவைக்கெனச் சென்றது 1911க்கு முற்பட்ட காலமாகும். 1947 கணிப்பில் 16,783 பேர் இலங்கைத் தமிழர் வாழ்ந்தனர். இவர்களில் கணிசமானவர் யாழ்ப்பாணம் திரும்பிவிட்டனர். இந்தியாவிற்கும் இடப்பெயர்வினை மேற் கொண்டிருந்தனர்! இதன் படிநிலை எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது, இனப் போராட்டம் தீவிரமடைந்த பின்பாகவெனக் கொள்ளலாம். சர்வதேச இடப்பெயர்வில் தமிழர் எண்ணிக்கை குறித்து சரியான விவரம் இல்லை. எண்ணிக்கை தவறுதலாகவே கணிக்கப் படுவதால் மேலோட்டமாகக்கூட சரிவரக் குறிப்பிட முடியவில்லை.

1971களில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்ட மாகப் பரிணமித்த காலகட்டத்தில் கல்வி கற்றவர்களின் சர்வதேச இடப்பெயர்வு முனைப்புப் பெற்றதுடன் அதன் பின் நடந்த கலவரங்களும் சிறிலங்காப் பயங்கரவாதிகளின் தேடுதலுக்கும் அடக்குதலுக்கும் சிறைப் பிடித்தலுக்கும் பயந்து பதுங்கிய ஒளிவுமறைவுகளாலும் பிரான்ஸ், ஜெர்மனி, பிரித்தானியா, நார்வே, கனடா, டென்மார்க், நெதர்லாந்து மற்றும் வளர்ந்த நாடுகளின் கவர்ச்சியில் அரசியல் தஞ்சம் கோரினர். 1970களில் 25,000 முதல் 30,000 மக்களே இடப்பெயர்வுக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். தேச விடுதலைப் போராட்டத்தின் வீரியமும் விடாமுயற்சியும் 25,000க்கும் மேற்பட்ட மாவீரர்களையும் இலட்சக்கணக்கான மக்களையும் தியாகத் தீயில் கொடுத்துத் தமிழீழம் நின்றபோது சர்வதேசம் எங்கும் பல இலட்சம் தமிழர்கள் இடப்பெயர்வில் தங்கியிருந்தனர். இத்தனை இலட்சத் தமிழர்களும் தாயகத்தின் மீது எப்படியான அக்கறையுடன் வாழ்ந்தார்கள்; அவர்களின் தார்மிகக் கடமையும் பொறுப்பும் என்ன என்பன போன்ற கேள்விகள் எழும் நேரமும் இதுவாகும்!

1983 ஜூலை கலவரத்தின்போது மத்தியில் அசாதாரண நிலையினைச் சாக்காகக்கொண்டு சர்வதேசமெங்கும் இந்தியாவிற்குள்ளும் இடம் பெயர்ந்தனர். 1990களின் கணிப்பின்படி 3,00,000 தமிழர்களாகச் சர்வதேச



படிப்பகம்

www.padippakam.com

மெங்கும் இருந்தவர்கள் தொகை இன்று எத்தனை இலட்சம் என்பதை 100,000 இலட்சமாகச் சொல்வர். இதில் உள்நாட்டில் தமது சொந்த இருப்பிடத்தில் அகதியாக உள்ளவர் கணக்கும் வேதனை தருவதாக இருக்கும். யாழ்ப்பாண இடப்பெயர்வு சொந்தமண்ணிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டனர். ஜூலை 4, 1995 தொடங்கிய நீண்ட இடப்பெயர்வு தமிழன் வரலாற்றில் பதிவாகியுள்ள துயரத்தின் உச்சமாகும்! இந்த யாழ்ப்பாண இடப்பெயர்வை குரேஷிய-செர்பி யுத்தத்தில் பல இலட்சக்கணக்கான அகதிகள் இடம்பெயர்ந்த நிலையுடன் ஒப்பிட்டு, அதனைவிடக் கொடூரமாகச் சித்திரித்தனர். 1991இல் தீவுப்பகுதியைச் சிங்கள இராணுவம் தன்வசப்படுத்திய போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்தனர். 1990களில் சிங்களப் பயங்கரவாத இராணுவம் தனது நிலையைப் பலப்படுத்தும் முகமாகத் தமிழனின் நிரந்தரமான புதிய பழைய கிராமங்களை ஆக்கிரமித்தது. அக்கிராமங்களில் வசித்த தமிழர்களை நிரந்தர அகதிகளாக்கி, உடைமைகள் உட்பட வீடுகள் யாவற்றையும் தரைமட்டமாக்கி இராணுவ முகாம் பெருப்பிக்கப்பட்ட போதும் இடப்பெயர்வு நடந்தது. தமிழீழத்தில் தினமும் இடப்பெயர்வுதான். இனம் அழிந்துதான் போனது. வன்னியில் யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது தஞ்சமடைய வன்னிப் பெருநிலப்பரப்பு இருந்தது! இப்போது வன்னி இடப்பெயர்வு சிறிலங்காப் பயங்கரவாத மரண முகாமிற்குள். எப்படித் தமிழனின் வாழ்வுநிலை! எப்படித் தமிழனின் இடப்பெயர்வுகள்! சர்வதேசமெங்குமான புலம்பெயர்வுகள் என்பதை சிறிதாகப் பார்ப்பீர்கள். பெரிதாக உருவாகும் போது தமிழன் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்து கல்லறைகளுமின்றிச் சாம்பல்மேட்டில் தன் இருப்பின் வரலாற்றை வரைந்தது யாரெனக் கேட்பீர்கள்! புலத்து வாழ்வினர் திரும்ப ஒருமுறை வரலாற்றை அகழ்வாராய்ச்சி செய்ய நேரிடலாம். பெயர் குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது தமிழன் இடம்பெயர்ந்த அவலத்தை எத்தனை முறையெனக் கணிப்பிடுவீர்? இந்த வகையில் பார்த்தால் தமிழன் வாழ்ந்த இடமெல்லாம் கழுகும் கோட்டானும் வெளவாலும் புத்தனும்தான் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

சர்வதேசப் புலம்பெயர் தமிழன் இதைப் பற்றி என்ன கவனத்தில் கொள்வான் என்பதை ஆழமாக நான் சிந்தித்தபோது முடிவு இறப்பிற்கு முன் தமிழீழப் பிறப்பைக் காணவேண்டும் என் தலைமுறையினர் என்பதே பதிலாகப்பட்டது! இந்த வேளையில் நான் பிரான்சை மையமாகக் கொள்வதால் பிரான்சில் இன்று 80,000க்கு மேற்பட்ட தமிழர்கள் புலம்பெயர்ந்தவர்களாக வாழ்கின்றனர். இவ்வெண்ணிக்கை படிப்படியாக உயர்வடைகிறது. இதில் பிரான்சில் 1980க்குப் பின்னர் புலம்பெயர்ந்தவர் தொகையைக் கொண்டு தமிழர் கால்பதித்துக் கால் நூற்றாண்டு கழிந்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டதால் முதல் பிரெஞ்சுத் தலைமுறை தோன்றிவிட்ட நிமிர்வில் சமூகத்தின் பண்பாட்டு நிலையும் முற்போக்கும் முன்தள்ளிப் போராடும் தலைமுறையாக, இன்று பரிணமித்துத் தனிமனிதப் பாங்குகளிலும் சமூக விழுமியங்களிலும் பாரிய மாற்றங்கள் சாதகமாகவும் ஓரளவு பாதக மாகவும் ஏற்பட்டுவிட்டன. இந்த நிலைப்பாடுகளையும் புலம் பெயர்வு பற்றிய நீண்ட வரலாறு பின்னர் எழுதப்படும்போது எழுத்தாளர்கள் கவனத்தில் கொள்ளல் சாலச்சிறந்த பணியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாம் தலைமுறையின் நகர்த்தல்

புலம்பெயர்ந்த தமிழன் குறிப்பாக இரண்டாம் தலைமுறை புதிய வெளிச்சத்தில் புதிய சகாப்தத்திற்குள் வரவழைக்கப்பட்டுப் புதிய வழியில் புதிய போராட்டத்தில் பிரகாசிக்கின்றார்கள். இவர்கள் வாழும் நாடுகளில் தொடங்கியுள்ள போராட்டங்கள் மிகத் தேவையும் நேசிப்பும் மிக்கவை யாகும். அரசியல் ரீதியான தேவைகளின் உள்நுழைவுகளை நுண்புல நுண்ணறிவோடு செயல்பட்டுப் பின்வரும் அரசியல்வாதிகளோடும் அரசியல் இயக்கங்களோடும் பரஸ்பரம் பழகி அரசியல் மயப்பட்ட போராட்டத்திற்கான ஆதரவையும் பங்களிப்பையும் பெற்றுத் தமிழ் மக்களின் வாழ்வியலை வளப்படுத்த வேண்டும். விடுதலையின் விவரத்தை வீரியமிக்கதாகத் தெளிவுபடுத்த இந்தத் தலைமுறைப் பரம்பரையும் பார்வையும் கேள்வியும் வேள்வியுமான நிலைப்பாட்டைச் சோர்வின்றித் தளர்வின்றி நம்பிக்கையும் நல்நோக்கும் தளராது சித்தி யுடனான சீர்ப்படுத்தல் அணுகுதலோடு செயல்படுதல் வேண்டும்! இளையோருக்கு வாய்த்திருக்கும் வேளையும் கட்டாயக் கடமையும் இதுவெனக் கண்டு இரண்டாம் தலைமுறையினராக பிரான்சிலும் இதர நாடுகளிலும் நகர்த்தல் நற்பலன் கொடுக்கும்.

உலக கத்தோலிக்க மக்களின் திருத் தந்தை போப்பாண்டவர் ஏப்ரல் 4, 2009 அன்று உலக மக்களிடம் பொதுக்கருத்தை தெரிவித்தார். பெண்களின் பங்களிப்பு அதிகமாகப் பாராட்டப்படவும் ஒவ்வொரு நாட்டிலும் அது நலமான மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்படவும் வேண்டுமென்று போப்பாண்டவர் குறிப்பிடும்போது 'தமிழச்சிகள் நிர்வாணமாகப் பாலியல் படுகொலைகள் செய்யப்படும்போது ஒரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இனவெறியில் தமிழ்ப் பெண்கள் எல்லாம் சிங்கள இராணுவத்தின் பாலியலுக்கு விருந்தாக்கப்படுவார்கள்; இளைஞர்கள் எல்லாருடைய உயிர்களும் இந்து சமுத்திரத்தில் கரைக்கப்படும்' என்று கூறியதைப் போப்பாண்டவரும் அறியவில்லை போலிருக்கு. அறிந்தும் தட்டிக் கேட்க மதம் மறுதலித்துவிட்டது.

அத்துடன் 'காசா பகுதியில் குண்டுகள் தொடர்ந்து வெடித்துக் கொண்டிருந்தாலும் நாங்கள் இந்த இடத்தை விட்டுவிட்டு ஓடமாட்டோம்!



படிப்பகம்

www.padippakam.com

ஏழைகளுக்கு நாங்கள் செய்யும் பணி தொடரும்' என்று அன்னை திரேசாள் அருட்சகோதரிகள் கூறினர். வன்னித் தமிழ்க் குழந்தைகள் கதறியபோதும், பசியில் கையேந்தி தாயின் முலைப் பாலுமின்றிக் கொலை செய்யப்பட்ட போதும் இந்தத் தர்ம மடங்கள் எங்கேபோயின? இரக்கமும் மன்றாட்டுக் களும் தமிழனுக்காக இறைவன் காலடியில் சங்கமிக்க சன்மார்க்கங்கள் தடுத்துவிட்டனவா? பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தன் வீட்டாரைக் குறித்து எச்சரித்தார். வரப்போகிற அழிவில் இருந்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்ற பேழையைச் செய்வித்தார்! அதுபோலவே நாமும் பேழைக்குள் காணப்படும்படிக்கும் நம் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் பாதுகாக்கப்படும்படிக்கும் ஊக்கமாய் விழித்திருந்து செபம் பண்ணாது நீங்கள் இருந்ததில் என்ன பலன் தமிழன் கண்டான் என்பதைச் சர்வதேசத்தில் மதம்மாறிக் கொண்டிருப்போரே தர்மஸ்தாபனங் களைத் தட்டிக்கேளுங்கள். நம்மிடையே தெய்வ நம்பிக்கையும் இல்லாது போனதுக்கு ஒருமனப்பாடும் ஒற்றுமையும் இல்லாது போனதே காரணம். தமிழனின் ஒற்றுமைக்கான ஆசிர்வாதம் யாரிடமிருந்து கிடைக்கும் என்பதை ஒற்றுமையின் மூலமான விசுவாசத்தில் இந்தப் பிரான்சில் முதலில் செயல்படுத்திக் காட்டுவீராக.

இளையோரின் போராட்டங்கள் மத்தியில் காணப்படுவது இனத்தின் மத்தியில் இன்றளவும் நிலவி நிற்கும் ஒற்றுமை பற்றிய கவலைதான்! நாம் ஏன் கூட்டுறவாகித் தமிழீழ உயர்வைக் காண ஒன்றிணையவில்லை என்ற கேள்விதான்! நாம் ஏன் பிரிந்து நிற்கிறோம்? இவ்வளவும் நடந்த பிற்பாடும் இந்த வேளையிலும் நாம் ஏன் பிரிந்து பிளவுபட்டு நிற்கிறோம்? இந்த ஒற்றுமையை ஏற்படுத்த இளையோர்கள் ஈடுபட்டால் அதன் தாத்பர்யம் உணர்ந்து மற்றவர்கள் ஒன்றுபடுவார்களா என்பது பற்றிய கேள்விதான்!

மிகவும் கடினம் என்று மூத்தவர்கள் சொல்வதும் இளையோருக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. ஒற்றுமையின்மையின் காரணமாக ஏற்பட்ட அழிவின் கொடூரங்களையும் இன அழிப்பின் உச்சத்தையும் மதிப்பின் மதிப்பீடுகளையும் நாம் கண்டுவிட்டோம். இந்தத் தலைமுறை யினர் வாழும் காலத்தில் இந்த ஒற்றுமை உறுதிப்படுத்தப்பட்டால் மிகவும் நல்வாய்ப்பின் தருணமாக வாய்க்கும். ஒருகணம் நாம் பெருமையுடன் இந்த வாழ்வுக்கு ஒத்தாசை வழங்கியதைக் கூறி நிற்கும் சிறப்பிடம் பெறும். அந்த ஆண்டபெருமையில் புதிய பூமி விழித்தெழும்.

இளையோர்கள் காண்பதற்காகவும் பாதுகாப்பின் முன்னேற்றத்திற் காகவும் இனியாவது கூட்டுறவாகித் தமிழீழ நாட்டின் உயர்வுகாண ஒன்று படுவீர் என்று இளையோர்கள் வேண்டுகின்றனர்.



படிப்பகம்

அனைத்து விடயங்களிலும் பெரும்பான்மைப் பலமே வெற்றி பெற வேண்டும் என்று வந்தால் அந்த அரசு நியாயத்தின் அடிப்படையில் அமைந்ததாக இருக்க முடியாது. பெரும்பான்மையைக் கொண்டு நல்லது கெட்டதைத் தீர்மானிக்காமல் மனச்சாட்சியைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். மக்களைக் கொலை செய்து அவர்கள் பிணத்தின்மேல் நின்று பேயாட்சியை நிறுவுமானால் அதனால் என்ன பயன் விளையும்?

தமிழர்களின் உள்ளங்கள் உயிரற்ற பாறாங்கற்களல்ல! மரங்களோ மிருகங்களோ அல்ல, அநீதியான சிங்கள அரசின் ஆணையை ஏற்று அடிமைப்படுவதற்கு! புரட்சி மனப்பாங்கு எல்லா மனிதர்களுக்குமுள்ள இயல்பான ஓர் உண்மை. அரசின் கொடுங்கோன்மையோ - திறமை யின்மையோ பூதாகரமாக வளர்ந்து பொறுக்க முடியாமல் போகும்போது சிங்களப் பேரினவாத அரசை எதிர்ப்பதும் அரசுக்கு விசுவாசம் மறுப்பதும் தனிமனிதனின் உரிமை. தமிழீழ மக்களைச் சிங்களப் பேரினவாத அரசு உடைமை கொள்ள முடியாது! ஒத்தூத வைத்திடவும் முடியாது!

சிங்களப் பேரினவாத ஆட்சியிடமிருந்து தேசத்தையும் தேசமக்களை யும் காப்பாற்றி அம்மக்களின் பாதுகாப்பையும் வளமான வாழ்வையும் உறுதிப்படுத்தும் போராட்டம் சர்வதேசம் எங்கும் வியாபித்து நிற்கும் இளையோரின் நடவடிக்கைகளைப் பார்த்து உலகம் தலைசாய்க்கிறது. அவர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கிப் புலத்துவாழ் தமிழர் இல்லங்கள் எல்லாம் பெருமைப்படுகிறது. தங்கள் பலநாள் கனவுகளைக் கனியாக்கி - நெடுநாள் கவலைகளை உடைத்தெறிந்து, 'தமிழா நீ பேசுவது தமிழா' என்னும் பாடலைக் கேள்வியாக்கிப் பின் முற்றுப்புள்ளி வைத்து விட்டு தமிழால் உள்வாங்கி அந்தந்தத் தேசத்து மொழியால் தீவிரப்படுத்தி நடைமுறைப் பண்பாட்டு இனத்தின் பண்புமொழியின் பற்றுதலை விதைத்துள்ளனர்!

இந்த இளையோரை எப்படி எம்மொழி பண்பாடு கலை இலக்கிய வெளிப்பாட்டிற்குள் உட்படுத்தப் போகிறோம் என்ற தாக்கத்தை இந்த வன்னிமண் நிகழ்வு வீரிய பாய்ச்சலுக்குள் புகுத்தியுள்ளது புலத்துத் தமிழர் கண்ட பெரும்வெற்றி. வன்னி மக்களின் பேரழிவின் பின்னணி தேசம் தழுவிய பற்றையும் மக்களின் பற்றையும் தழுவிக்கொண்ட இளையோர் வழி நடப்பித்தலும் நடத்தலும் இட்டுப் பயமும் தயக்கமும் நிலவிய கட்டம் கழிந்துவிட்டது. தமிழும் தமிழனும் தேசமும் தேசியமும் அதியுயர்ந்த கோஷமாக ரோசமாக நிலைத்திருக்கும் விசுவாசமாகப் பரிணமித்து விட்டது.

உலகம் தமிழனைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பது தெரிந்தும் உலகத்தைக் கவனயீர்ப்பிற்குள் கொண்டு வரவேண்டும் என்ற கடமை

www.padippakam.com

உணர்ந்து வெளிப்பட்டுவிட்ட இளையோரின் கவனம் உறுதியோடும் செப்பமாகச் செயல்படும் பண்போடும் திகழ்கிறது. அவர்களிடம் காணப் படும் துணிச்சல் இன்று மெச்சக்கூடிய அளவுக்கு புலமெங்கும் பரவி விட்டது. இப்படிப் பல சிறப்புகள் இருந்தாலும் சிலபல அனுபவமற்ற தவறுகளையும் பெரியவர்கள் கவனித்திருக்கின்றனர்! இக்கட்டுரையில் குறிப்பிடும் யாவும் பிரான்சில் இடம்பெற்ற போராட்ட நிலவரமாகும்!



படிப்பகம்

www.padippakam.com

# உண்ணாவிரதமும் கவனயீர்ப்பும்

இதில் உண்ணாவிரதம் இருந்த விக்னேஸ்வரன் வரணன்(25), ஆனந்தக் குமாரசாமி ரவிராஜ் (28), செல்வக்குமார் அல்பேட் (22), சண்முகநாதன் நவநீதன் (26) - இந்த நால்வரும் உண்ணாநோன்பைத் தொடங்கினர். நம்ப முடியாத அளவுக்கு நமது உடலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் படைத்தது 'மனம்'. இந்த மனத் தைரியமானது இறுதிவரை போரிடுபவர்களுக்குத் தளராத உறுதியுடன் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். இந்த நிலைப் பாட்டைச் சர்வதேசம் எங்கும் உண்ணாவிரதம் இருந்தவர்களிடமும் தீக்குளித்தவர்களிடமும் காண நேர்ந்தது. பிரான்சிலும் லண்டனிலும் உண்ணாவிரதம் இருந்தவர்களிடம் கூடுதலாகக் காணப்பட்டது. இத்தோடு லண்டனில் இருந்த பிரித்தானியக் குடிமக்களிடமும் அந்த உறுதி தமிழனுக்காக மிளிர்ந்ததை அவதானிக்கலாம். இவர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் மனித தர்மம் மிக்கதாகும். இவர்களை மறந்துவிடுதல் ஆகாது.

குடிமகனின் உடலைப் பற்றியும் அவர்களுடைய அற உணர்வுகளைப் பற்றியும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் போதுதான் ஆட்சி நிர்வாகத்தின் சிறப்பு தெளிவாகத் தெரியும். தமிழீழத்தில் மனிதர்கள் கொலை செய்யப் படுவதை, குறிப்பாகச் சிறுவர்கள் சிசுக்கள் இளைஞர்கள் ஆகியோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்துத் தடுக்க மனித தர்மம் குரல் கொடுக்க வேண்டும்! நாளும் பொழுதும் குறிபார்த்துத் தமிழ் இனத்தைக் கருவறுக்கும் கொடும் பாதகத்தை நிறுத்தும்படி மேற்கொண்ட உண்ணாநோன்பும் கவனயீர்ப்பும் அடங்காப் பற்றுப் போராட்டமும் வெற்றியளித்தனவா என்னும் கேள்வியை மனப்பாதிப்போடு நோக்க வேண்டியதாக இருந்தாலும் தர்மம் சாகவில்லை!

ஐக்கிய நாடுகள் சபை அதன் தோற்றத்திற்கான அடிப்படையில் சமாதானத்தை உருவாக்கவும் அதனைப் பேணவும் வேண்டுமென வீதியில் நடைபெறும் போராட்டங்கள் சாந்தமாகவும் அமைதியாகவும் கோஷமிடு வதைக் கேளாது, நீங்கள் ஏன் செவிடர்களாகிக் கிடக்கிறீர்கள்! போர் நெறி தவறிப் போரிடும் பலமிக்கவரை எதிர்த்து நீதியை நிறுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் எங்கும் மனித உரிமைகளை



படிப்பகம்

www.padippakam.com




இனமொழி உணர்வுடன் தீக்குளித்தவர்கள்

நடைமுறைப்படுத்துவதற்குமான தனிச் சிறப்புமிக்க அதிகாரத்தைத் தன்னகத்தே வரித்துக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையே, உன் இருண்ட கண்களைத் திறந்து பார், வன்னித் தமிழனை என்று கேட்டு உடனடிப் போர் நிறுத்தத்தையும் சிங்கள அரசின் கொலைகளையும் சுட்டிக் காட்டி நின்றோம். நீங்கள் இப்படியே கேட்டு அப்படியே விட்டுவிடு கிறீர்கள். நாங்கள் மனித உரிமையின் மையம் கொண்ட ஊர்வலங்களையும் போராட்டங்களையும் நடத்தி வருகின்றோம். நீதி கிடைக்கும் வரையில் நாம் ஓயமாட்டோம்!

ஏப்ரல் 18, 2009 சனிக்கிழமை நடைபெற்ற அடங்காப் பற்றுப் பேரெழுச்சி யாகத் திகழ்ந்தது. சுதந்திர சதுக்கம் உலக அதிசயமான ஈபில் (TROCADERO) முன்பாக முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர் கூடினர்! உலகம் முழுதும் உள்ள மனிதத்தைத் தட்டியது இந்த எழுச்சியும் நான்கு இளைஞர் களின் உண்ணாநோன்பும். பெரும் மாற்றத்தையும் சிறிலங்கா பயங்கர வாத நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்கும் அளவுக்குரிய வேகத்தையும் உருவாக்கியது. பிரான்ஸ் அரசாங்கத்தின் அமைச்சர்கள் பாது காப்பினர் களின் ஆதரவுடன்தான் இந்தப் பெரும் கண்டனமும் கவனயீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றன. இதற்கு மேலாக அமெரிக்க ஐரோப்பிய நிலமைகள் வீறுபெற்றிருந்தன. வன்னியில் படுகொலை செய்யப்பட்டவர் களுக்கு அகவணக்கம் செலுத்தி நினைவுச்சுடரை உண்ணாவிரதமிருந்த வருணனின் தந்தையார் ஏற்றும்போது சிறுவர், சிறுமியர், மக்கள் அனைவரும் வெள்ளைப் பூக்களாகக் கண்ணீர் சொரிந்தனர். வந்திருந்த வெள்ளையர் கண்களிலும் நீர்த்துளிகள். தாய்மார்கள் மார்பிலடித்துக் கதறினார்கள். வானமும் அழுதது.



படிப்பகம்

நகரப் பிதாக்கள், உதவியாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரின் தலைமையில் உடனடிப் போர் நிறுத்தம் கோரிய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள்:

M. Stphane GATIGNON (maire de Sevran )
M. BIanchet (maire de Sevran )
Mme. Nathlie BAYON (èlue de Severan )
M. Kujawsk (conseijjer municipal Severan)
Mme. Alime Boumediene THIERY (Sènatrice de Paris ies Verts)
M. et Mme Michel Bouegain (maire ile dr Saint Denis)
M. Ravi ShanKar ( èlu ile Saint Denis)
Mme. Masse BAGAYOKO ( maire Adjoint de St Denis et Vice Prèsdent 93°
Mme. Neiiv Roland lriberry (maire et coseillere gènèrale villepinte)
M. Bally BAGAYOKO(maire Adjint de st Denis et vice prèsident du Conseij G-93)
M. jean LUCTerreyre (maire adjoint à villepinte)
M. Palcy (conseiller municipal dèi-gtion Villpinte )
M. Damiel Henry (1 adjoint au maire Villenuve st Georges )
Mme Sylvie Richejon (maire adjoint Villenuve st georges )
Elsa BARDEAUX (maire adjoint Villeneuve st gorges )
Mme Danielle Vermot (anocat honoraire à sèvre Parti Vert )
M. David Fabre (conseiller municipal du PS)j
M. Bonhome(vice pr-sdent Garges les Gonesse )
Mme Mesana (avocat )
M. lzri (mèdecin )
M. Manchou (èlu de Sevran )
M. Bprgel (ps)
M.Marvannick le Bris (CGT )
MILe Soosapillai Sophia (èlue de Sarcelles )
Mille Raviendranathan Kala (conseiller municipal )
M.Bouziad (èlu Garges les Gonesse )
Mme Ariathnam (èlu Clichy sous bois )
M.Anthony Roussel (èlu de la Courneuve )
M.Jacgues fath (PCF)
M.Daniel Gokiberg (deputè de seine Saint Denis )
Mme Gitton mirelle (maire adjointe Ville de ciihy )
M.Stèphane Troussel (conseiller municipal lacourneuve )
M;Capitanio Guy (conseiller dèpartemental Paris )
M.Puvaneshwaran (èlu de la Courneuve )

வந்திருந்த பிரெஞ்சு நாட்டின் முப்பது நகரசபை முதல்வர்களும் இவர்கள் சமாதானத்தை எவ்வளவு வலிமைமிக்கதாக நேசிக்கிறார்கள், அத்தோடு இவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளும் உண்ணாநோன்பும்

www.padippakam.com



தமிழன் வீதிவீதியாக நின்று கோசம் எழுப்பி அழுதுதொழுது கதறி ஓலமிட்டபோது வயதான வெள்ளையர்களான திரு மிஷல், திருமதி பெல்லோம் ஆகிய இருவரும் ஏன் தமிழ்க்கொடியை ஏந்தி நின்றார்கள்? இவ்விருவருடைய மனிதாபிமானம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அடங்காப்பற்றும் போராட்டமும் நீதியானதும் நீதி கிடைக்க வேண்டியது மான போராட்டம் என்று ஏற்றுக்கொண்டனர். ஏப்ரல் 22, 2009 காத்திரமான முடிவு சொல்வதாக உறுதியளித்துச் சென்றனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய நாடு பாரதநாடு. அந்த இந்தியா, காந்தி தேசம் பயங்கரவாதியாக நிற்கிறது. இந்த வல்லாதிக்க வல்லூறுகளால்தான் சின்னரசு அதிபயங்கரவாதியாக மாறியது. மனித தர்மம் குடிமகனைப் பற்றி, உடலைப் பற்றி, அவனுடைய அறவுணர்வுகளைப் பற்றிக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் போதுதான் குடியரசு நாடு என்னும் தகுதியைப் பெறும். தனி மனிதனின் மிருதுவான சுதந்திர ஆற்றல் ஊற்றும் சேர்ந்து சொந்த அதிகார ஆதிக்கமும் பொசிந்து எழும்போது சாத்வீகம், அகிம்சை, அறவழி, அன்புநெறி, தார்மீகம் ஆகியன வணங்கும் அன்பு நிலையை அடைகின்றன. இந்தியாவும் உதவிய நாடுகளும் சிறிலங்காப் பயங்கரவாதமும் தமிழ் மக்களின் பிணத்தின் மீதும் சாம்பல் மேட்டிலும் நின்றாடி தங்கள் வெற்றியை நிறுவிய பின் முள்கம்பிக்குள் தமிழனை அடைத்து வைத்துக் கொடுமையைக் கொட்டி நிற்கிறது. இந்த மரண முகாம் பற்றிப் பின்னர் பார்ப்போம்...



படிப்பகம்

ஈழத் தமிழரின் வரலாற்றில் எப்போது பிடித்தாண்ட பிரித்தானியர்கள் ஈழ நாட்டை ஒற்றையாட்சியின் கீழ் சிங்களர் கையில் கொடுத்துவிட்டுப் போனார்களோ அன்றிலிருந்து சிங்களவன் கீழ் அடிமையாக வாழ் என்று கையளித்து விட்டுத்தான் போனார்கள். அன்று தொடங்கி அகிம்சையும் அறவழியும் நீதியுமிக்க பண்பான போராட்டத்தைத்தான் தமிழன் நடத்தி வந்தான். ஈழத்தமிழன் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்ததுபோல் புலம் பெயர்ந்த நாட்டிலும் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துபோனான்.

புதன்கிழமை வந்து சொல்வதாக இருந்த நகரப் பிதாக்களின் வாக்குறுதிகள் காற்றோடுபோயின! 1956 காலிமுகத்திடலில் உண்ணாவிரத சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தமிழினத் தலைவர்கள் மீது கண் மூடித்தன மான தாக்குதல் நடத்தி, கொழும்பில் தமிழர் சொத்துக்களைச் சூறையாடிய முதல் போராட்டம்தான் தமிழனின் உண்ணாவிரதப் போராட்டம். அதன் பின்பு நடைபெற்ற சாத்வீகப் போராட்டங்கள் எதுவும் சிங்களவன் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இரக்கமளித்ததாகச் சரித்திரமில்லை! இந்த வகையில் 1972களில் 42 இளைஞர்களின் சிறை மீட்புக்காக நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டங்கள் அதன்பின் ஆயுதப் போராட்டத்தின் முன்னெடுப்பிலும் முதல் முதல் உண்ணாநோன்பின் வலிமைக்கு மதிப்பளித்து உண்ணாவிரதம் இருந்தவர் தலைவர்தான்.

நவம்பர் 22, 1986 இந்திய அரசு பறிமுதல் செய்த ஆயுதங்களையும் தொலைத்தொடர்புக் கருவிகளையும் திரும்பப் பெறவேண்டி தலைவர் பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். இதன் பின்னணி நீண்ட வரலாறு. 1983ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்விப் பிரச்சினையை முன்வைத்துச் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தனர். இந்தப் போராட்டமும் நாட்கள் எடுத்துக்கொண்ட போராட்டம் தான். அதன்பின் தியாகி தீலிபன் நல்லூர் வீதியில் 1987 இருந்தது, கிழக்கில் அன்னை பூபதியின் உண்ணாநோன்பு போன்ற எதுதான் தமிழனுக்குச் சாதகமாகச் சமாதானத் தீர்வாக அமைந்தது?

அதன் பின்னணிகளில் நின்ற இன்றைய தலைமுறை ஐரோப்பிய அமெரிக்க ஆப்பிரிக்க நாடுகளின் தர்மத்தை நம்பி உண்ணாநோன்புப் போராட்டங்களைத் தொடர்ந்தனர். சமதர்ம சகோதரத்துவ சுதந்திர வலிமைமிக்க வாசகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பிரான்சு தேசம் நிச்சயம் எங்கள் இனத்தின்மீது இரங்கி, காத்திரமான முன்னெடுப்புகளை எடுக்கும் என்று காத்திருந்து நான்கு உண்ணாவிரதிகளும் ஏமாந்தனர். பல்லாயிரக்கணக்கான உள்ளங்களும் உடைந்தன.

# பகிஷ்கரிப்பு

வர்த்தகர்களின் ஒருமனதான தீர்மானங்கள்! பலநாட்கள் வர்த்தக நிலையங்களின் கதவடைப்பு! தமிழன் கண்ட வரலாற்றுப் போராட்டப் பகிஷ்கரிப்பு! கடந்த காலத்தில் தாயகத்தில் நடைபெற்ற கதவடைப்பின் காட்சியாகப் புலத்தில் குறிப்பாக 'லாச்சப்பல்' கடைத்தெருக்களில் காணப்பட்டது. தமிழரது வர்த்தக நிலையங்கள் அனைத்திடங்களிலும் கதவடைப்பில் ஈடுபட்டிருந்த சோகத்தைப் பலநாட்கள் பிரெஞ்சு மக்கள் பிரமிப்போடு பார்த்தனர். நீறு பூத்த நெருப்பாகத் தமிழருக்குள் இருக்கும் தமிழீழ வேள்வி இன்னும் எத்தனை காலத்துக்கு இருக்கும்? என்ற உணர்ச்சியின் வெளிப்பாடாகத்தான் வர்த்தக நிலையங்களின் கதவடைப்புகள் சாட்சியம் பகர்கின்றன. எல்லாக் காலங்களிலும் எல்லா இடங் களிலும் துரோகம் என்னும் செயல் துரோகி என்னும் வடிவில் தமிழனிடம் கூடுதலாக வளர்வதற்குக் காரணமான காரியத்தை இனி வரும் சந்ததி தீவிரமாக ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். இந்த நெருக்கடிக்குள் இளையோர் முடுக்கிவிட்ட விழிப்பான நிகழ்வு சிறிலங்காவிலிருந்து வருகின்ற சிங்களத்துக்கு வரி கொடுக்கின்ற நுகர்வுப் பொருட்களைத் தடைசெய்வது பற்றியது! இனப் பேச்சளவில் கோஷமாக நடைபெற்றாலும் நடைமுறைப்படுத்தும்படி வர்த்தக நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதற்கான துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் ஒட்டப் பட்டிருந்தன.

இஸ்ரவேலரின் ஆதிக்கத்தில் உள்ள வியாபாரமும் நிதி நிர்வாகமும் அந்த நாளில் சொற்பமானவையல்ல! அவர்கள் சாந்தமான முறையில் ஜெர்மனியப் பொருட்களைப் பகிஷ்கரிப்பது என்று 1933 மே மாதத்தில் நியூயார்க்கில் கூடிய மாநாட்டில் பின்கண்டவாறு தீர்மானித்திருந்தனர். 'ஜெர்மனியிலோ அதன் பகுதியிலோ விளைந்த, செய்த, சீர்திருத்திய எல்லாப் பொருட்களையும் சாமான்களையும் பகிஷ்கரிக்க வேண்டி ஜெர்மனிய கப்பல்கள், சாமான்கள், மனிதர் போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாவற்றையும் பகிஷ்கரிக்க வேண்டியது. இன்னும் தற்கால ஜெர்மனி யில் உள்ள ஆட்சிக்குச் சாதகமான எவ்விதக் காரியத்தையும் பொதுவாக யாரும் செய்யக்கூடாது'. இது ஜெர்மனியில் ஹிட்லருக்கு ஏற்பட்ட எதிர்விளைவுகளில் பெரும் எதிர்ப்பாக இருந்த பகிஷ்கரிப்பாகும்!

www.padippakam.com




வர்த்தக நிலையங்களின் பகிஷ்கரிப்பில் லாச்சப்பல்

1933களில் ஜப்பான் சீனா மீது பெரிய தாக்குதலைத் துவங்கியது. இதைக் கண்ட சீனக் கட்சிகள் பரஸ்பரம் பகைமையை மறந்து ஜப்பானுக்கு எதிரான ஒரு ஐக்கிய முன்னணியைத் திரட்டினர்.

இப்படியான நிலைப்பாடுகளைத்தான் தமிழர் இந்தவேளையில் நிலை நிறுத்திக் காட்டியிருக்க வேண்டும். அதற்கு மாறாகக் காட்டிக் கொடுத்தும் இனத்தை அழிக்கும் இனம் தின்னிகளுடன் ஒட்டுக் குழுக்களாகப் பகைப் படையுடன் சேர்ந்திருந்தும் செயல்பட்டு இனத்தைச் சீரழித்துச் சிதைத் துள்ளனர். இந்தவேளையில் சீனா சோவியத் யூனியன்பால் நெருங்கிப் போனது. 1933 நவம்பரில் இரு நாடுகளுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் உண்டானது. ஜப்பானிய நிதி நெருக்கடி கழுத்தை நெரிக்கத் தொடங்கியது. இந்தியாவின் அனுதாபம் சீன மக்கள்பால் இருந்தது. இந்தியாவிலும், அமெரிக்காவிலும், வேறுபல நாடுகளிலும் ஜப்பானியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டிய இயக்கங்கள் பெரிய அளவில் தோன்றின. ஜப்பான் கதிகலங்கிப்போனது! அன்று 'இன்று வன்னியில் சாம்பல் மேட்டில் சுடுகாட்டில் நின்று சிங்களம் அபகரித்த மண்போல்', காங்காய் நகரையும் நாங்கிய நகரையும் பிடித்துக்கொண்டது. ஜப்பானிய சேனை சுடுகாடாகிக் கிடைத்த நகரங்களைப் பிடித்துக்கொண்டாலும் சீனாவின் எதிர்ப்பை அடக்கிவிட முடியாதுபோனது. இந்த நிலைத்தோற்றம் தமிழீழ மண்ணிலும் நேர்ந்தது! துன்பம் புதிது புதிதாக வர எதிர்ப்புகள் மேலும்



படிப்பகம்

www.padippakam.com

உறுதிபெற்று எழுந்தன! இந்த நிலைப்பாட்டை சீனா நன்கறியும். அறிந்திருந்தும் கடுகளவாவது சிந்தித்திருந்தால் தமிழீழத்தைச் சிங்களம் ஆக்கிரமிக்க முழு முதல் உடந்தையாக மூக்கை நுழைத்திருக்காது. இந்தப் பாடத்தைக் காலம் தமிழனுக்கு கற்றுக்கொடுத்திருப்பதைப் புலத்திலுள் ளோர் அறிந்துகொண்டதன் விளைவே சிறிலங்காப் பொருட்களைப் பகிஷ்கரித்தல். இப்போராட்டம் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் முன்னணியில் உள்ளது. 2008-2009களில் தமிழர் பூமியில் பயங்கரவாதம் மாதக்கணக்கில் நடந்து வருகையில் மே மாதம் 15ஆம் தேதி உக்கிரமான கொடூரமான நிலையைக் கண்டும் வல்லரசுகள் சின்னரசுகள் வாக்குறுதி களைச் சமாதானப் புறாக்களை எல்லாம் காற்றில் பறக்கவிட்டன. அட்டூழியத்தை எதிர்த்துச் சமாதானத்தை ஆதரித்துத் தங்களுடைய சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றத் தவறியதைப் புலத்திலுள்ளோரும், மனித தர்மிகளும், விந்தையோடும், வியப்போடும் கண்ணீரோடும் நோக்கி நின்றனர். போராட்டங்கள் தொடர்ந்தன. விதியே விதியே தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாய்?



படிப்பகம்

www.padippakam.com

# அதிர்ச்சியும் ஆத்திரமும்!

இதற்கிடையில் வன்னியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் கொலை செய்யப்பட்ட ஊர்ஜிதமற்ற செய்தியில் கொதித்து எழுந்த சர்வ தேசத்துத் தமிழர்கள் வீதிக்கு வந்தனர்! வேலைத்தளங்கள், இல்லங்கள் எங்கினும் குழந்தைக் குட்டிகள் யாரும் இருந்திருப்பார்களா? கேள்வி வியப்பு வீசிநிற்க வீதிகளில் நின்றனர். கனடாவிலும் லண்டனிலும் இலட்சத்தைத் தாண்டிய உணர்வு விழிகளில் கண்ணீர்; மொழிகளில் புயல்; செயல்களில் தவிப்பு. எதுவந்தாலும் எதிர்கொள்ளும் வீரமும் ரோஷமும் கொப்புளித்துப் பாயக் காட்சியளித்தனர். ஏப்ரல் 20, 2009 கார்டு நோட் லாச்சப்பல் பிரதான வீதிகளை மறித்து நடத்திய போராட்டம்.

இப்படியான வேளையில் ஒரு பகுதியினர் பாரிஸ் லாச்சப்பல் வீதிகளைத் தடைசெய்து நீதி வேண்டி, வருவதை எதிர்கொள்ளும் தைரியத்தோடு நின்றனர். ஈபில் கோபுரம் முன்பாகவும் மக்கள் குவியத் தொடங்கினர். தமிழன் எள்ளளவு உரிமையும் பெறாமல் ஏராளமான இழப்புகளைச் சந்தித்துவிட்டான். சிங்கள வெறியரின் செயல்களைப் பட்டியல் இட்டுக் காட்ட வன்கொடுமைகளைக் கோஷமாய் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இப்படியே கேட்டு அப்படியே விடுகின்றீர்கள். இன்றைக்கு ஒரு முடிவு எங்களுக்குச் சொல்லுங்கள் என்னும் போர்க் குணத்தோடு லாச்சப்பல் நான்கு சந்தி வீதிகளிலும் அப்படியே அமர்ந்திருந்தனர். மக்களின் கோலத்தை வர்ணிக்க என் தமிழ் என் உதவிக்கு வரவில்லை!

பிரெஞ்சுப் போலீசாருக்கும் இளைஞர்களுக்குமிடையில் வார்த்தைப் பிரயோகம் வேகமெடுத்தது. ஸ்ரேலிங்கிராட் பக்கமிருந்து வேகமாக வந்த போலீஸ் வாகனம் மனோகரன் என்னும் தமிழ் இளைஞரின் காலில் வாகனச் சக்கரத்தை ஏற்றத் தகராறு வலுத்தது. பார்த்து நின்றவர்கள் தாறுமாறாகச் சிதறுண்டு தகராறுகளில் ஈடுபட்டனர். போலீஸார் நின்றவர்கள் போனவர்கள் என 210 பேரைக் கைது செய்தனர். இதன் பின்புதான் ஊடகங்களின் பார்வை போராட்டத்தின் தெளிவை விவரித்துப் பிரசுரம் செய்ததுடன் வானொலியும் தொலைக்காட்சிகளும் உஷாரடைந்தன. ஒருவகையில் லாச்சப்பல் தகராறு சாதகமான சாதனையாகக் கருதப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஏப்ரல் 25, 2009 சனிக்கிழமை ஈபில் கோபுரம் முதல் நாடாளுமன்றம் வரை அடங்காப் பற்றுடன் எழுச்சிகரமான ஊர்வலத்தை நடத்தினர். 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டனர். வன்னியில் இடம்பெறும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி கோஷங்களை எழுப்பினர். உலகத்தின் கண்களைத் திறந்து மனிதனைப் பாருங்கள்; மனத்தைத் தட்டி சித்திரவதைப்படும் குழந்தைகள் சிசுக்களின் மரணங்களைத் தட்டிக் கேளுங்கள்; நிர்வாணக் கோலமிடும் பாலியல் படுபாதகங்களைத் பாய்ந்து தடுங்கள்; இனத்தையே கருவறுக்கும் கொடுங் கோன்மையை இனவெறித் துவேஷத்தின் நாசத்தைத் தடுத்து நிறுத்துங்கள். சிறுவர் பாதுகாப்பிற்கு உருவாக்கப்பட்ட மனிதஉரிமைகள் இன்னோரன்ன அமைப்புகளே! உலகின் அமைதிக்காக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு களே! வன்னியில் தமிழினப் படுகொலைகளை உடன் நிறுத்துங்கள். நீங்கள் மௌனத்தைக் காக்க வன்னியில் கொத்துக் கொத்தாய்க் கொன்றொழிக்கப் படும் தமிழினம் நாளை மிஞ்சியிருக்கப் போவதில்லை. எஞ்சியிருப்பது அங்கங்கள் இழந்து முடமாகிப்போன ஓர் இனம் வாழ்வதைத்தான் சர்வதேசமே, உன் மௌனம் எடுத்துக்காட்டப் போகிறது! மனித மாண்பை யும் இறையாண்மையையும் மௌனத்தில் புதைத்து வேடிக்கை பார்த்த படுபாதகர்கள் எனும் பட்டத்தை சுமக்கப் போகிறீர்களா? இவ்வகையான தன்னெழுச்சிக் கோஷங்களைக் கழுத்து நாளம் வீங்கி வெடித்திட இளம் பெண்களும் சிறுவர் சிறுமியரும் எழுப்பினர்.

குழந்தையை நடக்கவிட்டு பூனையைத் தோளில் போட்டுக் கொஞ்சும் வெள்ளை மனம் இரங்கவில்லை. பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளைத் பிரித்தெடுத்துத் தனிமைப்படுத்தும் கொடுமை! இளம்பெண்களைத் தமது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்தபின் நிர்வாணமாகக் கொலை செய்து தூக்கி எறிகின்றனர். இளம் யுவதிகளைக் கிளிநொச்சியில் உள்ள வீடுகளில் நிர்வாணப்படுத்தி, விலங்கிட்டு, உணவின்றித் தனிமைச் சிறை யிட்டுள்ளதைக் கத்திக் கத்தி அந்தந்த நாட்டு மொழியில் சுட்டிக் காட்டியும் இந்த அமைப்புகளின் எந்த அரவணைப்பும் தமிழனுக்குக் கிடைக்க வில்லை. எப்படிக் கிடைக்கும்? தங்கள் செல்லப் பிராணி வல்லென்றதும் நடுமுல்லத்தைத் தடவிக் கொடுத்து நாய் வாயில் கொடுக்கும் இறைச்சியை இழுத்து தன்வாயில் வைக்கும் வாயால் எப்படிக் குரல்கொடுக்க முடியும்? தமிழன் அழிந்து போகட்டும் என்றவர்கள் தங்களது சிம்மாசனத்தில் வீற்றிருந்து பாவத்தைக் கட்டிக்கொண்டார்கள். தமிழா, புலத்துத் தமிழா, நீவிர் எழுகவே! ஓங்கி ஒலிக்கட்டும் குரல்கள்!

அடுத்த நாள் உண்ணாவிரதிகள் இருவர் நிலை மோசமடைய அவர் களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எதிர்ப்புகளுக்கு மத்தி யில் உண்ணாவிரதிகளின் சம்மதமின்றித் தூக்கிச் சென்றனர்! அடுத்த நாள்



படிப்பகம்

ஈபில் கோபுரம் முன்பாக இருந்த இடம் மாற்றப்பட்டு மதியம் (republige) சுதந்திரத் தேசிய வீரமங்கை சிலை எழுந்தருளிய இடத்தில் சுதந்திரத்தை வேண்டி நிற்கும் தமிழனைக் கொண்டுவந்து போட்டு இங்கிருந்து உன் குரலைக் கொடு என்றனர். சிலையின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இங்கிலாந்தும் பிரான்சும் இடைவிடாது போரிட்டுவந்தன. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை நடந்த போர் 'நூற்றாண்டுப் போர்' என்று அழைக்கப்படுகிறது. மேற்குப் பிரான்சின் பெரும்பகுதி நெடுங்காலமாக ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. இங்கிலாந்து அரசர் தன்னைப் பிரான்சின் அரசர் என்று அழைத்துக் கொண்டார். பிரான்சு மக்கள் தாழ்வுற்று நம்பிக்கை இழந்திருந்த தருணத்தில் ஒரு குடியானவ இளம்பெண் தோன்றி பிரான்சுக்கு நம்பிக்கை ஊட்டினாள்! இது எங்கள் தந்தையர் நாடு என்றவள் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தாள்!

'அவள்தான் ஆர்வின்ஸ் நங்கை ஆர்க் ஜோர்ன்'. ஊக்கம் குன்றி உணர்வு அழிந்துகிடந்த தன் மக்களுக்கு நம்பிக்கையையும் ஆவேசத்தையும் மூட்டினாள். அவளுடைய தலைமையில் பிரெஞ்சு மக்கள் அணி திரண்டனர். அவர்கள் புரிந்த ஆள்வினை ஆங்கிலேயரை நாட்டைவிட்டு இழந்தோடச் செய்தது! அவள் தாய்நாட்டுக்குச் செய்த இப்பேருபகாரத்துக் காக அடைந்த பரிசு மரணமேயாகும். ஆங்கிலேயர்கள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள்! அவளைச் சூனியக்காரி என்று மதவெறியர்கள் குற்றம் சுமத்தினார்கள்! மத விசாரணை சபை அவளை விசாரித்தது. அவள் நடு வீதியில் எரிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தனர்! 1430களில் அத்தீர்ப்பின்படி அவளை ஆங்கிலேயர் ரூவன் நகரத்துக் கடைவீதியில் உயிரோடு கொளுத்திக் கொன்றனர். பல வருடங்களுக்குப் பிறகு மதபீடம் அவளைக் குற்றமற்றவள் என்று கூறியது. அதற்கும் நெடுங்காலத்துக்கு முன்னம் 'பரிசுத்த கன்னி' ஆக்கினார்கள். அந்தத் தியாகத் திருவுருவச் சிலை அருகே தமிழர் இன்று நின்று அந்நிய ஆதிக்கத்திலிருந்து மீட்டவள் சிலையில்பட்டு எதிரொலிக்க கோஷம் எழுப்பிக்கொண்டு போராடு கின்றோம். கொடிகள் ஏந்தியபடி மனித தர்மத்தின் படிகள் ஏறி நீதி கேட்கின்றோம். நாதியற்றவனா தமிழன்? எங்கள் இரண்டாம் தலைமுறை எழுப்பும் போர்முகம் உங்கள் கண் திறக்கும் தார்மிகம்!

www.padippakam.com

## வீதிப் போராட்டத்தின் விழிப்பு!

ஈழத் தமிழனின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழத் தேசத்தின் விடுதலையையும், வீரமும் விவேகமும் நிறைந்த போர் நெறிப் படுத்தலையும், இணையற்ற தியாகங்களையும், பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள் அணைப்பில் அதிதீவிரமிக்க போரியல் பகுப்பாய்வில் தேசப் பிதாவாக வழிநடத்தி உழைத்ததையும், தமிழீழத்தை நிறுவும் நிலையில் நிர்ணயிக்கப்பட்ட வெளிச்சத்தை இருள்மயமாக்கிய சிறிலங்காவின் பயங்கரவாதச் செயல்களையும், வல்லாதிக்க வல்லூறுகள் தமிழீழ வான் பரப்பிலும் கடல்வெளிகளிலும் குறிவைத்துக் காட்டிக் கொடுத்ததையும், நித்திய ஆக்கினையைப் பொழிகின்றதையும், தர்மம் தலைகுனிந்து மௌனம் மேற்கொள்வதையும் எம்மினப் போராட்டங்கள் மேலும் மேலும் வீதி நாடகங்களாய்ப் பரிணமித்துக் காட்டும்! காட்டிக்கொண்டே இந்தப் புலத்துவாழ் தமிழன் இருக்கப் போகிறான். இந்த சாத்வீகப் போராட்டத்தை யாராலும் தடுத்துவிட முடியாது.

தாயக மக்களைக் காப்பாற்றவும் அவர்களைப் பயங்கரவாதச் சிறிலங்கா இனவெறியரிடமிருந்து மீட்டெடுக்கவும் இடைவிடாது போராட வேண்டிய கடமையும் அக்கறையும் விடுதல்லைப் பயணத்திற்கு உரித்தான வர்களான புலம்பெயர் மக்களாகிய உங்களிடம்தான் உள்ளது. இனி இதுதான் உங்கள் போராட்டம். போராடுவோம்! போராடுவோம்! தமிழீழம் காணும்வரை போராடுவோம்!

இளையோர் மத்தியில் எழுந்த கோஷங்களோடு பலவகையான கேள்விகளும் பெரியவர்களை நோக்கி எழுந்தன! இருபது வருடங்களில் பாரிய மனித உரிமை மீறல்களை சிறிலங்காப் பயங்கரவாத அரசுகள் மேற்கொண்ட போதும், சர்வதேசம் புலிகள் மீதான தடைகளை விதித்த போதும் நீங்கள் ஏன் தடைகளை உடைத்தெறியப் போராடவில்லை? நாங்கள் இப்போது வீதியிலிறங்கி சாதிக்க நினைத்த போர்க்குண அணுகு முறையை நீங்கள் ஏன் மேற்கொள்ளவில்லை?

இரண்டாவது கிழக்கு மாகாணம் பறிபோனபோது ஏன் கையாலாகாதவர் களாக இருந்தீர்கள்? இந்தச் சர்வதேசத்தை ஏன் தட்டிக் கேட்கவில்லை? மூன்றாவது பயங்கரவாதச் சிறிலங்கா இந்தியா, சீனா, பாகிஸ்தான்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியவற்றின் படையணிகளோடு வலிமைபெற்று மன்னார் வழி முற்றுகையில் வெற்றிபெற்று முன்னேறி வரும்போது நீங்கள் இராஜ தந்திர நிதானிப்பு என்று பின்னகர்ந்து, வாய்ப்பேச்சில் கிழித்தெறிவோம் என்ற தாழ்ந்து, புலத்தில் போராடும் எண்ணத்தைக் கூட சித்தத்தில் கொள்ளாதது ஏன்?

2006 மே மாதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு என ஐரோப்பிய யூனியன் தடைவிதித்தது. இந்தத் தடை விதிப்புக்கு அமெரிக்காவின் தடையே ஆதரவாக இருந்தது. இந்தத் தடை விதிப்பு அறிவித்தலைக் கேட்ட அன்றே தொடங்கியிருக்க வேண்டிய போராட்டம்தான் நாம் இன்று நடத்தும் போராட்டம் என்ற உண்மையைப் பலர் இப்போது தெரிவித்துக்கொண்டு நிற்கிறார்கள்! அப்போது எங்கே போனது இந்த அறிவும் ஞானமும்? அணை கடந்து வெள்ளம் பாய்ந்த பின்பா அணை கட்டுவது? முன்கூட்டியே அணை கட்டுவதற்கு ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியிருக்க வேண்டும். தமிழனின் மன்றாட்டத் தைக் கேட்காமல் கடவுள் கண்மூடிவிட்டான் என்ற சாக்குப்போக்கு இனி வேண்டாம். செய்! இல்லையேல் செத்து மடிந்து போய்விடு!

ஏப்ரல் 06, 2009 திங்கட்கிழமை சுமார் ஆயிரம் பேர் வன்னியில் மாண்டு பல்லாயிரக் கணக்கானவர் அல்லல்படுகின்றனர் என்று அன்வலிட் திடலில் குதித்தபோது பள்ளிக்கூட விடுமுறை காலமாக இருந்தது. போராட நாங்கள் இறங்கவேண்டிய தக்க தருணம். உற்ற உறவுகளுக்காகக் கை உயர்த்தி கைகோர்த்து இரவும் பகலும் நின்றோம்! இனி எவர் தடுத்தாலும் எதிர்த்தாலும் எந்தச் சக்திக்கும் பணியாது நிமிர்வோம்! இந்த நிமிர்வில் நின்று நாங்கள் எங்கள் பெற்றோரிடமும் பெரியவர்களாகிய உங்களிடமும் இக்கேள்விகளைக் கேட்கின்றோம்!

எங்களுக்குத் தெரியும் இக்கேள்விகளுக்கு உங்களால் இப்போது பதில் சொல்ல முடியாதென்று! இப்போது எமது கடமை எம்மக்கள் விடிவைப் பெறுவதும், முள்கம்பிச் சிறைவாழ்வைப் போக்குவதும், பசி பட்டினி, பாலியல் கொடுமைகள், கொலைகள், துன்ப துயரங்களை நீக்குவதும் தான். சர்வதேசத்தின் முன் இவற்றை நாங்கள் பகிரங்கப்படுத்தப் போராட வேண்டும். இந்த நிலையில் பிரான்சில் பாடசாலைகள் படிப்பைத் தொடங்கிவிட்டன. கொடிபிடித்துக் கோஷம் எழுப்பிய சிறுவர்களின், மாணவ மாணவிகளின் எண்ணிக்கை றீப்பப்லிக் போராட்டத்தில் குறைந்தது! நிலவரத்தின் எழுச்சிக்கு வந்தது தொழிலாளர் தினமான மே 1. வழக்கமாக றீப்பப்லிக்கில் நடைபெறும் தொழிற்சங்கங்களின் மே தின ஊர்வலம் இந்தத் தடவை டென்பேட்டில் இருந்து புறப்பட்டு பாஸ்ஸிலில் முடியும் என்று அறிவித்தனர். இதுவரை நடந்த போராட்டங்



படிப்பகம்

களின் இலாப நட்டங்களைக் கணக்குப் போட்டுப் பார்க்கும் ஊர்வலங்களும் போராட்டங்களும் நெடுங்காலத்துக்குத் தமிழர் உள்ளங்களில் நிழலாடிக் கொண்டிருக்க வேண்டும். பலமான உறுதியும் பொறுப்பும் தளராத நம்பிக்கையும்தான் இன்று நமக்குக் கட்டாயமாகத் தேவைப் படுகின்றன. 'இந்த நேரம் என் கருத்துக் களமாடும் நேரமாகும்'.

www.padippakam.com

# கருத்தும் கடமையும்

இந்த நிலைக்கு வந்தும் ஒற்றுமை முயற்சிகளுக்குத் தடையாக இந்தத் தட்டிக்கழித்தல், திமிர், தலைக்கனம் ஆகியன தலைவிரித்தாடுவதுடன் ஆங்காரப் பேச்சும் மற்றவர்களுடைய கருத்துகளை ஏற்றுக் கொள்கின்ற புரிந்துணர்வும் வரவில்லை. தாங்கள்தான் புலிகள்; மற்றவர்கள் எலிகள் என்று சாதாரணமான மக்களை வெருட்டி பயப்படுத்தும் போக்கிலும் மாற்றம் வரவில்லை!

குறிப்பாகத் தமிழ் ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சிகள், இப்போது பெருகியிருக்கும் இணையதளங்கள் ஆகியவற்றின் மூலம் இந்த இழிகுணத்தவரிடம் காணப்படும் இந்தத் தீயகுணங்கள் இன்னும் விட்டுப் போகவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். இத்தகைய நிலை நீடிப்பது ஒற்றுமை என்ற குறிக்கோளுக்கு இடையூறாகக் கருதவும் இடமிருக்கிறது. இன்று வாரங்களைத் தாண்டும் போராட்டங்களில் கலந்துகொண்டவன் என்ற வகையிலும், 28 ஆண்டுகளுக்கும் மேலாக பிரான்சில் வாழ்ந்து வருபவன் என்ற வகையிலும், அன்றாட நடப்புகளை உற்றுநோக்கி சர்வ தேசப் புலத்துவாழ் தமிழனின் போராட்டங்களில் ஈடுபாடு கொண்டவன் என்ற வகையிலும்தான் இதைக் கூறுகிறேன். தாயகத்தில் வாழ்ந்தபோது என் குடும்பத்தைவிட தமிழும் விடுதலையும்தான் என் மூச்சு என்ற எண்ணத்துடன் வாழ்ந்தவன்; இந்தப் பற்றில் சிறிதேனும் பிசகு நேரா வண்ணம் இன்றுவரை இயங்கி வருபவன்; தலைவனின் ஆணை கிடைக்கும்; தலைமுறையின் வாழ்வு செழிக்கும் எனும் நம்பிக்கையில் இருப்பவன். நம்மிடையே, எதிர்ப்புக்கு முட்டுக்கட்டை போடுபவர்களும் கெடுப்பவர்களும் சேர்ந்து கொண்டு குழிபறிப்பார்கள். மாபெரும் விடுதலைக் கோட்டைக்குள்ளே இந்த வழிமுறை பெரும் சக்தியாக இருந்தது. இங்கும் இருக்கிறது. கேள்வி கேட்பவர்கள் கெடுப்பவர்கள் என்ற நிலை எப்போது மாறப்போகுது? இந்தத் தரம்கெட்ட பழிகுணம் மாறும்போதுதான் ஒற்றுமையின் வலிமை வளர்ந்தோங்கும்.

வார்த்தை ஜாலங்களும் சொற்சிலம்பங்களும் உணர்ச்சிச் சொற்களும் கெட்ட வரலாறு கொண்ட சொற்களும் தெளிவற்ற மங்கலான பொருள் கொண்ட சொற்களும் மக்களிடையே மனத்தெளிவை உண்டாக்குவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மாறாகப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் முக்கால்வாசி தகராறுகள் இவற்றின் அடிப்படையிலேயே தோற்றம் காண்கின்றன. இவற்றின் தாக்கத்தினால்தான் ஒற்றுமை கதிகலங்குகிறது தமிழரிடம்!

இந்த இளையோரின் போராட்ட முயற்சிகளில் இந்த இழிகுணங்கள் நுழைவது தடுக்கப்பட வேண்டும். அமைப்பினர் சங்கங்கள் குழுவினர் ஆகியோரிடையே காணப்படும் சினம், தட்டிக்கழித்தல், புரிந்துணர் வின்மை, தவறான அணுகுதல், கருத்துப்பரிமாற்ற துஷ்பிரயோகம், வெளிவேடப் பாதுகாவலர் போன்றவற்றை எல்லாம் புலத்துத் தமிழர் அடியோடு விரும்பவில்லை என்பதை நீங்கள் இனிமேலாவது உணர்ந்து தன்னலத்தையும், தீய சுயகௌரவத்தையும் அகற்றிச் செயல்படுவது சாலச் சிறந்ததெனக்கொள்ள வேண்டும்.

தியாக உணர்வே கூட்டுமுயற்சியின் அடிப்படை. உயர்ந்த பொதுக் காரியங்களை நோக்கி மனித வாழ்க்கைப் பயணங்களை இந்தத் தியாக உணர்வே நெறிப்படுத்துகின்றது. நல்வழியிலான நடத்தை இது. மனிதர் கூடிச் சாதிக்க வேண்டிய பொதுக் காரியங்களுக்கு இது உற்சாகம் தருகிறது. இந்தக் கூட்டுறவு உற்சாகம் இன்று புலத்திலுள்ளோர் நம்மிடையே கொழுந்து விட்டோங்க வேண்டும். அறிவையும் விவேகத்தையும் துணைக் கருவிகளாகக்கொள்ள வேண்டும். இளையோரின் நடத்தைக்குப் பங்கம் நேராவண்ணம் மனத்தைத் தயார் செய்துகொண்டு தீங்கு நேராமல் நடக்க வேண்டும்.

'தற்பெருமைக்கும் தலைக்கனத்திற்கும் அப்படி ஏதேனும் இரகசியங்கள் இன்றளவும் தேவையாக இருக்குமானால் அவற்றை இளையோருக்காக அகற்றிவிடுங்கள்'. இந்தப் பிரான்சில் அடைக்கலம் புகுந்த காலத்து நிகழ்ச்சியினைக் கண்டு என் மனத்திரையில் எத்தனையோ சித்திரங்கள் எழுகின்றன... சித்திரிக்க முடிந்ததைக் கவிதைக்குள் அடக்கினேன்!

இன்னும் சிலவற்றைச் சிந்தனையைப் பறிகொடாமல் இருத்தினேன். புலத்திலிருந்து புதிய மக்களும்-புதிய வம்சமும் தோன்றுவது உண்மை யாகலாம்! பிரபாகரனோடு தமிழீழத்தின் தலைவிதி முடிகிறதா என்பதை விட பிரபாகரனின் வழிநடத்தலில் நின்று புதிய தலைமுறை தலை யெடுக்கிறது என்பதில் கீழுள்ள வரியே கோடிட்டுக் காட்டும். காலத் தேவையாகப் புலத்திலுள்ளோர் கருதி வாழ்வை மேற்கொள்ளலாம். சிங்கள ஆட்சியில் பயங்கரவாதத்தை மறைக்கும் நாடகம் நடந்தேறி வருகின்ற வேளையில், முள்கம்பிச் சிறைக்குள் அடைத்தத் தவறுகளை மறைக்க புனராலோசனை முயற்சியிலும் வெற்றி பெறலாம்.

அதற்கேற்ற வகையில் இழிகுணத்தினர் பலர் சார்ந்து நிற்கின்றனர். இந்தத் தருணத்திலும் சிங்கள இனவெறியரிடம் இன அழிப்பே மேலோங்கி



படிப்பகம்

www.padippakam.com

நிற்கிறது. ஒரு இலட்சம் தமிழர்களின் சாவின் பின்னுள்ள இருப்பிடங் களில் சிங்களக் குடியேற்றம் இடம்பெறும். இதை யாராலும் இந்த ஒட்டுண்ணிகளாலும் தடுக்க முடியாது!

இனி சிங்களவன் வேறு; தமிழன் வேறு. இனிமேல் பொருத்தமற்ற பொருத்தம். எக்காலத்திலும் வாய்ப்பற்றது சிங்களத் தேசிய வாதம். தமிழ்த் தேசியம் தொடர்பாகப் பிரபாகரனுக்கு முன்பின் எனும் சிந்தனையோடு, வன்னி இனப்படுகொலைகளும் அதன்பின் முள்வேலிச் சிறைக் கூடங் களும் நடவடிக்கைகளும் இதைத்தான் தெள்ளத் தெளிவாக இயம்பி நிற்கின்றன. இதைக் காண்கின்றபோது, வரலாற்றின் சாட்சியத்தில் பிரிவினைக்கான பிரிதல் சரியான முடிவைத் தோற்றுவிக்கும். இதனை இளையோர்கள் அனைத்து நிலைகளிலும் அறிந்திருத்தல் வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் தினம்

தொழிலாளர் தினத்தில் தமிழீழ மக்கள் 25 வருடங்களுக்கு மேலாகப் பங்கெடுத்து வருபவர்கள். தேசத்தின் நேசிப்பை மே தின ஊர்வலத் தின்போது மிகப் பிரமாண்டமாக வெளிப்படுத்தி வந்தவர்கள். மே 01, 2008 மே தினத்தை மிகப்பெரும் சக்தியாக வன்னி கொலைகளையும் ஆக்கிரமிப்பையும் பயங்கரவாதத்தையும் எதிர்த்து நடத்தத் தீர்மானித்தனர். 'இந்த ஊர்வலங்களும் போராட்டங்களும் கோஷங்களும் கொடிபிடித்த போராட்டங்களும் தந்த பயன் மனசின் பாரம் கொஞ்சம் இறங்கி முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நிறைவேறியதாகவே கொள்ளலாம். 'இந்த ஊர்வலங்கள் பிரான்சில் வாழும் பல்லின மக்களையும் கூர்ந்து உன்னிப்பாக நோக்க வைத்துள்ளன. சிறிலங்காவில் என்ன கொடுமை தமிழர்க்கு நடக்குது என்று பதறவும் பகரவும் பெரும் பரிசோதனைக் குரியதெனப் பார்க்கவும் தூண்டின. ஆயிரக்கணக்கான மக்கள் களம் கண்டனர். எல்லோரின் கைகளிலும் தேசியக் கொடி. பிரெஞ்சுக் கொடி. ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடி. இடை இடையே அமெரிக்கக் கொடி. முன்னே பெண்கள் அணி ஊடறுத்து வந்தபடி இளையோர்கள் பின்னே பல்லாயிரம் தமிழ்த் தலைகள்! தமிழர்மேல் இடப்பட்டுள்ள அவமானத் தைக் கழற்றி எறியென்று கிளம்பிற்றுப் புலிப்படை.'

ஆலுக்கு விழுதாக உள்ளவர்கள் நாங்கள். நடந்துவருவது, சாந்தம் கொண்ட நடை; எழுப்புவது கோஷம்; எழுச்சிமிகு ஏற்றம் கொண்ட எங்கள் பாசங்களுக்காகவே...

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் துளிர் விடத்தொடங்கியப் போராட்டம் 19ஆம் நூற்றாண்டில் வேகம் கண்டது. சராசரியாக ஒரு மனிதனின் வேலை நேரம் 12 மணி முதல் 18 மணி நேரம் என முதலாளி முதலைகளால் நிர்ப்பந்திக்கப்பட்ட வேளையில், வெகுண்டெழுந்த மக்கள் மனித உரிமைகளின் அடிப்படையில் தார்மிகக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடத் தொடங்கினார்கள். முதன்முதலில் முடியாட்சி நாடான இங்கிலாந்தில் 'சாசன' இயக்கம் தோன்றி பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராடியது. இதன் தொடர்ச்சியாக உலகின் பாகங்களைப் போராட்டம் தொற்றிக்கொண்டது. எழுச்சிகள் வேகமடையத் தொடங்கின.



படிப்பகம்

www.padippakam.com



பிரான்ஸை வியக்கவைத்த மேதின ஊர்வலம்

1834 'ஜனநாயகம் அல்லது மரணம்! மரணம்தான்' என்னும் கோஷம் வான்முட்ட எழுந்தது. பிரான்சில் தொடங்கிய முதல் போராட்டம் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

1856களில் தீவு நாடான உலகின் கீழ்பாகத்தில் அமைந்துள்ள ஆஸ்திரேலியாவின் மெல்போன் நகரில் கட்டடத் தொழிலாளர்களால் தொடங்கப்பட்ட போராட்டம் பெரும் வெற்றியைக் கண்டதும் வேலை நேரம் 8 மணிநேரம் என அறிவித்தனர்! இதுவே தொழிலாளர் கட்சியின் புரட்சிகரமான மாபெரும் வெற்றியாகப் பதியப்பட்டது. இப்படி வெற்றிகண்ட மக்கள் போராட்டம் ரஷ்யாவுக்குக் கடந்துசென்றது. அங்கு துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் கிளர்ந்தெழத் தொடங்கினர். அதன் தொடர்ச்சி உலகின் மிகப் பெரிய நாடான ரஷ்யாவின் புரட்சிக்கு வித்திட்டது. தொடர்ச்சி அமெரிக்காவைத் தொட்டது. அங்குப் புரட்சி அலைகள் குமுறத் தொடங்கின. அமெரிக்காவில் மாநிலங்கள் தழுவிய போராட்டங்கள் நடந்தன. மக்களின் உயிர்களைப் பலியெடுத்தன!

'இழந்தால்தான் பெறமுடியும்' என்னும் பேரெழுச்சி அமெரிக்காவின் 'சிக்காக்கோ' பேரெழுச்சிக்கு வழிவகுத்தது. 1887 நவம்பர் 11ஆம் நாள் போராட்டத் தலைவர்களான ஆகாஸ்ட் ஸ்பைஸ், அல்பேட் பார்சன்ஸ், அடொல்வ் பிசர், ஜார்ஜ் ஏங்கல் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்! இவர்களது இறுதி ஊர்வலம் அமெரிக்க வீதிகளில் மக்கள் வெள்ளத்தை



படிப்பகம்

www.padippakam.com

இட்டு நிரப்ப, அமெரிக்காவின் அங்குல மண்ணும் சோகத்தில் மூழ்க, போராட்டத் தியாகிகளின் மாபெரும் தியாகம் இப்போது நாம் செல்கின்ற மே நாளிற்கு வழிகோல 8 மணிநேரப் போராட்டம் வலுப்பெற்றது! 1889 ஜூலை 14இல் பாரிசில் இடம்பெற்ற சர்வதேசத் தொழிலாளர் நாடாளுமன்றத்தில் உலகின் சுமார் 18 நாடுகளின் பிரதிநிதிகள் 400 பேர் கலந்துகொண்டு 'கால்மார்க்ஸ்' வலியுறுத்திய 8 மணிநேர வேலையை ஆதரிப்பதென வழிமொழிந்தனர். மே 1 தொழிலாளர் இயக்கங்கள் நடத்த வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழர்களை அடக்கி ஒடுக்கி உரிமைகள் மறுக்கப்படுவதைச் சர்வதேசத்திற்கு உணர்த்தவே தமிழர் இந்தத் தொழிலாளர் தினத்தை வீதிவழிப் போராட்டமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தொழிலாளர் தினம் தோன்ற எத்தனை சோதனைகள், புரட்சிகள் நிகழ்ந்தன! எத்தனை தோல்விகள் வேதனையைக் கொடுத்தன! போராட்டங்களை எந்த ஆட்சி, ஆணவ வர்க்கம் விரும்பி ஏற்றுக் கொண்டது? செய்த தியாகங்களை யார் மதித்தார்? விடாது பற்றிக்கொண்ட நம்பிக்கைகள் தளர்ந்ததா? தங்களது இதயக் கனவு உழைப்பவனின் உயர்வு; அதை நிறைவேற்ற எத்தனை துன்பங்களைப்பட்டார்கள்! வெல்ல முடியாது என்று சோர்ந்தார்களா? வெற்றிபெறும் காலம் கனியும்; அந்த இனிய நாள் பூக்கும் என்ற நம்பிக்கையுடன் இலட்சியம் வலுப்பெற நின்றார்கள். நீண்ட போராட்டப் பாதையைப் பார்த்துப் பார்த்துப் பயணத்தை விடவில்லை! வழிமுறைகளைப் புரிந்தனர்; விளைவுகளை அறிந்திருந்தனர்; விடுதலை என்ற கனவை இதய சிம்மாசனத்தில் குறிக்கோளாகக் கொண்டனர்; போராடினர்; போராட்டத்தில் அழிவையும் மரணத்தையும் கண்டு கலங்காது தொடர்ந்து போராடினார்கள்!

நிச்சயம் விடுதலை கிடைக்கும், வாழ்வை உருவாக்கும்! எங்கள் தமிழரும் இதுவாகத்தான் இன்று மாறினார்கள். புலத்தில் மாறுகின்றார்கள்! கண்ணை இமை மூடினால் இளைப்பாறிடத் தூக்கம் வந்துசேரும்; மண்ணில் தாகம் தீர்க்க விண்ணே மழைபொழியும்; பண் இளைப்பாறிடப் பிறந்திட்ட தாளம் சேரும். 60 வருடங்களுக்கு மேலாக அடிமையான தமிழன் விலங்குடைத்து விடுதலைபெற மார்க்கம் என்ன? தொழிலாளி விடுதலை வந்து சேரும்வரை இடைவிடாது போராடினான். விடியலை விதைத்த மார்க்ஸிய மார்க்கத்தைப் பற்றிக்கொண்டு போராடினான்! விடியலை விண்ணுக்குக் கற்றுக்கொடுத்த தோழர்கள் மண்ணுக்குள் போன பின்பும் போராடினார்கள்!

தனியுடைமை ஒழிகின்றபோது பொதுவுடைமை உதிக்க வேண்டும். நெருப்பில் உதித்திட்ட சங்கார வார்த்தை பற்றி எரிந்தது! உலகம் சிக்காக்கோ



படிப்பகம்

www.padippakam.com

நகர் புரட்சியின் பூகம்பத்தைத் தாங்க முடியாது முடிவை அறிவித்தது! சுரண்டும் வர்க்கத்தின் முகமூடி கிழிக்கப்பட்டது. செங்கொடிகள் உயர்ந்தன; செங்கவிதைகள் பிறந்தன. மண்ணும் அதிர்ந்தது. விண்ணும் பிளந்தது. புரட்சிப் பந்தத்தில் கொளுத்திய உரிமையின் உயர்வு உதித்தது. இதைத்தான் நாம் இந்த மே தினத்தில் ஈழத்தில் தமிழீழத்தை வேண்டிப் போராடுவோம். தமிழீழப் போராட்டம் இந்த அடிப்படையை நிர்ணயிக்கிறது. மே தின விடுதலை மேதினியெங்கும் விடுதலை. தமிழீழ விடுதலை உலகில் வாழும் இலட்சம் கோடி மக்கள் அடையும் விடுதலை. நிச்சயம் வெற்றி காண்போம்!


படிப்பகம்

www.padippakam.com

# நினைப்பும் நிலையும்

நினைப்புதான் எல்லாமே. மனம்தான் எல்லாமே. நாம் என்ன நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிவிடுகிறோம் என்று புத்தர் சொல்கிறார். இலங்கையில் புத்தமதவாதிகள் கொலைகாரப் பயங்கரவாதிகளாக இந்த மே தினத்தில் நிற்கிறார்கள். வன்னியில் ஆடிய கொலை வெறித் தாண்டவத்தைக் கண்டி நடன பாவத்தில் இரத்தத் தெறிப்பாகப் புத்தனின் முகத்தில் தெறித்துள்ளனர். இதற்கு உடந்தையாக மாவோவின் சிந்தனையில் தெளிந்த சீனம் சன்யாட்சனின் புதிய பாடத்தில் தேறி புத்தனின் சித்தத்தில் ஊறி தமிழ் இனத்தை அழிக்கப் பயன்பட்டது செஞ்சீனத்தின் தொழிலாளர் தினம். இந்த ஆண்டு களங்கத்தின் சின்னம் சுமந்த மே தினம்.

இத்தகைய உணர்வுக் கோஷங்களோடு தமிழ் இனம் இந்த மே தினத்தில் பங்கெடுத்தது. எந்த வருடத்திலும் இப்படியொரு மக்கள் கூட்டம் வந்ததில்லை. முப்பத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் தலைகள் சணல் முடித் தலைகளைவிட அதிகமாகக் காட்சி தந்தன. தமிழனின் பண்பாட்டு நடனம், சிறுமிகளின் பாவ நர்த்தனம், பாடலுக்கு அசைந்தாடும் காட்சியின் மாட்சிகாண வெள்ளையர்கள் படப்பிடிப்புச் சாதனங்களோடு வீதிகளின் ஓரத்தில் இடிபட்டு நின்றனர். தமிழனின் தேசியக் கொடியோடு ஊர்வலத்தின் அழகையும் செறிவையும் கண்ட ஊடகங்கள் பிரெஞ்சு தேசம் இதுவரை இப்படியொரு காட்சியைக் காணவில்லை என்று புகழாரம் பாடின. புகழாரம் பொழியப் பொழிய இதயம் இயந்திரம்போல் அடித்தது. என்ன ஏதென்று விழியும் மொழியும் பிதுங்கின. முள்ளிவாய்க்கால் நெருக்குதலில் பயங்கரவாதம் தலை தெறித்தாடும் இழவுச் செய்தியில் உலகத் தமிழன் கதிகலங்கிப் போனான்!

இப்போது நின்றவர்கள் republig உண்ணாவிரதிகளின் முன்வந்து கூடினர்!

பொதுவாகத் தமிழ்த் தேசமும் குறிப்பாகத் தமிழ் இளைஞரும் தம்மை இந்தப் புனிதப் போராட்டத்தில் இணைத்துச் ‘சுதந்திரச் சமதர்ம தமிழீழம்’ என்னும் இலட்சியத்தை அடையும்வரை சளைக்காது போராட முன்வர வேண்டும் என்று கூறிய தந்தை செல்வா, மே 1976-இல் இலங்கைக்கு இரு அரசுகள் தேவை என்றும், அந்த இரு அரசுகளும் கூட்டுறவுடன்



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதனை அனைத்துலகச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். முன்னாள் ஆஸ்திரேலிய நீதியரசர் அனைத்துலக ஜுரிமார் ஆணைக் குழுவின் தலைவர் ஜோன் டவுட் அவர்கள் மே 20, 2008இல் இடம்பெற்ற இலங்கை இனச்சிக்கலில் அனைத்துலகப் பரிமாணம் நூல் வெளியீட்டு விழாவில் இதே கருத்தைக் கூறியிருக்கிறார். இன்னு மொன்றையும் பார்க்கலாம்.

'நீங்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியம் வெற்றிபெறும் என்று எண்ணுகின்றீர்களா?' மு. சிவசிதம்பரம் அவர்கள் சற்று அமைதி யாக இருந்துவிட்டு, கண்கள் நீரில் குளமான நிலையில் மிக அமைதி யாகத் 'தமிழ் மக்களுக்கு இப்பதான் ஒரு நல்ல தலைமைத்துவம் கிடைத்திருக்கின்றது. அது யாரிடமும் எக்காரணம் கொண்டும் விலை போகாத தலைமைத்துவம்' என்கிறார்.

அவர் மேலும் அமைதியாக இருந்துவிட்டு சற்றுக் குரலை உயர்த்தி, 'நான் இந்த உலகில் யாருக்கும் இதுவரை தலைதாழ்த்தவில்லை!' என்று சொல்லி முடித்துவிட்டு மீண்டும் அமைதியானார். நூலாசிரியர் மிகவும் பணிவாக ஒரு வேண்டுகோளை அவரிடம் விடுத்தார்:

'நீங்கள் கூறிய விடயத்தை செய்தியாக வெளியிட அனுமதி தருவீர் களா?' அதற்கு அவர்,'இச்செய்தியை நீங்கள் தமிழ் மக்களுக்கு மட்டு மல்ல உலகத்துக்கே சொல்லுங்கள் என்கிறார்'.

சித்திரை மாதம் 20ஆம் நாள் 2000ஆம் ஆண்டில் சென்னையில் இருந்த போது 'இலங்கையில் தமிழர்' நூல் ஆசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் பேட்டி (இலங்கையில் தமிழர் வரலாற்று நூலிலிருந்து - நன்றி) செல்வா அறைகூவல் விட்ட வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் பிரான்சில் நின்று கூறினேன்!

1975இல் சிங்கள அரசாங்கத்திற்கு ஒரு சவால் விட்டார். நாடாளு மன்றத்தில் சவால் விட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மேலாக இடைத்தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்தனர். 'நான் தோற்பேனாயின் எனது கொள்கையை நான் கைவிடுகிறேன். அரசாங்கம் தோற்குமாயின் அது தனது கொள்கையையும் அரசியலமைப்பையும் தமிழ் மக்கள் ஆதரிக்கின்றனர் எனக் கூறுவதை நிறுத்த வேண்டும்'. தந்தை அவர்களின் இந்தச் சவால் இன்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை கோரும் கொள்கைக்குத் தமிழ் மக்கள் மாற்றிக்கொள்ளும் சமிக்ஞையைக் காட்டியது. 1975 மாசி மாதம். 'நடந்த நிகழ்வுகளைக் கவனத்தில் கொள்கையில் இலங்கைத் தமிழர் தாம் இலங்கையில் ஓர் அடிமை இனமாக இருப்பதா அல்லது சுதந்திரமான மக்களாக வாழ்வதா என்று அவர்களின் எதிர்


படிப்பகம்

www.padippakam.com

காலத்தைத் தீர்மானிப்பதற்கான உரிமை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்’. தந்தை செல்வநாயகத்தின் இந்தக் கனமான பிரகடனம் மீண்டும் உயிர்பெற்று எழுந்து நம்மை இன்று புலத்தின் வாழ்வோடு நிமிர்த்துகிறதையும் அறைகூவலாக எதிரொலிப்பதையும் காணலாம், கேட்கலாம்.

கேள்விகள் கேட்பதற்குத் ஜனநாயகத்தின் கூறுகள் தடை விதிப்ப தில்லை! சிங்களப் பேரினவாத பயங்கரவாத அரசிடம்தான் இந்தக் கோட்பாட்டிற்குத் தடை. முள்வேலிச் சிறை மரணமுகாம்களில் சித்திரவதைக் கொலை! இது சிங்களத்தின் சர்வாதிகாரம். இந்த வதை வடிவம் கண்டதன் தொலைநோக்கில்தான் 1973 மல்லாகத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் 12 ஆவது தேசிய மாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கு ஒரு புதிய சிந்தனை வடிவம் பெருமை தந்தது. தனிநாடு கோருவதென முடிவெடுத்தது.

‘இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் தமது மொழி, கலாச்சாரம், பிரதேசம் என்பவற்றுடன் தாம் தனியான தேசமாகப் பிரிந்து வாழ வேண்டும் எனும் தீவிரமான விருப்பத்தையும் கொண்டிருப்பதால் அவர்கள் எல்லா வகையிலும் ஒரு தேசமாக இருப்பதற்கு முழுமையான தகுதியைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. சர்வதேசத் தினால் அங்கீகரிக்கப்பட்டதான ஒவ்வொரு தேசத்திற்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தமது சட்டபூர்வமான சொந்தத் தாயகத்தில் சுய ஆட்சியை நிறுவுவதே அவ்வழியாகும்’ என்ற தீர்மானத்தில் பாருங்கள். அன்றும் சர்வதேசத்தை வேண்டிநிற்பதை தந்தையவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் மறுத்துத் தமது கதவை மூடிக் கொள்ளவில்லை.

இந்த வழிமுறையைத்தான் நாம் இன்று புலத்தில் தீவிரப்படுத்து கிறோம். இந்த மல்லாகத் தனியரசுப் பிரகடனம் தமிழரசுக் கட்சி. வட்டுக் கோட்டைப் பிரகடனம் தமிழர் விடுதலை முன்னணி. இனி வட்டுக் கோட்டைக்குள் போவோம்...



படிப்பகம்

# வட்டுக்கோட்டைத் தீர்மானமும் வாக்கெடுப்பும்

*முதலில் தீர்மானத்தைப் பார்ப்போம்: தமிழர் விடுதலை முன்னணியின் முதலாவது மாநாடு வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் மே 14, 1976இல் நடைபெற்றபோது கீழ்க்காணும் பிரகடனம் செய்யப் பட்டது. இலங்கைத் தமிழ் மக்கள் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத பலத்தால் வெற்றி கொள்ளப்படும்வரை சிறப்பு வாய்ந்த பழம் பெரும் மொழி, மதங்கள், தனித்துவமான பண்பாடு, பாரம்பரியம் ஆகிய வற்றைக் கொண்டிருந்ததோடு பல நூற்றாண்டுகளாக ஒரு தனித்துவமான பிரதேசத்தில் தனியரசு அமைத்துச் சுதந்திரமாக வாழ்ந்த வரலாறு உடையவர்கள். இவற்றுக்கு மேலாகத் தங்களது சொந்த மண்ணில் தனி இனமாகத் தங்களைத் தாங்களே ஆட்சிபுரிந்து வாழவேண்டும் என்ற உறுதிப்பாடும் உடையவர்கள். இத்தகைய பண்புகளைப் பெற்றவர்கள் என்பதால், தமிழர்கள் சிங்களவர்களிடமிருந்து வேறுபட்ட தனித்துவமான தேச அமைப்பைக் கொண்டவர்கள்.*

*இலங்கையில் 1972ஆம் ஆண்டில் குடியரசுக்கான அரசியல் யாப்பு புதிய குடியேற்ற எஜமான்களாகிய சிங்களவர்களின் ஆட்சியின் கீழ் தமிழர்களை ஓர் அடிமை இனமாக மாற்றியுள்ளது. தவறான வழியில் பெற்றெடுத்த ஆட்சியதிகாரத்தைக் கொண்டு சிங்களவர்கள் தமிழ் மக்களின் நிலவுரிமை, குடியுரிமை, மொழியுரிமை, பொருளாதார வாழ்வுரிமை, கல்வியுரிமை, வேலைவாய்ப்புரிமை ஆகியவற்றை மறுத்து அவர்களது தேசியக் கட்டமைப்பின் அடிப்படைகளையே அழித்துள்ளனர். ஆகவே தமிழீழத் தனியரசு நிறுவுவது குறித்து வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த தயக்கத்தைக் கருத்தில் எடுக்கும் அதேவேளை தமிழர் தேசத்தில் ஒவ்வொரு தேசத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறையாண்மையுடைய மதச் சார்பற்ற சோசலிச தமிழீழ அரசு மீளப்பட்டு மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.*

*மே 14, 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழீழம் அமைக்கக் கோரும் தீர்மானத்தின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. 1947 நாடாளுமன்றத் தேர்தலில் சிங்களக் கட்சிகள் அதிகப் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைப் பெற்று அதிகாரத்தைத்*

www.padippakam.com

தம்வசமாக்கின. இறுதியாக 1948இல் பிரித்தானியா இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது அதே பெரும்பான்மை அரசிடம் நாட்டைக் கையளித்துத் தமிழரை அரசியல் அகதிகளாய் விட்டுச் சென்றது. பிரித்தானிய அரசாங்கம் தமிழ்ச் சிறுபான்மையினருக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகமே கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழரின் இலட்சக் கணக்கான உயிரிழப்பிற்கும் சொத்தழிவுக்கும் பல்வேறுபட்ட துன்பங் களுக்கும் இன்று முள்கம்பிச் சிறைகளின் மரண முகாம்களுக்கும் அடிப்படைக் காரணமாகும். இது மட்டுமல்லாது தமிழன் இன்று கடலாடி களாக வந்த வெள்ளையருக்குக் கீழிருந்த அடிமைவாழ்வின் மிச்சம் எச்சில் கோப்பைகள் கழுவுவதன் மூலமும், உணவகங்களில் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து வேலை வாங்கப்படுவதன் மூலமும் இன்று ஐரோப்பிய அமெரிக்க நாடெங்கும் நடந்தேறுகிறது. இந்தத் தலைமுறை இன்று வீதியில் நின்று நடத்தும் நீதிக்கான உச்சப் போராட்டமும் இதுவாகும்! தமிழ் அரசியல் தலைவர்கள் அந்தக் காலகட்டத்தில் எவ்வித அரசியல் தொலைநோக்கும் இன்றி தமது சொந்த சுயநலங்களையே கருத்திற்கொண்டு செயல்பட்டதன் விளைவாகச் சிங்களப் பெரும்பான்மை அரசியல் தலைவர் களிடம் அரசியல் தஞ்சம் கோரினார்கள். அதன் அடிப்படை நிலைப் பாட்டைத்தான் தமிழர் தேசியத் தலைமையிடமும் எதிர்பார்த்தார்கள். கிடைக்காத ஆத்திரத்தில் அசிங்கத் தனமான போர் நெறியற்ற நடப்புதான் வன்னிப் படுகொலைகள். பிரித்தானிய அதிகாரவர்க்கமோ சோல்பரிக் குழுவினரோ சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற அடிப்படையில் போடப்பட்ட சரத்துக்கள் எல்லாம் 1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்த ஒரு சில மாதங்களுக்குள்ளேயே கைவிடப்பட்டன. தமிழன் சொல்லொண்ணாத் துயரத்தில் மூழ்கலானான்.

இதன்பின் நடந்த வரலாற்றில் நாமின்று இரண்டாம் தலைமுறையாக பிரான்சில் நின்று கதறுகின்றோம், முன்சென்ற அரசியல் பிழைகள் மீண்டும் வராமல், புதிய வலிமைமிக்க எதிர்காலத்திற்காக. இந்த நிலையில் நார்வேயில் நடத்தப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பில் தமிழீழத்திற்கான வாக்கெடுப்பு வெற்றியாக முடிந்த கையோடு பிரான்சிலும் இவ்வறிவித்தல் விடப்பட்டிருந்ததை நான் அவதானித்திருந்தேன். இதற்குமுன் வர்த்தக சங்கம் நடத்தியக் கூட்டத்தில் கி.பி. அரவிந்தனின் உரையைக் கவனிப்போம். வட்டுக்கோட்டை பிரகடனத்தை 32 ஆண்டுகளுக்குப் பின்னர் மீளவும் புலம்பெயர் தேசத்தில் வழிமொழிந்து வாக்களிப்பதன் மூலம் எமது அரசியல் அவா இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது என்பதை அழுத்தம் திருத்தமாக முன்மொழி கின்றோம்! ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் உச்சத்தை எட்டி நிற்கிறது. இரண்டு தேசியங்களைக் கொண்டு இயங்குவது இலங்கைத் தீவு என்னும் அரசியல் உண்மையும் உலகெங்கும் வெளிச்சத்



படிப்பகம்

www.padippakam.com

திற்கு வந்துவிட்டது. அதேவேளையில் சிங்களத் தேசத்தின் பெருந்தேசிய இனமேலாதிக்க அரசும் அதன் அதிகாரமும் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான அரசியல் போராட்டத்தை உணவுக்கும் மருந்துக்கும் உயிரைத் தக்கவைப்பதற்குமான அபயக் குரலாக மாற்றுவதில் வெற்றி பெற்று வருவதாக அறிவித்துள்ளது. அறுபதாண்டு காலத் தொடர்ச்சியான சிங்களத் தேசத்தின் தமிழினப் படுகொலை நிகழ்ச்சி நிரல் தற்போது பயங்கர வாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் விரைவுபடுத்தியமையை அனைத்துலகச் சமூகம் தனது மௌனத்தினால் அங்கீகரித்துள்ளது. 1976களில் ஈழத்துக் காந்தி எனத் தமிழர்களால் சிறப்பிக்கப்படும் தந்தை செல்வா தலைமையில் பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர் 1977ஆம் ஆண்டில் மக்களின் ஆணையாக மாற்றமடைந்த வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அறைகூவலை ஏற்று 1970ஆம் ஆண்டில் முகிழ்த்த புதிய தலைமுறையின் போராட்டத்தின் கூர்முனையாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் உருப்பெற்றது. அவர்களைப் பலமிழக்கச் செய்து அழிப்பதுடன் போராட்டத்தின் ஆதார சக்தியாகிய மக்களைச் சிதைப்பதையும் தங்கள் நோக்கமாக இவர்கள் கொண்டுள்ளனர். 1960களின் தொடக்கத்தில் சிங்கள அரசினால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் தாயகத்தைச் சிங்கள இராணுவத்தின் முற்றுகைக்குள் சிறைப்பிடித்துச் சிறுமைப்படுத்தும் வேலைத்திட்டம் இன்று மணலாறு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், வன்னி என விரிவடைந்துள்ளது. மக்கள் வாழ்விடங்கள் துண்டிக்கப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டும் குரல்வளை நசுக்கப்பட்டும் சிறிலங்கா இராணுவமயமாக்கலில் சிக்கித் திணறுகின்றன! இந்தவகையில் ஈழத் தமிழர்களின் தேசியத்திற்கான அடையாளத்தையும் வாழ்வுரிமைக்கான அடித்தளத்தையும் இல்லாது ஒழிப்பதில் மேலும் நுட்பமான நிறுவனமான கட்டமைப்புகளுக்கு ஊடாகப் பல்வேறு இன அழிப்பு வழிமுறைகளை சிறிலங்கா அரசு தொடர்ச்சியாகக் கையாள்கின்றது.

எமது தாயகத்தையும் மக்களையும் நிரந்தர அடிமைகளாக்கி மேலாதிக்கம் செலுத்துவதற்காகத் தாங்கள் வரைந்துள்ள ஓர் அடிமைச் சாசனத்தைத் திணிக்கும் நோக்குடன் தமிழர்க்கான ஒரு பொம்மைத் தலைமையை உருவாக்கவும் சிறிலங்கா அரசும் அதன் பிராந்திய சக்தி களும் முற்படுகின்றன. இந்த நிலையில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் சமூகமாகிய நாம் இத்தகையப் பல சவால்களை எதிர்கொள்ளவும் அவற்றைக் கடந்து செல்லவும் வரலாறு எமக்கு இட்டுள்ள கட்டளையை நிறைவேற்றவேண்டிய தருணத்தில் சேர்ந்துள்ளோம்! தமிழர்கள் சிறிலங்கா அரசு என்ற இருமுனை நிலைமாறி மூன்றாவது தரப்பையும் உள்வாங்கிய தாக விடுதலைப் போராட்டம் பரிமாணம் பெற்றுவிட்ட வரலாற்றுக் கட்டத்தில் நாம் இங்குக் கூடியிருக்கின்றோம். தொடக்கத்தில் ஈழப் போராட்டத்திற்கான பின்புலமாக மட்டும் நோக்கப்பட்ட புலம்பெயர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

தமிழர் வாழும் தேசங்கள் தற்போது போராட்டத்தைப் புதிய பரிமாணத்தில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்கான பிரதான அரசியல் தளங்களாய் மாற்றியிருக்கின்றனர். போராட்டத்தைத் தாங்கி வலுவூட்டி விடுதலைக்கான நிலை நோக்கிய பயணத்தில் பிரதான உரிமையாளர் களாகவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மாறியுள்ளனர். இத்தகையச் சூழ்நிலையில் தாயகத்தில் அல்லலுற்று அடிப்படையான மானிடத் தேவைகளும் மறுக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்மக்கள் சார்பாக இனப்படுகொலையில் இருந்தும் கொடும் போர் அனர்த்தத்தில் இருந்தும் விலகி ஜனநாயக விழுமியங்கள் கொண்ட நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்றிணைந்து குரல் எழுப்புவதும்; தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக் கான போராட்டத்தின் தாக்கத்தையும் தார்மிகத்தையும் உலகின் முன் முரசறைந்து கூறுவதும் மிக அவசரமான பணியாகவுள்ளது. எந்தவொரு வேண்டுகோளும் உரிமைக்குரலும் அனைத்துலகத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்பி அதனூடாக அவர்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டு மாயின் அது பரந்த மக்களிடம் திரண்டு எழுந்த கருத்தாக, ஒருங்கிணைந்த குரலாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய நடைமுறை யிலிருந்து நமது போராட்டமும் வழிமுறையும் விதிவிலக்குப் பெற முடியாது! ஆகவே ஜனநாயகப் பண்பும் அதுசார்ந்த நடைமுறையும் எம்மிடம் இருந்தன. 1977ஆம் ஆண்டு தேர்தலில் நம்மில் பலரும் வாக்களித்ததன் மூலமாக வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை மக்கள் சக்தியாக மாற்றினோம். அந்த ஆணையை வழங்கியதன் பின்னால்தான் பேரலையாக நாம் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

அதேபோல் மீண்டும் புலம்பெயர் தேசத்தில் அப்பிரகடனத்தை வழிமொழிந்து வாக்களிப்பதன் மூலம் எமது அரசியல் அவா இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது என்பதை அழுத்தம் திருத்தமாக முன்மொழிவதுடன் முன்னணிக்கு வந்துள்ள எம் இளைய தலைமுறையினரிடம் பட்டயமாகக் கையளிக்கும் வரலாற்றுக் கடமையையும் நாம் நிறைவேற்றியுள்ளோம்.

குறிப்பு

*அரசியல் சுதந்திரம், பொருளாதாரச் சமத்துவம், சமூக சகோதரத்துவம் என்னும் விழுமியங்களை மனித சமுதாயத்திற்காக உவந்தளித்த பிரெஞ்சு தேசத்தின் தலைநகராம் பாரிஸ் மாநகரில் ஏப்ரல் 18, 2000ஆம் நாளில் கூடியுள்ள ஈழத் தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் மத்தியில் ஆற்றிய உரை (நன்றி: காலைக்கதிர்).*

*இந்தக் கூட்டத்தின்பின் இந்த வாக்கெடுப்பு நடந்ததாகத் தெரியவில்லை! நடத்தியவர்களும் இயங்குகிறார்களா என்பதும் கேள்விக்குரியதாக உள்ளது.*



படிப்பகம்

www.padippakam.com

# ஈபில் கோபுரத்தின் முன் வாக்குறுதி

இத்தனை சிறப்புமிகு வருகையில் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் ஆற்றிய உரையில் தார்மிகப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயம் பண்ணினாலும் உண்ணாவிரதிகளோடு நகரப் பிதாக்கள் கலந்துரையாடிய பின் கொடுத்த வாக்குறுதியைச் செல்வி காயத்திரி ஒலி வாங்கி மூலம் அறிவித்தபோது எழுந்த கைத்தட்டலும் கரகோஷமும் அடங்க மணித் துளிகள் ஆயின. இந்த நேரம் நண்பனொருவன் ஓடிவந்து உண்ணாவிரதிகள் இருவரில் ஒருவனைக் காணவில்லை என்று சொன்னான். ஆச்சரியத்தோடு கூடாரத்தை நெருங்கினால் டாக்டர் செல்வி லூர்ட் அலோசியஸ் காணாமல் போன விடயத்தை விளக்கிக்கொண்டு நின்றாள். செல்வி லூர்ட் அலோசியஸ் ஆரம்பத்திலிருந்து உண்ணாவிரதிகளைப் பரிசோதித்து அவர்களின் உடல் நிலையைப் பற்றி நாள்முழுவதும் மருத்துவமனை வேலை நேரம் முடியும் வரை இவர்களோடு கடமை புரிந்து வருபவள். இவளுடைய தொண்டுள்ளம் பாராட்டப்பட வேண்டியது. செல்வக்குமாரின் உடல்நிலை கவலையைத் தந்ததால் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளார்கள், நாளைக் காலையில் திரும்பவும் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள் என்று தன்னழகுக்கேற்ற அமைதியான புன்னகையை வீசி நின்றாள்.

இந்த வாக்குறுதிகளையும் சமாதான உடன்படிக்கைகளையும் நம்பி மோசம்போன தமிழனின் நிலையெண்ணி 2002இல் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் அடுத்த நாள் நான் எழுதிய கவிதையின் உறுதியையும் தீர்க்கதரிசனத்தையும் பாருங்கள்.

ஒருநாள் இந்தச் சமாதானம்
பாலை நிலத்திற்கு ஒப்பாகும்
தப்பான ஒவ்வாத முடிவுகளால்
முகாரிகள் மூச்சுத் திணறும்!
தாகம் தீர்க்க நீர்தேடிய
தாகம் சேர்த்த கூடலின்
தேடலற்ற அரசியல்மயமும்
தெளிவுற வாறாக ஒளிவுறும்!



படிப்பகம்

பொறுமை இழந்த இழப்பின்
வெறுப்பின் வியாகுல காரணியம்
தேசம் எங்கும் உருட்டப்படும்
புலத்திலோர் கோஷம் நல்லரசு
வல்லரசு பொல்லரசை உலுப்பும்
புலத்தைப் புலமே வருத்தும்!

அழைத்தும் அழையாமலும்
ஈழத்துள் நுழைந்தோரை
வியட்நாம் வீதியிலோடிய
நிர்வாணச் சிறுமி மீண்டும்
சீற்றமுடன் பார்த்துச் சிரிப்பாள்
வியட்நாமிய நிதர்சன வரைவு
சித்திரவதை உயிரழிவுகள்
உலகக் கான்ஸ் திரைப்பட
திரையரங்கில் திரையிடப்படும்
நனவிடை உருக்கமாய் ஓடும்!
மானிடத்தின் பெருவாழ்வு
பூரங்கிகள் வாயில் பொய்யில்
பொய்யில் நிர்ப்பாக்கியப்படும்
தமிழினம் கோரணிய வாதையில்
சிலுவைப் பாட்டின் பாட்டில்
சிறிலங்காவின் கல்வாரிமலை
ஊடறுத்து வெண்புறா குருதியில்
குளித்து இறுதியில் வதைபடும்
குறும்படமாய் முடிந்துவிடும்!
தவறும் பட்சத்தில் தவறு
நடந்தவையும் நடப்பவையும்
வருந்துகிறோம் சின்னமழுப்பு
தமிழினம் கதறும்...
தொடரும் பட்சத்தில்
உறுமலும் அத்துமீறல்களும்
வேற்றுமொழிக் குரல்களும்
மூத்தகுடியின் நெஞ்சிலேறி
வழிகளும் வெளிகளும்
முற்றங்களும் பிணக்குவியலின்
குருதியொளிப் பகுதியாகும்!
மேலும் மேலும் அச்சத்தில்
சிறைமுகமிட்டு சிங்களத்துத்
தோட்டாக்கள் காட்டக்கள்
இரவும் பகலும் துரத்தும்!

www.padippakam.com

*புலிகளின் எறியலும் மறியலும்*
*வறியவரானது யாரெனக்கேட்கும்*
*இடைவெளி சிறிதுமின்றி*
*விண்ணிலும் மண்ணிலுமிருந்து*
*தமிழினம் எங்கெனக் கேட்கும்*
*மீண்டும் தமிழனைத் தமிழன்*
*புலத்திலிருந்து தேடுவான்!*
*வன்னி வெண்புறா அலுவலகம்*
*மூடப்படும் வீணாகிய நாட்கள்*
*மீண்டும் காலாவதியான*
*கணக்கில் கணக்குவைக்கப்படும்*
*மீட்பரின் எக்காளத்தொனி*
*திசைகளை அதிரப்பண்ணும்*
*எரிமலையின் குழம்பிலிருந்து*
*வெளிவரும் நெருப்புச் சூரியன்*
*உதயத்திலிருந்து உதயம் உதிக்கும்*
*வாள்கள் நேர்குத்தி நிற்காது*
*வானதூதர்கள் பறப்பில்*
*புதிய செய்திகள் பொழியும்*
*புலத்திலோர் கதிகலங்கும்!*
*வன்னிச் சமாதான அலுவலகம்*
*சதுரங்கக் காய் நகர்த்தலில்*
*பேய்களை வீழ்த்தாமல் மேலும்*
*சத்திராதிகளை வளர்த்ததால்*
*இனி இராசாவால் வெல்லவல்ல*
*கேள்விகள் எழும் தமிழன்*
*புலத்தில் புலம்பல் புயலாகும்*

இக்கவிதையை இன்று வாசித்தால் கணக்கிடாத கவலையை மனத்தில் ஏற்றும். 2002 நவம்பரில் இக்கவிதை எழுதி பிரசுரத்திற்குக் கொடுக்காமல் பதுங்கிக் கிடந்தது எப்படியோ இப்போது என் கண்ணில்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் இதை இக்கட்டுரைப் பகுதியில் பதிவுக்காகப் பதித்தேன். அழுதேன்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழத்தில் மரண முகாம்கள்

'ஜனநாயகம்' என்றால் நான் உன்னைப்போல் நன்றாக இருக்கிறேன் என்பதல்ல; நீ என்னைப் போல் நன்றாக இருக்க வேண்டும் என்பதே! இதை உலகின் ஜனநாயக நாடான இந்தியாவிடம் அகிம்சாமூர்த்தி காந்தி தேடுகிறார். சிறிலங்கா பயங்கரவாத ஆட்சியாளர்கள் பார்க்கிறார்கள். இந்தியாவின் ஆலோசனையுடனும் ஆயுதங்களுடனும் கூலிப்படையின் ஆக்கிரமிப்போடு சிறிலங்காப் பயங்கரவாதம் தமிழனின் சடலங்கள் மீது நின்று ஆர்ப்பரித்துக் கொக்கரிக்கிறது. கொத்தனிக் குண்டுகளாலும் நச்சுவாயுக் குண்டுகளாலும் இனத்தையே கருவறுக்கிறது. இதுதான் ஜனநாயகம் என்றால் சர்வதேசத்திடம் மனிதாபிமானம் சிறிதும் இல்லை அல்லது மரணித்துப் போய்விட்டது தமிழனைப் பொறுத்தமட்டில் என்பது உண்மைதானா?

இத்தனை கொடுமைகள் நடக்கின்றன, இத்தனை அவலத்தை உலகில் எந்த இனம் பட்டது என்ற கேள்விகள் எழும்போது உலகம் கண்ணின்றி மௌனம் காக்கிறது. வீதியில் இறங்கியவர்களின் கோஷங்கள் வான் முட்டி எழுகின்றன! காசாவில் நடைபெற்ற படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கு பிரான்சின் தலைவர் பறந்துபோனார். அந்தத் தார்மிகத்தில் ஒரு சிறுதுளியையாவது ஏன் எம்மக்கள்மீது காட்டுவதில்லை? இளையோர் வீதி வீதியாய் கோஷமிட்டு வேகம் கொண்டனர். இரண்டாம் உலகப்போர் நிகழ்வுகளில் படைகளின் மோதல்களைவிட நாஜிகளின் கொடூரமான செயல்பாடுகள்தான் உலகின் கவனத்தை அதிகமாகத் திருப்பின. தாம் பின்பற்றிய யூத எதிர்ப்புக் கொள்கை ஜெர்மன் இனத்தை ஆதிக்க சக்தியாக மாற்றி உயர்த்தும் என ஹிட்லர் கருதியதுபோல் தன்னுடைய இனவெறி யும் பிணம் தின்னும் பேய்க்குணமும் சிங்களப் பேரினவாதத்தை ஆதிக்க சக்தியாக உயர்த்தும் என்று ராஜபக்சா கருதுவதற்குப் பல ஆதாரங்கள் துலங்குகின்றன.

ஹிட்லர் ஆட்சிக்கு வந்தவுடன் யூதர்களையும் அவர்களின் அனைத்துச் செயல்பாடுகளையும் புறக்கணிக்க முடிவுசெய்தான்! ராஜபக்சா ஆட்சிக்கு வந்த பின்பு தமிழர்களின் கருவறுப்பில் கவனம் செலுத்தினான். காரணம் தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை விரைவுபடுத்துவதற்கு!



படிப்பகம்

www.padippakam.com

ஹிட்லர் தனது நாஜிப் படைகளைக் கொண்டு யூதர்களைக்கொன்று குவித்தான்! இதைப் பின்பற்றி இந்திய இராணுவத்தின் கூட்டோடு தமிழர்களைக் கொன்று நிலங்களை அபகரித்தான் ராஜபக்சா. அந்தச் சுடுகாட்டில் மரணமுகாம்களை அமைத்தான். பின்னணியில் ஒட்டுக் குழுக்களையும் சேர்த்து வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டான். யூதர்களை அடியோடு அழிக்க இறுதித் தீர்வொன்றை 1942இல் காணப் பட்டதற்கு முன்னதாக மனநிலை பாதிக்கப்பட்ட ஜெர்மனியர் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மனநோய் மருத்துவமனைக்கு நோயாளி களைக் கொண்டு செல்ல சொந்த மக்களே அஞ்சும் அளவுக்கு ஹிட்லரின் வெறிச்செயல் கட்டுக்கடங்காமல் இருந்தது!

இதே பாணியில்தான் சிங்கள அரசும் ராஜபக்சா சகோதரர்களும் 2008-2009களைத் தமிழர்களை அழிக்க இறுதித் தீர்வாகப் பிரகடனப் படுத்தினர். சிங்களவரை இனக்கொள்கை அடிப்படையில் ஒன்றுதிரட்டி பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்பினர். சிங்களவர் அல்லாத தமிழர்களைக் கொன்று குவிப்பதில் தங்களின் உற்சாகத்தை உலகின் முன் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆஸ்விட்ஸ் மரண முகாமைக் கட்டுவதில் 12,000 இரகசியப் போர்க் கைதிகள் ஈடுபடுத்தப்பட்டனர். கட்டுமானம் முடியும் வேளையில் 450 பேரே உயிருடன் இருந்தனர். போர்க் கைதிகள் பட்டினியாலும் நோயாலும் ஜெர்மனிக்காக உழைத்து இறந்துபோனார்கள். இதே பாணியில் பசியாலும் நோயாலும் சிங்கள இராணுவத்தின் தாக்குதலாலும் அங்கமிழந்தவர் களைக் கொண்டே வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் முள்வேலி மரண முகாம்களை அமைத்துத் தமிழர்களைக் கொன்று குவிக்கிறான். போலந்தில் ஆஸ்விட்ஸ் மரண முகாமுக்கு முதன்முறையாக 1942 ஆனி மாதம் 28ஆம் நாள் பாரிசிலிருந்து இரயில் மூலம் யூதர்கள் கொண்டுசெல்லப்பட்டு 'குளியலுக்காக' அனுப்பப்பட்டனர். ஷவரைத் திறந்தவுடன் தண்ணீருக்குப் பதிலாக விஷவாயு பரவும். அவர்களது அறைகள் சீல் வைக்கப்படும். சில வினாடிகளில் அவர்கள் மரணத்தைத் தழுவிவிடுவார்கள். பிறகு அவர்களிடமிருந்து தங்கம், பிளாட்டினம், தங்கத்தால் கட்டப்பட்டிருந்த பற்களும் பிடுங்கப்படும். பிறகு நிர்வாணமாக இருக்கும் பிரேதங்கள் எரியூட்டப்படும். இந்தக் கொடுமை தொடர்ந்தது.

இன்றும் அதுதான் நடக்கிறது. மரண முகாம்களை அமைத்துத் தமிழர் பகுதியில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த மரண முகாமிலிருந்து பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு நிர்வாணிகளாக எரிக்கப்பட்டனர். ஹிட்லரின் மரண முகாம்களில் முழுமை யாக ஈடுபட்டவர்கள் ஹிம்லர், ஹெய்ட்ரிக், அய்க்மேன் ஆகியோர்.



படிப்பகம்

www.padippakam.com

சிறிலங்காப் பயங்கரவாதம் அமைத்த மரண முகாம்களில் தமிழர்கள் கொல்லப்படவும், பாலியல் கொடுமைக்குள்ளாகவும், கடத்தப்படவும் விஷவாயுவுக்கு உள்ளாகவும், கோத்தேபாயா, பசில் ராஜபக்சா, சரத்பொன்சாகா, இராணுவத் தளபதிகள் பலர் இச்செயலில் முழுமையாக ஈடுபட்ட இனவெறியர்கள்! ஹிட்லரின் முகமூடி கிழிக்கப்பட்டது. நேசப் படைகள் ஜெர்மனியை ஆக்கிரமித்தபோது கொடுமைகள் உலகிற்குத் தெரியவந்தன. சிறிலங்காவின் கொடுமைகளை உலகிற்குத் தெரிய வைப்பதில் புலத்திலுள்ளோர் போராட்டங்கள்தான் வெளிச்சம்.

யூதர்களை வேரோடு அழிக்கும் ஹிட்லரின் திட்டம்போல் ராஜபக்சா சகோதரர்களின் திட்டம் தமிழரைக் கருவறுப்பதில் கவனமாக இருந்தது. 1942 மார்ச் மாதம் யூதர்கள் ஐந்து முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆஸ்விட்ஸ், செல்ம்னோ, ட்ரப் லிங்கா, சோபிபார், பெல்செக் ஆகியவை யூதர்களை வேரோடு அழிப்பதற்காக நிறுவப்பட்ட மரண முகாம்கள். நாள் ஒன்றுக்கு 12,000 யூதர்களைக் கொன்று குவிக்கும் வசதி படைத்தவை. இதுபோல்தான் வன்னியில் சிங்களச் சகோதரர்களால் தமிழர்களைக் கொல்வதற்காக மரண முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு உடந்தையாக நாஜி வெறியர்கள் இருந்ததுபோல் தமிழ் துரோகிகள் இருக்கின்றனர். அவ்வப்போது பிடிக்கப்படும் அப்பாவிகள் அங்கு அடைக்கப்படுகின்றனர். இரவு நேரங்களில் காணாமல் போகின்றனர். பெண்கள் இதில் அதிகம்! பெலநறுவயில் உள்ள மருத்துவமனையில் தமிழரின் கண்களும் சிறுநீரகங்களும் தோண்டி எடுக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன! சிங்களவருக்குத் தானம் செய்யப்படுகின்றன. பின்னர் அவர்கள் எரிக்கப்படுகின்றனர். இந்தச் சிங்கள இனம்தின்னிகள் திரைமறைவில் செய்து வருகின்ற அக்கிரமங்களையும் கொடுமைகளையும் அடுக்கிக்கொண்டே போகலாம். மொத்தத்தில் தமிழ் ஆண்களையும் தமிழ்ப் பெண்களையும் கணக்கு வழக்கின்றி அடித்தும், துன்புறுத்தியும் கொன்றும் இரத்த வெறியாட்டம் ஆடுகின்றார்கள்! எண்ணற்றவர்கள் சிறைகளில் சொல்ல முடியாத அச்சங்களால் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயக் கடமையில் நாம் இன்று வீதியில் நிற்கின்றோம்.

சிங்களயிசத்துக்கும் நாஜியிசத்துக்கும் பாசிசத்திற்கும் வேற்றுமை இல்லாத அளவுக்கு இலட்சணங்கள் பொருந்தியிருக்கின்றன. சிங்கள யிசத்தின் இக்காலகட்ட தமிழர் அழிப்பு நடவடிக்கையால் நாஜியிசத்தையும் பாசிசத்தையும் அது வென்று விட்டது . இந்த நடவடிக்கைகளைத்தான் புலத்துவாழ் தமிழன் சர்வதேசத்தின் முன்வைத்தான். முன்னிறுத்திப் போராடுகிறான். சர்வதேசத்திடம் மாறுதல் வேண்டுமென்கிற அக்கறை உருவாகும்வரை போராட்டத்தில் தளர்ச்சி ஏற்படப் போவதில்லை!



படிப்பகம்

www.padippakam.com

ஹிட்லரின் நாஜிசம் யூதர்களின் படுகொலைகள். முசோலினியின் பாசிசம் - இத்தாலியின் இழிநிலை. ராஜபக்சாவின் சிங்களயிசம்-தமிழ் இனத்தின் கருவறுப்பு.

எழுதிய பக்கங்கள் நினைவுகள்-எழுதப்படாதவை கனவுகளல்ல-
நாளைய அறிவின் செயல்பாட்டின் சபதங்கள்

போராட்ட ஊர்வலங்களின்போது அணிந்திருந்த வெள்ளை, கறுப்பு, சிவப்பு, மஞ்சள் வண்ண டீ-ஷர்ட்டுகளில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் போரை நிறுத்தும்படியும், தமிழர் வீரத்தை விளம்புவதாகவும் இருந்தன. நாளும் எழுப்பிய கோஷங்களில் 'எங்கள் தலைவர் பிரபாகரன்; நாங்கள் வேண்டுவது தமிழீழம்-மனித உரிமை அமைப்புகளே'.

கண்ணைத் திறந்து பாருங்கள்; உடனடியாகப் போரை நிறுத்துங்கள்; சிறிலங்கா, இந்தியா பயங்கரவாத நாடுகள்; பயங்கரவாதி ராஜபக்சா, கோத்தேபாய், சோனியா காந்தி, மன்மோகன் சிங், கருணாநிதி, வல்லரசு நாடுகள் - இப்படியான பெயர்கள் கோஷங்களில் எதிரொலித்தன.

இந்த ஒன்றுகூடல்கள் நடைபெற்ற இடங்களில் மக்களுக்குத் தேவையான தண்ணீர் வெந்நீர் உணவு ஆகியவை பரிமாறப்பட்டன. இவை பாரிசில் உள்ள உணவகங்கள், மளிகைக்கடைகள், புடவைக் கடைகள், நகைக் கடைகள் குறிப்பாக வர்த்தக நிலையங்கள், கனவான்கள், தனிப்பட்டவர்கள், ஆலயங்கள் ஆகியோர் ஒவ்வொரு நாளும் அன்பளிப்பாக வழங்கினர். இந்தப் போராட்டங்களில் நாளும் நின்ற ஒரே முகத்தினர் இவற்றை வாங்கி உண்டதும் குடித்ததும் குறைவு. எப்போதாவது வந்த தியாகிகள்தான் தின்று குடித்துச் சோம்பல்முறித்துச் சென்றனர்...

தமிழர்களின் போராட்டங்கள் ஆழமான அழகான பதிவுகளை உருவாக்கிவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞர்களின் பங்களிப்பும் கடவுளைப் பணிதலும்

ஏப்ரல் 06, 2009 திங்கட்கிழமை தொடங்கிய கலைஞர்கள் பாடகர்கள் சிறுவர்கள் ஆகியோர் போர்ப் பரணிப் பாடல்களைத் தினமும் இரவு நேரத்துக் கதாப் பிரசங்கப் பாடல் நிகழ்வாக நடத்தித் தங்கள் அர்ப் பணிப்பைத் தமிழுக்கும் தமிழனுக்கும் வழங்கினர். இந்தக் கலைஞர் களையும் இன்னோரின்னவரையும் பெருமையோடு நான் வாழ்த்திக் களிப்புறுகிறேன்.

இரவு நேரங்களில் தங்கள் ஊண் உறக்கத்தையும் துறந்து பணிபுரிந்த தியாக உள்ளங்களை நினைத்துப் பார்க்கும்போது தமிழா நீ பட்ட பாடுகளில் வன்னி நிலைப்பாடு எப்பாடுகளை எடுத்தியம்பும்? தமிழா நீ பட்டபாடுகளை உலகம் 'தூசிபோல்' தட்டிவிட்டால் அதைக் கண்டு நீ உறங்கிவிடப் போகிறாயா?

யூதர்களின் வழிமுறைகள் உன் நினைவை உலுப்பட்டும். இஸ்ரவேல் நாடு இன்று இன்னொரு இனத்தை அழித்து அபகரித்து வாழும் நிலைக்கு உயர்ந்துள்ளதைப் பார்! 'தோல்விகளால் குற்றமில்லை. இலட்சியம் இல்லா வாழ்வும் நம்பிக்கையின்மையும்தான் குற்றம். உன் உறுதியில், நம்பிக்கையில் திடம்கொள்!'

22 நாட்கள் காசாவில் நடந்த அழிவுகளைக் கண்டுவர நேரடியாகப் போகின்றீர்கள். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் காசாவின் அழிவுகள் இதயத்தைப் பிளப்பதாக அமைந்துள்ளன என்கிறார்! வன்னியில் நடக்கும் துன்பவியல் நாடகத்தையும் ஊழித் தாண்டவத்தையும் நேரில் பார்த்தால் இஸ்ரவேலைவிட சிறிலங்காவின் பயங்கரவாதக் கொடூரம் நெஞ்சை உடைக்கும். பான் கீ மூன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளும் அறிக்கைகளும் எமக்குப் பெரும் கொதிப்பைத்தான் தருகின்றன. தமிழன் இந்த அறிக்கைகளையும் வார்த்தைகளையும் நம்பித்தான் வாழ்வு முழுவதிலும் ஏமாந்தான். தமிழனைச் சிறிது சிறிதாகக் கொறித்துத் தின்று வன்னியுடன் பல இலட்சத்தைக் கொன்று தின்று விட்டது சிறிலங்கா பயங்கரவாதம். சிங்களவன் ஆட்சியின் மீது நம்பிக்கை என்பது இனி இல்லாமல் போய்விட்டது. இதற்கு அவர்கள் கையாண்ட



படிப்பகம்

www.padippakam.com

இனஅழிப்பும் ஒடுக்குதலும் அடக்குதலும் முறையற்ற இனவெறியுமாகும்! இவை சர்வதேச நோக்கில் தெளிவாகத் தெரிந்த பாடங்கள். இவற்றைப் படித்த பிறகும் இந்தச் சர்வதேசத்தின் அணுகுதல் அப்பட்டமான பொய்யின் மழையாகவே பொழிந்தது!

கடவுளை நம்பித் தொழுது பணிவோம் என்ற ஆறுதலும் தேறுதலும் வேண்டி ஒரு பகுதி மக்கள் அடிகளார் கில்லறி கிறகரி அவர்களது ஒழுங்கமைப்பில் மே 09, 2009 சனிக்கிழமை லூர்து அன்னை காட்சியளித்த புனித பேர்னடேத் அவர்களின் புனித உடல் இருக்குமிடம் நோக்கி தேவாலய சமாதானப் பேரணிக்கு ஆயத்தமானார்கள். பாரிஸ் லாச்சப்பலில் இருந்து பாதயாத்திரை என்னும் வரையறையோடு காலை 7.30மணிக்கு ஆரம்பமான யாத்திரை பத்து மணிக்கு 'நேவியர்' போய்ச் சேர்ந்தது. இந்தக் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மிகவும் கவலையோடு இலங்கையில் நடக்கும் இனஅழிப்பை அறிந்திருந்தனர். உங்களுக்கு நல்விமோசனம் ஆண்டவர் அளிப்பாரென்று வேண்டுதல் புரிந்தனர். வியாபார நிலையங்களில் எமது தேசியக் கொடியையும் பறக்க விட்டிருந்தனர்.

ஆலயத்தில் நடந்த திருப்பலியில் தமிழகத்தைச் சேர்ந்த அடிகளார் பிறிட்டோ அவர்களின் பிரசங்கம் உருக்கமமாகவும் நெருக்கமாகவும் இருந்தது. தமிழீழ மலர்வின் தெறிப்பாக அது எல்லோர் மனங்களையும் பாதித்திருந்தது. இதில் கொலின் அவர்களின் எழுச்சிப் பாடலும் பாடப் பட்டது. இந்த ஆறுதலும் தேறுதலும் வேண்டுதலும் சமாதானமும் போர் நிறுத்தமும் கேட்டுவந்த அன்றுதான் வன்னி முள்ளிவாய்க்கால் முற்றுகையில் பயங்கரமான படுகொலைகளை மேற்கொண்டபடி முன்னேறி புலிகளின் சகல அரண்களையும் சிறிலங்காப் பயங்கரவாதம் முற்றிலும் தகர்த்துவிட்ட செய்தி பேரிடியாய்த் தலைமேல் விழுந்தது!

குரூரமான காட்டுமிராண்டி முறைகளைக் கையாண்டு தமிழர் போராட்டம் முறியடிக்கப்பட்டாலும் அந்த அக்கினிப் பிரவேசத்திலிருந்து புலத்தில் புதிய தேசம், புதிய விழிப்பு, புதிய பிறப்பு நிச்சயமாகியுள்ளது. விடுதலைப் போராட்டச் சிந்தனைக்கும் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வீரியநிலைப்பாட்டுக்கும் தியாகத்திற்கும் இக்கட்டான காலம். அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனின் குரல்.

'புலத்தில் வாழ்வோரே உங்களால்தான் இனி முடியும். வீதிகளில் இறங்கிப் போராடுங்கள்.' கடற்புலிகளின் தளபதி சூசையின் குரல் இரங்கி வேண்டுதலாக ஒலித்தது. வீதியில் நின்றவர் நெஞ்சங்களைப் பிளந்தது. கண்களில் மாரி. பயங்கரவாதிகளின் கேவலமான போர் முறையைத் தடுத்திட வேண்டிய குரல்களில் நடுக்கம் நசியவில்லை, பணியவில்லை. புலத்துவாழ் தமிழர்கள் நடப்பதைப் பார்ப்போம். இந்தச்



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசத்திடம் எடுப்பதை எந்தவழியில் எடுப்பதென்ற முயற்சியில் நம்பிக்கையில் தளர்ச்சியற்ற பிடியாக அவர்கள் நின்று கொண்டனர்!

இந்த நேரத்தில் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஐரோப்பிய, அமெரிக்க, ஆப்பிரிக்கத் தமிழர்களிடையே மிகப்பெரும் கவனத்தை ஈர்த்த தேர்தலாக விளங்கியது. தாயக மக்களின் செய்திகளை அறிவதைவிட அதிகக் கவனத்தை இந்தியத் தேர்தல் தரப்போகும் முடிவில் தேசப்போர் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்புடன் நின்றனர்.

இந்தியாவில் வடக்கை விட்டுத் தெற்கை எண்ணிய கருசனை அதிகம் பேச்சில் நின்றது. இந்த நேரத்தில் முத்துவேல் கருணாநிதியின் கபட நாடகம் மூர்க்கத்தனமாக நடந்தேறுவது அவ்வளவு நல்லதுக்கல்ல. அவரிடம் குவிந்திருக்கும் பணம் சோனியா காந்தியின் சேலை முந்தானை யிலிருந்து கொட்டும் பணம். இவற்றால் தமிழக மக்களை விலைக்கு வாங்கி வாக்களிக்கும் இழிவான வல்லமையில் கைதேர்ந்த நரியன். திமுகவில் உள்ளவர்களிடம் இப்பழக்கம் இருந்ததில்லை. பணத்திற் காகவும் பதவிக்காகவும் கருணாநிதியே இந்த இழிவான பழக்கத்தை முடுக்கிவிட்டவராக இருக்கின்றார்.

*ஈக்கு நஞ்சு அதன் தலையில்*
*தேளுக்கு நஞ்சு அதன் கொடுக்கில்*
*பாம்புக்கு நஞ்சு அதன் பல்லில்*
*கருணாநிதிக்கு உடல் முழுவதும் நஞ்சு.*

இந்த வன்னிப் போர் தொடங்கியதில் இருந்து திமுகவிற்குள் இருந்தவர்கள் அனைவருக்கும் கருணாநிதியின் நஞ்சு நாளுக்கு நாள் பாலில் விட்டு கொடுக்கப்பட்டு வந்தமையால் ஏற்பட்டுள்ள ஒருவித இராஜதந்திரப் பயத்தை அரசியல் அசிங்கமாகத்தான் எண்ண வேண்டி யிருக்கிறது. தமிழக மக்களின் வறுமையைப் பணத்தால் மாற்றிவிடும் இழிகுணம் கருணாநிதிக்கு அத்துப்படி. கிழச் சிந்தனையில் கிளை விட்டிருக்கும் பதவியைத் தக்கவைக்கும் பரிதாபத்திற்குரிய சாணக்கியம். தமிழர் வாழ்வு பற்றிய கவலை இங்கொன்றுமில்லை!



படிப்பகம்

www.padippakam.com

# தவிப்பும் கொதிப்பும்

மே 21, 2009 தேர்தல் தமிழனுக்கொரு மாறுதலையும் ஆறுதலையும் தரும் என்று தவிப்போடு காத்திருந்தனர். வலிமைமிக்க யானை பன்றியைக் கண்டு வழி விலகிப் போவது அச்சத்தினால் அன்று; தன் பெருந்தன்மை யால்தான். நல்லவர்கள் தீயவரைக் கண்டு விலகுதல் இத்தகையதே. கருணாநிதியிடமிருந்து விலகிய நல்லவர்கள் தமிழீழப் பற்றாளர்களுக்கு ஆதரவாக இருந்தனர். இந்த வேளையில் புலத்துவாழ் தமிழர்களின் போராட்டத்தில் இளையோர்கள் கோஷங்களை முழங்கிய வண்ணம் நின்றனர். தமிழீழ மக்களின் விடுதலைப் போரை முற்றாக அழித்துவிடும் பயங்கரம். பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதைக் கண்டும் எந்தக் கண்டனமும் அறிக்கையும் சர்வதேசத்திடமிருந்து இல்லை. சர்வதேசத்தை உதறித்தள்ளிவிட்டு பொய்யில் மெய்யை முற்றாகப் புதைத்துவிட்டு இனஅழிப்பில் மும்முரமாகி விட்டான் என்பதை மட்டும் சர்வதேசமும் புலத்துவாழ் தமிழனும் நிச்சயித்துவிட்டனர். இதில் சர்வதேசம் நரிவேடம் தரித்து நின்றது. தமிழன் தாங்கொண்ணாக் கவலையுடன் கண்ணீர் மல்க கைகளை உயர்த்தி, குரல்களை ஓங்கி ஒலிக்கவிட்டு இயன்றவரை முயற்சி யில் தளர்ச்சியற்று வீதி வீதியாகப் போராடினான்.

மூன்று பத்தாண்டு காலமாக முன்னெடுக்கப்பட்ட ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்படுமா? மூடிமறைந்து விடுமா? இந்தியாவின் வல்லாதிக்கம் எப்படிப் பயன்படுகிறது? அன்று விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதம் வழங்கி வளர்த்துவிட்டு, இன்று ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சிங்கள வெறியனிடம் சரணடையச் சொல்லிக் கொக்கரிக்கிறது. 'நச்சுவாயுக் குண்டையும் கொத்துக் குண்டை யும் பயன்படுத்தித் தமிழனை அழித்துவிடு! எல்லாம் முடிந்துவிடும்' என்று உத்தரவிட்டிருக்கிறான்.

இந்தக் கழுத்தறுப்பு கறுப்புக் கண்ணாடிக்குத் தெரியாது என்று சொல்ல யாருக்கும் துணிவு வராது. காரணம், கருணாநிதியாக உள்ளதால் அடுத்த கழுத்தறுப்பு அவர்களை நோக்கிப் பாயும்! இந்த உத்தரவுகளும் அழிப்பின் அடுக்குதலும் நடக்கப்போகும் நாளும் வேளையும் கருணாநிதிக்குத் தெளிவாகத் தெரியும். ஒருகை உயர்த்தி சைகை காட்டியிருந்தால் தடைக்கள ஓட்டம் தடைபட்டிருக்கும்; இல்லை தவிடுபொடியாகியிருக்கும். இதை



படிப்பகம்

கருணாநிதி செயல்படுத்தாமைக்குச் சூழ்ச்சியின் பின்னணியில் பதவிப் பொறுக்குதல் முகமூடியிட்டிருந்ததே காரணம்!

இக்கொடூரத்தின் பின் மிச்சமுள்ள தமிழன் மீண்டும் சிங்களவனின் கீழ் அடிமையாகிவிடுவான். இந்தப் பாக்கியத்தை வரவேற்றபடி கருணாநிதி செய்யுள் வரியில் இரட்டைச் சொல்லில் வாழ்த்துப் பாடுகிறான். இந்த அறுப்புக் கண்ணோட்டத்தில்தான் கருணாநிதியை வடிவேல் பாணியில் நகைச்சுவை மன்னனாக்கி மண்ணாப் போகும்படி சபித்தபடி தங்கள் கோஷத்தை மேலும் தீவிரப்படுத்தினர்.

'இஸ்ரவேலரிடம் மாறுபட்ட கருத்துகள் தென்பட்டாலும் அவர் களுடைய நாடு கிடைக்கும் என்ற இலட்சியத்தில் ஒற்றுமையாக இருந்தார்கள். அத்தகைய நாட்டுப்பற்றும் ஒற்றுமையும் இருந்ததால்தான் வெற்றி பெற்றார்கள்'.

தமிழரிடையே இதற்குத்தான் 'பஞ்சம்'. படுபாவிகள் தமிழன் ஒன்று படமாட்டான் என்னும் சொல்லை எவன் பயன்படுத்துகிறானோ அவன் தான் தமிழினத்தின் எதிரி-துரோகி. இன்றும் பிளவுபட்டு நின்று வேடிக்கை பார்த்து 'இது தமிழனுக்கு ஏற்பட்ட சாபம்' என்னும் வார்த்தையை எவன் உச்சரிக்கிறானோ அவன்தான் நம்மினத்திற்கு முழுமுதல் பகைவன்! மூன்று பத்தாண்டுகாலப் புலிகளின் போராட்டத்தை யார் கொச்சைப் படுத்தி எதிர்க்கிறானோ அவன்தான் படுமோசமான பாதகன்.

விடுதலைப் புலிகள் ஆதரவு, விடுதலைப் புலிகள் எதிர்ப்பு என்னும் நிலைப்பாட்டின் பின்புலம் இளையோர் மத்தியில் பிரச்சினையாகி அவர்கள் சித்தத்தைப் பிசைந்தது. இந்தப் பெரும் வலைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில் ஏப்ரல் 06, 2009 அன்வலிட் திடலில் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் அளவற்ற சேதிகளைப் பல்லின மக்களுக்கு எடுத்தியம்பிக் காட்டும் பரப்புரையையும் மேற்கொண்டமை ஈழ விடுதலையின் மிகப் பெரும் கைங்கரியமாகத் துலங்கியது.

இதில் நாளும் கையிலேந்திய துண்டுப் பிரசுரங்களோடு ஒரே முகங் களைத் தரிசித்தாலும் அந்த இளைய உள்ளங்கள் சோர்ந்துவிடவில்லை. வீதியைக் கடக்கும்போதும், நடைபாதையில் நடக்கும்போதும் வேண்டாம் என்று தட்டிவிட்டாலும் விடாப்பிடியாகக் கறுப்பர் வெள்ளையர் சகலரையும் நிறுத்தி, சிங்களப் பயங்கரவாதிகளின் அசிங்க முகத்தையும் கொடூரப் போரையும் அச்சிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் உள்ளபடி விளக்க மளித்து, அவர்கள் கைநீட்டி வாங்கும்வரைக்கும் விடாது கொடுத்தனுப்பும் செயல்பாடு கண்டு இக்கவிஞன் பல கவிதைகளைப் படைத்தளித்திருக்கிறான். துண்டுப்பிரசுரங்கள் மேற்கொண்ட தீவிரமான பிரச்சாரம் குறிப்பாக வெள்ளையர் உள்ளத்தில் கருணையைக் கசியப் பண்ணியிருந்தது...



படிப்பகம்

www.padippakam.com

பிரான்சில் மே 06, 2009 அன்று வெளியான பத்திரிகைக் குறிப்பில் ‘இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் தமிழினப் படுகொலைக் கான ஆதாரங்கள் ஏராளமாக ஐநா சபை அமைப்புகளான யுனிடர் - (UNITAR), யுனொசட் (UNOSAT) ஆகியவற்றின் முன்பாகக் குவிந்த வண்ணம் உள்ளன’ எனும் செய்தி வெளியாகியிருந்தது. இலங்கை அரசாங்கத்தால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தமிழினப் படுகொலைகள் செய்தி புகைப்பட ஆதாரங்களுடன் ஐநா அமைப்புகளான யுனொசட்-யுனிடர் ஆகியவற்றிடம் கிடைத்திருக்கின்றன. இந்தப் புகைப்படம் தரும் தகவல் களின்படி இலங்கை அரசாங்கம் தமிழர்கள் வாழும் குடியிருப்புப் பகுதி களில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வீசி ஏராளமான அப்பாவித் தமிழர் களைக் கொன்று குவித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் 2 முதல் 9 மீட்டர் நீளமுள்ள பள்ளங்களும் குழிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. சக்திவாய்ந்த வெடிகுண்டு களால் ஏற்பட்ட இந்தப் பள்ளங்கள் இலங்கை அரசாங்கத்தால் அப்பாவி மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட போரின் கடுமையை அப்பட்டமாகப் பிரதிபலிக்கின்றன. இம்மாதிரியான தாக்குதல்கள் பள்ளிக்கூடம், வைத்திய சாலை எனப் பாகுபாடுகளின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் கடைசியாக ஏப்ரல் 24, 2009இல் நாங்கள் தமிழர்களின் குடியிருப்புப் பகுதிகளில் சாதாரண சிறிய வெடிகுண்டுகளைக்கூட வீசுவது இல்லை என்று இந்நாள்வரை பொய்ப் பிரச்சாரம் செய்து வந்துள்ளது. இந்தப் புகைப்படம் தரும் தகவலின்படி இலங்கை அரசாங்கத்தின் முகமூடி கிழிந்து உண்மை உருவம் உலகமக்களுக்குத் தெரிய வந்துள்ளது. இந்தச் செய்தியை அறிந்ததுடன் பெண்களை நிர்வாணமாக்கிப் பார்த்த சிங்கள வெறி நாய்களின் செயல்பாடு குறித்த செய்தியைத் தெரிந்தும் என்ன கண்டோம்?

எல்லாவற்றுக்கும் சட்டம் உண்டு. சண்டை போடுவதற்கும், வெட்டுக் குத்துக்கும் விதிமுறைகள் வைத்திருக்கின்றோம்! அதை மீறாத தாக்குதல்கள் முறையானதாகக்கூட அங்கீகாரம் பெற்றுவிடும். ஆனால் சிறிலங்கா அரங்கேற்றி இருக்கும் யுத்தம் உலகின் அத்தனை தார்மிக நெறிமுறை களையும் கொன்று குவித்து ஓய்ந்திருக்கிறது.

இந்தியாவின் மிக முக்கியமான மனித உரிமை அமைப்பான பியுசிஎல் அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் சுரேஷ், ‘போர் நடக்கும்போது போரியல் நடைமுறையை மீறுவது சிறிலங்காவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகமாக நடந்துள்ளது’ என்கிறார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு கொடுத்த அறிக்கையின்படி பல்வேறு மருத்துவமனைகள் தாக்கப்பட்டுள்ளன. மக்கள் கண்காணிப்பகம் பொதுமக்கள் மீதான தாக்குதல்களைப் பட்டியலிட்டுள்ளது! சாட்டிலைட்



படிப்பகம்

www.padippakam.com

படங்களைப் பல்வேறு நாடுகள் எடுத்து வைத்துள்ளன. எனவே சிறிலங்காவில் நடந்தவற்றை மறைக்க முடியாது. 'அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் மக்களைப் பார்க்கப் போனேன். அவர்களுக்கு இலங்கைக்குள் நீதி கிடைக்காது. அதற்கான சட்டங்கள் இங்கு இல்லை. இதைச் சொல்வதற்காக நான் தண்டிக்கப்படலாம்' என்று கண்ணீர் மல்கச் சொல்லித் தமது 11 ஆண்டுகாலத் தலைமை நீதிபதி பதவியிலிருந்து விடைபெற்றுள்ளார் சரத் டி சில்வா.

இக்கூற்றில் தைரியமடைந்த மனித உரிமை அமைப்பாளர் சுனிலா அபயசேகரா என்னும் பெண், 'தடுப்பு முகாம்களில் மூன்று இலட்சம் மக்கள் ஆறாத காயங்களுடன் மாதக்கணக்கில் இருக்கிறார்கள். இலங்கை உளவுத் துறையின் சித்திரவதைகள் பிரபலமானது. இப்படியான சித்திர வதைக்கு உட்பட்டவர்கள் தங்களுக்கு நடந்தவற்றை எங்களுக்குச் சொல்லி வருகிறார்கள்...' என்று வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார்! இந்தத் தாக்கத்தின் எதிரொலியின் தெம்பில்தான் புலத்துத் தமிழன் சர்வ தேசமெங்கும் போராடிக்கொண்டு நிற்கிறான். பயங்கரவாதிகளை ஒடுக்கும் போரில் நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் இரக்கம் இல்லாமல் கொல்லப்பட்டுள்ளனர். இது கண்டிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாட்டின் நிரந்தர உறுப்பு நாடுகள் கோரிக்கை வைத்தன.

ஆனால் சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் அதை ஏற்கவில்லை. தீர்மானம் தோற்றுப்போனது. அது தொடர்பான விவாதத்தில் பேசிய ஐக்கிய நாடு மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை 'நம் கண் முன்னால் நடந்த கொடுமைகள் தொடர்பாக ஒரு பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும். அது நம்பகத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்' என்று மன்றாடினார். தீர்மானம் தோற்றது என்பதைவிட சிறிலங்காவிற்கு ஆதரவாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் வென்றது. ஐக்கிய நாடு சபை ஏற்காவிட்டாலும் உலகத்தின் முன் உண்மை சிரித்தது - அமெரிக்க 'இல்லினாய்ஸ்' சட்டப் பேராசிரியர் பிரான்சிஸ் பதயில் 'கடந்த சில மாதங்களில் 10 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பிணங்களைப் புதைக்கும் வேலை நடக்கிறது. காஸாவில் என்ன நடந்ததோ அதுதான் சிறிலங்காவிலும் நடக்கிறது' என்று சொன்னார். 'டைம்ஸ்' பத்திரிகை 'சாட்சியம் இல்லாத படுகொலைகள்' என்று தலையங்கம் எழுதியது. இதில் 'சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற நடைமுறையை ஏற்றுக்கொண்டதாகக் கையெழுத்துப் போடா நாடுகளில் இலங்கையும் ஒன்று. இதைச் சொல்லித்தான் இலங்கையில் பொய் தலை விரித்தாடுகிறது; தப்பித்தும் வருகிறார்கள், தப்பிக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது. இந்த வகையில் சமீபத்தில் சிக்கியிருப்பவர் சூடான் அதிபர் உமர் அல் பஷீர். ஆப்பிரிக்க நாடான சூடானில் வாழும் கறுப்பின



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லிம்களை அங்கிருந்து விரட்டும் முயற்சியாக நடந்த இன அழிப்பைத் திட்டமிட்டு நடத்தினார். உமர் மீது ஆறு வழக்குகள் பதிவாயின சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில். ஜூலை 18, 2009இல் இவர் கைது செய்யப்பட்டார். இதேபோல் போஸ்னியா அதிபர் 'ரடோவன் கராச்ஸிக்' கைதாகி உள்ளார். இரண்டு இலட்சம் போஸ்னிய முஸ்லிம் களைக் கொன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டவர். 1992-1995 காலகட்டத்தில் இது நடந்தபோது உள்நாட்டுக் குழப்பத்தால் நாட்டைவிட்டுத் தலைமறைவாகி விட்டவரை 10 ஆண்டுகளுக்குப் பிறகு வெல்கிரேட் என்னும் கிராமத்தில் கைது செய்தனர். நாட்டு வைத்தியராக வாழ்ந்து கொண்டிருந்தவர் இந்த அதிபர். இன்னொரு உதாரணம்தான் இரத்தத்தை உறைய வைப்பது.

தென் கொரியாவில் இருந்த சர்வாதிகாரி சைங்மான் ரீ தன்னை எதிர்த்தவர் அனைவரையும் கொன்று குவித்துக் குழிகளில் புதைத்தான். சுடுவதும் புதைப்பதும் தொழிலாக மாறின. இந்த அட்டூழியத்துக்கு எதிராகப் போராடிய அனைவரும் எந்த ஆதாரங்களும் இல்லாமல் அலைந்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் கழித்துப் பெய்த மழை வெள்ளத்தில் புதைக்கப்பட்ட பிணங்களின் எலும்புகள் வெள்ளமாக ஓட ஆரம்பித்தன. ஊரறிந்த இரகசியத்தை யாரால் மறைக்க முடியும்? அமைதி மற்றும் சமாதானத்துக்கான ஆணையம் அது குறித்து விசாரணையை நடத்தியது. அன்று சாட்சி சொல்ல வந்த இராணுவ வீரர்கள் அனைவரும் அந்தக் கொடூரத்தைக் கலங்கிய கண்களுடன் ஒப்புக்கொண்டார்கள். வரிசையாக நிற்கவைத்துச் சுட்ட படங்களை அவர்கள் ஆதாரங்களுடன் ஒப்படைத்தது வரலாறு. உயிரோடு இருந்து சாதிக்க முடியாததை ஈழத்திலும் செத்துப்போன அந்தச் சடலங்கள் நிச்சயம் செய்யும் என்று சுரேஷ் ஆனந்த விகடனில் கூறியிருக்கிறார்!

அதேபோல் சர்வதேசப் பத்திரிகைகள் பல சிறிலங்கா கொடூரத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளன. அதே குறிக்கோளை நோக்கிய பாய்ச்சலாகவே இந்தப் போராட்டங்களைப் புலத்திலுள்ளோர் நடத்துகின்றனர். சிறிலங்கா இராணுவம் படுகொலை செய்தது தமிழ் மக்களை என்பதால் ஐக்கிய நாடுகள் சபை அதைக் குறைத்து மதிப்பிடுகின்றதா? குற்றம் சாட்டப்பட்ட அறிக்கைகள் எல்லாம் சிறிலங்கா அரசாங்கம் சிதறாமல் இருப்பதற்காகவே புறக்கணிக்கப்பட்டனவா? அழிப்பின் பின்னர் 2009 மே 27ஆம் தேதி நிகழ்ந்த மனித உரிமைகள் சிறப்பு அமர்வில் TIMES -Le Monde பத்திரிகை களால் வைக்கப்பட்ட தொடர் குற்றச்சாட்டுகள் ஐக்கிய நாட்டுச் சபையின் தூக்கத்தைக் கெடுத்த கொடூரமான நாள்களாயின. மனிதஉரிமைகள் ஆணையருக்கு இராணுவ மோதல்களில் மனித உரிமை மீறல்கள் பற்றிய அவரின் பார்வைக்காக france Libertès தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது. மனித உரிமை ஆணையர் கவனத்தில் எடுத்த பல இராணுவ



படிப்பகம்

www.padippakam.com

முரண்பாடுகளில் எமது நிறுவனமும் அக்கறை செலுத்தியுள்ளது, முக்கியமாக சிறிலங்கா தொடர்பான விடயத்தில். எமது பார்வையில் சிறிலங்காவில் தமிழர்களின் அடிப்படை உரிமைகள், அடிப்படை மனித உரிமைச் சட்டங்கள் கடுமையாக மீறப்பட்டுள்ளன. சிறிலங்காவின் போர் பெருமளவில் தமிழர்களின் உரிமைகளை அழித்துள்ளது. அடிப்படைத் தேவைகளான உணவு, நீர், மருத்துவ வசதிகள் போன்ற மனிதாபிமான உதவிகள்கூட போர் பிராந்தியத்திலுள்ள தமிழ் மக்களுக்கு சிறிலங்கா அரசு மறுத்துள்ளதுடன் அவர்களைத் தன் போரின் பிரதான இலக்காகவும் ஆக்கியுள்ளது.

சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களையும் வன்முறைகள் நடந்தேறிய விதங்களையும் படுகொலைகளையும் விசாரணை செய்வதற்காகச் சர்வதேச ஆணையம் ஒன்றை உருவாக்க மனித உரிமைகள் ஆணையர் மேற்கொண்ட முயற்சி மனித உரிமைகள் சபையின் சிறப்பு அமர்வில் எதிரொலிக்காததையிட்டு வருத்தமடைந்துள்ளது. ஐநாவில் 02.06.2009 தொடக்கம் ஜூன் 19, 2009 வரை நடைபெற்றுவரும் மனித உரிமைக் கூட்டத் தொடரில் பிரான்ஸ் விடுதலைக்கான டானியல் மித்திரோன் அமைப்பின் ஓரெதா-பாண்டெற்றினி டி பொக்கியோ வெளியிட்டிருந்த அறிக்கையிலிருந்து: (நன்றி ஈழ முரசு)

'மரணம் என்பது ஒருமுறைதான் நிகழுமா? சில வரலாற்று அவமானங் களால் பலமுறை நிகழ்வதும் உண்டு. கியூபாவின் புரட்சிக்காக உழைத்த சே குவேராவின் கைகளை வெட்டிப் புதைத்தது அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு நிறுவனம்'.

அநீதிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தால் நீயும் என் தோழன் என்ற சேகுவேராவின் உழைப்பால் விடுதலை அடைந்த கியூபா இனவெறி கொண்ட சிறிலங்கா அரசை இன்று ஆதரிக்கிறது! இப்போது சே குவேரா இன்னொரு முறை இறந்துவிட்டார் என்று ஆனந்த விகடன் கூறியது. இதேவேளை வியட்நாம் வீதியில் நிர்வாணமாக ஓடிய சிறுமியின் வாக்கு மூலத்தை உதாசீனப்படுத்தி கோசிமின் விடுதலையைக் களங்கப்படுத்தி சிறிலங்காவை ஆதரித்த வியட்நாம் முதல்முறையாகத் தூக்கில் தொங்கியது. இப்படியாகத் தமிழீழப் படுகொலைகள் விடுதலையைப் பெற்ற வரலாற்றுப் புரட்சிக்குக் கறுப்புமை பூசியதைக் கண்டு கொண்டுள்ளது. இத்தனையும் பதிவுகள் அல்ல படிக்க வேண்டிய பாடங்கள். தலை முறைக்குப் புகட்ட வேண்டிய சான்றுகளின் மொத்த வடிவம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஊர்வலத்தின் எழுச்சி

மே 12, 2009 சனிக்கிழமை பெரும் எழுச்சிமிகு மௌன ஊர்வலம். எல்லோர் வாய்களையும் வெள்ளைத் துணியால் கட்டியபடி மௌனமாக வலம் வரும் தீர்மானத்தை இளையோர் அறிவித்தனர். இதற்கான காரணம், 50 நாள்களுக்கு மேலாக மாறி மாறி போலீஸ் அனுமதி தரும் இடங்களில் எல்லாம் கூடிக் கத்திக் கத்திக் களைத்துப் போனோம். இனி இந்த மௌனத் திலாவது எங்கள் தாயக மக்களுக்கு ஆதரவான குரல் எழுந்து நெஞ்சம் கசியாதா என்ற ஏக்கத்தின் தாக்கத்தினால் எழுந்த நிலைப்பாட்டைக் காட்ட வெள்ளைத் துணியால் வாயைக் கட்டிய இந்த மௌன ஊர்வலத்தை அறிவித்தனர்.

இந்த ஊர்வலம் opera மெட்றோவிலிருந்து இரண்டு மணிக்கு ஆரம்பமாகி உண்ணாவிரதிகள் இருக்கும் றீப்பப்லிக்குச் சென்றடைந்ததும் அப்படியே ஆறு சந்தி பிரிக்கும் வீதிகளை மறித்திருத்தல் என்று ஆரம்ப மானது. இந்த ஊர்வல ஆரம்ப இடத்தில் வாகனத்தில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியிலிருந்து அண்ணா திமுக பொதுச்செயலாளர் அம்மையார் ஜெயலலிதாவின் தேர்தல் உரை. அவர்களது தேர்தல் அறிக்கையில் தமிழீழத் தனியரசு பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உரையுடன் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரைச் சுருக்கமும், உண்ணாவிரதம் மேற்கொண்ட செல்வக்குமாரின் உரையும் ஒலிபரப்பப்பட்டன.

மக்கள் சாரைசாரையாக வந்துகொண்டிருந்தனர். இதில் வீதி நாடகமும் நடந்தது. கம்பிச் சிறைக்குள் தமிழனை அடைத்துச் சித்திரவதை செய்யும் காட்சி சித்திரிக்கப்பட்டது. இதில் ராஜபக்சாவின் வேடம் பூண்ட பாத்திரம் மக்களை மிகவும் கவர்ந்திழுத்தது. மக்கள் வருகை கட்டுக்கடங்காதவாறு காட்சி தந்தாலும் இளையோரின் ஒழுங்குபடுத்துதல், மகளிர் சங்கத்தினரின் கைகோர்த்த மறிப்பு நிலை, நகர்வுப் பண்பாட்டுடன் பக்குவமாகப் பாதையை விட்டு விலகாத கால்கள். விடுதலைப் பயணத்தின் இலக்கு நோக்கி ஊர்வலம் நகர்ந்தது.

இந்த ஊர்வலத்தில் பத்துக்கும் மேற்பட்ட நகரப் பிதாக்கள், ஊடக வியலாளர்கள், தொலைக்காட்சியினர் கலந்துகொண்டனர். முன்னணியில் நகர பிதாக்களின் உரைகள் நிகர்த்தப்பட்டன. சந்திக்குச் சந்தி தரித்து நிற்கும்



படிப்பகம்

www.padippakam.com

போது இவ்வுரைகள் நிகழ்ந்ததுடன் செல்வி காயத்திரி தேசத்தின் வதைப்புப் பற்றியும், பயங்கரவாத சிறிலங்கா அதிபர் தம்பிமார் சகிதம் நடத்தும் இனஅழிப்பிற்குத் துணைநிற்கும் வல்லாதிக்க சக்திகளின் கூட்டில் நடக்கும் பயங்கரச் சதிகளைப் பற்றியும் புள்ளிவிவரங்களுடன் பிரஞ்சு மொழியில் கூறி வந்தது இந்தப் போராட்டத்தின் சிறப்பம்சமாகும்.

காயத்திரியின் உணர்வுபூர்வமான உரையுடன் ஊர்வலம் பல கி.மீ தூரம்வரை நீடித்த மௌனத்தோடு நகர்ந்தது. இதில் 'நகர்ந்தது' என்ற வார்த்தைப் பிரயோகத்திற்குக் காரணம் 35 ஆயிரத்தைத் தாண்டி தமிழரின் தவிப்பாய் நிற்கும் தமிழீழத் தாகத்தின் கனப்பே காரணமாகும்.

இந்த ஊர்வலத்தில் பங்குகொண்ட அனைவரது வாய்களின் முணு முணுப்பில் மௌனம் உடைந்த பேச்சில் இந்தியத் தேர்தல் இடம்பெற்றது. முடிவு எமக்குச் சாதகமாக அமைய வேண்டும். வடநாட்டு நிலவரத்தை அசட்டையாக அரற்றிக் கொண்டாலும் காங்கிரஸ் கட்சி பலமிழக்க வேண்டும். அப்போதுதான் தமிழகத்தின் வெற்றியில் வன்னிக் களநிலை தணியும்! இச்சோக நாடகத்தின் இறுதிக்கட்டம் மே 21, 2009 வியாழக் கிழமை முடிந்துவிடும். இதன் முடிவு புலத்தில் வாழும் தமிழனின் மனநிலையை அதிகம் பாதித்திருந்தது. தாயுமானவர் தமிழக மக்கள்தான் என்ற நம்பிக்கையில் தாயை வேண்டி நின்றோம்.

தாய்ப் பற்றில் மேலோங்கி நிற்கும் பிரான்சில் நெப்போலியன் ஒருமுறை 'பிரான்ஸ் நாட்டின் இளைஞர்கள் நல்ல முறையில் கல்விப் பயிற்சி பெறுவதற்கு என்ன தேவை?' என்ற வினாவை முன்வைத்தான். அதற்கு 'நல்ல தாய்கள்'! என்கிற விடைதான் கிடைத்தது. அதனைக் கேட்டு நெஞ்சம் மகிழ்ந்தான் நெப்போலியன். இந்தத் தாய் என்கிற வார்த்தையில்தான் எல்லாமே வரம்பெற்றுக் கிடக்கிறது. கல்வியும் பொதிந்து கிடக்கிறது. நம்முடைய பிரான்ஸ் நாடு நல்ல அன்னையரை அடைந்திருந்தால் அது நல்ல பிள்ளைகளைப் பெறும். அந்த அஞ்சா நெஞ்சன் நெப்போலியனின் மண்ணில் நின்று நல்ல அன்னையரும் நல்ல கல்வியோடு வீதியில் நிற்கும் இளையோரும் பெரியவரும் தாய்த் தமிழகத்திடமிருந்து வரப்போகிற தேர்தல் முடிவு பற்றிய பதற்றம் நல்ல ஆதரவுடன் தணியும் என்ற நம்பிக்கையுடன் நின்றனர்!

இந்த வேளை உண்ணாவிரதிகளில் ஒருவரை பிரான்ஸ் அரசாங்க வெளிநாட்டமைச்சர் பேனாட் குசனின் செயலாளரின் அழைப்பை ஏற்று இளையோர் அமைப்பினர் குழு கூட்டிச் சென்றது. இது மக்கள் மத்தியில் சிறிய புன்னகையை அரும்பப் பண்ணியிருந்தது. அதுவும் சொற்ப நேர மகிழ்வுதான். மனத்தில் கவலையின் கனப்புதான் அதிகமானது. முதலும் இல்லை, முடிவும் இல்லை! இங்கிலாந்து வெளிநாட்டமைச்சரும் பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

வெளிநாட்டமைச்சரும் சிறிலங்காவிற்குப் பறந்துபோகிறார்கள். செய்தியில் சிறகடித்துப் பறந்தனர். அமைச்சர்கள் போய்வந்த செய்தியில் தமிழர்கள் சிறகொடிந்த பறவைகளாயினர். பரதேசிகளாக நின்றனர்.

ஊர்வலம் வந்து சுதந்திர வீரமங்கை ஜோன் ஆர்க் சிலையைச் சுற்றி நின்றதும் ஒலிவாங்கியில் ஒருவரும் விலகிப் போகாமல் அந்தந்த இடத்தில் அமரும்படி அறிவித்தனர். மக்கள் பண்போடு சகல நிலைப் போராட்டங் களையும் பலமுறை ஆங்காங்கு நடத்தி அனுபவப்பட்டவர்கள் ஒருவகைச் சினப்புடன்தான் அந்த வீதிகளில் தொப்பெனக் குந்தினர். 'இது எங்க கொண்டுபோய் முடிக்கப்போகுதோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்'.

இப்படிச் சொல்லக் கேட்டதும், அடுத்தவர் 'கடவுள் இருந்தால் நம்ம சனத்தை இப்படி அலையவும் அழியவும் விட்டிருப்பாரா? செங்கடலைப் பிளந்த கோலை மோயீசனிடமிருந்து வாங்கித் தமிழனிடம் கொடுத்திருக் கலாம் அல்லவா? எங்கே கடவுள்?' கும்பிட்ட கைகளோடு எம்மிஷ்ட தெய்வங்களை எல்லாம் தொழுதபடியே அப்படியே அடுத்த நாள்வரை இருப்பதாக இருந்தார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரியா என்னும் மங்கையின் வேண்டுகோளுக் கேற்ப பாரதிராஜா, சத்யராஜ் (இந்த நேரத்தில் சீமான் சிறையிருந்து வெளி வந்திருந்தார்) ஆகியோருடைய உரைகளைத் தொலைப்பேசி மூலமாக உள்வாங்கி ஒலிபெருக்கியில் இணைத்து வழங்கினர். பாரதிராஜா உண்ணாவிரதத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டார். அதற்கான ஆறுதலையும் சொன்னார் - இதன்படியே சீமானும் சத்யராஜும் கேட்டனர். என் கருத்தும் இந்த இளையோருக்கு 'இது நல்ல சந்தர்ப்பம்; இந்தப் பெரும் எழுச்சியோடு இந்த உண்ணாநோன்பு முடிவது நல்லது. நீடிப்பதில் எந்த தாத்பர்யமும் வந்து சேராது' என்று என் கருத்தையும் வழிமொழிந்தேன்.

இளையோரின் சார்பாக நின்றவர்களும் தலைவர் மகிந்தனும் இதை ஏற்றுக் கொண்டனர். உண்ணாவிரதி இருவரும் விடவில்லை. இந்த நேரம் உண்ணாவிரதி ஒருவரின் பேச்சைப் போட்டார்கள். கோபம் பற்றிக் கொண்டது. ஆங்காரமும் தார்மிகமும் இல்லாத பேச்சு. நாங்கள் உங்களுக் காகத்தான் உண்ணாமல் இருக்கிறோம். நீங்கள் வீட்டிலிருந்து என்ன செய்கிறீர்கள்? இப்படிக் கோர்வையற்ற சங்கடத்தை உருவாக்கிய பேச்சைப் போட்டானுகள். இந்தப் பேச்சின் எதிரொலி அடங்கும் முன்னம் மே 13, 2009 விடியற்காலை ஐந்து மணியளவில் சுற்றி வளைத்து விட்டனர் பிரெஞ்சுப் பாதுகாவலர்கள்.

வீதியைவிட்டு எழும்ப மறுத்தவரை அடித்துத் தூக்கி எறிந்தனர். ஒருசிலர் உண்ணாவிரதிகள் இருவரையும் தூக்கிக்கொண்டு போனார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு பெரும் தவறாகப் பெரும்பாலோர் கருதினர். 'நாம் செய்த நன்மை தீமைகளுக்கேற்றபடி வரும் நன்மை தீமைகளை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். நம் விதிப்படி நடக்குமே தவிர மாறாக நடக்காது. நம்மால் வேறு ஒன்றும் செய்யவும் இயலாது...'

அதிரடிப் படையினர் தங்கள் ஆத்திரத்தின் அதிவேகத்தில் கட்டப்பட்டிருந்த கூடாரங்கள் எல்லாவற்றையும் இழுத்து எறிந்தனர். பண்பாட்டுடன் சாந்தமாக நடத்திய ஊர்வலங்களும் போராட்டங்களும் இச்செயலால் நொந்து தொய்ந்தன. உண்ணாவிரதிகளைக் கொண்டுவந்து பாரிஸ் லாச்சப்பல் சந்தியில் ஒரு துணியால் மறைத்து வைத்திருந்தனர். வேதனையாக இருந்தாலும் போராட்டத்தைத் திரும்பத் தொடர்வது இந்த இடத்தில் என்ற முடிவை எடுத்தபோது பலவிதக் குரல்கள் சாதகமற்று ஒலித்தன. வேறு மாற்றுத் திட்டம் தீட்டும் கூர்மையுடன் இளையோர் தலைவர் மகிந்தன் மிகவும் கவலையுடன் காணப்பட்டார். இந்த வேளையில் பலரது கருத்துகளையும் கேட்டார். மதியம் போலீசாருடன் அனுமதி வழங்கும் பிரெஞ்சு அலுவலர் வந்து அருகில் உள்ள சிறிய பூங்காவிற்குள் இருக்கும்படி அறிவித்துவிட்டுப் போனார். உண்ணா விரதிகளுக்கு அந்தப் பூங்காவிற்குள் கூடாரமும் கட்டில் மெத்தையும் போடப்பட்டன. உண்ணாவிரதிகள் இருவரும் கிடந்தனர். இந்த நேரத்தில் வன்னி நிலவரம் முள்ளிவாய்க்கால் மூச்சு முடக்கிவிட்ட படையணிகளோடு இந்தியா வழங்கிய நஞ்சுக் குண்டடியோடு சுற்றிவளைக்கப்பட்ட கொடூரம் கடுமை கொண்டது. சிங்களம் இந்தியா பாக்கிஸ்தான் இராணுவக் கூட்டோடு அனைத்தையும் அழித்தொழிக்கும் கட்டத்தை அடைந்துவிட்டது.

சொந்த மண்ணில் மீண்டும் அகதி - சொந்த மண்ணில் மீண்டும் மோசமான அடிமை - சொந்த மண்ணில் மீண்டும் சிறை - இதிலிருந்து மீண்டும் தெளிவு பிறக்கிறது, 'சிங்களவன் வேறு தமிழன் வேறு'. பொருத்தமற்றதும் பொருந்தாப் பொருத்தமும் மீண்டும் நீடித்திருப்பதற்குக் காரணம், வன்னிப் பயங்கரவாத யுத்தக் களத்தில், இருபது நாடுகளின் உதவியுடன் சிறிலங்கா அரசு விதைத்துள்ள விதைப்புதான்!

'நாளைய விடியல் நிலைமையைப் புரியவைக்குமா? இந்தியாவும் சீனாவும் பாகிஸ்தானும் கையாளும் இராஜதந்திரக் கருவறுப்பில் சிறிலங்கா எந்தப் பக்கம் தலைசாய்த்துப் படுத்து நிம்மதி கொள்ளும்?' கேள்வி பிறந்திடத் தாய்த் தமிழன் நரியனையும், வடக்கத்தவன் காங்கிரசையும் வெற்றிபெற வைத்திட்ட கழுத்தறுப்பு நடந்தது. வன்னிப் போர்க்களத்தில் கொத்தனிக் குண்டுகளையும், நஞ்சுக் குண்டுகளையும் மழையெனப் பொழியப்பட்டு இருபத்தைந்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பபட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

போர் தர்மத்திற்கேற்ப வெள்ளைக் கொடி காட்டியபடி சென்றும் சமாதானத்திற்கு இடமளிக்காத வகையில் படுகொலைகள் பயங்கரத் தாண்டவம் ஆடிக்களித்து உச்சத்தைத் தொட்டதே தெரியாமல் முடிந்தது. இதில் தமிழகத்தில் வெற்றிகண்ட கருணாநிதியின் வஞ்சகத்தை இனிவரும் கட்டுரையில் நான் எடுத்துக்காட்டுகளுடன் உங்கள் முன் வைப்பேன். அவரது இரட்டைச் சொல்லில் சொல்வதானால் கருணாநிதியின்

வாய் உரைத்தது பொய்மை
நா புனைந்தது தீமை.

'தாய்த்தமிழன் சேயின் வேருக்குத் தண்ணீர் ஊற்றாவிட்டாலும் அமிலம் ஊற்றாமல் விட்டிருக்கலாம்'. இந்தவகையில் கருணாநிதியின் சில பல கருமங்கள் தமிழீழத்தவனுக்கு வெறுக்கத் தக்கவையே.

உயர்வில் இருந்தது இறுமாப்பு
உணர்வில் இருந்தது கழுத்தறுப்பு.

இளையோரின் இளையமனத்தில் பதிந்தது பச்சைத் துரோகம் கருணாநிதியின் கறுப்புக்கண்ணாடி முகம்தான் என்பது இந்தத் தலைமுறை யின் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மே 24, 2009 லாச்சப்பல் உண்ணா விரதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஊழ்வினைப்படியே எல்லாச் செயல்களும் நடக்கும். நினைத்தபடி எல்லாம் நடப்பதில்லை. முதலாம் உலகப் போரில் கொல்லப்பட்டவர்கள் 'இரண்டு கோடி', இரண்டாம் உலகப் போரில் கொல்லப்பட்டவர்கள் 'ஐந்து கோடி'. இக்கொலைகள் செய்த பாவங்களை எந்த நாடு உணர்கிறது? இக்கேள்வி தமிழர்களின் படுகொலைகள் சர்வதேசத்தைத் தட்டிக்கேட்டது. யார் காதிலும் கவனத் திலும் விழவும் இல்லை. அவர்களின் இதயம் திறக்காமையைக் கண்டு தர்மம் பரிகாசித்தது. இனி இத்தகையக் கொலைகள் தடுக்கப்படவேண்டும் என்ற கண்டனத்தையும் கவலைகளையும் அக்கறையற்று அலட்சியப் படுத்தியது சர்வதேசம். தமிழினத் திடம் மட்டும் இருக்கும் அறம் அகலாத வரை தமிழன் எடுக்கும் போராட்டம் மறம் படைக்கும். அதை நிறுவிக் காட்டும் பொறுப்பில் புலத்துத் தமிழனின் அரசியல் கண்ணோட்டம் உரம் பெறவேண்டும். திறம் என்று சொல்லும்வரை பதறாது பக்குவப் பட்ட அரசியல் நோக்குடனும், சரியான அணுகுதலுடனும் போராட்டப் பாதைகள் செப்பனிடப்படவேண்டும்.

இன்று ஞானோதயம் பெற்றவர்கள் போல் பேசும் எல்லா அனுபவங் களையும் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை, பேச்சு மேடையாகத் தரம் இறங்கி தாழ்ந்து நிற்பது தமிழரைப் பொறுத்தவரைத் தெளிவாகியுள்ளது. போரைத் தடுத்து நிறுத்தும் சக்தியுள்ள அமைப்பு எனும் நம்பிக்கை தளர்ந்து வருவதைத் தமிழர் மட்டில் நிரூபித்துள்ளதைச் சர்வதேசம் அறியும்.



படிப்பகம்

அறிந்தும் அறியாதவர்கள் போல் நடித்த நடிப்பிலும் இசைத்த மெட்டிலும் தெறித்த பொறி, காந்தியின் கண்களையும் மாவோவின் கண்களையும் தோண்டி எடுத்துத் திரும்பவும் பாவத்தைக் கட்டிக்கொண்டு சிறிலங்கா விற்கே பரிந்தும் பரிவும் காட்டி வருகின்றனர். இதில் இந்தியா 45 கோடி ஏழை மக்களைக் கொண்ட நாடு. அதிலும் அதிகம் பிச்சைக்காரர்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. இந்த மத்தியும் மாநிலமும் ஏன் சிறிலங்கா விற்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றன? இந்தத் தப்பித்தலுக்கான சலுகையில் நசுங்காமல் தெரியும் ராஜதந்திரத்தை நாம் அவதானிக்கலாம். தமிழர்கள் மீது தாங்கள் மேற்கொண்ட சட்டத்திற்கு மாறான பயங்கர வாதத்தை மூடிமறைக்கவே! நான் முன்னம் சொன்னதுபோல் உண்மைகள் உறங்காது, ஊழிப்பெரும் தாண்டவமாக எழும்! சிறிலங்காவின் பொய்யில் ராஜபக்சா ஏற்றம் பெறவும் முடியாது! கருணாநிதி சாவுடலில் தமிழீழத்தானின் ஒரு பூக்கூட விழப்போவதும் இல்லை.

தமிழனுக்கு இன்று புலத்தில் கடவுளைப் போதிப்பதில் முனைப்புக் காட்டுகிறார்கள். மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் போதிப்பவர்கள் வருகின்றார்கள்! தமிழன் வழிபட ஆயிரம் கடவுள்கள் உண்டு. அவனது சிவ வழிபாடு முதல் கொண்டு சாட்சியம் கூறும். புலம்பெயர்ந்த நாடுகளில் ஆட்கள் குவிகிறார்கள் அல்லது ஆட்களை மாற்றுகிறார்கள். அவனது விடுதலைப் பயணத்தை மேற்கொள்ள எத்தனை கடவுளர் போதிப்புகள் இருந்தன? எந்த மதம் விடுதலையைப் போதித்தது? போதிக்க முற்பட்டது?

தமிழ்மக்கள் முல்லைத்தீவுப் பகுதியில் இந்தப் பயங்கரவாதிகளிடம் சரணடைந்தபோது அந்த நேசமக்களுக்கு நடந்த கொடுமைகளை இந்தக் கடவுளர் பார்த்துக் கொண்டுதானே தூணிலும் துரும்பிலும் இருந்தார்கள்! ‘சரணடைய வரும் தமிழ்ப் பெண்கள் 200 மீட்டருக்கு அப்பால் நின்று தங்கள் ஆடைகளை அகற்றிப் போட்டுவிட்டு கைகளை உயர்த்திக் கொண்டு நிர்வாணமாக வரவேண்டும். இறைவா, ஆதிமனிதனைப் படைத்தபோது அவர்களுடைய மானத்தை மறைக்க இலைகளைக் கொடுத்தாய். தமிழிச்சியின் மானமென்ன சிங்களவனின் சீதனம் என்றா கடவுளரே, பார்த்து நின்றீர்? ஆயுதங்கள் கொண்டுவரவில்லை என்பதற் கான சோதனை முறையா இது? எந்தச் சட்டத்தில் சிங்களக் காடையன் இந்தத் துணிவு கொண்டான் இறைவா? தமிழிச்சி என்ன நிலையில் சரணடைந்தாள்? தமிழிச்சியின் அந்த நிர்வாணக்கோலத்தில் எந்தப் பெண்களைத் தாய்மார்களை அந்த இராணுவச் சொறிநாய்களுக்குப் பிடித்திருந்ததோ அந்தத் தமிழிச்சிகள் நேராக இராணுவ முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள் தலைவா! உன்பார்வை இவர்கள்மேல் ஏன் பட வில்லை? எப்படிக் கடவுள் மீது நான் நம்பிக்கைக் கொள் வேன்? உலகே உனக்குக் கண்ணில்லையா? இதைத்தான் நாங்கள் இந்த வீதிகளில் நின்று

www.padippakam.com

கேட்டோம். சரணடைந்த மக்களை யார் பதிவு செய்தீர்கள்? யார் தயவில் அடைக்கலம் கொடுத்தீர்கள்? பொய்! எல்லாளன் காலத்திலிருந்து சிங்களவன் பொய்யில்தான் வயிற்றைக் கழுவுகிறான். பல காலத்துக்கு முன்பாகத் தமிழர்களைப் பற்றிய விவரங்கள் சிங்கள ஏடுகளில் ஏராளமாம். ஆயினும் அந்த நாட்களிலும் பொய்வதந்திகளைப் பரப்பி அப்பாவித் தமிழர்களைக் கொள்ளையடித்துக் கொலை செய்து கற்பழித்துவிட்டதாகச் செய்திகள் எதுவும் சிங்கள ஏடுகளில் இடம்பெற்றதாகப் பதிவாகவில்லை! சிங்களவர்கள் இந்த விடயத்தைக் கவனமாகக் கையாண்டார்கள். இது குறித்து விசாரணை மேற்கொண்டால் சிங்களவரின் பொய் இந்த இலங்கை யில் தாங்கள் வாழ்வதற்கான மெய்யில் தொக்கி நிற்பதாக அர்த்தப்படும். இந்தக் கையாடல்தான் இன்றும் தொடர்கிறது. இந்த அடிப்படையில்தான் இந்தக் கொடூரத்திலும் பொய் பொழியும் வழியை உடும்புப் பிடியாக ராஜபக்சாவும் அவன் சகோதரர்களும் மந்திரிகளும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்! இந்தச் சர்வதேசம் எந்த வார்த்தையில் வசப் படுகிறது என்பதுதான் தாயகத்தானும் புலத்துத் தமிழனும் புரிந்துகொள்ள முடியாத மூடு மந்திரமாக இருக்கிறது. இதை அரசியல் அணுகுதலோடு ஆராய்ந்து அகற்றிடும் போராட்டங்கள்தான் தொடரவேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# அரசியலா? அஞ்சலியா?

ஏப்ரல் 06, 2009 திங்கட்கிழமையன்று ஆரம்பித்த இடத்தில் ஒன்றுகூடுவதாக அறிவிக்கப்பட்டது. அந்த இடம் அன்வலிட் மெட்றோ. முன்திடலில் பிரமாண்டமாக மக்கள் கூடினர். தமிழன் முகத்தில் என்றுமில்லாத ஒருவகை நாணமும் பாவமும் கூச்சநிலைத் தெறிப்பாகவும் காட்சிப் பட்டிருந்தது. ஏன் என்ற கேள்விகளும் உம்மென்ற மௌனமும் பலவித அபிநய முத்திரைகளைப் பிரதிபலித்திருந்தன. தொடர்ந்து போராடுவதா அல்லது பின்வாங்குவதா என்ற குழப்பம் இருந்து வந்தமைக்குரிய காரணங்கள் சரியான முறையில் இன்றுவரை புலப்படவில்லை! படை பலமிருந்தும் சோர்ந்தமைக்கும், வீரர்கள் பலர் நோயுற்றமைக்கும் உரிய காரணங்களும் உரிய முறையில் வெளிச்சம் காட்டவில்லை.

இறுதி முயற்சி என்ற சொல் எந்தவிதத்திலும் பலிக்கவில்லை. மனச் சோர்வுக்கு மருந்துப் பொருட்களும் உணவுப் பொருட்களும் கிடைக்காத நிலையும் முக்கியக் காரணமாக இருக்கலாம். சரியான ஒருங்கிணைப்பு இல்லாததும், புலிகளிடத்தில் இல்லாத தடுமாற்றமும் காரணமாக இருந்துள்ளன! புலிகளின் பின்வாங்கலால் சிங்களப்படை கட்டடங்கள், காடுகள், பிற அரண்கள் ஆகிய அனைத்தையும் அழித்துச் சிதைத்துக் கொண்டே முன்னேறியது. இதுவே வன்னிப் போர்முனையில் புலிகளுக்கு மிகப்பெரும் தோல்வியைத் தோற்றுவித்தது.

இலங்கையில் இனமோதல் இருப்பது மிகப்பெரும் சர்வதேசப் பிரச்சினை ஆகிவிட்டது. இனமோதலின் உண்மைகளையும், உள்நாட்டுப் போராட்டங்களையும்- சர்வதேசத்துப் புலத்துவாழ் தமிழர்களின் போராட்டப் பரிமாணங்களுடனும் அவர்களின் போராட்டத்திற்கான மூலகாரணங்களோடும் நோக்கும் நிலை நிதானத்துடன் கவனத்தில் கொள்ளப்படுகிறது!

'கலாச்சார மத ரீதியில் மட்டும் ஒரு சமுதாயத்தை உயர்த்த முடியாது. சமுதாயத்தோடு முதிர்ச்சிபெற்ற அரசியலையும் இணைத்து நடத்திச் செல்வதில் தளராத நம்பிக்கை வேண்டும். அரசியலில் தன்னைத் தியாகம் செய்ய நினைப்பவன் முதலில் தூய்மை பெறவேண்டும். கொடுமைகளைத் தாங்கும் சக்தியையும் மனவலிமையையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

ஏனென்றால் அரசியலில் தெய்வீகம் கலந்துள்ளது. அரசியல் என்பது ஆண்டவன் படைப்பான மக்களுக்குச் சேவை செய்வது.' நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் கூற்றிது.

இந்த அரசியல்மயப்பட்ட நெருக்கம் புலிகளின் போராட்டத்தில் கேள்விமயமாக இருப்பதாகவும் இந்த வெடிப்பு சீரமைக்கப்படவில்லை என்றே அநேகர் கதையளந்ததையும் இந்தப் போராட்ட ஒன்றுகூடல் ஊர்வலங்களின்போது வாய்க்கு வந்தமாதிரி எல்லாம் வந்து விழுந்து குவிந்தன. புலிகள் மீதான தவறுகளைக் கழித்துப் பிரித்துக் கூட்டியே கொட்டினார்கள். தக்க தருணம் இதுவெனக் கருதியே விடாப்பிடியாக அரசியல்மயப்பட்ட தவறுதலைப் பலர், பலவிதமாக முன்வைத்து வாதாடினார்கள். நம்மிடையே எப்போதும் இரண்டு பிரிவினர் இருந்தே வருகின்றனர். ஒரு பிரிவினர் கையை மேலே தூக்குவர், மற்றொரு பிரிவினர் கையை கீழே வைத்து அமுக்கிவிட உதவுவர். இந்தப் பிரிவினர் செயல்பாட்டில் தெளிவாகத் தெரியும் முரண்பாடு மூடத்தனமான நிலைப் பாடுகள். இன்றைய தலைமுறை இவர்களை இனம்கண்டு கொள்வதில் தான் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இந்த இளையோரின் முன்னெடுப்புகளில் இவர்கள் நுழைவதால் ஒருங்கிணைந்து வேலை வாங்கவும் வேலைகளைச் செய்யவும் இடையூறுகள் நேரலாம். நன்மை தருமா, நாசமாக்குமா என்ற கேள்விகள் எழும்போது நன்மை தரும் என்ற நம்பிக்கை தளராது கைகளை உயர்த்த வேண்டும். கைகோர்த்து நிற்க வேண்டும். மக்கள் திகைப்பும் குழப்பமும் அடையாத வகையில் செயல் பாட்டில் தெளிவும் உறுதியும் பெற வழிவகுக்க வேண்டும். முயற்சியும் தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களுக்கு நேரம் இரு கைகளையும் தூக்குகிறது. நம் மக்கள் சாவுக்கு அஞ்சாதவர்களாகத்தான் வாழ்ந்தார்கள். வாழ்ந்த வாழ்வின் அடையாளமாக எதைவிட்டுச் சென்றார்கள் என்பதைத்தான் நாமின்று புலத்தில் நின்று கிளறிக் கொண்டு நிற்கின்றோம்.

*1956, 1958, 1970, 1980, 1983* ஆண்டுகளில் கலவரங்கள் வந்தபோது எந்தவித அரசியல் ரீதியான போராட்டங்களும் இன்று வெடித்துக் கிளம்பியதுபோல் கிளம்பவில்லை. புலத்து மக்கள் போராட்டத்தின் முக்கியக் கேள்விக்குரிய உச்சநிலை இங்குத்தான் கிளம்புகிறது. நாம் நடத்தும் போராட்டத்தின் வெற்றியை அளவிடுவது அல்ல இப்போதைய பணி. நம் பணிகள் அடைந்துள்ள மேலான நிலைகள்தான் வெற்றியின் முயற்சி. கடந்து வருகின்ற இக்கட்டுகளைக் கணக்கெடுத்துக் கடப்பதுதான் வெற்றிக்குரிய மதிப்பீடு. தமிழன் இந்த உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும் செயல் தவறாகும்போது கடக்கின்ற பாதையும் மலைபோல் தோன்றும்! தவறுகளைத் திருத்தித் திட்டமிட்டு ஒற்றுமையாக நம் புலத்துவாழ் நிலைப் போராட்டம் எழுச்சிபெற வேண்டும். தமிழரின் நிலைப்பாடுகளில்



படிப்பகம்

எல்லோருக்கும் கவலைகள் சூழ்ந்திருக்கும். இதில் சிலருக்குக் கவலை இல்லை. கருசனை இல்லை! குழி தோண்டும் குள்ளநரிக் குணமுண்டு. இவர்களிடம் இந்த நேரத்தில் வேண்டுவது நீங்கள் தமிழினப் போராட்டத்தில் பங்கெடுக்காமல் அவசியமானால் ஒய்வெடுத்திருங்கள். ஒதுங்கிக் கிடந்து மூட்டைப் பூச்சியாகிவிடுங்கள். இருந்தாலும் மற்றவன் இரத்தத்தை ஒட்டி உறிஞ்சாதீர்கள்! போதும் தமிழினத்தின் மீது காட்டிய துரோகங்களும் துரோகிகளின் விளையாட்டுகளும்.

'உலகெங்கும் தமிழன் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்தில்தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது. தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது. தமிழீழத்தில்தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியுள்ளது. எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர் களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுநர் களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய புரட்சிகர மான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். போர்க்குணமிக்க ஒரு புரட்சிகரச் சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்க வேண்டும்' - தேசியத் தலைவரின் கூற்று இதுவாகும்.

இந்நிலைப்பாடும் புலத்தில் வாழும் காலமாகிய இந்தக் கவலைக்கும் தாயக மக்கள் மீதான கருசணைக்கும் அவர்களது வாழ்வியல் கோட் பாட்டுக்கும் சுதந்திரமான தாயகத் தன்னாட்சிக்கான போரிடுதலோடு தமிழர் 'உயிர்ப்பிழைத்து வாழ வேண்டும்'என்பதே நமது போராட்ட மாகும். இந்த நெறியின்மேல் நிற்கும் இளையோரின் சிந்தனைக்கும் முன்னெடுப்புக்கும் திட்டமிட்ட வாழ்க்கை அவசியமாகிறது. 'கல்வி-பொருளாதார-பண்பாட்டுப் பக்குவத்தில் திட்டங்கள் வேண்டும். திட்டமிடுதலுக்கான கூட்டுறவுக்கும் தனித்திறமை தேவை. நமக்குள் பெரும்பாலருக்கு நன்மை அளிக்கும் அடிப்படையிலும், பயன் விளையும் பங்கீட்டு மேலாண்மையின் நோக்கிலும், நம்முடைய திட்டங்கள் பரிணமித்து முக்கியத்துவம் பெற வேண்டும். புலத்து வாழ்வில் திட்டங் களைச் செயல்படுத்தும் போது, நாம் வாழ்கின்ற நாடுகளின் சட்டங்களுக்கு அமைய, மனிதஉரிமைகளின் உயரிய உறுப்பினராகவும், ஜனநாயக இலட்சியங்களையும் நடைமுறைகளையும் மீறாத மக்களாகவும் விளங்கித் திட்டங்களைத் தீட்ட வேண்டும். நமது இருப்பின் உறுதிக்குப் பங்கம் நேராத வகையில் தாய்த்திரு நாட்டு மக்களின் வளமான வாழ்வுக்கு நாமிங்கு ஒற்றுமையாக இருந்து திட்டங்களை வகுத்துப் போராட்ட வழிமுறையை மேற்கொள்ள வேண்டும். கலந்துரையாடல் அல்லது ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் அந்தரங்க சுத்தியான பொதுச்

சம்மதம் எட்டப்பட வேண்டும். சொல்வன்மையையும் வாதம் செய்யும் திறமையையும் தர்க்க பூர்வமாகப் பேசும் திறமையையும் இளையோர்கள் குறிப்பாக ஜனநாயகக் குடிமகன் பெற வேண்டும். உண்மை எதுவென்று கண்டுபிடிக்க உண்மையாகவே விரும்புகிறவர்கள் கூடும்பொழுது நன்மை விடியும்! இந்த உலகத்திற்குத் தமிழர்களின் துன்பதுயரங்களையும் அடக்குமுறைகளையும் எடுத்துக் கூறவேண்டிய மிகப்பெரும் பொறுப்பு புலத்துவாழ் மக்களின் தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள் ஆடம்பரங் களில் ஈடுபட்டு உங்களுடைய சக்திகளை வீணடிப்பீர்களேயானால், தாயக மக்களின் பாதுகாப்பிற்கான காப்பரண்களைத் தேர்ந்தெடுத்து முன்னெடுக்கத் தவறியவர்களாவீர்கள். அதனால் நல்ல விடயத்தில் தோல்வி கண்டவர்களாவீர்கள். தமிழர்கள் தோல்விகளைக் கண்டு இன்றும் மனம் தளராதவர்களாக உறுதியுடன் முன்னேறும் வழியில் முயற்சி செய்கிறார்கள். புலத்தில் நாமும் முழுமூச்சுடன் இயங்க வேண்டும். இதற்காகவே நாம் இங்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலகட்டத்தவராக இருக்கிறோம்...'

சில சமயங்களில் இழப்பதுதான் பெரிய ஆதாயமாக இருக்கும். தமிழன் இப்போது இருந்தது அடுத்தகட்ட நகர்வில் பெரும் வெற்றி அளிக்கலாம். 'உலகில் நாம் தொடர்ந்து நடத்திய போராட்டங்கள் தமிழருக்குத் தோல்வி யல்ல. மிகப் பெரும் வெற்றியளித்துள்ளது. அதன் வெற்றியில் நம் தலைமுறை மொழிப்பற்றோடும் இனப்பற்றோடும் களம் இறங்கியதாகும்'. புலத்துவாழ் பெற்றோர்கள் கொண்ட கவலை தூரவிலகியது. நீதிநெறி நின்று போராடும் இளையோரின் வாழ்வை வழிநடத்த நம்பிக்கை என்னும் தாய் வலுவூட்டி வளர்க்கிறாள். மக்களாகிய நாம் போற்றி நடக்க வழிகாட்ட வேண்டும். தமிழன் கண்ட கவலையிலும் சோர்ந்துவிடாது திறமை வாய்ந்த உறுதியுடன் திகழ நம்பிக்கைதான் பலம் பொருந்திய ஆயுதமாகும்.

'எங்கே எம்மின மறவர்கள்? எங்களின் தலைவன்?' எல்லோரின் உரை யாடலிலும் வலுத்த வார்த்தையிது! தலைமைக்குப் பங்கம் ஏற்படாதவரை யில் எங்களின் போர்க்குணத்திலும் பங்களிப்பிலும் பாதகம் ஏற்படாது! சனத்தின் நெரிசலை ஊடறுத்து என்னை நோக்கிப் ஓடிவந்த பத்து வயதுச் சிறுமி முகத்தில் அடித்தாற்போலக் கீச்சிட்ட தமிழில் பாய்ச்சிட்ட பால் வீரத்தோடு கேட்டாள்:

> மாமா இங்கின நிற்கிற மாமாக்கள் என்னதான் மாமா கதைக்கினம்? எனக்கு ஒன்றும் விளங்குதில்ல. நான் படிச்சு வளர்ந்த பிறகு எங்கட புலி மாமாக்களோடுதான் போவேன்!

என் நெஞ்சை யாரும் காணாதவாறு பொத்தினேன். கண்கள் கலங்கிடச் சிறுமியின் முதுகில் தட்டி, நிச்சயம் நீ சொல்வது சரியம்மா. இந்த

www.padippakam.com

மாமாக்கள் கதைக்கிறது பொய்யம்மா. நீ போய் அங்க அக்காக்கள் அண்ணன்மார்கள் கத்துறாங்க, அவங்களோட போய் நின்று கத்தம்மா' என்றவளை அனுப்பிவிட்டு ஒன்றுபடாமல் ஒதுங்கிப் பதுங்கி இந்த வேளை வரை நிற்கும் பச்சோந்திகளை இச்சிறுமியின் சின்னமலரின் சீதள மலர்ச் சிரிப்பின் சிலிர்ப்பில் நின்று யோசித்தேன். இதுபோல் நெஞ்சை உருக்கும் பல சம்பவங்கள் யதார்த்தமான உண்மைகளாய் மிளிர்ந்தன. இவர் ஊரில் வாழ்ந்தபோது ஆசிரியராகப் பணியாற்றியவர். அவர் வரும் போதே கண்கள் 'கலங்கியிருந்ததை அவதானித்தேன்'. தம்பி கவி! என்ன மாதிரித் தம்பி நம்ம சனத்தட நிலைமை போகப்போகுது? என்னடா அங்கு நடக்கு? என்ர மனைவி நித்திரையே கொள்ளுறாளும் இல்லை. சதா துடிதுடித்து எழும்பி கட்டிலிலிருந்து இரண்டு கைகளையும் கும்பிட்ட படி இருக்கிறாள். ஊரில் இருந்தபோது பொடியங்களுக்குச் சமைத்துக் கொடுத்து அவர்களோடே கலந்திருந்தவள். அந்த வீரர்களால் 'புலியம்மா' என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்டவள் படுறபாடு என்னால பார்க்க முடியாம கிடக்கடா தம்பி' என்றவர் கண்களிலிருந்து விழுந்த கண்ணீரைப் பார்த்து என்னால் துக்கத்தைத் தாங்கிக்க முடியவில்லை. இப்படியாகப் புலியம்மா என்றழைக்கப்படும் தாயின் பிள்ளைகள் இருவரைத் தினமும் இப்போராட்டத்தில் கண்டு உரையாடுவேன். அவர்களும் தங்களது தாயின் நிலைமையைப் பற்றிய பார்வையை மிகவும் கவலையோடுதான் பரிமாறு வார்கள். 'அம்மா என்ன சதா தொலைக் காட்சி, வானொலி இணையதளங் களோடுதான் ஒன்றித்துவிட்டா. தன்ர பிள்ளைகளான வீரர்கள், பிரபாகரன் ஆகியோர் பற்றிய அறிதலை உன்னிப்பாகப் பார்த்தபடி இருப்பா. சாப்பாடு தண்ணீர் கேட்டாலும் சீறிவிழுகிறா. 'புலியம்மா... புலியம்மா என்று கூப்பிட்ட குரல்கள் இப்பவும் கேட்குதடி. நீங்க இருந்து பாருங்கடி என்ர தலைவனின் சாகசத்தை' என்று சொல்லி சொல்லிச் அனுங் கிறதைத்தான் நாங்க பார்க்கிறோம். இந்தப் புலியம்மா பற்றிய கவலை யோடு இங்கவந்தாலும் கவலை கூடிக்கொண்டுதான் மேலும்... மேலும்... ஏறுது'.

இந்த நேரத்தில் என் கவனத்தில் வெவ்வேறு கள நிகழ்வுகள் பற்றிய சிந்தனைச் சிதறல்கள் குழப்பத்தை உருவாக்கியிருந்தன. இவ்வேளையில் என் நண்பன் ஒருவன் என்னை நோக்கி ஓடி வந்தவன் உரத்துக் கோஷம் எழுப்பிய சிறுவர்களோடு தன் கோஷத்தையும் கலக்கவிட்டவன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

'உனக்குத் தெரியுமா! புலிகளின்ர போராடும் சாகசம் பற்றி?'

நான் மௌனத்தில் புதைந்திருந்தேன். அவன் தன் மெலிந்த உடம்பை உலுக்கி விளக்கிய வீரப்பேச்சு இதுதான்:



படிப்பகம்

‘இருபதாம் நூற்றாண்டு வரலாற்றினை எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்யும்போது நான்கு பின்னடைவு கண்ட யுத்தங்களை இணை யொத்து மதிப்பிடுவர். வியட்நாமில் அமெரிக்கப் படைகள், கம்போடியா வில் சீனப் படைகள், ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள், இலங்கை யில் இந்தியப் படைகள்’ ஆகியவையே இப்பின்னடைவு கண்ட போர் களாகும். இப்போர்களில் நான்கு பெரும் வல்லரசுகள் தொகையில் மிகச் சிறிய பலத்தில் மிகக் குறைந்த பயிற்சியில் மிகப் பின்தங்கிய எதிரிகளுக்கு முகம் கொடுத்தனர். ஆனால் அந்த எதிரிகளோ இரும்பை ஒத்த உறுதி கொண்டவர்கள். தந்திரோபாயத்தில் சாணக்கியர்கள். பகைவர் மீது ஈவிரக்கமற்றவர்கள். இந்தியாவின் எதிரிகள் எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் இருக்கவே செய்தார்கள். அவர்கள் மக்களிடமிருந்து வந்தார்கள். மக்களின் வீரநாயகர்களாகப் போற்றப்பட்டார்கள். உள்ளூர் மக்களால் பேணப்பட்டு பாதுகாக்கப்பட்டு அவர்களது நல்லாதரவைப் பெற்றவர்களாக விளங்கினார்கள்’ என்பதைக் கூறிவிட்டு தலைவரைப் பற்றி இந்தியா போட்ட தப்புக்கணக்கு பற்றி திரு தீக்ஷித் தனது நூலில் கூறியதையும் கூறினான். ‘தமிழீழ இலட்சியத்தில் பிரபாகரனிடமிருந்த தணியாத வேட்கை, தீராத வெறி, அவரது போர்த் தந்திரோபாய மதி நுட்பம், பேரிடர்களைத் தாங்கும் அவரது மனவுறுதி ஆகியன பற்றிக் குறைவாக மதிப்பீடு செய்தமையே இந்தியா செய்த மாபெரும் தப்புக் கணக்காகும்’ என்று சொன்னதை நீ மறந்து நிற்கிறாய்? உஷாராய் நில்லன்ரா... சதா யோசிச்சபடி தலைகுனிந்து நிற்கிறாய்?’ என்றவன் என் இரு தோள்களையும் பிடித்து உலுப்பினான்... இச்செயல் நடந்து சில மணிநேரங்களில் தொலைபேசியில் களத்திலிருந்து ஒருவர் உரையை ஒலிவாங்கி ஊடாக இரவு ஒலிபரப்பினார்கள்.

‘சர்வதேசமெங்கும் புலம்பெயர்ந்த தமிழர்களாகிய உங்களால்தான் இனி எங்கள் மக்களைக் காப்பாற்ற முடியும். நாங்கள் சிறுபகுதிக்குள் ஒதுங்கிவிட்டோம். எங்களின் நிலைமை படுபயங்கரமாக இருக்கிறது. நாங்கள் உயிர் தப்புவோம் என்பதும் என்ன நடக்கும் என்பதும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடும். உங்களால்தான் எங்களைக் காப்பாற்ற முடியும்...’ இந்த உயிர்கதறலைக் கேட்டமாத்திரத்தில் ஒருவன் ஒலிவாங்கி யில் அறிவித்தல் பண்ணுறான்.

‘உங்கட கைத்தொலைபேசிகளை என்னத்துக்கு வைச்சிருக்கிறீங்க? எடுத்தடிச்சு ஒருத்தரையும் நித்திரை கொள்ளவிடாது இங்கு வரச் சொல்லுங்க... டெலிபோன் அடிச்சுக் கூப்பிடுங்கோ சனம் சாகப் போகுது...’

ஒருத்தர் ஒலிவாங்கியைக் கையில் வைத்திருந்தவனின் கிட்டே சென்று இரக்கமாகக் கேட்டார்:

'தம்பி சனம் இப்பவந்து என்னத்த ராசா புடிச்சுப் பண்ணுறது?' இக்கேள்வி என் காதில் விழுந்த கணம் அவர் முன்போய் 'அண்ணே! பிடிச்சுப் பண்ண இங்கொன்றுமில்லை! நாம் ஒன்றுபட்டு நின்றெழுப்பும் குரலை உயர்த்திக்காட்டும் நேரம் இதுவண்ணே!' என்றதும்,

'ஓம் தம்பி நீ சொல்லுறதும் சரிதான்'.

என்றவர் தலையைத் தொங்கப் போட்டு நடந்தார். திரும்பிப் பார்ப் பதற்குள் மாயமாய் மறைந்துபோனார். சிறிது நேரத்திற்குள் வியப்பான செய்தியோடு ஓடிவந்த இளைஞன் சொன்னான்.

'இதில வந்து நின்று நியாயம் பிளந்தவர் ஒட்டுக்குழுவைச் சேர்ந்த ஈபில் பிட்டிக்காரன். இவர் ஈபில் கோபுரத்தடி-றீப்பப்லிக்கடி இரவில் வந்து சுவரோடு ஒதுங்கி நிற்பதும்-மரங்களோடு மறைஞ்சு நின்று இரகசியமாகப் போட்டோ எடுத்துப் போவதும்தான் இவன்ர வேலை.' அதைக் கேட்டு அந்த நேரம் ஆத்திரப்பட்டோம். இன்று அதன் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது! தமிழன் வாழ்விலும் தமிழன் சாவிலும் இவர்கள்தான் களங்கத்தின் சின்னங்கள். இன்று நாளையும் தொடரும்.

பல வாரங்களைத் தாண்டிய போராட்டத்தில் இதுபோல் நெஞ்சை உருக்கும் பல சம்பவங்கள் யதார்த்தமான உண்மையாக மிளிர்ந்தன. காரணம் போராட்ட நாள் முதலாய் அதிகம் காணப்பட்ட ஒரே முகங் களையும் தரிசனங்களையும் குறித்து உரையாடல் வடிவில் வேறு ஒரு பகுதியில் எழுத வேண்டும்.

இந்தநேரம் பிற்பகல் ஆறுமணியாகிவிட்டது. மெழுகுத்திரிகள் எல்லோர் கைகளிலும் இருந்து ஒளி இரங்கல் தீபமாய்ச் சுடர் வீசிக் கொண்டிருந்தன. அவர்களும் மெழுகுபோல் உருகினர். காற்றின் சாடலில் தீபம் அணையாது கைகளாலும், மட்டைகள் பிளாஸ்டிக் கிளாசுகள் அடியில் ஓட்டையிட்டு அதற்குள் மெழுகுத்திரிகளை ஒட்டி அணைய விடாது தீபம் சுடர்தரப் போராடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்குச் சகல நிலைமைகளும் போராட்டமாகவே பிறப் பெடுத்துள்ளன. புதிய போராட்டத்திற்கான சக்தியைப் பெற தீபத்தின் மீது சத்தியப் பிரகடனம் பண்ணுகின்றார்கள். மூன்று நாட்கள் தொடர்ந்த மெழுகுத்திரி ஆராதனையும் எத்தனை ஆயிரம் மக்களின் இறப்பிற்கென ஒருத்தருக்கும் புரியவில்லை.

*முகவரியும் முதலுதவியும் இல்லாது*
*பாடையுமின்றி பற்றி எரிந்தீர்களே*
*உங்களை ஈமக்கனல் செலுத்திக்*
*கல்லறையில் புதைக்கவில்லை*

www.padippakam.com

உங்கள் வாழ்வை எங்களுக்காக
எங்கள் மண்ணில் நட்டவர்களே!
இதயம் மெழுகுபோல் உருகிடும்
துக்கத்தில் நின்றாடி நிற்கின்றோம்

மே 2009 மலர் அஞ்சலி செலுத்தும் வைபவத்தை வைத்தார்கள். கறுப்பு மலர்களாகக் கறுப்புக் கண்ணீர் வடிக்க நெருப்புக் கண்ணீராய்க் கொட்ட கொட்ட அங்கு வைக்கப்பட்ட தூபியின் முன் மலர்களை எறிந்து வீரவணக்கம் செலுத்தினர்.

இந்த வேளையில் என்னிடம் ஒரு ஊடகவியலாளர் பேட்டியில் கேட்டார், எல்லோருக்கும் சேர்த்தா மலர் அஞ்சலியும் வீரவணக்கமும் செலுத்துகிறீர்கள் என்று. எனக்குக் கோபம் வந்தது. கேள்விக்குரிய நேரம் தான்! இருந்தாலும் பதில் சொல்ல நானில்லை! அப்போது உடன் எனக்கு வந்தது.

இருப்பில் உயர் சிறப்பு
இருக்குமென நம்புகிறேன்
அச்சிறப்பு அவர் வழியை
நாம் பின்பற்றிச் செல்வதில்
நாம்காணும் போராட்டமேயாகும்.

உலகில் ஒரு மூலையில் மிகச் சிறியதோர் தமிழ்க் கூட்டத்திலிருந்து முன்னுதாரணமானதோர் விடுதலைப் போராட்டத்தைக் கட்டியெழுப்பியவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். அந்தப் போராட்டம் நமது இனத்தில் பிறந்த தென்ற உணர்வுகளைத் தவிர வேறெதுவும் பெரிதாகப் பங்களிக்காத நமக்கும் பெருமையே.

நாற்புறமும் நீர்சூழ்ந்த சிறியதோர் நிலப்பரப்பில் இலங்கையோடு சுற்றியிருக்கும் பெரிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய வற்றின் நெருக்குதல்களுக்கு ஈடுகொடுத்து மரபுவழித் தாக்குதல் படையணிகள், சிறப்புப்படைப் பிரிவுகள், பீரங்கிப் பிரிவு, கடற்படை, உலகளாவிய உளவு அமைப்புகள் மெச்சும் மிகத்திறன் கொண்ட புலனாய்வுத் துறை, 70க்கும் மேலான கப்பல்களைக்கொண்ட அனைத்துலக ஆயுதக் கொள்முதல் பிரிவு, அரை உரிமைகொண்ட ஒரு செயற்கைக் கோள், இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் 2002 முதல் ஓர் அரசுக்கு இருக்க வேண்டிய துறைசார் அலகுகளுடன் கூடியதோர் நடைமுறை அரசை உருவாக்கி, பல உலக நாடுகளைவிடவும் நேர்த்தியான முறையில் அதனை நிர்வகிக்கும் திறனும் கண்ணியமும் ஒழுக்கமும் கொண்ட நிர்வாக ஏற்பாட்டையும் உருவாக்கி சாதனை செய்தவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.



படிப்பகம்

www.padippakam.com

தனிப்பட்ட வாழ்விலும் ஓர் இனத்தின் மாபெரும் நாயகனாகப் போற்றப்படும் இயல்புகளையும் ஒழுக்கங்களையும் கொண்டிருந்தார் என்பது முக்கியமானது. 'தலையைக் குனியும் நிலையில் இங்கே புலிகள் இல்லையடா. எவனும் விலைகள் பேசும் நிலையில் எங்கள் தலைவன் இல்லையடா' என அவர்கள் பாடும் பாடல் மிகவும் தகுதியானதே. 'உலகத் தமிழ் மக்கள் உங்களைத் தேசியத் தலைவர் என்று போற்றுகிறார்கள். இத்தகுதியை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?' என்று 2002இல் நான் கேட்ட கேள்விக்கு அவர் தந்த பதில் இவரைப் போலொரு நேர்மையான தலைவரை நாமறிந்த தமிழர் வரலாறு பெற்றிருக்கவில்லை என்ற உணர்வை அன்றே என்னுள் உருவாக்கியது. இதோ அவர் சொன்ன வார்த்தைகள்.

'என்னை நானே மிகைப்படுத்திக்கொள்ளும் எண்ணம் எனக்குக் குறைவு. இப்படித் தகுதியையெல்லாம் அடைய வேண்டுமென நான் உழைத்ததைவிட என் இனத்திற்கான கடமையைச் செய்ய வேண்டும். எனது மக்களின் விடுதலைக்காக நான் அர்ப்பணிப்போடு போராட வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது. கடமை உணர்வு தான் எனக்கு அதிகம். அதற்கு அப்பால் என்னை நானே பெரிதாகச் சிந்திக்கிற பழக்கம் எனக்கு இல்லை. என்னோடு கூட நிற்கும் தளபதியர், போராளிகள், அவர்களோடு போராட்ட சவால்களுக்கெல்லாம் ஈடு கொடுக்கும் எமது மக்கள் ஆகிய எல்லோராலும்தான் போராட்டச் சாதனைகள் உருவாக்கப்படுகின்றன'.

தொடர்ந்து நான் கேட்டேன்: தமிழ் மக்கள் உங்களை அசாதாரணமான ஆற்றல் கொண்ட ஒருவராகப் பார்க்கிறார்களே?' இக்கேள்விக்கு அவர் தந்த பதில் எனது வாழ்வில் பெற்ற நேர்காணல், பதில்களிலெல்லாம் அற்புதமானது. 'எல்லோரையும் போல் நானும் ஒரு சாதாரண மனிதன்தான். ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு பலவீனம் உண்டு. ஒருவருக்குப் பெரிய உருவம் கொடுத்துத் தெய்வம் போன்ற மாயையை அவரைச் சுற்றி உருவாக்கி எல்லாப் பொறுப்பையும் அவர் மீது போட்டுத் தங்கள் கடமை முடிந்ததென்று ஒதுங்கிக்கொள்வார்கள். தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு தமிழரும் தமிழரென்ற வகையில் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தார்கள் என்றால், என்னைச் சுற்றின இந்தப் பிரமாண்டம் இருக்காது. நான் தலைவராகவே உங்களுக்குத் தெரியமாட்டேன்'.

என்னே தெளிவு! என்னே நேர்மை! என்னே தன்னம்பிக்கை!

முல்லைத்தீவு பேரழிவிலிருந்து தங்களையும் விடுதலைப் போராட்டத்தையும் தற்காத்துக்கொள்ள ஒரே ஒரு வாய்ப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருந்தது. கடந்த தை மாதம் ஏப்ரல் 2, 2009 அன்று வன்னி நிலப் பரப்பிலுள்ள 'கல்மடு' குளத்தைப் புலிகள் உடைத்துவிட நூற்றுக்கணக்கான



படிப்பகம்

இராணுவத்தினர் பலியானார்கள்! கல்மடு குளத்தைவிடப் பன்மடங்கு பெரியது 'இரனைமடு' ஏரி. இதனை உடைத்திருந்தால் ஊழிப்பெருக்குப் போல் பெருவெள்ளம் புறப்பட்டு வன்னிப்பரப்பு முழுவதையும் விழுங்கி பூநகரி வரையுள்ள மரம் செடி உயிர் அனைத்தையும் அழித்துத் தீர்த்திருக்கும். மிகக் குறைந்தபட்சம் 40,000 சிங்கள இராணுவத்தினர் செத்து மிதந் திருப்பர். அவர்தம் பல்லாயிரம் கோடி பெறுமதியுடைய ஆயுதங்களும் இராணுவக் கட்டுமானங்களும் புதையுண்டுப் போயிருக்கும். இந்த மரண அடியிலிருந்து அடுத்த பத்து ஆண்டுகளுக்குச் சிங்கள இராணுவம் எழும்பியிருக்காது. ராஜபக்சா சகோதரர்களின் அரசியலும் முடிந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகள் இறுதி அஸ்திரமாக இரனைமடு ஏரியை உடைக்கும் ஆலோசனையை முன்வைத்தபோது யோசனைகளுக்கு இடம்கொடுக்காமல் பிரபாகரன் சொன்னார்.

'நீங்கள் சொன்னது சரிதான். இரனைமடுவை உடைத்தால் சிங்கள ஆமிக்காரனுக்கு மரண அடி கொடுக்கலாம். ஆனால் வன்னியின்ர பொருளாதாரமும் அதோட போகும். அடுத்த நூறு ஆண்டுக்கு அந்த மண் வளத்தையும் விவசாயப் பொருளாதாரத்தையும் ஒருத்தராலும் மீட்டெடுக்க முடியாது! நம் வன்னி மக்கள் எத்தனையோ கஷ்டங்கள் பட்டு விடுதலைப் போராட்டத்தோடு நிக்கிறாங்கள்... அந்த மக்களுக்கு நாம் இப்படியொரு துரோகத்தைச் செய்யலாமா?'

பேரழிவு நெருங்கிவந்த பொழுதில்கூடத் தனது மக்களின் வாழ்வுக்கான ஆதார வளங்களை அழித்துத் தன்னையும் இயக்கத்தையும் பாதுகாக்க மறுத்த இந்த மாமனிதன் பயங்கரவாதியா?

ஐயப்படும் அன்பர்களுக்கும் ஆங்கில ஊடகத்து அந்நியர்களுக்கும் இவற்றையெல்லாம் எடுத்துரையுங்கள். அவர்கள் வரைவு செய்தவர் ஜாலங்களுக்கு அப்பால் இதயம் கொண்டதொரு மனிதன் இருந்தான் என்பதை உரத்துச் சொல்லுங்கள் என்று கஸ்பார் அடிகளார் பொழிந்த பொன்னெழுத்து என்பதோடு பொறுமையின் வறுமையில் மௌனத்தை அடைகாத்தேன். மே 24, 2009 சித்தை யுனிவர்சிட்டி சார்லி விளையாட்டு அரங்கில் மாபெரும் கூட்டத்திற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. டென்பேர்ட் ஆர் இய் ஆரிலிருந்து ஊர்வலம் தொடங்கி சார்லி விளையாட்டரங்கின் உள் கூட்டம் நடக்கும் என்ற அறிவித்தார்கள். இந்த ஊர்வலத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். விளையாட்டு மைதானம் தமிழர் தலைகளாகக் காட்சி கண்டதை பிரான்ஸ் ஊடகங்கள் வியப்புடன் விளக்கி எழுதின. இந்த மக்களின் விடுதலை உணர்வு சர்வதேசத்தை நிச்சயம் ஈர்க்கும். இதுவரை இவர்கள் நடத்திய போராட்டங்களும் ஊர்வலங்களும் பலனளிக்கும் காலம் கனிந்துவரும்.

www.padippakam.com

## வணங்காமண்

ஜூலை 10, 1942இல் 'ஹகன' கப்பல் பிரான்சின் 'செற்ற' துறை முகத்திலிருந்து யூத அகதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. ஹகனா என்னும் சொல்லுக்குப் 'பாதுகாப்பு' என்று பொருள். இக்கப்பல் பிரித்தானியா துறைமுகத்தை அண்மித்தபோது துறைமுகத்தில் தரித்து நிற்க அனுமதி மறுக்கப்பட்டது. அந்த நிலையில் அட்லாண்டிக் பெருங்கடலில் அலைக் கழிக்கப்பட்டு, ஆப்பிரிக்கப் பகுதிக்குள் நுழைந்து தேவையானவற்றை நிரப்பிக்கொண்டு தன் தாயகம் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தது. பல தொல்லைகளைச் சந்தித்தது. கப்பலில் இருந்தவர்கள் தம் குறிக்கோள் தவறாத பயணத்தில் நம்பிக்கை தளராமல், வரும் இடர்களை எதிர்கொண்டு தங்கள் தாயகம் இஸ்ரவேலை அடைந்தே தீர்வது என்று உறுதியுடன் செயல்பட்டனர். கடலில் மாதக்கணக்கில் தத்தளித்தனர். இஸ்ரவேல் கரையில் தங்களது மக்களைக் கரையிறக்காது திரும்புவதில்லை என்ற உறுதி 'சவால்' விட்ட நோக்கில் நேராக வெளிப்பட்டது.

தமிழரின் வணங்காமண் கப்பலும் இந்தப் பிடியின் பிடிப்போடுதான் புறப்பட்டது. யுத்தம் உச்சமடைந்து கொண்டிருக்கிறது. வன்னியில் 60 சதவீத குழந்தைகளும் சிறுவர்களும் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப் பட்டிருந்தனர். வணங்காமண் கப்பலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வன்னி மக்கள்! வன்னி பிராந்தியத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 5 வயதுக்கும் குறைவான 2 சதவீதமான சிறுவர்களே ஊட்டச் சத்தின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர்! எனினும் தற்போது இந்த எண்ணிக்கை 69 சதவீதமாக மாற்றமடைந்துள்ளதாக முல்லைத்தீவு சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது. பாலூட்டும் தாய்மார்களும் எடை குறைவினாலும் ஊட்டச்சத்தின்மையாலும் தமது குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியாத நிலையில் இருக்கின்றனர். உணவு விநியோகத் தடங்கலினால் ஒரு மாதக் குழந்தைக்கு மாத்திரமே பால்மா வழங்கப் படுகிறது. வளர்ந்த குழந்தைகள் தேநீருடன் தமது வயிறுகளை நிரப்பிக் கொள்கின்றனர். அத்துடன் கொல்லப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளை உறவினர்கள் மருத்துவமனைகளுக்கு அழைத்து வருகின்றபோது அங்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களைக் குழந்தைகளால் உண்ண முடியாத



படிப்பகம்

www.padippakam.com




தமிழீழ மக்களைக் காக்கும் கடமையில் வணங்காமண் பட்டபாட்டைக் காட்டுகின்றது

நிலையும், குறிப்பிட்ட குழந்தைகளுக்கு உறவினர்களால் உணவளிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது! இந்தநிலையில் கடந்த 2 மாதகால மாக எந்த விதமான மரக்கறிகளையும் காணவில்லை. வெறும் அரிசியால் சமைக்கப்பட்ட பிட்டு அல்லது சோற்றினையே இவர்கள் உண்டு வருகின்றனர்.

தமிழர் மறுவாழ்வு கழகத்தினால் அவர்களுக்குக் கஞ்சி வழங்கப் படுகிறது. அவர்களுக்கு மாதந்தோறும் 5000 மெட்ரிக் டன் உணவு தேவைப் படும் நிலையில் 1000 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களும் கிடைப்பது அரிது! இதற்கிடையில் அதிகரித்துள்ள மழை வீழ்ச்சி பாரிய சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ மண்ணின் அவலங்களுக்காகப் போராடும் புலம்பெயர்ந்த மக்களே தங்களுக்கு உதவுவார்கள் என்று கடலை ஏக்கத்துடனும் நம்பிக்கையுடனும் பார்த்து நிற்கின்றார்கள். வணங்காமண் கப்பல் வரும், எங்கள் மழலைகளின் பசி தீரும் என்ற நம்பிக்கையோடு உயிரைப் பிடித்தபடி இந்தக் குழந்தைகளுடன் கடற்கரை களில் காத்துத் தவம் இருக்கிறார்கள் தமிழீழத்து உறவுகள்... நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அவர்கள் சாவை நோக்கி விரை கின்றார்கள். போருக்குத் தலைசாய்க்காத வணங்காமண் யாருக்கும் தலை சாய்க்கக் கூடாது! இப்படியான வேண்டுதலோடு பொருள்கள் சேகரிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டு ஏப்ரல் 25, 2009 புறப்படுவதாக இருந்த வணங்காமண் பலவித தொல்லைகளுக்கும் நெருக்குதலுக்கும் மத்தியில் தாமதமாகித் தவித்துக் கிடந்த நிலையில் வணங்காமண் கப்பலை நிரப்பிட அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள் புலத்துவாழ் மக்கள்.

'நிலா தன் கறையைப் போக்கக் கருதாது உலகின் இருளைப் போக்குவது போல் சான்றோர் தம் தேவையின் குறைவைப் போக்க எண்ணாமல் பிறருடைய கொடிய குறையைத் தீர்ப்பார்கள். இந்த நிலை புலத்து மக்கள் வாரி வழங்கிய கொடைத்திறனில் கண்டேன். கண்டு என்ன கதியில் வணங்காமண் சிக்கியது என்பதை இந்த இடத்தில் பதிவு செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் தீட்டுகிறேன். ஐரோப்பியத் தமிழர்களால் சேகரிக்கப்பட்ட சுமார் 885 மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள், வன்னியில் வாடும் உறவுகளுக்காகச் சேகரிக்கப்பட்டன. இந்தச் சேகரிப்பில் ஒரு தாய் கூறியது 'என்னுடைய கணவர் என் பிறந்தநாளுக்குத் தந்த ஆறு பவுன் செயினை விற்று என் உறவுகளுக்கு நான் சாமான் வாங்கிக் கொடுத்தேன். என்ர புருஷன் உயிருடன் இருந்திருந்தால் ஒரு டன் சாமான் வாங்கிக் கொடுத்திருப்பேன்'.

இவ்வாறு சொல்லி அந்தத் தாய் அழுத அழுகையில் நான் கலங்கினேன். இன்னொரு வயதான தந்தை கூறினார்: 'தம்பி இந்தக் கப்பல் போகுதோ போகவில்லையோ, என்ர மக்கள்படும் பாடுகளைப் பார்க்க முடியவில்லை என்னால். என்னத்தைச் செய்யப் போறேன் என்று தவித்தேன். எனக்கும் என் மனைவிக்கும் பிரெஞ்சு அரசாங்கம் தரும் பிச்சைக் காசு இரண்டு மாதக் காசு 1600 ஈறோவுக்கும் சாமான்கள் வாங்கிக் கொடுத்தபோது என் வன்னிச் செல்வங்களக் காப்பாற்றிய மன ஆறுதலில் நானும் மனைவியும் இளமையானவர்கள் போலானோம்'.

அந்தந் தந்தை பற்கள் தெரியச் சிரித்த சிரிப்பில் என் இளமை வயதாகிய நடுக்கம் கண்டது. இப்படிப் பல உயர்ந்த உள்ளங்கள் வன்னி உறவுகளுக் காகக் கொடுத்த நிவாரணப் பொருட்களை ஏற்றிச் செல்ல வணங்காமண் முதல் கட்டமாக லண்டனிலிருந்து பிரான்சுக்கு வந்து இங்கிருந்து வன்னி நோக்கிப் புறப்பட்டது. இந்த வணங்காமண் கப்பல் பற்றிய வர்ணனை களைப் பலதரப்பட்ட கவிதைகளில் வீரியமாகவும் மாறுதலாகவும் தெறித்ததைக் கண்டும் படித்தும் புலத்துவாழ் மக்களை நம்பி, கப்பல் வன்னி வந்துசேரும் நாளை எண்ணிக் கடவுளை வணங்கி ஏங்கிக் கிடந்தனர்.

இலங்கைக் கடல்பரப்பை வணங்காமண் அடைந்த செய்திகள் செவிகளில் நுழைகின்றபோது சிறிலங்காவின் பயங்கரவாத சோதனையும் தொடங்கியது. கப்பல் கேப்டன் அலி உட்பட 13 ஊழியர்கள் கைதாகி



படிப்பகம்

www.padippakam.com



வன்னி மக்களிடம் போய்ச் சேராத பொருட்களை ஏற்றிய கப்பலின் வாட்டம்

சித்திரவதைக்குள்ளானார்கள். இதில் இலண்டனைச் சேர்ந்த உதயன், ஜலாண்டைச் சேர்ந்த கிருஷ்ணன் ஆகியோருக்கு நேர்ந்த சித்திரவதை களின் பின்னர் குற்றம் சுமத்த முடியாது போக பொய்யைக் கொட்டும் சிறிலங்கா இலங்கைக் கடல் எல்லையை விட்டு விரட்டியடித்தது விவரமாக எழுத மனம் கவலையில் கனக்கும்.

ஜூன் 13, 2009 கப்பல் இந்தியக் கடல்பரப்பில் தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்குப் பயன்படட்டும் என்ற தார்மிக நடிப்பில் தமிழ் நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதியிடம் இறுதிக்கட்ட வசனம் எழுதும்படி சிறிலங்கா துரத்தியது. அந்த நரியும் பல வடிவங்களில் இரட்டைச் சொற்களையும் சூழ்ச்சி நடிப்பையும் அரங்கேற்றியது. தமிழகத்தின் மனிதம் என்ற மனித உரிமை அமைப்பின் செயல் இயக்குநர் அக்னி சுப்பிரமணியம் கோரிக்கை வைத்தார். இதன் பிரகாரம் தமிழகக் காவல்துறை, உளவுப்பிரிவு, ரா விசாரணை என்று துன்பத்தைக் கொடுத்தனர். இந்தியச் சுங்க இலாக்காவினர், இந்தியக் கப்பல் பாதுகாப்புத் துறையினர், இந்தியக் கப்பற்படையினர், இந்தியக் கடலோரக் காவற் படையினர் அனைவரும் வணங்காமண் கப்பலைக் குடைந்தெடுத்தனர். என்ன நடந்தது என்பதை வரலாறு பேச வேண்டும். இந்தியன் ஆட்படுத்திய அட்டூழியத்தில் கருணாநிதியின் வசனம் வசனித்ததும் கப்பலைச் சென்னைத் துறைமுகத்திற்கு வெளியில் நிறுத்துமாறு கட்டளையிடப்பட்டது. கப்பலில் குடிதண்ணீர் பிரச்சினை உருவெடுத்தது.



படிப்பகம்

எப்படியான சோதனை என்பது தமிழனுக்குப் புரிந்ததைச் சர்வதேசம் அங்கீகரிக்க மறுத்ததுதான் மாயமாக மண்டிக்கிடக்குது. தமிழன் என்று மார்தட்டும் கிழட்டுநரியிடம் சிக்கிய ஆடுகள் நல்ல மேய்ப்பனைக் கண்டதுதான் கருணாநிதிக்குப் பிடிக்கவில்லை. ஈழத் தமிழனைப் பழிவாங்கக் கிடைத்த சந்தர்ப்பமாக இந்த வணங்காமண் கப்பலும் அந்தக் கடலில் தவிக்கிறது.

இதற்கிடையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணாவை கருணாநிதியின் உயர்கல்வி அமைச்சர் பொன்முடி, சிறிலங்காப் பயங்கர வாதிகள் உயர்மட்டக்குழு ஆகியோர் சந்தித்தனர். சந்திப்பில் கருணாநிதி யின் மனோகர வசனங்கள் பேசப்பட்டன. சர்வதேசக் கடல் சட்டங்கள் எதுவும் இந்தியாவின் அணுகுதலில் அங்கீகாரம் பெறவில்லை என்பது புலத்துத் தமிழனை மிகவும் கவலையுடன் பாதித்திருந்தாலும் யாரிடமும் ஏற்படாத கடுங்கோபம் கருணாநிதி மீது ஏற்பட்டது. இத்தோடு பலமுறை ஈழத்தமிழனின் கழுத்தை நெரித்திருக்கிறார். இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர்கள் மற்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எவ்விதத் தடையுமின்றி வணங்காமண் கப்பலில் உள்ள நிவாரணப் பொருட்கள் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துத் துயரில் வாடும் ஈழத்தமிழ் மக்களைச் சென்றடைய செய்யப்படும் எனத் தெரிவித்தனர்.

அறிக்கை வெளியிட்டு நகர்வுகளை ஆமை வேகத்தில் நடத்திப் பொருட்களின் முடிவுத் தேதிக்குக் கொண்டுவந்து குப்பையில் கொட்டி விடும் சாணக்கியம். இதற்கிடையில் எம்.வி. கேப்டன் அலி, கப்பலின் அதிபர்கள் அக்கப்பலை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப மறுத்தனர்.

இந்த வணங்காமண் கப்பல் வன்னித் தமிழன் முள்ளிவாய்க்கால் நெருக்குதலின் போது எப்படிக் காணப்பட்டார்களோ அதே கோரத்தைக் கண்டுவிட்டது. கேப்டன் அலி தன்னையும் தன் சக ஊழியர்களையும் சிறிலங்கா கடற்படையினர் மனிதவதை செய்ததால் நாங்கள் கப்பலை இலங்கைக்குத் திரும்பச் செலுத்த முடியாது என்று மறுத்துவிட்டனர்.

'புலத்துவாழ் தமிழன் இந்த வணங்காமண் கப்பலும் பொருட்களும் பற்றிய சிந்தனையில் துளிகூடக் கவலையைக் காட்டாமல் இருந்து விட்டனர். இனி இந்த நிவாரணப் பொருட்கள் தங்கள் உறவுகளைச் சென்றடையும் என்ற நம்பிக்கையைக் கைவிட்டனர். இந்த நிலையில் ஆச்சரியப்படும்படியான செய்தி வந்ததும் கொதிப்படைந்து போனார்கள்...'

வணங்காமண் நிவாரணப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்க்க 76 இலட்சம் ரூபாய் கோருகிறது செஞ்சிலுவைச் சங்கம். இது இப்படி யிருக்க 27 பெட்டகங்களில் அடைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் 62

நாட்களுக்குப்பின் மலேசியக் கப்பலில் ஏற்றப்பட்டது. ஜூலை 07, 2009 கொழும்பு நோக்கிப் பயணத்தைத் தொடங்கியது. இந்த நிலையில் ஜூலை 13, 2009 சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கம், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கடிதம் அனுப்பியது. சிறிலங்கா அரசாங்கம் இலங்கைப் பணம் 76 இலட்சத்து 86ஆயிரம் ரூபாய் சுங்க வரி கட்டினால் தான் துன்பப் படும் தமிழ் மக்களுக்குச் சிங்கள அரசு கொடுக்கும் என்று. எப்படியான கபடநாடகங்கள் ஆடப்படுகின்றன என்பதைச் சர்வதேசம் வணங்காமண் கப்பல் நிவாரணப் பொருட்கள் மட்டில் உன்னிப்பாகக் கவனித்திருக்க வேண்டும். தமிழன் சாவில் சிறிலங்காவும் பிராந்திய வல்லரசும் எப்படி யான கொடூரத்தை விளைவித்தன என்பது மனித உரிமை மறுதலிக்க இடமில்லை.

உலகம் முழுவதும் தொண்டாற்றும் செஞ்சிலுவைச் சங்கம் வியாபாரிகள் விலை பேசுவதுபோல் மக்கள் துன்பம் துடைக்கும் பொருட்களுக்கு விலை பேசி செஞ்சிலுவைச் சங்கத்தின் தார்மீகத் தொண்டுக்கு வசை வழங்கியிருப்பது தெரிகிறது. சிறிலங்கா தமிழனை அழிப்பதற்கு மீண்டும் மீண்டும் இனவெறியில் நிற்பதைக் காட்டுகிறது.

நிவாரணப் பொருட்கள் வன்னி மக்களுக்குக் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை இன்றுவரை சிறிலங்காவும் வழங்கவில்லை, இந்தியாவும் வழங்கவில்லை. தமிழின அழிப்பின் உந்துதலாக இருக்கும் தமிழக முதல்வர் முட்டாள் கருணாநிதியும் வழங்கவில்லை! இனி இந்தப் பொருட்கள் யாருக்குப் போய்ச்சேரும்? சிறிலங்கா அரசின் பொய் மழையெனப் பொழியும்போது மெய் மெய்யாக இல்லாது மறையும். சமுத்திர பிராந்தியங்களின் இழிவால் வணங்காமண் இந்து சமுத்திரத்தில் மூழ்கிவிட்டது. புலத்துவாழ் தமிழன் அழும் கண்ணீர் இந்து சமுத்திரத்தை மிஞ்சும் பேரலையாக எழும்.

வணங்காமண் வன்னியை வணங்கும்

புலத்துத் தமிழா
உசார்தானே
சர்வதேசத்துக்
கதவுகளைத் தினம்
தட்டித்திறப்பதற்கு!

வணங்காமண்
வன்னியை வணங்கும்
உறக்கம் நீங்கி
மயக்கம் கலைந்து
மண்டலங்களை
உசுப்பிவிடும்

www.padippakam.com

திக்குத் திசைகளை
அதிரடிக்கும்

வணங்காமண்
கப்பலை வழியனுப்பு
தாயினச் சேய்களே
கூட்டுறவாகி நின்று
கைகளை உயர்த்தி
தோள்களைத் தட்டி
வணங்காமண் கப்பலை
வழி அனுப்புங்கள்

1947 ஆடி பத்து
யூத அகதிகளைக்
ககணா கப்பல்
பிரான்சில் இருந்து
இஸ்ரவேல் புறப்பட்டது
வெருட்டல்கள் குவிந்தது
மறித்தல்கள் எழுந்தது
சத்தியம் நிகழ்ந்தது
இஸ்ரவேல் அடைந்தது
சரித்திரம் கண்டது
உடைந்தது சகலதும்

தமிழன் இந்தப்
பரம்பரைப் பாடம்
சாதித்தெழுந்ததைச்
சரித்திரம் பேசும்
காயங்கள் மறைந்து
மாயங்கள் நிகழ்ந்து
மறத்தமிழா நீ
நீந்திக் கடந்த கடல்
கப்பலோட்டிய களம்
அன்று திசைகளும்
உன்னைக் கேட்டு
அதிர்ந்தது கடல்

கைகளைத் தட்டுங்கள்
வணங்காமண்
வன்னியை வணங்கும்

சிங்களச் சீற்றத்தில்
பழைய கணக்குகள்
புதிய கணக்குகள்



படிப்பகம்

www.padippakam.com

*வணங்காமண்*
*வெற்றி நிகழ்த்தும்*

*தமிழா பாடு பள்ளு*
*கீர்த்தனையின் கிழிப்பில்*
*உடுக்கள் உடைந்து*
*வடுக்கள் மறைந்து*
*பாடுகள் ஒழிந்து*
*ககணாக் கப்பல்*
*இஸ்ரவேலை வணங்கியது*
*வணங்காமண்*
*வன்னியை வணங்கும்*
*சரித்திரம் நிமிரும்*

*பிணங்களைக் கண்டு*
*மனங்கள் பேசட்டும்*
*ஒலிவ இலைகளே*
*ஓசானாப் பாடுங்கள்*
*வெள்ளைப் புறாக்களே*
*தமிழனைப் பாருங்கள்*
*தேச அமைப்புகளே*
*அன்பைக் காட்டுங்கள்*
*உலக ஊடகங்களே*
*உண்மையைப் பேசுங்கள்*
*வணங்காமண்ணை*
*தொட்டு எழுதுங்கள்*
*தூரிகைகளே துதியுங்கள்*
*சமாதானப் பாடலைப்*
*புனித கீதமாக்குங்கள்*
*தமிழீழத் தமிழன்*
*உங்களின் தோழன்*
*எங்கள் வானத்தில்*
*சூரியன் உதிக்கட்டும்*
*எங்கள் தலைவனின்*
*நிர்ணயத்தை*
*முன்னும் பின்னும்*
*பி.மு. - பி.பி.*
*1947இல் ககணா*
*2009இல் வணங்காமண்!*



படிப்பகம்

www.padippakam.com

# கொடிகளும் சின்னங்களும்

கொடிகள் அந்தந்த நாட்டிற்கு உரிய பெருமையைக் கொண்டு பறக்கின்றன. கடற்கலன்களில் துறைமுகங்களில் கப்பல்களில் பறக்கின்ற கொடிகள், அறிவிப்புகளை விளக்கும் கொடிகள், சுதந்திர நாட்டில் பறக்கும்போது அந்த நாட்டில் வாழும் மக்களின் மகிழ்ச்சியை, ஆட்சி நிர்வாகத்தை, பாதுகாப்பை, கல்வி, கலை வளத்தின் நிலை நிமிர்வுகளைக் காட்டும் கம்பீரத்தோடு பறக்கும். தேசியகீதம் இசைக்கும்போது மக்களின் மனதுக் கினிய தெம்பும் வீரியுணர்வும் தெறிக்கும். கடற்கலன்கள் கப்பல்கள் தங்களது நாட்டின் கொடிகளைப் பறக்கவிட்டு பறையறைவிக்கும். கடற் கொள்ளையர் கப்பல்களிலும் கொடிகள் பறக்கும். வேதாகமத்தில் குலங் களின் சின்னங்களோடு கொடிகள் பாளையம் இறங்கும். யூதா, இசக்கார், செபுலோன், யோசேப்பின், மனாசே, பென்யமின், தாண், ஆசோ, நப்தலி குலத்தவர் சின்னம்...

'ஏனெனில் ஆண்டவர் மோசேயிடம் சொன்னது இஸ்ரவேல் மக்கள் அணி அணியாகச் சென்று ஒவ்வொருவரும் தம் பாளையம், கொடி இவற்றுக்கேற்ப தங்கியிருப்பர். இஸ்ரவேல் மக்களில் ஒவ்வொருவரும் தங்கள் கொடி மூதாதையர் வீட்டுச் சின்னங்கள் இவற்றின்படி பாளைய மிறங்குவர். எல்லாப் பக்கத்திலிருந்தும் சந்திப்புக் கூடாரத்தை நோக்கிய வாறு அவர்கள் பாளையமிறங்குவர் (பைபிள் பழைய ஏற்பாடு, எண் 52) கொடியுடையோர் குலத்தினரின் போரிடுதல்.

மோசேயின் காலத்தில் காட்டப்பட்டாலும், உலகில் முதன்முதலில் கொடி ஏந்தியவர்கள், கொடி ஏற்றியவர்கள், போர்க்களத்திற்குச் சென்றவர்கள் பண்டைய எகிப்தியர்கள். இவர்களது கொடி என்பது நீண்ட குச்சியில் தாவணியைச் சுற்றியதுபோல் நீளமான துணி பறந்து கொண்டி ருக்கும். கொடியின் சின்னத்தை மரத்தில் செதுக்கி அதனைக் குச்சியின் உச்சியில் வைத்திருந்தனர். இவர்கள் காற்றில் பறக்காத கொடிகளையும் பயன்படுத்தியுள்ளனர். பண்டைக்காலப் போர்களின் பின்னர் ஏற்றபட்ட முதலாவது இரண்டாவது போர்களில் கொடிகளின் மகத்துவம் வெற்றியின் நிகழ்த்துவமாகத் திகழ்ந்துள்ளது. சங்ககாலத்தில் குறுநில வேந்தர்களின் கொடிகள் பறந்தபோதும், சேரனின் வில்கொடியும், சோழனின் புலிக் கொடியும், பாண்டியனின் மீன்கொடியும் கடல்கடந்த நாடுகளை வென்று



படிப்பகம்

www.padippakam.com

பறந்த கம்பீரமிக்கவையென வரலாறு புகட்டும். ஈழத்திலும் தமிழன் கொடியோடும் படையோடும் முடியோடும் ஆண்டபோது கொடியின் சிறப்பு வீரியமானது. பண்டைய வரலாறும் பண்டைய ஆய்வுகளும் பண்டையத் தமிழகத்தோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்த உண்மையோடு 'நந்திக்கொடி' யாழ்ப்பாணத்து மன்னர்கள் காளை உருவத்தையே நாணயங்களில் மட்டுமன்றி அரச கொடிகளிலும் ஆவணங்களிலும் அரச இலச்சினை யாகப் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் இக்கால மன்னர்களிலும் ஒருவனை தட்சிண கைலாச புராணம் 'இடபவான் கொடி எழுதிய பெருமான்' எனவும் வர்ணிக்கிறது. சிவ வழிபாட்டின் முக்கியத் துவத்தை எடுத்துக்காட்டும் சின்னங்களுள் சிவனின் வாகனமான நந்தி(காளை) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சிந்துவெளி நாகரிகக் கால முத்திரைகள் பலவற்றில் இவ்வுருவம் பொறிக்கப்பட்டி ருப்பதைச் சான்றாகக் காட்டியுள்ளனர். சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்கள் பலவற்றில் நந்தி முக்கியச் சின்னமாக இடம்பெற்றுள்ளது. இந்த வகையில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து நாணயங்களை வெளி யிட்டு வந்ததற்கும் அவற்றில் நந்தியைப் பொறித்ததற்கும் உறுதியான சான்றுகள் உள்ளன.



பழைய ஏற்பாட்டில் இடம் பெற்ற முதற்கொடிகள்

நந்தியின் சிறப்பினை வடக்குக் கிழக்கு வடமத்திய மாகாணங்களிலும் காணலாம். நந்திக் கொடியின் சிறப்போடு வழிவந்த தற்காலத் தமிழர்களின் அரசியல் கட்சிக் கொடிகளும் கதைகள் பல பகரும். கறுப்பு வெள்ளைக் கொடிகள் சமாதானத்தையும் துக்கத்தையும் கொண்டவை. சிறிலங்காப் பயங்கரவாதம் இந்த வெள்ளைக்கொடிக்கும் மரியாதை கொடுத்து மதிப் பளிக்கத் தவறியதை முள்ளிவாய்க்கால் யுத்தக்களம் சாட்சியம் பகர்ந்ததை அறிவீர்கள்.

1948 மார்ச் 6ஆம் தேதி இலங்கையின் சுதந்திரக் கொடி பீதாம்பரச் சிவப்பு பின்னணியில் பொன்னிறச் சிங்கம் பதித்த கொடிதான் ஏற்றப் பட்டது. 1950 மாசி 13 கொடி குழுவினரின் விவாதத்திற்குப் பின்னர் சிங்களப் பெரும்பான்மை வென்றதைத் தொடர்ந்து கொடியின் வடிவம் அப்படியே இருக்க, சிவப்புப் பின்னணியில் நான்கு மூலைகளிலும் பொன்னிற அரச இலைகள் இடம்பெற ஒரே அளவிலான இரண்டு செங்குத்தான கோடுகள் - ஒன்று செம்மஞ்சள் நிறத்திலும் ஒன்று பச்சை நிறத்திலும்- சேர்க்கப்பபட்டன. இவை தமிழர்-முஸ்லிம் ஆகிய இரண்டு சிறுபான்மை இனத்தைக் குறிக்கும். எங்கள் பெருந்தலைவர்கள் தந்தை



படிப்பகம்

www.padippakam.com

செல்வநாயகம், சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலம், சி.வன்னியசிங்கம், சி.சுந்தரலிங்கம் ஆகியோர் சிங்களத் தலைவர்களோடு கொடி விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். சிங்களத் தலைவர்கள் மிகவும் தீவிரமாய், விடாப் பிடியாக இருந்த தேசியத்தின் மீதான தமது விருப்பத்தை உரிமையை நியாயங்களை அதிகாரத்தை இந்தக் கொடி விவாதத்தில் வென்று நிறுவினர். தமிழ்த் தலைவர்கள் தங்கள் நியாயத்தை விருப்பத்தை நிறுவியிருந்த போதும் டி.எஸ். சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்றவர்கள் சிங்களத் தேசியத்தின் மீதான தீவிரத்தைக் காட்டினர். இந்தக் கொடிப் பிரச்சினையில் தமிழன் ஓரம்கட்டப்பட்டான். இந்தக் கொடி எதிர்ப்பு இன்றும் இருந்து வருகிறது. இதனடிப்படையில்தான் சிறிலங்கா கொடியை வடக்குக் கிழக்கில் ஏற்ற மறுத்ததும் தேசிய கீதம் இசைக்க வெறுத்ததும். இந்தத் தாக்கம் இன்று புலத்திலும் தொடர்கின்றது, புலிக்கொடியின் பரப்புதல் பார்முழுதும் பரப்புதலானது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது சர்வாதிகாரமும் பாசிஸமும் வெள்ளைக் கொடிக்கு மரியாதை கொடுத்துச் சரணடைந்தவர்களை மரியாதையோடு நடத்தினர். சிறிலங்காப் பயங்கரவாதம் அதைச் செய்யத் தவறியது. வெள்ளைக் கொடி காட்டிவந்த புலித்தேவன், நடேசன் இன்னும் பலருக்கு மரியாதையைக் குண்டுகளாலே தந்து மாசுபடுத்தியது.

இது ஒரு சரித்திரக் கொடி, சந்ததியின் கொடி. அதுவே ‘புலிக்கொடி’. இக்கொடிக்குத் தாயும் தந்தையும் தலைவர் பிரபாகரனே. இக்கொடியைப் பற்றி பிரான்சில் பலர் புகழ்ந்து கூறியுள்ளனர். மே 1ஆம் தேதி ஊர்வலத்தின்போது பிரெஞ்சுக் குடிமகன் ஒருவர் கூறினார். ‘இப்படி யொரு அழகான கொடியை உலகக் கொடிகளில் நான் காணவில்லை!’ கூறிவிட்டு கொடியைப் பிடித்தபடி சொன்னார்:

> நான் என் வீட்டுப் படுக்கைக் கட்டில் தலைமாட்டில் சுவரில் குத்தித் தொங்கவிடுவேன்.

இந்தக் கொடியினை வரைந்த ஓவியர் நடராசாவின் பார்வையில் ‘புலி என்றால் சீறவேண்டும். புலியின் முகத்தில் சீற்றம் புராணமாக வெளிப் படவேண்டும்’ என்று சொன்னார். அவர்களின் எண்ணத்திற்கேற்ப நான் வரைந்து கொடுத்த படத்தில் சீற்றம் கொண்ட புலியின் முகம் தம்பி எதிர் பார்த்தபடியே அமைந்துவிட்டது. அவர்களுக்குத் திருப்தியாக அமைந்தது. அப்போது நான் ‘வளையத்தைத் தாண்டி வெளியே வருவதுபோல் புலியின் நகங்கள் விரிந்த கால்களில் இருந்தால் நன்றாக இருக்குமே’ என்று என் கருத்தைச் சொன்னேன். உடனே தம்பி ‘அப்படியே வரையுங்கள் அண்ணா’ என்றார் ஆர்வத்தோடு. பிறகுதான் வளைவை மூன்றாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் 11 தோட்டாக்கள் என 33 தோட்டாக்களை வரைந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் விருப்பப்படியே நுனியில் குத்துக்கத்தி உள்ள இரண்டு துப்பாக்கிகள் ஒன்றுக்கொன்று குறுக்காக வளைவின் பின்புறம் இருக்கும் படி வரைந்தேன். இப்படித்தான் இயக்கத்திற்குப் புலிச்சின்னம் உருவானது.

இந்தப் புலிக்கொடிதான் இன்று சர்வதேசமெங்கும் அதிகமாகப் பறக்கின்றது. காந்தியடிகள் 1930 தண்டி யாத்திரையின்போது அடக்கு முறைகளுக்கிடையில் அமைதியும் கட்டுப்பாடும் எப்படியென்பதைக் காண்பித்த ஊர்வலத்தில் அறுபதாயிரத்திற்கு மேற்பட்டோர் ஏந்திய கொடியுடன் நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தை நான் படித்திருக்கிறேன். அந்த ஊர்வலத்தின்போது பல நூறுபேர் கொல்லப்பட்டாலும் போலீஸாருக்கு எந்தவித சேதமும் ஏற்படாமல் அமைதியோடு நடந்த போராட்டம். பிரான்சில் தமிழர் நடத்திய கொடிபிடித்த போராட்டங்களும் ஊர்வலங் களும் இப்போது தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள அரசியல்மயமான ஓட்டத்தில் கொடிபிடித்த உணர்வின் போராட்டங்கள் சிறப்புடன் வெளிப்பட்டதாகப் பல பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

இந்தக் கொடி எங்கள் புலிக்கொடி. ஒற்றுமையின் சிறப்புக்குரிய கொடி. உயிர்ப்பு சக்தியை வழங்கி நிற்கும் கொடி. தமிழரின் கொடிகளில் 60 வருட அரசியல் கட்சிகளின் கொடிகளில் ஏற்படாத பெருமையும் உரிமையும் உயிர்ப்பும் கொண்ட, உன்னதமான சின்னத்தை உடைய கொடி விடுதலைப் புலிகளின் கொடிதான். சர்வதேசம் மேற்கொண்ட புலிகளின் தடை விதிப்பில் புலிக்கொடி ஏற்றுவதற்கும் ஏந்துவதற்கும்கூட தடையுண்டு. இது சர்வதேசம் புலிக்கொடிக்குக் கொடுத்துள்ள அங்கீகாரம் என்றே கொள்ளலாம்.

மக்கள் வரைவிலக்கணத்தோடு இணைந்து சகல நிலைகளிலும் மக்களோடு ஒன்றாகப் போராடுபவர்கள் என்பதை இந்தக் காலகட்டத் திலும் இந்தப் புலத்திலுள்ளோர் சர்வதேசத்திற்கு அறிவித்து அங்கீகரிக்க வலியுறுத்தவில்லை! சர்வதேசத்திடமிருந்து கிடைக்கக்கூடிய அனுதாபம், ஆதரவு, வேறுவிதமான அணுகுதல் ஆகியன கிட்டா மல்போயின. இந்தக் காலகட்டத்தில்தான் புலிக்கொடி சிவப்பு மஞ்சள் கொடிகள் பெரும் தொகையாகத் தோரணங்களாகப் பறந்த ‘பொங்குதமிழ்’ மன்னார் சம்புரில் தொடங்கி சர்வதேசமெங்கும் வியாபித்தது. இந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் கொடி வெடிபோல் பேரினவாத ஆட்சியின் தலையிடியாக விளங்கிற்று. சர்வதேசமெங்கும் கொடி பூர்வீகக் குடியின் பூரிப்பில் ஏந்திய ஊர்வலங் களையும் ஒன்றுகூடல்களையும் ஈர்த்துக் கம்பீரமாகப் பறக்கின்றது. கொடியும் பூர்வீகக்குடியின் வரலாறும் அரசியல் இனமோதல்கள் நிறைந்த நாடுகளின் உதாரணமாக விளங்கும் சக்தியோடு துலங்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## தலைமையின் உயிர்த்தெழுதல்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு இனி! எப்போதும் தமிழர் காணமுடியாத அளவு கண்டுவந்த வலிமைமிக்க போராடும் வீரிய மிக்க மறவர்களைத் தன்வசமிக்க பலத்துடன் நடைமுறையும் நம்பிக்கையும் ஊட்டிய போரியல் சக்தியாகும். உறுதியானதும் கட்டுப்பாடும் மிக்கதான உன்னதமான தலைமை. நீண்டகாலப் போராட்ட வளர்ச்சியில் தெளிவான, நீதியான தீர்க்கதரிசனத்தின் நம்பிக்கை நட்சத்திரம். தனித்துவமானவர்; புரட்சிகரமான முப்பத்தொன்பது ஆண்டுகள் பெரும் புகழ்மிக்க வளர்ச்சியில் வழிநடத்தியவர். வடக்கு, கிழக்கு, வன்னி இராச்சியங்களை நீதி நிதிநிர்வாகப் பரிபாலனங்களோடு நிர்வகித்த ஆட்சியின் தலைவர். தலைமைத்துவத்திலும் தேசப்பிதா எனும் நேசிப்பிலும் வலுப்பெற்று விரிவடைந்து தமிழீழத்தில் வாழ்பவர்; 1970களின் ஆரம்பத்தில் தலைவர் அவர்களால் ஒரு தலைமறைவு கொரில்லா அணியாக ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்; தமிழ் மக்களின் தேசப்பிதா பலமுறை உயிருடன் இருந்து இறந்து உயிர்த்திருக்கிறார்! பதினாறு வயதிலிருந்து இந்த உயிர்த்தல் வரப்பிரசாதம் பலமுறை கிடைத்துள்ள அவதாரமாகும். 1984, அக்டோபர் 5ஆம் தேதி சிங்கள இராணுவம் பிரபாகரனைக் கொன்றுவிட்டதாக ஊடகங்கள் அறிவித்தன! உலகமெங்கும் பரபரப்பு. இது முதலாவது உயிர்தெழுதல்.

ஜூலை 25, 1989 மாத்தையாவிற்கும் பிரபாகரனுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் (இந்து); அவரது உடல் தென்னைமரமாவடியில் அஞ்சலிக்காகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது - இரண்டாவது முறையான உயிர்த்தெழுதல்.

டிசம்பர், 26, 2004 சுனாமியின்போது பிரபாகரனும் பொட்டு அம்மனும் பேரலைகளால் அடித்துச் செல்லப்பட்டு அவர்கள் உடல்கள் கிடைக்கவில்லை - மூன்றாவது உயிர்த்தெழுதல்.

டிசம்பர் 15, 2007 சிங்களப் படை நடத்திய விமானத் தாக்குதலின்போது படுகாயம் அடைந்து உயிர்பிழைப்பது இயலாது என்று சிங்களப் பயங்கரவாதம் அறிவித்தது - நான்காம் முறை உயிர்த்தெழுதல்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் சதியில் பலமுறை உயிர்த்தெழுந்தார்! ஆரம்பகாலத்தில் ஒளிவுமறைவு வாழ்வில் சிங்கள அரசாங்கத்தால் பலமுறை தேடப்பட்டு வந்தபோது பலமுறை இறந்து உயிர்த்தெழுந்தார்!

இந்த இடத்தில் அஞ்சா நெஞ்சன் நெப்போலியன் பர்னபாட்டின் வீரத்தின் முன்னின்றவற்றைப் பிரபாகரனுடன் ஒப்பிட்டுப் பார்க்க நான் துணிந்ததன் காரணம் அந்த மாவீரன் ஆண்ட மண்ணில் நடக்கும் போராட்டம் என்பதாலும், அதற்குள் புகுவது தகவல் தரும் நிஜத்தில் நிர்மலமான உண்மைகள் புதைந்து கிடப்பதாலும், புதைந்து போகாத அதன் பின்னணியோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கும்தான். பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து நெப்போலியன் உதித்தான். கோர்சிகா தீவிலிருந்து வந்த சின்னஞ்சிறு மனிதனிடம் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டது. 'பார்பியா' என்னும் பிரெஞ்சுக் கவிஞர் நெப்போலியனை ஒரு பெண் குதிரைக்கு ஒப்பிட்டுப் பாடியிருக்கிறார்.

பழகாத காட்டு மிருகமாகவே இருக்கிறது. அதன் கம்பீரத் தோற்றமும் சுதந்திரப்போக்கும் நிமிர்ந்த தலையும் பளபளப்பான உடம்பும் கண் களுக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றன. அவ்வழகிய பரி ஒருவருக்கும் அடங்காமல் துள்ளிக்குதித்து அலைந்து திரிகிறது. அது சேணம் கடிவாளம் லகான் முதலியவற்றைச் சற்றேனும் பொறுக்காமல் கால்களைப் பட்பட் என்று தரையில் அடித்துக் கொள்கிறது. அதன் கனைப்பைக் கேட்டு உலகமே கிடுகிடுத்துப்போகிறது. இவ்வளவு கம்பீரம் வாய்ந்த அப்பெண் குதிரை கோர்சிக்கா தீவிலிருந்து வந்த அரச இளைஞன் தன்மீது ஏறிச் சவாரி செய்வதற்குச் சம்மதித்தது. அவன் அதைக் கொண்டு எத்தனையோ ஆச்சரியமான வேலைகளையெல்லாம் செய்தான். அவன் அதை மிகவும் சாதுவாக்கி அதன் முரட்டுத்தனத்தையும் சுதந்திரத்தையும் போக்கடித்து அதிகமாக வேலைவாங்கி களைத்துப் போகுமாறு செய்துவிட்டான். கடைசி யில் அது அவனையும் கீழே தள்ளிவிட்டுத் தானும் கீழே விழுந்துவிட்டது.

மகாபுருஷர்களையும் அசாதாரண புருஷர்களையும் பற்றி கருத்து கூறுவது கடினம். நெப்போலியன் தனக்குரிய முறையில் ஒரு மகாபுருஷன் என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய சக்தியை மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் சக்தியோடு ஒப்பிட்டனர்; அதே வேளை அவன் கர்மவீரன் என்றும் அழைக்கப்படுகின்றான்.

ஆசிரியர் எச்.இ. வெல்ஸும் வேறுபலரும் கூறுவதுபோல் ஐரோப்பா வையும் நாகரிகத்தையும் அழிக்க வந்த வெறும் சாகசம் மட்டும் காட்ட வந்த நாசக்காரனா? இவ்விருமை எல்லோரிடத்திலும் இருக்கிறது. நம்மெல்லோரிடத்திலும் குணம் குற்றம், பெருமை சிறுமை ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன.

www.padippakam.com

நெப்போலியனிடத்தில் இத்தகைய இருமையைக் காண்பதுபோல் தலைவர் பிரபாகரனிடத்திலும் இந்த இயல்பைக் காணலாம். ஆனால் நம்மில் பெரும்பாலரிடத்தில் காண்பதற்கில்லாத அபாரசக்தி படைத்தவர்களாக இருந்தனர். அஞ்சா நெஞ்சர்கள்; தன்னம்பிக்கையும் கற்பனா சக்தியும் வாய்ந்தவர்கள்; பேராற்றல் மிக்கவர்கள்; பேராசை படைத்தவர்கள். நெப்போலியன் நாடுகளை வென்று அங்குள்ள வளங்களைக் கொள்ளையடித்து வந்து பிரெஞ்சு தேசத்தை அழகுபடுத்தினான்.

பிரபாகரன் தன்னாட்சியும் தன்மக்களின் வாழ்வும் சிறப்புற அமைய வேண்டும் என்ற பேராசையுடன் போராடிய பேராற்றல் மிக்க தளகர்த்தன்! பிரபாகரனுக்கு இல்லாத ஆசை சுயதேவையாசை, தன்னல ஆசை. ஒருமுறை இந்தியாவின் தலையீடு பெரும் ஆசைகளையெல்லாம் முடக்கிவிடப் பார்த்தது. 1987, ஜூலை 23ஆம் நாள் யாழ்ப்பாணம் சூதுமலை அம்மன் கோவில் வளாகத்தில் தரையிறங்கிய இந்திய விமானப்படையின் இரு உலங்குவானூர்திகள் பிரபாகரன், யோகரெத்தினம், திலீபன் ஆகியோர் அடங்கிய விடுதலைப் புலிகளை ஏற்றிச் சென்று மீனம்பாக்கம் தரையிறங்கி ஆண்டன் பாலசிங்கத்தையும் ஏற்றிக்கொண்டு புதுடில்லி சென்றது. ராஜீவ் காந்தியின் தீர்வுத் திட்டம் பற்றிய நிலையில் தலைவர் பலவகையான சோதனைகளுக்கும் வற்புறுத்தல்களுக்கும் ஆசைகளுக்கும் உட்படுத்தப்பட்டார்.

இந்த நேரத்தில தீக்ஷித் இந்திய இராணுவத்தின் முன்பாக உங்களது போராளிகள் வெறும் 'தூசு' என்றார். பின்பு தனது சுங்கானை எடுத்து பிரபாகரனுக்குக் காண்பித்தவாறு 'இந்தச் சுங்கானை நான் பற்ற வைத்துப் புகைத்து முடிப்பதற்குள் உங்களது போராளிகளை இந்திய இராணுவம் துவம்சம் செய்துவிடும்' என்று குமுறினார். பிரபாகரன் ஆத்திரப்படவில்லை! ஒரு ஏளனச் சிரிப்பை உதிர்த்தார்.

'உங்களால் எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்து பாருங்கள். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை' என்று உறுதியாகச் சொன்னார். கொதிப் படைந்த தீக்ஷித் ஆத்திரத்தில் அவரது உதடுகள் நடுங்கின. 'மிஸ்டர் பிரபாகரன் இத்துடன் நான்காவது தடவையாக நீங்கள் இந்தியாவை ஏமாற்றியுள்ளீர்கள்' என்றார்.

'அப்படியானால் நான்கு தடவைகள் இந்தியாவிடமிருந்து எனது மக்களைக் காப்பாற்றி இருக்கிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்' என்றார் பிரபாகரன். ராஜீவ் காந்தியின் சந்திப்பில் எத்தனை பதவி ஆசைகள்! பண ஆசைகள்! பிரபாகரன்-ராஜீவ் ஒப்பந்தம் என்று பிரமாதமாக வடிவம் கொடுத்துத்தான் பார்த்தார்கள். எதற்கும் ஆசைப்படாது தமிழீழம் ஒன்றே



படிப்பகம்

முடிந்த முடிவென வாழ்ந்த தேசப்பிதா. இதுதான் அவரது வழியும் வாழ்வும். நெப்போலியனின் நோக்கிலிருந்த காந்த சக்தி பிரபாகரனிடமும் இருந்தது. நெப்போலியன் ஏழைகளையும் கஷ்டப் படுவோரையும் நேசித்தவன். தங்களுடைய நிலையில் திருப்திகொள்ளச் செய்யும் ஒரு சாதனமாகவே மதங்களைக் கருதினான்.

'சாக்கிரட்டீசையும் பிளேட்டோவையும் கண்டிக்கும் ஒரு மதத்தை நான் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?' என்று அவன் ஒரு சமயம் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிக் கூறினான். பிரபாகரனுக்கு மதமும் பிரியமும் தமிழ் மக்களின் பிரியமாகவே இருந்து வந்துள்ளன. தமிழ் மக்களின் சமூக முன்னேற்றத்தைத் தாங்கி நிற்கும் தூணாக மதங்கள் இருக்க வேண்டும் என்பதற்கு ஊக்கமளித்தவர். நெப்போலியன் ஒருமுறை,'என்னுடைய வாளை நான் உறையிலிருந்து எடுப்பது வெகு அபூர்வம். என்னுடைய கண்களாலேயே நான் போர்களில் வெற்றி பெற்றிருக்கிறேன்; ஆயுதங் களால் அல்ல...' என்றும் கூறியுள்ளான். பிற்காலத்தில் நாடுகடத்தப்பட்ட போது, பலாத்காரம் எதற்கும் பரிகாரம் ஆகாது. மனிதனுடைய ஆன்மபலம் அவனுடைய ஆயுதபலத்தைவிட மேலானது என்றும் எல்லாவற்றையும்விட பலாத்காரத்தினால் எதையும் சாதிக்க முடியாது; உலகில் இரண்டே இரண்டு சக்திகள்தான் உள்ளன. ஒன்று ஆன்ம பலத்திலிருந்து பிறப்பது, மற்றொன்று ஆயுதபலத்திலிருந்து தோன்றுவது. தன்னுடைய வாழ்க்கையின் தொடக்கத் திலேயே அவன் ஆயுத வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஆயுத பலத்தால் வென்றான். ஆயுத பலத்தால் அவன் வீழ்ந்தான்.

'யுத்தம் என்பது மனித இயற்கைக்குப் பொருந்தாத ஒரு விபரீத விளைவாகும். பீரங்கிகளின் துணையின்றியும் துப்பாக்கிச் சனியன்களின் உதவியின்றியும் வெற்றி பெறுங்காலம் ஒருநாள் வரும்'.

இந்தப் போர் பிரபாகரனை நிம்மதியாகத் தலைவைத்து உறங்கவிட வில்லை. நெப்போலியன் வாழ்வின் நிலை நின்ற வாழ்வுதான் வாழ்ந்தார். அவர் போரில் பல்லாயிரக்கணக்கான மாவீரர்களையும் தான் நேசித்த உன்னதமான மக்களையும் பலிகொடுத்தார். தன் மக்களின் துன்பங்களைக் கண்டு பொறுக்கமுடியாத துன்பத்தில் துடித்தவர். மக்களுக்காக மறைவு வாழ்விலும் எளிய வாழ்வையே கைக்கொண்டிருந்தவர். எதிலாவது அவர் அளவுக்குமீறி இறங்கியிருந்தால் அது மக்களின் நல்வாழ்விற்கான உழைப்பில்தான். நெப்போலியன் தன் மகனுக்கு அறிவுரை கூறியிருக் கிறான். கடைசியாக எழுதிவைத்த மரண சாசனத்தில் தன்னுடைய மகனை 'ரோமாபுரி மன்னன்' என்று அழைத்தான். அவன் மகனுடைய செய்தியைக் கூட அவனுக்கு எட்டவிடாமல் செய்தனர். அவனைக் காவலில் வைத்த கொடியோர் நெப்போலியனுக்குத் தன் மகன் ஒருநாள் மண்ணாளும் மன்னன் ஆவான் என்னும் நம்பிக்கை இருந்தது.

www.padippakam.com

'நான் ஐரோப்பாவை ஆயுதபலத்தால் அடக்கி ஆளவேண்டியவனாயிருந்தேன். ஆனால் தற்காலத்தில் அறிவைத் துணை கொண்டு ஆள்வதுதான் சாலச் சிறந்ததாகும்'என்று மகனுக்கு உபதேசம் செய்தான். ஆனால் மகனுடைய தலையெழுத்து வேறுவகையில் மண்ணாள்வதாக இருந்தது. தந்தை இறந்து பதினொரு வருடங்களுக்குள் மகனும் இளம்வயதில் வியன்னாவில் இறந்துவிட்டான். 1812 ரஷியப் போர் நெப்போலியனைக் கலங்கடித்தது. அவனது படைபலத்தை உறிஞ்சிவிட்டது. நெப்போலியனை வயது முதிரப் பண்ணிவிட்டது. நெப்போலியனைக் கவலை அரித்துத் தின்றது. போரில் அவனுக்கு அலுப்புத் தோன்றியது. ஆனால் அவனுடைய விரோதி களும் துரோகிகளும் நிம்மதியாக இருக்க விடவில்லை! மகாவீரனாகவே படையை நடத்திவந்தான். அவனைப் பிடிக்க பகைவர் விரித்த வலை அவனைச் சுற்றிச் சுருங்கிக் கொண்டுவந்தது.

'டாலிராண்டின்' சதிகள் அதிகரித்தன. நெப்போலியனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சில தளபதிகள்கூட அவனுக்குத் துரோகம் செய்தனர். வெறுப்பும் சோர்வும் ஏற்பட 1914 ஏப்ரலில் முடி துறந்தான். நெப்போலிய னுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடிப் பாதகம் தலைவர் பிரபாகரனுக்கும் ஏற்பட்டதை நாம் இன்று கண்கூடாகக் கண்டோம்! போரினால் வரும் புகழைத் துணையாகக் கொண்ட நெப்போலியனின் வாழ்க்கையானது தவிர்க்க முடியாதபடி சிறிது சிறிதாகத் தனது சோக முடிவை நெருங்குகிறது.

அவனுடைய தளபதிகள் சிலர் துரோகிகளாக மாறி அவனுக்கு எதிராகச் சூழ்ச்சிகள் புரிந்தனர். டாலிராண்ட் என்பவன் ரஷியருடனும் புஷா என்பவன் ஆங்கிலேயருடனும் சேர்ந்து சூழ்ச்சி செய்தார்கள். அந்தத் துரோகிகளை நெப்போலியன் கையும் மெய்யுமாகப் பிடித்து விடுகிறான். பின்பு மன்னித்து பிறகு பழையபடி மந்திரியாக இருக்குமாறு அனுமதிக் கிறான் இன்னுமொருவன் 'பேர்னாட்' என்னும் துரோகி கொடிய பகைவனாகிறான். இனிமேல் போரிடுவதில் பயனில்லை என்று நெப்போலியன் கண்டான்.

'பிரெஞ்சுத் துறைமுகத்திலிருந்த ஒரு பிரித்தானியக் கப்பலுக்குச் சென்று தான் இங்கிலாந்தில் அமைதியாக வாழ விரும்புவதாகக் கூறி அக்கப்பலின் கேப்டனிடம் தன்னை ஒப்புக்கொடுத்தான். இரண்டாவது முறையாக முடிதுறந்தான்'.

இங்குப் பாருங்கள். அத்தனையும் உண்மையாக நடந்ததைக் காணும் நமக்கு நெப்போலியன் தன்னை ஒப்புக்கொடுத்த ஒன்று பிரபாகரனைப் பொறுத்தவரை நடக்கவில்லை. காரணம் பிரபாகரன் முன்கூட்டியே பலரிடம் சொல்லி வைத்துள்ளார், 'என் இறந்த சடலம்கூட எதிரியின் கையில் கிடைக்காதவாறு என்னை எரித்துவிட வேண்டும்' என்று. இதையே



படிப்பகம்

www.padippakam.com

ஹிட்லரும் சொல்லி வைத்தான். தனது இறந்த உடல்கூட சோவியத் படைகளிடம் கிடைக்கக் கூடாது என்பது ஹிட்லரின் விருப்பம். சுரங்க அறைக்கு வெளியே ஒரு குழி தோண்டப்பட்டு ஹிட்லரின் உடலும் அவரது மனைவியின் உடலும் கிடத்தப்பட்டு பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப் பட்டன. நெப்போலியனின் முடிவு வேறுவிதமாக அமைந்தது. முன்பு எல்பாவிலிருந்து தப்பித்து வந்ததால்! இப்போது அவனை வெகுதூரமான இடத்தில் தகுந்த காவலுடன் வைக்கும்படி ஐரோப்பா தீர்மானித்தது.

அட்லாண்டிச் சமுத்திரத்தில் வெகு தொலைவில் உள்ள கண்காணாதத் தீவு 'செயின்ட் கொலினா', நெப்போலியன் ஐரோப்பாவின் கைதி. இத்தீவைப் பற்றி ரஷிய கமிஷனர் கவுண்ட்பால் மைன் என்பவர் இப்படிக் கூறுகின்றார்.

'உலகத்தில் ஒதுக்குப்புறமானதும், துக்ககரமானதும், நெருங்க முடியாததும், தாக்க அரிதானதும், காப்பெளிதானதும், மனிதன் வாழத் தகுதியற்றதுமான மர்மமான இடம்' என்று கூறினான். செயின்ட் கொலினாவில் வாழ்ந்த காலத்தில் தன்னுடைய மகன், தாய் பற்றிய செய்தி கூட எட்டுமாறு பிரித்தானியர் விடவில்லை. தாயார் பாவம் தள்ளாத வயதில் மகனுடன் செயின்ட் கொலினாவில் இருக்க விரும்பினாள். அதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் அனுமதி அளிக்கவில்லை. ஐரோப்பாவில் அவன் பெயரைக் கேட்டாலே அவ்வளவு அச்சம் தோன்றியது. அந்த அஞ்சாநெஞ்சன் நடத்தப்பட்ட விதத்தை அறிந்ததாலே பிரபாகரன் முன்னமே கூறிவைத்தார், என் பிணம்கூட எதிரிகள் கையில் கிடைக்க வாய்ப்பிருக்கக்கூடாதென்று. இப்படியான வரலாற்றுப் படிமத்தோடு பிரபாகரன் வாழ்ந்தவர். பின்னாளில் தளபதிகள் பலரிடம் நம்பிக்கை அற்றுப்போனது!

நெப்போலியன் ஐந்தரை ஆண்டுகள் செயின்ட் கொலினாவில் நடை பிணமாகக் காலத்தைக் கடத்தினான். மகாவீரனும் மகாசக்தியும் கொண்டவன் கூண்டில் அடைக்கப்பட்ட அவமானத்திற்குள்ளான வாழ்வு வாழ்ந்து 1821 மே மாதத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தான்.

இந்த மே மாதம் எப்படிப் பொருந்துகிறது என்பதைத் தமிழனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை! இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற போர்வையில் தமிழீழத்திற்குள் புகுந்து அட்டூழிய பயங்கரவாதி களாக மாறியபோது பிரபாகரன் ஒரு கையில் பெட்ரோல் டின்னுடனும் மறுகையில் தீப்பெட்டியுடனும் திரிந்தவர். பயங்கரவாதிகள் கையில் சிக்க நேர்ந்தால் தன்னைத்தானே தீ மூட்டிக்கொள்வதற்காக. அத்தகைய நெஞ்சுறுதிமிக்க மக்கள் நலன் கருதிய தலைவனின்உள்ளிருந்தவை இன்னும் எத்தனையோ!



படிப்பகம்

www.padippakam.com

ஹிட்லர் உள்ளிருந்து குழிபறித்த பாதகங்களை அறிந்திருந்தவர். நெப்போலியன் பிற்காலத்தில் வரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக இருந்ததுபோல பிரபாகரன் தலைமுறையின் கைகளில் ஒப்படைக்க வேண்டியதையும் வேண்டுவதையும் சொல்லி ஒப்படைத்துள்ளார். 'முடிந்ததை நினைப்பவன் தமிழன், நினைத்ததை முடிப்பவன் தலைவன்'.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கில் புலிகளின் நிர்வாகம்

காலச் சூழலுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக்கொண்ட தமிழ் மக்கள் துன்பத்திலும் அனர்த்தத்திலும் துரோகிகளின் அடாவடித்தனத்தின் மத்தியிலும் தங்கள் வாழ்க்கையை ஓட்டினர். மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசம் வரலாறு இல்லாத பாலை நிலத்துக்கு ஒப்பாகும். இதனால்தான் தமிழன் நான்கு நிலங்களை வகுத்தான். வளமிக்க தன்நிலத்தை மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை என்றும், வறட்சி நிறைந்த வனாந்திரமான பாலையை அவன் சேர்த்துக் கொள்ளாமலும் செழிப்பில் களிப்புற்றிருந் தவன். யாழ்ப்பாணத்து ஆட்சியதிகாரம் மிகப்பெரும் சிறப்புப் பெற்றது. நிர்வாகக் கட்டமைப்பு மேற்கத்திய நாட்டவரின் கவனத்தில் உயர்வாகக் கவனிக்கப்பட்டது. வடக்குக் கிழக்கில் செறிந்து வாழ்கின்ற தமிழன் இனம், மதம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் ஒத்தவர். பொருளாதார நிலை, பாரம்பரியச் சட்டங்கள், வழமை என்பவற்றில் நடைமுறையில் சிற்சில வேறுபாடுகள் நிலவினாலும் இனம் என்னும் இணைவில் ஒருதாயின் பிள்ளைகளே!

புலிகள் தங்களது இராணுவப் பிரிவுகளை விரிவாக்கியதோடு அரசியல், நிதி, நீதி நிர்வாகக் கட்டமைப்புகள், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுடன் தனி இராச்சிய பரிபாலனங்களோடு ஆட்சி செய்தவர்கள். பல துறைசார்ந்த இலாக்காக்கள் பிரபாகரனின் மேற்பார்வையில் கண்காணிப்புடன் செயற்பட்டு வந்தன. இந்த 'நிழல்' நிர்வாகத்தில் காசு மட்டும்தான் பரிமாறுதலில் இல்லாதிருந்தது. அதையும் அவர்கள் உருவாக்கியிருந் தார்கள். செயல்பாட்டில் விடவில்லை. நிர்வாகத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்கள் இயங்கினர்; இயக்கினர். சிறப்பான வரி வசூலிக்கும் முறைமையும் மக்களின் ஆதரவுடன் இடம்பெற்றிருந்தது. வர்த்தகர்களிடமும் நடுத்தர வியாபாரிகளிடமும் வரி வசூலித்தனர். பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ள ஆய்வு நிலையங்களை நிறுவினர். காவல்துறை சட்ட ஒழுங்குகளுடன் அரசுக்குரிய கட்டுமானமும் விடுதலைப்புலிகளால் நிறுவிக் காட்டப்பட்டது. இதே பரிபாலனத்தைக் கிழக்கிலும் நிறுவவேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

இத்தருணத்தில் பெருமாள் குழுவினரும் சிங்களப் பேரினவாத அரசின் பிரேமதாசாவும் ஆயுதப் பகமைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர். அங்குச் சில சிக்கல்கள் இருந்தன. வடக்கில் இருந்த தமிழர் ஆட்சிபற்றி 'ராஜவலிய' என்னும் சிங்களச் சரித்திர நூல் கூறுகிறது: 'இலங்கைத் தமிழர்களின் அரசன் தனது ஆட்சியை வடக்கில் அமைத்து அங்கிருந்து முழு இலங்கைக்கும் கப்பம் வாங்கிவந்தான். திறமையான நிர்வாகம் நிலவி தமிழர்களின் சிறப்பான வாழ்க்கையின் உறைவிடமாக அது திகழ்ந்தது'.

யாழ்ப்பாணத்தில் சட்ட ஒழுங்குகளின்போது 'பாஸ்' முறையிலும் பொழுதுபோக்கு அம்சத்திலும் மக்களுக்கும் புலிகளுக்கும் சிக்கல் முரண் பாடுகள் காணப்பட்டன. பெருந்தொகையான இளைஞர்கள் இக்கால கட்டத்தில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். இந்தக் கடவுக் கட்டுப்பாட்டு முறை பெரும் பிரச்சினையாக இருந்தது. இதனால் பெற்றோர்களுக்கும் புலிகளுக்கும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கும் பெரும் விரிசல் ஏற்பட்டது. இந்தப் பெரும்தொகையான வெளியேற்றம் சிங்கள அரசுக்கு மகிழ்வாக இருந்தது. இயக்கத்தைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. இங்கும் அரசியல் நிலைப்பாடு தடுமாற்றமடைகிறது. இந்த நிர்ப்பந்தத்தை நீக்கும் நிலையைப் புலத்தில் நம்பெருக்கத்தின் பேருண்மையான பகுப்பாய்வில் கொண்டு செலுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணக் கடவுக் கட்டுப்பாடு கடைப்பிடித்த இறுக்கத்தைச் சிந்திக்கும் போது இன்றைய ஆள்பலம் அங்கு வியப்பைத் தந்தது. வியப்பின் மீட்சி இந்தப் புலத்துப் போராடுதல் மூலமாக நாமிங்கு பெருந்தொகையாக வந்ததன் வெளிப்பாடு பணம் பாதுகாப்பு என்னும் காரணிகளுக்குள் அடங்காமல், அடங்காப்பற்றுக் கொண்டவர்களாகச் செயல்பட வேண்டும்! புலிகள் போராட்டத்தின் நியாயப்பாட்டை விளக்கும் நிலையிலிருந்து விமர்சனங்கள் பலரிடமிருந்து பலவிதமாகப் பச்சோந்தித்தனமாகவும் வெளிவேடமாகவும் துணிவாகவும் பதுங்கியும் குவிகின்றன. காரணம் பற்பல உண்டு.

'மாசு கற்பிப்பவர்கள்' நோக்கில் தமிழரின் வரலாறு பசுமையாக இல்லாதிருக்கும். எதிர்கால வாழ்வியலும் தலைமுறைச் சிந்தனையும் சிறப்புள்ளதாக இருக்காது. தப்பிவந்த வாழ்வின் கவர்ச்சியும் ஆடம்பரத்தின் ஆசையும் ஆவலும் அதிமேதாவித்தனமான வாய்ச்சாடலும்தான் மிகு தியாக மிஞ்சி நிற்கும். இவர்கள் என்றும் இன்றும் புலத்திலும் புளுகர்களாகவும் புல்லர்களாகவும் மாறி நிற்பர். இந்தமாதிரியான பலரை நான் அதிகம் கவனத்தில் கொள்வதுண்டு. 'இவர்கள் லாச்சப்பல் இடத்தில் லேபில் ஒட்டப்பட்டும் காண்கிறோம்; ஒட்டப்படாத வேசத்திலும் காண்கிறோம்! வியாபார நிலையத்தில் இந்தப் பேர்வழிகள் அதிகம் காணப்படுகிறார்கள். இவர்கள் குறித்து இளையோர்கள் உன்னிப்பாகவும்



படிப்பகம்

www.padippakam.com

கவனத்துடனும் நடக்க வேண்டும். புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் வன்னியில் இவற்றில் கவனமேற்றது. புலத்திலும் அதீத சித்தத்துடன் இயங்கியது. இல்லாவிட்டால் நடைமுறைச் சிக்கல் சங்கடத்தையும் சந்ததியையும் பாதிக்கும்!

'இனக்கொலை என்பது மனித விரோத உணர்வின் மிகவும் கொடூர மான ஒரு வெளிப்பாடு. அது படு பாதகமான ஒரு பயங்கரவாதச் செயல். நீங்கள் கவனிக்க வேண்டும். புலிகள் சிங்கள இனத்தைப் பகைத்தவர் களில்லை. மேலும் சிங்கள மக்களுக்கு நல்லதையே செய்தவர்கள். அவர் களுடைய இராணுவக் கைதிகள் பரிமாற்றத்திலும் விடுதலை அளிப்பதிலும் குழந்தைகளைக் காத்தளித்ததிலும் இடங்களின் வளத்தில் கைவைத்தவர் களல்ல - முள்ளிவாய்க்கால் நெருக்குதலிலும் சிங்கள மக்கள் மீது, அந்தத் தவறான எண்ணத்தைக் கைக்கொள்ளவில்லை என்பதைக் கவனித்திருக் கலாம்! இங்கும் அவர்கள் சட்டம் ஒழுங்கில் நிர்வாகத் திறமைகளை நிர்மாணித்துள்ளனர். இந்த அடிப்படையோடு வன்னிப் பெரு நிலப் பரப்பின் தலைவர் பிரபாகரனின் ஆட்சியின் மாட்சியைப் பார்ப்போம்.

தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்கு ஒரு சொட்டுத் தண்ணீருக்கு முன்னால் ஓராயிரம் கிலோ வைரங்களைக் கொட்டினாலும் அதற்கு எந்த மதிப்பும் இருக்காது. தமிழரின் தாகம் தமிழீழத் தாகம். ஒப்பற்ற இவ்வாசகம் இன்று உலகெங்கும் பேரெழுச்சிக் கோஷமாக முழங்கிக் கொண்டிருக்கிறது. திசைகள் எங்கும் அதிர்கின்றது. இவ்வேளையில் காரியம் கண்தூங்காது தமிழர் நீதியாய் நின்று நிதியைக் குவிக்கின்றது. தமிழர் தாயகத்தின் வன்னிமண்ணின் வரலாறு தொன்மை வாய்ந்ததும் வீரம் விளைந்தது மாகும். கடலாடிகளின் வருகையால் தமிழர் தாயகம் பல வழிகளாலும் சிறப்புகளை இழந்து சீர்கெட்டழிந்ததாகவே விளங்கியது.

போர்த்துகீசியர் (1505-1658), டச்சுக்காரன் (1658-1796), பிரித்தானியர் (1796-1850) ஆகியோரால் பாதிக்கப்பட்ட மக்களாக நின்றாலும் தமிழர்கள் சமயத்தையும் பண்பாட்டையும் சமூகத்தையும் பொருளியலையும் அரசியலையும் பலவகையாலும் நெறிப்படுத்தி நின்றனர். ஐரோப்பியரின் ஆட்சி நிர்வாகத்தில் தமிழ்த் தலைகளே மேலோங்கிய அறிவும் ஆலோசனைகளும் வழங்குபவர்களாக விளங்கினர். பின்னர் சிங்களரின் நம்பிக்கைத் துரோகமான, கீழ்த்தரமான அரசியல் அறிவில் நிர்வாகக் கடமைகளில் தமிழனின் மேல்தரமான விவேகமும் அறிவும் மேலோங்கி நின்றதை இந்த உலகம் அறியும். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் அறிந்தும் அறியாதவர்களைப் போல் அமைதிகாத்து நாடகம் ஆடுகின்றனர். வன்னியில் சிறிலங்காப் பயங்கரவாதம் நடத்தும் கொடூரமான சண்டித் தனத்தைக் கண்டும் காணாதவர்களாக வாய்மூடி மௌனியாகிப்போனது மனிதாபிமானத்தைக் குற்றவியல் கூண்டில் நிறுத்தி மரணதண்டனைத்



படிப்பகம்

www.padippakam.com

தீர்ப்பிட்டமைக்குச் சமமாகிவிட்டது. இந்த வன்னி என்னும் சொல்லுக்கும் இராச்சிய பரிபாலனத்திற்கும் எப்போதும் அந்நியர் கதிகலங்கிப் பயமுற்றே இருந்தனர். இலங்கை இராச்சியங்களுக்குக் கீழும் வன்னி தனித்துவம் பேசப்பட்ட சிறப்பான வலிமை பெற்ற சொல். 'இச்சொல் இன்று தமிழீழத் தலைவன் பிரபாகரனால் அதி உன்னதமான நிலைக்கு மேலும் உயர்ந்துள்ளது'.

வன்னி இராச்சிய அரசாட்சியும் போர்ப்படை உருவாக்கலும் நகர்த்தலும் மாறுதல்களும் தியாகங்களும் சிங்களப் பேரினவாதத்தையும் வல்லாதிக்க இந்தியாவையும் பயபீதியில் உலுக்கி, தீர்க்கமான உண்மை வெளிப் பட்டதில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமின்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

அதுவானது தொப்புள்கொடி உறவுகளான தாயகத் தமிழகத்தின் தலை முறை எழுச்சியிலும், வீரியமான அணுகுதலிலும் தென்படப் போவதைக் குறித்த பயத்தின் நடுக்கத்தில் இந்தியாவின் கபட நாடக கவட்டு விரிப்பிற்குள் விழுந்து- இல்லை வீழ்த்தி -சிறிலங்காவைப் பயங்கரவாதம் புரியத் தூண்டுகிறது! இதில் ஆயுதங்களும் கூலிப்படையும் குவிக்கப்பட்டு வன்னிமண் இரத்தவெள்ளத்தில் மிதக்கிறதைப் பார்த்து கொள்ளிவாய்ப் பேயாய்ச் சிரிக்கிறது. இந்தப் பயங்கரவாதத்தின் விளைவு தலைமுறைக்குச் சவாலாகவே தமிழகத்திற்கு அமையும்.

இதன் பின்னணி மிகவும் ஆழமான புலனாய்வுகளுக்குள் புதையலாம். இந்த அசிங்கமான ஆதாரமற்ற அர்த்தமற்ற இழிவான யோசனையே வல்லாதிக்க இந்தியாவின் தூண்டுகோலில் சிறிலங்காவிற்கான பயங்கர வாதக் கட்டவிழ்ப்பு.

'ஜனநாயகம் என்றால் நான் உன்னைப் போல் நன்றாக இருக்கிறேன் என்பதல்ல! நீ என்னைப் போல் நன்றாக இருக்க வேண்டும்' என்பதே யாகும். உலகின் முதல்தரமான ஜனநாயக நாடு இந்தியா இதற்கு விதி விலக்காக நிற்கிறது. தமிழரின் நிலையில் வலிமைமிக்க விடுதலைக்காகப் பொறுப்பு மிக்க போராட்டத்தை நடத்தியத் தமிழனை அழிப்பதில் சிங்களமும் இந்தியாவும் கங்கணம் கட்டி நிற்பதிலிருந்து நான் மேல்கூறிய விடயம் வெளிச்சம் காட்டுவது புரியும்! ஜனநாயகமும் சுதந்திரமும் இந்தியாவிடம் இல்லாது போய்விட்டன. இதன் அர்த்தம் ஜனநாயகம் இல்லை என்பதாகப் பொருள்படும். இந்த நேரத்தில் மு.திருநாவுக்கரசு 'தமிழர் விடுதலைப் போராட்டமும் இந்தியாவும்' என்னும் நூலில் தெரிவித்திருக்கும் சிறுபத்தியைத் தருகிறேன்.

'இந்தியா எமக்கு உதவி செய்யலாமே தவிர எமக்குத் தலைமை தாங்க முடியாது. எமது எதிர்காலத்தை இந்தியா நிர்ணயிக்கக் கூடாது. நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

தான் நிர்ணயிக்க வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பது எங்கள் தலைவிதியை நாங்கள் நிர்ணயிப்பது என்பதுதான். எங்கள் தலைவிதியை இந்தியா நிர்ணயிப்பது என்பதல்ல! சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் நாம் எமது சுயநிர்ணய உரிமையை இந்தியாவிடம் தாரைவார்த்துக் கொடுக்க முடியாது'என்கிறார். இதனடிப்படைப் பொருள் இந்தியாவின் தமிழீழ அழிப்பாகவும் சிறிலங்காவின் பயங்கரவாத வெளிப்பாடாகவும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்பதுதான். இன்னும் ஒரு குண்டை யும் பார்க்கலாம். தென்னாசியச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் புரட்சிகரமானது. தென்னாசிய மக்களின் விடிவுக்கு வழிகாட்டக் கூடியது. தென்னாசியாவின் முன்னுதாரணமிக்க ஓர் அரசாகத் தமிழீழம் அமைவதன் மூலம் தென்னாசியாவில் சோஷலிசத்திற்கான வளர்ச்சி ஏற்பட வாய்ப்பாக அமையும். தென்னாசியாவுக்கே ஒளி விளக்காய்த் திகழக்கூடிய வாய்ப்பு நமக்குண்டு.

நான் இதில் குறிப்பிடுவது இந்தப் பயம் தமிழகத்தையும் விழிப்பிற் குள்ளாக்குவதோடு தமிழன் என்னும் அணுகுதல் அடாவடித்தனமான நோக்கிலும் எம் தலைவன் பிரபாகரன் எனும் ஆளுமைச் சக்தியின் நடுக்கத்திலும் உருவான கொடூரமான நெருப்பு விதைப்பே வன்னியில் சிறிலங்காவின் பயங்கரவாதத் தாண்டவம்! வன்னி இராச்சியப் பிரபாகரனின் ஆளுமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கொண்டும் நடைபெறுகிறது. வன்னி என்னும் பெயர் சிறப்பாகக் குறிப்பாகப் பெருநிலப்பரப்பு ஆட்சி செலுத்திய வரலாற்றாலும் சிங்களப் பேரினவாதிகளுக்குப் பெருத்த அச்சுறுத்தலை நாளும் பொழுதும் உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தியாவை வலுவான போரியல் தேடுதலுக்குள் தள்ளியது வன்னிமண். கி.பி வலிமைபெற்று விளங்கிய காலகட்டத்தில் மேலாண்மையாகத் துலங்கியதாலும் பிரமிப்பை உண்டு பண்ணியதாலும் அதைத் தாக்கச் சண்டித்தனப் பயங்கரவாதம் இந்தியாவின் ஜனநாயகச் சாகடிப்பெனக் கொள்ளலாம்! பாயும்புலி பண்டாரவன்னியன் ஆங்கி லேயரின் பீரங்கி துப்பாக்கிப் படைகளோடு மூங்கில் மரப்போர் தொடுத்ததோடு வாள் ஈட்டியுடன் களத்தில் வையம் வியக்கப் போர்புரிந்த அடலேறு. அன்றும் எதிரியின் படைத் தொகைகண்டு அஞ்சாமல் எஞ்சிய வீரருடன் காடு களமாக்கிய வேங்கை! கருவிப்போர் கண்ட வன்னியன் தங்கைகள் இருவரும் பெண் போராளிகள், வன்னிமண்ணில் பகைவர் கால் ஊன்றாதவாறு காவல் புரிந்த எரிமலைகள். இவர்கள் காவல் காத்த வன்னிப் பிரதேசத்தில் வான் ஓங்கி வளர்ந்த தேக்கும் சவுண்டலையும் மூங்கிலும் அடர்ந்த காடு. இத்தோப்பிற்குள் செங்கதிரவன் ஒளியைத் தடுத்து நிறுத்தி நிழல் அந்த மண்ணில் மகிழ்ச்சியில் ஆழ்த்தி நிற்பதைக் கண்டால் எவன்தான் அந்த மண்ணை ஆக்கிரமிக்கத் துணியாமல் இருப்பான்! வயல்கள் எங்கும் விதவிதமான கதிர்கள், குளங்கள் எங்கும்



படிப்பகம்

www.padippakam.com

மலர்களின் அழகாம். தாமரை தளிர்காட்டும் குளிர்ப்புனலாடும் சாகாக் கடல்வளம். முல்லைநகர் மேவி விளையாடும் இந்த மண்ணை எதிரி எப்படியெல்லாம் அழித்து எரித்துச் சுடுகாடாக்கிப் பிணத்தைக் குவித்துப் பயங்கரவாதத்தை நடத்துகிறான்!

மண்ணையும் மக்களின் மொத்த வடிவத்தையுமே சிதைத்துவிட்டான். சரித்திரச் சாதனை புரிந்த மண்ணில் பிரபாகரனின் போர் முறையானது சிறிலங்காவிற்கும் இந்தியாவுக்கும் அச்சத்தையும் பயத்தையும் கொடுத்தது. அந்த அதிர்வின் விளைவே பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருப் பதற்கான மூலகாரணம். அன்று ஆங்கிலேயனுக்குச் சிங்களக் கூலிப் படைகள் இணைந்தது. இன்று சிங்களவனுக்கு இந்தியக் கூலிப்படைகள் இணைந்துள்ளது. மறத்தமிழனின் எரிமலை இதயம் அன்றும் அந்நியனுக்கு அடிபணியவில்லை! இன்றைய பயங்கரவாதப் போரிலும் புலிமறவன் அடிபணியப் போவதில்லை! தமிழனின் வீரமும், மானமும், புகழும் பிரபாகரன் ஒருவனால் உலகமெங்கும் நிமிர்த்தப்பட்டன. தமிழீழத்தின் தனித்துவத்தைத் தன்னோடு வைத்து வளர்த்துப் பல்லாயிரம் மாவீரர்களின், மக்களின் நம்பிக்கைத் தலைவன். தன் உடலைவிட்டுக் காணத்துடித்த இலட்சியக் கனவு போவதை விரும்பமாட்டான். புத்திசாலி முன்னேறும் புதிய வழிகளை உண்டுபண்ணிக் கொள்வான். இதுவே என் கவிதையும்.

நீலவானத்துக்கு முடிவு இல்லை, அலைகடல் அமைதியும் இல்லை. தமிழனாக நான் வாழும் காலம்வரை நான் புலிவீரர்களைப் பற்றி எழுதும் கவிதைக்கு அழிவுமில்லை. விடுதலைப் புலிகளைப் பாடாமல் என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் விடுதலைப் பற்றாகவே என் உள்ளத்திலிருந்து உருவாக்கம் பெறும். இதுவே நான் வாழ்ந்த வாழ்வுக்கு வழங்கும் தமிழன் பிறப்பாகும். எங்குதான் போரில்லை? எதிர்த்துப் போராடும் வீரர்கள் இல்லை? அங்கெல்லாம் இந்த உலகம் எதைக் காண்கிறது? மனிதப் பேரழிவைத்தான்! அதற்குத்தான் வல்லாதிக்கங்களும் வாரிவழங்குகிறது ஆயுதங்களை. எந்த ஆயுதத்தால் வன்னிமக்களைக் கொன்று குவிக்கிறானோ அந்த ஆயுதத்தால் அவனும் அழிவான். தோல்விகளைச் சந்தித்துப் பழகினாலன்றி வெற்றி என்பது கிட்டாது; தடைகளைத் தாண்டிப் பழகினாலன்றி இலட்சியங்களைச் சென்றடைய முடியாது. ஆடுகின்ற செம்பருந்தின் நிழலுக்கஞ்சி ஒதுங்கினால் தொடக்க வாசகத்தின் கீழ்வரி நீக்கப்பட்டுவிடும். வாழ்க்கை என்ற விருந்தில் ஒவ்வொருவனும் மரணம் என்ற பானத்தைப் பருகித்தான் ஆகவேண்டும். இந்தச் சிங்களப் பயங்கர வாதத்தால் வன்னித்தமிழன் அடையும் மரணங்கள் போர்முறை தவறிய காட்டுமிராண்டித்தனமானது! போராடும் ஒழுங்கற்ற இராணுவ நகர்வு, ஷெல், விமானத் தாக்குதல், நச்சுவாயு விதைப்பு தமிழரின் விருத்தியைக் கருவறுக்கும் கொடூரங்களாகும். இதை மிஞ்சிய கோரம் பாதுகாப்புத்



படிப்பகம்

தருகிறோம் என்று கூட்டிச் சென்று பெண்களைக் கற்பழித்தும் கருச்சிதைவு செய்தும், தமிழனின் இனவிருத்திக்கான தடையைக் கடைநிலையில் நின்று நிறைவேற்றுகிறான். பாலியல் படுபாதகம் செய்தபின் பரப்புதல் தமிழ்ப் பெண்கள் மீதான பழிபாவமாகச் சுமத்தப்படுகிறது. இத்தகைய இழிவான நிலைமை எந்த நாட்டுப் போர்ச்சூழலிலும் இடம்பெறவில்லை. சிறிலங்காப் பயங்கரவாத அரசின் பாதுகாப்புப் பொறுப்பாளர் அண்மையில் நாகரிக மற்ற வார்த்தையில் இதழ்திறந்து நாவை வளைத்துக் கக்கியிருக்கும் அசிங்கம்.

'தம்மிடம் வரும் பெண்கள் எல்லாம் சிங்களப் பயங்கரவாத இராணுவத் திற்குச் சொந்தம். தமிழ் ஆண்கள் எல்லாம் கடலில் கரைக்கப்படுவார்கள்' என்று (இணையத்தளம் பிப்ரவரி 20, 2009). இப்படியொரு அசிங்கத்தைக் கக்கிட எப்படி வந்தது இந்தத் துணிவு? உறவு முறையற்றுப் பேயாய்ப் பெருக்கிய இனப்பெருக்கத்தின் நிலையில் நின்ற ஆணவத் திமிர்தான். இந்தக் கொத்த பாயின் பெண்களெல்லாம் இராணுவத்திற்குச் சொந்தம்; ஆண்களெல்லாம் கடலில் கரைக்கப்படுவார்கள். இங்கு வரலாற்றுக் காலத்தைப் பார்த்தாலும் தமிழன் இனவிருத்தியில் ஒருவகைப் பண்புதனைக் கடைப்பிடித்தான். மிருகங்கள்போல் உடலுறவில் ஈடுபடவில்லை. இதனால் இனவிருத்திப் பெருக்கம் அதிகரிக்காமல் போனது! சிங்களவன் இனவிருத்தியில் உறவு முறையற்று ஈடுபட்டதால் இனவிருத்தி பன்றி களைப் போல் பெருகியது. இதனடிப்படையில் காலத்துக்குக் காலம் படைகளின் பெருக்கமும் அதிகமானது. கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து இவ்வாரம்பத்தைக் காணலாம்! கி.பி ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழரின் நிலங்களைக் கைப்பற்ற எண்ணி சிங்களத் தலைவர்கள் பலதடவைகள் படைகளைப் பெருக்கியும், வரவழைத்தும் (இந்தியாவிலிருந்து) போர் புரிந்தமை வரலாற்று ஆதாரங்களாக உள்ளன. முதலாம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக ஆரம்பித்த சிங்களம் இன்று உச்சக்கட்டத்தை அடைந்து பயங்கரவாதமாக உருமாறி நிற்கிறது! சிங்கள மன்னர்கள் காலத்திலும் தமிழனை அழிக்கப் படைகள் அதிகரித்தன. ராஜபக்சாவின் காலத்தில் அதிகரித்த படைகள் பயங்கரவாதம் புரிகிறது. இத்தோடு இந்தியப் படை பலமும் ஆயுதக் கொடுப்பனவாலும் பலமுள்ளவர்களாக நிற்கிறார்கள். வன்னியில் நடத்தும் போர்த் தர்மம் சின்னரசுக்கும் வல்லரசுக்கும் அசிங்க மாகப்படவில்லை? ஈழத்தில் வாழ்ந்த மேன்மைக் குடியினர் தமிழர்கள் எம் தலைமுறைக்கு விட்டுச் சென்ற சான்றுகளை சிங்கள இனம் பேயின மாய்ப் பெருகியதோடு சிங்களப் புத்திஜீவிகளால் திரித்து எழுதப்பட்டும், பரப்பப்பட்டும் எதிர்காலம் அறியாதவாறு புதைத்தும் மூடினர். மண்மூடச் செய்தனர் தமிழனின் பெருமைக்குரிய ஆவணங்களை! பின்னவர் அவற்றைத் தோண்டி ஆராய்ச்சி செய்து ஆவணப்படுத்தினர்.

www.padippakam.com

திரும்பத் திரும்ப அவற்றையும் எரித்தான். அழித்தான். இதன் வலுத் தாக்கம் மூதாதையரின் சாட்சிகளும் ஆதாரபந்தங்களும் தலைமுறைக்குத் தெளிவாக்கப்பட்டுத் தமிழீழத்துக்கான போராட்டங்கள் பலவடிவம் பெற்றது. ஆயுதப் போராட்ட நிலைக்கும் நிமிர்த்தப்பட்டது. இந்த ஆயுதத்தைக் கொண்டு விடுதலைக்குப் போராட வந்த இயக்கங்கள் எல்லாம் ரோஷமற்று சூடுசுரணையற்று கோழைகளாகி இடையிலே சிங்களவன் எச்சிலிட்டு எறியும் எலும்புத் துண்டுக்கு அடிபணிந்து சிங்களவன் பணித்த போது பணிந்து தமிழனின் பிரபாகரனின் வீரத்தை விலை கூறி விற்றுத் தின்னும் பச்சோந்திகளாக, துரோகிகளாக உருமாறித் திரியவும் வக்கற்று ஒட்டுக் குழுக்களாக உருவம் தரித்து, தமிழனை அழித்தும் கடத்தியும் வயிற்றைக் கழுவும் நிலைக்கு வந்தனர். இவர்கள் அழிவைப் பின்பு பார்ப்போம். முன்பு சிங்களவனின் அறியாத்தனத்தைக் காண்போம்.

அன்று சமஷ்டி என்னும் முறைமையை வைத்தபோது அதன் அர்த்தத்தைச் சிங்களவன் உணரவில்லை. சமஷ்டி என்னும் கூட்டாட்சி முறை ஜனநாயகத்தில் மிக மிகச் சிறந்த விடயமாகும். அரசியல் பிணக்கு களுக்குத் தீர்வு சமஷ்டி முறைதான் என்றால் தவறாகாது. தந்தை செல்வா வைத்ததை அறியாதவன் இன்று ஆயுதத்தைக் கண்டு கதிகலங்கிப் பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது ஒத்துக்கொள்ள மறுத்த அறியாமை யின் அடாவடித்தனமாகப்படவில்லை? வன்னியத் தமிழன் ஆளும் நிலைமை கண்ட சிங்களவன் போர்முறை நெறியோடு புலிகளோடு போராட முடியாது. மாற்றம்கண்டு இந்தியாவின் துணையோடு வன்னியை ஆக்கிரமிக்க மக்களைக் கொன்று குவித்தும், குழந்தைகளை இல்லாது ஒழித்திடவும், இனவிருத்தி விகிதாசாரத்தை மட்டுப்படுத்திவிட்டு தமிழனின் எல்லைகளைச் சிதறடித்து விட்டால் இனி இந்தத் தமிழீழம் என்னவாகும் எனும் மடமைத்தனமான பயங்கரவாதத்தை விதைக்கிறான்! தமிழன் ஒதுங்கும் இடங்கள் எங்கும் வகை தொகை தெரியாது ஆடு மாடுகள் போல் சடலங்கள் வீதிகளில், வெளிகளில், வீடுகளில், மருத்துவ மனைகளில்! இந்தப் போக்கு சர்வாதிகார யுத்தத்தின்போதுகூட இடம் பெற்றதாகச் சான்றுகள் இல்லை! குழந்தைகள் சாவில் தாய் தந்தை உறவு களைக் கண்டுபிடிக்க முடியாத நிலை!

பல்லாயிரக்கணக்கானோர் மனநிலை பீதியில். பச்சிளம் பாலகர்கள் நிர்க்கதியில். நீதி கேட்டு நிற்க எந்த மனிதாபிமான மன்றமும் மனிதமும் வன்னியில் இல்லை. இந்த அமைதியும் மௌனமும் ஏன் என்று கேட்டுத் தட்டும் உரிமை உணர்வு புலத்துவாழ் தமிழனுக்கு வந்துள்ளது. இதனடிப் படையில் தொடர் போராட்டங்கள் இடைவிடாது நடத்தப்படுகின்றதைக் காண்கிறோம். இப்போது தமிழனுக்குத் தேவை மனஉறுதியும் நம்பிக்கை யும்தான். இத்திடமான நிலை, மண்மக்களைவிட புலத்தில் வாழ்வோருக்குத்



படிப்பகம்

தேவை. நம்பிக்கை அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்தது. மன உறுதி ஆழவேரூன்றி நிற்க வேண்டும்!

புலத்தில் வாழ்வோர் வேதனைகளை இக்கணத்திலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும். நாம் வாழும் நாட்டுத் தளம் எதை வழங்கும். என்பதையும் என்ன கங்கரியத்தை மேற்கொள்ளும் என்பதையும் சிந்தித்து நம் தேசத்து நேசிப்பின் வேகம் குன்றாது மேலும் மேலும் வேகத்தை அதிகரிக்க வேண்டும். நம் தமிழர் வாழ்வில் இவ்வளவு மோசமான வேதனைக்கும் சோதனைக்கும் உரியதான மனப்போராட்டம் இருந்த தில்லை! இப்போது ஒத்துவராதவர்கள் ஒட்டிக்கொள்கிறார்கள். இந்த வேளையில் அவர்கள் ஒதுங்கி வாழ்வது நல்லதல்ல! இந்த நேரத்து யோசனைகளும் குறிக்கோள்களும் மக்களைப் பற்றியதாகவும் சுதந்திரத்தின் வலிமை பற்றியதாகவும் இருக்க வேண்டும். எப்படி வன்னி மண் தனி இராச்சியமாக பிரபாகரனின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டதோ அந்த அதிகாரப் பரவல் நாடு முழுமைக்கும் தமிழரின் வடக்கிலும் கிழக்கிலும் உருவாக்கம் பெற்றால் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் எழுச்சியும் மலர்ச்சியும் பேரெழுச்சியாக மலரும். இத்தகைய உள்ளுணர்வுக் குடைதலே இந்தியாவின் அணுகுமுறை உந்துதல். சிறிலங்காவின் பயங்கரவாத யுத்த அசிங்கமாக வந்து வகை தொகையற்று குவியல் குவியலாகத் தமிழனின் சடலங்களை நாளும் நடத்துவதான பயங்கரவாதம். இந்தியாவும் அகிம்சை யையும் அறத்தையும் ஜனநாயகத்தையும் மாண்பையும் நெறிதவறிய கோரவடிவமாகச் சர்வதேசத்தின் முன் நிறுத்தியுள்ளது. உலகம் உண்மை யைப் பார்க்கத் தவறி அமைதியாக மௌனம் சாதிக்கிறது. இந்த மௌனம் தரும் தாக்கமே புலத்திலுள்ளோர் போராட்டம்.

இடைவிடாது போராட்டம் நடந்து வருகிறது ஓயப்போவதில்லை! தாய்த் தமிழகம் வீறுகொண்டெழுந்து நிற்பதும் புலத்தில் வாழும் தமிழர் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கின்றது. வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கையில் வடக்குக் கிழக்கு வடமத்திய வடமேற்குப் பிரதேசங்கள் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களாக இருந்துள்ளது. புலிகள் தங்கள் பாரம்பரியப் பிரதேசத்தில் ஆட்சி நிர்வாகத்தையும் புரிதலுக்கான நிர்வாகத்தையும் திறமைக்கான விடயங்களின் வடிவத்தையும் வன்னி ஆட்சியில் நடப்பில் நிகழ்த்திக் காட்டியும் தமிழரைக் காத்து வந்தனர். இந்த நடவடிக்கை நீண்டுகொண்டு போவதை முதலில் இந்தியா மறுதலித்துக் கொண்டிருந்தது. இந்தப் போக்கில் போனால் தன் வல்லாதிக்கத்துக்கு சவாலாகத் தோன்றும் அறிகுறியெனத் தப்புக்கணக்குப் போட்டு பயங்கர அணுகுதலை சிறிலங்காவிற்குக் கொடுக்கும் அழுத்தத்தின் இராஜதந்திரத்தோடு புலிகளை விரட்டி அழிக்கும் கீழ்நிலைக்கேட்டைத் துவக்கியது. இந்தத் துவக்கத்திற்குப் புலிகள் ஆயுதங்களைப் போட்டு

www.padippakam.com

விட்டு சரணடையச் சொல்லும் தந்திரமான உபாயத்தைக் கையாண்டு நாண்டு நிற்கிறது.

இந்த நிலையில் புலிகள் கடைப்பிடிக்கும் நிதானம் நிமிர்வாகவே நிற்கிறது! வெற்றியின் ஏறுதல் துன்பத்தில்தான் உறுதியான வலுப்படுத் தலாகத் தோன்றும். பயங்கரவாதத்தை வெல்லும். இதயம் உள்ளவரை பயம் பறந்துவிடும். உதயமாகும் உறுதியில் இறுதி அடி நிச்சயிக்கப்படும். வெற்றியின் நிச்சயம் போர் நடத்தும் நாடுகளின் பாடத்தில் இடம் பிடிக்கும். இந்த இடத்தில் புலத்தில் நடக்கும் போராட்டம் நீதியும் தர்மமுமான பெருமைக்கும் மேன்மைக்கும் உரியனவான போராட்டங் களாக ஏற்றிப் போற்றப்படும்.

கடலாடிகள் வருகையிலும் தமிழன் வதைக்கப்பட்டான். வரலாறு களில் வடிவம் தெரியாது மறைக்கப்பட்டான் தமிழன். தொடக்கத் திலிருந்து மிகுந்த கவனமும் மாட்சிமையும் மேன்மையும் மிகுந்தவர் களாக இருந்துதான் பூர்வீகத்தைத் தலைமுறைக்கு விட்டுச் சென்றனர். ஈழத் தேசத்து எல்லை பருத்தித்துறை தொடங்கி தெய்வேந்தி முனை வரையும் வரைந்து காட்டியபோது ஐரோப்பியரும் சிங்களவரும் எந்த எல்லையும் தமிழன் எல்லையெனத் தலைமுறைக்குப் பாதுகாப்புள்ள அரணாக அமைந்திருக்க விடவில்லை. ஐரோப்பியர் தங்கள் சுயநலத் திற்காகத் தமிழனின் அறிவையும் ஆற்றலையும் விவேகத்தையும் பயன்படுத்திக் கொண்டு கொடுமைகளைக் கடுமையாக்கினார். அறிவுரை களாலும் ஆற்றல்களாலும் நற்பெயரை நிலைக்க வைத்த தமிழனின் இறைமையைத் திரித்தும் பொய்யாகவும் தலைமுறைக்கு எம்மவர் விடவில்லை. இனப்பற்றாலும் ஞானத்தாலும் நாட்டி விட்டவர்கள் தங்களது இனவிருத்தியில் மட்டும் கண்ணியமாக நடந்துகொண்டனர். சிங்களவர் இனவிருத்தியின் பெருக்கத்தில் பன்றிக்கு நிகராக இருந்தனர். ஒழுக்கத்தில் கரிசனையற்றவர்களாகத் திகழ்ந்தார்கள்!

தமிழர்கள் நற்பயிற்சி மிக்க ஞானிகளாகக்கூட இருந்தார்கள். பாக்கள் புனைந்தார்கள், இசை அமைத்தார்கள். செல்வம் மிகுந்தவர்களாய் இருந்தனர். போர் முறைகளைக் கற்றிருந்தனர். நாடக ஆக்கப் பணிகளிலும் அரங்காற்றுகையின் நுணுக்கங்களிலும் தேர்ந்திருந்தனர். அமைதியும் ஆற்றலும் கொண்டு, கலையின் அழகோடு இல்லங்களில் அமைதியுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வழிமரபினரின் மாட்சிமை மிக்க காட்சி களை வன்னியில் ஆட்சி செலுத்திய காலத்திலும், இன்றும் வேங்கைமாறன் நிர்வாகப் பரிபாலனங்கள் காட்டி நின்றதை யார் மறுதலிப்பர்? வடக்கில் கிழக்கில் கண்ட மாட்சி தலைமுறைத் தலைவனால் மேலும் புகழ்பெற்றது. இதை ஒப்புக்கொள்ள மறுப்பவர்கள் ஒற்றுமைப் பலத்தை உருவாக்க ஒன்றுசேராதவர்களும் மேலும் ஒருமுறை தமிழினத் துரோகிகளுமாவர்!



படிப்பகம்

www.padippakam.com

தமிழன் என்னும் கொக்கரிப்போடு தமிழனாக வாழாமல் வாழ்ந்தவர்கள் இனியும் அப்படியே வாழ்வார்களாகின் இருந்த இடம் தெரியாமல் அழித்துவிடுதலே நன்றாகும். அவர்கள் அழிந்தார்கள், பிறவாதவர்கள் போல் ஆனார்கள் என்ற நிலையும் நிகழ்ந்திடும். அவர்களுக்குப் பின் அவர்களின் பிள்ளைகளும் அவ்வாறு ஆனார்கள். இது சாபமல்ல, தலைமுறை விருத்திகளுக்கும் சங்கடமாக அமைந்துவிடும்! தலைமுறை மாற்றத்திற்கும் மாறுதல்களுக்கும் எடுத்துக்காட்டொன்று வேண்டும். அதற்கு உண்மையான ஆதாரம் புலிகளின் ஆட்சி நிர்வாகமே! தாய்மொழி மீதான பற்றுதலும் பரப்புதலும் நேர்மையான செயல்களும் கொண்ட இந்த வளர்ச்சிப் போக்கின் வேகம்தான் தலைமுறைத் தலைவன்மேல் சின்னரசுக்கும் வல்லரசுக்கும் அச் சுறுத்தலைக் கொடுத்தது. வன்னிமீது அக்கினியைக் கொட்டின.

எந்த உடன்படிக்கையின்படி நடக்கிறார்கள் என்பதைச் சிங்களர் அறியாத வரையில் அவர்கள் பொருட்டு அவர்கள் தலைமுறைக்கும் அதையே விட்டுச் செல்வார்கள். தமிழன் இதையே பல்லாண்டு காலம் உடன்படிக்கையில் கண்டு தேறினான். முன்னைய ஆட்சியின் அடையாளங் களை நோக்கி வலிமை பெற்றவர்களாகப் புலிகள் இருப்பதையும், அவர் களின் புகழை உலகம் பறைசாற்றுவதையும் கண்டு அஞ்சும் இந்தியாவும் சிறிலங்காவும் பயபீதியிலிருந்து விடுபட இன்னும் நாளாகலாம். புலிகளின் நிதானம் மேலும் அச்சுறுத்தலாகவே நீடித்து இருக்கும். இந்த நிலையில் அனைவரும் கூட்டுறவுடன் ஒன்றுபட்டு உழைத்தால் நிச்சயம் வெற்றி நிச்சயிக்கப்படும். தோல்விகளால் குற்றமில்லை. இலட்சியமில்லாத வாழ்வே குற்றமாகும். எம்மினப் போராட்டத்தில் கண்ட தோல்விகள்தான் எமக்களித்த வெற்றிச் சின்னமான தலைவர் பிரபாகரன். புலிமறவர்களும் அறிவை மேலும் மேலும் கூர்மையாக்கிக்கொள்ளப் பயன்படும் கருவி தோல்விதான்!

இஸ்ரவேல் நாட்டை யார் விரும்பினார்கள்? வேதாகமத்தில்கூட 'அவர்கள் சிதறிப்போய் வாழ்வார்கள்; எங்கும் இவர்களுக்கென்றொரு நாடின்றி அலைவார்கள்' என்று சபிக்கப்பட்டிருக்கும் இஸ்ரவேலை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. அந்த நாட்டின் வரலாற்றையும் நாட்டினரின் புகழையும் நாம் இன்று பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# பிரான்ஸ் தமிழர் போராட்டம் பற்றிய கருத்துகள்

1984 இறுதி முதல் நான் கடந்து வந்த பாதையைப் பார்க்கிறேன். அதில் மகிழ்வான அனுபவங்களும் கசப்பான செய்திகளும் கலந்து நிற்பது தெரிகிறது.

சில நூல்கள் எழுதியது; பல செய்தித்தாள்கள்-செய்தியாளர்களுடன் சந்திப்புகள், சுவிட்சர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, ஆலந்து ஆகிய நாடுகளில் கூட்டங்கள், உரைகள் ஆக இப்படியே காலம் பயன்பட்டது. கடந்த ஓராண்டை எடுத்துக்கொண்டால் செய்த வேலைகள் சிறிது, செய்ய வேண்டி இருப்பது மிக மிக அதிகம். ஜூன் 2008இல் செய்தவை சில. நான்தான் ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் பாரிஸ் பகுதியில் முதல் வேட்பாளர் என்பது உறுதி ஆனது. கடந்த செப்டம்பர் முதல் டிசம்பர் வரை ஈழத் தமிழ் மக்களுடன் தேர்தல் வேலையில் ஈடுபட்டேன். நம்மவர்கள் நடத்திய ஒவ்வொரு கூட்டத்திலும் நம்மவர்களை வாக்காளர் பட்டியலில் பெயரை இணைத்துக்கொள்ளுங்கள் என்று வேண்டினேன். எனக்கு ஆதரவு திரட்டும்படியும் கேட்டுக்கொண்டேன். ஜனவரி முதல் ஏப்ரல் வரை புதுச்சேரி தமிழ் மக்களை அணுகினேன். அவர்கள் 75-77-78-91-92-93-94-95 ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவில் வாழ்கிறார்கள்.

அவர்களை Montereau 77ஆம் Heauxம் Every 91விலும் Rappes 78 பாரிசிலும் 75 Coussainville 95இலும் சந்தித்தேன். நாம் அனைவரும் தமிழ்த் தாயின் புதல்வர்கள் என்பதையும் வாழ்வும் வளமும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருக்கின்றன என்பதையும் அவர்களிடம் எடுத்து விளக்கினேன். அவர்களில் தமிழ் உணர்வாளர்கள் அதிகம் பேர் உள்ளனர். தமிழீழ மக்கள் மீது அக்கறை கொண்டவர்களும் அன்பு கொண்டவர்களும் தங்கள் உணர்வு களை மறைத்து வைத்துக்கொண்டு வாழ்கின்றனர்! வெளிப்படையாகத் தங்கள் ஆதரவினைத் தெரிவித்தால் இந்தியாவால் தங்களுக்குத் தொல்லைகள் வரும் என்று அஞ்சுகின்றனர். மேலும் தமிழீழ மக்களும் அவர்களிடம் அன்புடன் பழகுவதில்லை. அவர்களை வரவேற்பதில்லை. அவர்கள் மாற்றாந்தாய் மனப்போக்கில் நடத்துவதாகக் குறை காண்கின்றனர்.

எனது ஆழமான கருத்து, தலைவர் கூறியது போல், சிங்களவருடன் தமிழ் இனம் நடத்தும் போர் அனைத்துத் தமிழ் மக்களும் சம்பந்தப்பட்டது.



படிப்பகம்

ஒரே ஒரு தமிழன். தமிழர்களிடையே வேற்றுமை காண்கிறான். வேற்றுமையை வளர்க்கிறான். வேற்றுமைக்கு வித்திடுகிறான். அவன் தமிழனே இல்லை என்றும் அவன் தமிழ் இனத் துரோகி என்றும் நான் பார்க்கிறேன்.

ஈழம் தமிழன் மண், தமிழன் நிலம். என்றைக்கு இருந்தாலும் எத்தனை காலம் ஆனாலும் அந்தத் தமிழ் மண்ணை நாம் மீட்டு எடுப்போம். அதற்கு உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை இணைத்து வேலை செய்வோம். தேர்தல் வேலைகளையும் செய்துகொண்டு (சந்திப்புகள் விழாக்களில் பங்கேற்றல்கள், வேட்பாளர் தேர்வுப் பிரச்சாரம்) தமிழீழ மக்கள் பற்றிய சரித்திரத்தையும் பல இடங்களில் பல சமயங்களில் எடுத்துக் கூறினேன். இங்கே அருமைத் தம்பி காணிக்கைநாதன் உதவியுடன் கிறிஸ்துவ குருக் களைச் சந்தித்தேன். நாங்கள் இருவரை 95ஆம் மாவட்டத்தில் சந்தித்தோம். இருவரும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் 2009 ஆரம்பம் முதல் சிங்களவரின் இனத்துவேஷப் படுகொலைகள் குறித்தும் அறிந்து இருந்தனர். அவர்கள் எதிர்பார்த்த மேலதிக விவரங்களையும் அளித்தோம்.

அவர்கள் திருப்பலி பூசை இடையே தமிழர்கள் படும் துன்பங்களை யும் - துயரங்களையும் பூசையில் கலந்துகொண்ட பிரெஞ்சு ஆப்பிரிக்க மக்களுக்கு எடுத்துரைத்தனர். அவர்கள் அனுமதியுடன் பூசையின் இறுதியில் ஈழ நாட்டில் சிங்களவர் நடத்திய கொடுமைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய பிரசுரங்களை நாம் விநியோகிக்க முடிந்தது. அவர்களது உதவியுடன் இரு ஆயர்களை நாம் சந்தித்தோம். ஒருவர் பாரிஸ் மறை மாட்டத்தின் துணை ஆயர். அவரிடம் அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்து பாரிஸ் ‘கார்டினல் M.G.R; Andrè Vingt-trois அவர்களிடம் ஈழத் தமிழரின் துன்பங்களை எடுத்துரைக்கும்படி வேண்டினோம். செய்வதாக வாக்களித்தார். அடுத்து நாம் வேறு ஒரு ஆயரைச் சந்தித்தோம். இவர் பெயர் Jacgues Gaillod. நம்மைப் பற்றி இவரும் சிறிது அறிந்து இருந்தார். அவருக்கு நாம் வேறு பல விவரங்களையும் அளித்தோம். இவர் ஒரு முற்போக்கு ஆயர். போலந்தைச் சேர்ந்தவர். M .G. R Karol Wojtila போப் ஆண்டவராகப் பதவி ஏற்றதில் இருந்து கத்தோலிக்கத் திருச்சபை பழமை வாதிகளின் முகாமாக மாறிவிட்டது. wojtila காலத்தில் நியமிக்கப்பட்ட புதிய ஆயர்கள் மிகப் பெரும்பாலோர் பழமைவாதிகளே. இன்று ஆட்சியில் இருக்கும் 16வது benoit அவர்களும் ஒரு பழமைவாதியே. இன்று கத்தோலிக்கத் திருச்சபை இரண்டு பிரச்சினைகளில் முக்கியமான முடிவை எடுக்க வேண்டும். 1. கிறிஸ்துவ சகோதரிகளின் (RELIGIEUSE) இடம்; 2. குருக்கள் மணம் புரிந்துகொள்ளலாமா? கூடாதா? இந்த முடிவுகள் கிறிஸ்துவ டக்களின் எதிர்காலம் பற்றியது. இன்றைய போப்

www.padippakam.com

ஆண்டவரும் முன்னேற்றக் கருத்துகளுக்கு எதிராகச் செயல்படுகிறார்! இதனால் எல்லாம் ஒரு நல்ல ஆயரான Jacgues Gaillor ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளார். ஆனால் அவர்மீது அன்பு கொண்டவர்கள் அவருக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று எண்ணுவோர் அவருடன் இணையதளம் மூலம் தொடர்பு கொண்டுள்ளனர். நாமும் நமது தமிழ் மக்களின் பிரச்சினை களை அவர்கள் அனைவருக்கும் எடுத்துக் கூறியுள்ளோம். கிறிஸ்துவர்கள் என்னும் போது cergy ஆண்டவர் பற்றியும் ஒரு சில கூற வேண்டும். அவர் என்னையும் தம்பி காணிக்கைநாதனையும் வேறு இருவரையும் வரவேற்று மிகவும் துயரத்துடன் தமிழர்கள் படும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் கேட்டு ஆத்திரத்துடன் தமிழர்களுக்காக அவரே அவரது தனி பூசை அறையில் சிறப்பாக ஒரு பூசை நடத்தி துன்பப்படும் தமிழ் மக்களுக்காக வேண்டிக் கொண்டார்.

வழக்கம்போல் பல நகரங்களுக்குச் சென்று (Angers Caen Strasbourg) ஐரோப்பிய மக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பல்கலைக் கழக மாணவர்களையும் தனியாகவும் வேறு பலருடன் இணைந்தும் தமிழ் மக்களின் சரித்திரத்தையும் அவர்களுக்கு உதவ வேண்டிய அவசியத்தையும் விளக்கினோம். caen மாநகரில் குமரன் சகோதரர்கள் உதவியால் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயிலும் 120 மாணவர்கள் முன் உரை நிகழ்த்தினோம். கூட்டத்துக்கு ஓய்வுபெற்ற நீதியரசர் புதுவைத் தமிழ்த் திரு LE SEIGNEUR வந்து கலந்துகொண்டு எங்களைக் கௌரவித்தார். அதேபோல் Strasbourg நகரில் தம்பி கிருபா தங்கை ராசாத்தி உதவியுடன் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதோடு Conseil de l Europe பிரதிநிதிகளையும் நானும் ராசாத்தியும் சந்தித்தோம். பேச்சுவார்த்தை திருப்தி அளிக்கவில்லை. பேச்சு வார்த்தை நடத்துங்கள், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்று எங்களுக்குக் கூறப்பட்டது.

60 ஆண்டுகள் பேசினோம். ஒரு பயனும் இல்லை. மேலும் 600 ஆண்டுகள் பேசினாலும் சிங்களன் ஒன்றையும் கேட்கப் போவது இல்லை என்று பதில் அளித்து, முந்தா நாள் யூதர்கள் படுகொலையை உங்களால் தடுக்க முடியவில்லை. இடம்பெற விட்டீர்கள். பின்னர் நடவடிக்கை எடுத்தீர்கள். நேற்று ரூவாண்டாவில் tutsi இன மக்களைப் படுகொலை செய்யவிட்டீர்கள். பின்னர் நடவடிக்கை எடுத்தீர்கள். இன்று இலங்கையில் சிங்களன் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கிறான். பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். நாளை நடவடிக்கை எடுக்காது இன்றே எடுங்கள் என்று கூறி விடைபெற்றோம். அவர்கள் பதில் அளிக்கவில்லை.

வழக்கம்போல் 1985 முதல் செய்வதுபோல் அண்டை சுவிட்சர்லாந்தில் நடந்த இரு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். முதலில் Neuchatlலும் அடுத்தது Fribourgலும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இரு நிகழ்ச்சிகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

செய்தியாளர்கள் வந்திருந்தனர். முதல் நிகழ்ச்சியில் அருமைத் தம்பி கிருபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். பாலியல் படுகொலைகள் பல்லாயிரம் பல்லாயிரம் தமிழீழப் பெண்கள் அனுபவிப்பதை எடுத்துக் கூறினார். முழு நிகழ்ச்சியையும் தொலைக்காட்சி ஒன்று படம் பிடித்தது. பிறகு தொலைக்காட்சியில் காட்டப்பட்டது என்று அறிந்து மகிழ்ந்தேன். Fribourg நிகழ்ச்சி சுவிஸ் சோஷலிஸ்டுக் கட்சியின் பங்களிப்புடன் நடந்து முடிந்தது. நகர அளவில் Canton அளவில் சுவிஸ்நாட்டு நாடாளுமன்ற அளவில் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் பங்கேற்றனர். இதுவும் வெற்றிகர மாக அமைந்தது.

இச்சிறு கட்டுரையை முடிக்கும் முன் வேறு இரு முக்கிய நிகழ்வுகளை யும் கூற வேண்டும். 1 பெப்ரவரி மாதம் முதல் முதலாக Radio Franceஐச் சேர்ந்த France Cultureஇல் பிரெஞ்சு சரித்திரப் பேராசிரியரும் சிங்களருக்கு ஆதரவாளருமான திரு Eric Meyer உடன் விவாதத்தில் பங்குகொண்டேன்.

இவரின் தவறான கருத்துகளுக்கு (புலிகள் பயங்கரவாதிகள், பிரிவினை வாதிகள், புத்தமதத்தினர் நல்லவர்கள்) எதிர்க்கருத்துகளை எடுத்துரைத்தேன். அவற்றை அவரே எழுதிய Sri Lanka (Que Saès-jè) நூலில் இருந்தே ஆதாரங் களை எடுத்து இயம்பினேன். புத்த மதம் நீதியானதுதான். ஆனால் சிங்கள பவுத்தத் துறவிகள் கொடுமையானவர்கள்; துவேஷம் கக்குபவர்கள்; தமிழனை அழிக்க விரும்புவர்கள் என்பதை விளக்கினேன். இரண்டாவதாக அதே வானொலியில் மே மாதம் பேச வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ராஜீவ் காந்தியின் தவறான அரசியல் காரணமாகப் பயங்கரவாதம் தோன்றுகிறது என்பது பற்றி சில புரட்சிகர கருத்துகளை முன்வைத்தேன்.

மொத்தத்தில் செய்தது சிறிது
செய்ய வேண்டியது பெரிது
நிறையத் திட்டங்கள் உள்ளன

உதவ நிறைய நண்பர்கள் உள்ளனர். அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி. பல செய்தியாளர்கள் சந்திக்க விரும்புகின்றனர். பல பல்கலைக் கழகங்களில் எனது பங்கேற்புத் திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்வில் உள்ளது ஒரே நோக்கம்தான். முடிந்தவரை தமிழ் ஈழ மக்களுக்கு எல்லா வகையிலும் உதவுவது.

நன்றி.

செவாலியே. ழான் மரிழுலியா சுகிர்தராஜ்
முன்னாள் கல்லூரி முதல்வர்
சரித்திரப் பேராசிரியர்

செப்டம்பர் 22, 2009



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழப் போராட்டமும் புலம்பெயர்வாழ் தமிழ் மக்களும்

எமது போராட்டம் தனிமனித விடுதலைப் போராட்டமாக இல்லாமல் மக்கள் போராட்டமாகப் பரிமாணம் எடுத்திருக்கும் இந்தவேளையில், இந்த உலகம் என்ன விலை கொடுத்தாவது இதை நிறுத்த வேண்டும் என நிற்கின்றது. மனித நேயத்திற்கான எமது போராட்டம் மார்கழி 6ஆம் தேதி திபெத்திய மக்களுடன் சேர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையால் மனித யுரிமைக் கோட்பாடு எழுதப்பட்ட நாளின் நினைவாய் அமைந்துள்ள மனித உரிமைச் சதுக்கத்தில் ஆரம்பமானது.

எமது போராட்டம் மனித உரிமைக் கோட்பாட்டிற்கிணங்கவே இருந்தது என்பதை அக்கோட்பாட்டை வாசிக்கும் அனைவரும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அதைத் தொடர்ந்து மார்கழி 13ஆம் தேதி இதே மனிதஉரிமைச் சதுக்கத்தில் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி எமது இனம் எவ்வாறு இந்தப் போராட்டத்தில் நியாயங்களை மேற்கொள்கின்றது; எமது தாயகத்தில் எத்தகைய மனிதப் பேரவலம் நடை பெறுகிறது என்று எடுத்துக் கூறும் முகமாக நின்று குரல் கொடுத்தோம். அன்றைய தினம் கடும்மழை, குளிர், காற்று. பனிக்கட்டிகளாய்க் கொட்டிக் கொண்டு இருக்கிறது. அங்காங்கு நின்ற மக்கள் எம்மை ஆச்சரியமாகப் பார்த்தனர்! இதையெல்லாம் பொருட்படுத்தாமல் எமது மக்கள் உலகத்திடம் நீதி கேட்டு நின்றனர். நூற்றுக்கணக்கான சிவப்பு மஞ்சள் கொடிகள் பறந்தன. மக்கள் போராட்டம் என்றால் இதுதான் என்று எமது மக்கள் காட்டி நின்றனர். இந்தவேளை எனக்கருகில் நின்ற போலீஸ் அதிகாரிகள் தமது வாகனத்திற்குள் இருந்தும் அந்தக் குளிரையும் மழையையும் தாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கும்போது இந்த மக்கள் என்னென்று நிற்கிறாங்கள்? என்று அந்த அதிகாரிகள் சொன்ன வார்த்தை இன்றும் என் அடிமனத்தில் நிற்கிறது. தமிழினத்தைப் போல் வேறு உறுதியான இனத்தையும் தான் இதுவரைக் காணவில்லை என்றும் நமது தாயக மக்களின் போராட்டத்தின் மனவுறுதியைக் கண்டு நான் தலைவணங்குகிறேன் என்றும் கூறினார்.

தாயகத்தில் தமிழ் மக்கள் மேல் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்த அன்று போராட்டத்தின் அடுத்தகட்டமாக மாசி 4 இலங்கை சுதந்திர



படிப்பகம்

www.padippakam.com



கொட்டும் மழையிலும் உறுதியோடு நிற்கும் உள்ளங்கள் - அன்வலிட்

தினம், தமிழர்களுக்கு சுதந்திரம் இழந்ததினம் 'கரிநாள்'. பிரான்சில் தமிழர்கள் வாழும் இடங்கள், தமிழரின் கடைத்தெருக்கள் கறுப்பாகிய அன்றைய தினம் கார்டூன் நோட் முதல் லாச்சப்பல் எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. அதே தினம் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பும் நடந்துகொண்டிருந்தது. ஈபில் கோபுரத்தின் அருகில் உள்ள சமாதான சுவர் மைதானத்தில் 'கரிநாள்' மாபெரும் எழுச்சிக் கூட்டமாக நடைபெற்றது. அன்றும் மக்கள் உணர்ச்சியுடன் கூடி நின்றார்கள். பிரான்சில் எப்போதும் இல்லாதவாறு மக்கள் தேசியக் கொடியுடன் தமது தேசியத்தை வழிமொழிந்து நின்றார்கள். எமது இளைஞர்கள் மக்களை எழுச்சி அடையச் செய்துகொண்டிருந்தார்கள். பத்திரிகையாளர்கள் தொலைக்காட்சியினர் என ஊடகங்கள் எமக்கிடையே கருத்துகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர், மேயர், அனுதாபிகள் என்று பல இனமக்கள் தமிழரின் போராட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள். முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் கூடி நிற்பதை இந்த நாடு பார்த்துக்கொண்டிருந்தது! எங்களுக்கு உலகத்தைப் பார்ப்பது போன்ற பிரமிப்பு! எங்கள் தாயகத்தில் கொலைகள் நிற்கவில்லை. எமது மக்களின் எழுச்சியைத் தொடர்ந்து பாரிஸ் மைய இடங்களில் தமிழர் வர்த்தகங்கள் நிறைந்த இடமான சின்ன யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படும் லாச்சப்பல் அன்று சூடுபிடித்தது. ஏப்ரல் 06, 2009



படிப்பகம்

www.padippakam.com

வன்னியில் இலங்கை அரசு தமிழ்க் குடியிருப்புகளுக்கு மேல் நச்சுவாய்வு குண்டுகளைப் பொழிந்தது. அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தார்கள் என்று கேள்விப்பட்டு மக்கள் மதியம் 1 மணிக்கு பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சகம் அருகில் அன்வலிட் என்னும் இடத்தில் கூடத் தொடங்கினார்கள்.

இந்த ஒன்றுகூடல் போலீசாரிடம் அனுமதி பெறாமல் எழுச்சி கொண்டு கூடினதால் அதிரடிப் போலீசாரால் சூழப்பட்டு மக்களை அங்கிருந்து அகற்றும் பணியில் அவர்கள் இறங்கினார்கள். ஆனால் பல மெட்றோ வாயில்கள் அடைக்கப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் நாலுபுறமாக வந்து சேரவே எதுவும் செய்யமுடியாத நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்களின் குரல்கள் போரை உடனடியாக நிறுத்தும் படி வேண்டி நின்றனர். செயல் இழந்த நிலையில் இருந்த போலீஸ் அதிகாரிகள் போராட்டக்காரர்களிடமிருந்து ஒரு தொடர்பாளரை ஏற்படுத்த முயன்றார்கள். அப்போது என்னை அழைத்தார்கள். என்னிடம் 'ஆர்ப் பாட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்' என்றார்கள். 'இது மக்களின் எழுச்சி என்றபடியால் இதை என்னால் மிக எளிதில் செய்ய முடியாது. முயற்சி செய்கிறேன்' என்று கூறிவிட்டு மக்களுடன் கதைக்க நான் எத்தனித்தேன். மக்கள் பல நிபந்தனைகள் வைத்தார்கள். பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் இங்கு வந்து தம்மிடம் போர் நிறுத்தம் செய்யப்பட உடனடியாக பிரான்ஸ் அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்கள். நான் அதைப் போலீஸ் மேலதிகாரியிடம் எடுத்துக் கூறினேன். அந்தநேரம் இரவு 9 மணி! மக்கள் இன்னமும் வந்தபடியே இருந்தார்கள். பலர் தேநீர், உணவு ஆகியவற்றைக் கொண்டு வரத்தொடங்கினர். போராட்டம் முடிவதுபோல் தெரியவில்லை. வெளிவிவகாரத்துறை அமைச்சின் முதன்மைச் செயலாளர் எம்மைச் சந்தித்து எமது முறைப் பாட்டைப் பெற்றுக்கொள்ள முயன்றனர். எம்முடன் பேரம் பேசினார்கள். ஆனால் எம்மக்கள் அங்கே போர் நிறுத்தப்படும்வரை போராட்டத்தைத் தொடர்வது என்று முடிவு செய்தார்கள்.

அன்றிலிருந்து பாரிஸில் பல இடங்களுக்கும் போராட்டங்கள் மாற்றப் பட்டு எழுச்சியும் தளர்வுமின்றி போய்க் கொண்டிருந்தன. போலீஸ் உயர் அதிகாரிகளிடமிருந்து எம்போராட்டத்தை நிறுத்தும்படி பல அழுத்தங்களும் எமக்குத் தரப்பட்டன. நான்கு இளைஞர்கள் மனிதஉரிமை மையத்தில் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார்கள். அரசியல்வாதிகள் எம்மை வந்து சந்திக்கத் தொடங்கினார்கள். தாயகத்தில் இனப்படுகொலைகள், மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. பாரிஸ் நகர் என்றும் கண்டிராத நிலையில் போராட்டங்கள் ஊர்வலங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் பங்கு பற்றிக் கொண்டிருந்தார்கள். போராட்ட இடங்கள்



படிப்பகம்

www.padippakam.com

பல தடவை மாற்றப்பட்டாலும் பல இடைஞ்சல்கள் எங்கள்மேல் சுமத்தப் பட்டாலும் இந்த உலகத்திடம் போரை நிறுத்தச் சொல்லி எமது மக்கள் அழுது கெஞ்சினார்கள். சித்திரை 6இல் ஆரம்பித்த போராட்டம் ஆடி 21ஆம் தேதி வரை இரவு பகலாக மழை குளிர் என்று பாராமல் போராடி னார்கள். எம்மினத்தின் அர்ப்பணிப்பைக் கண்டு பிரான்ஸ் மக்களும் அரசாங்கமும் வியப்புடன் பார்த்துக்கொண்டு பார்வையாளர்களாகவே இருந்தார்கள். இனஅழிப்பின் உச்சகட்டத்தில் மே 18ஆம் தேதி மன்னார் முதல் முல்லைத்தீவு வரை நாம் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட உறவினர்களை இழந்தோம். இந்த இனப்படுகொலைக்கும் சிறிலங்காப் பயங்கரவாதத்திற்கும் இவ்வுலகமே கைகோத்து உடந்தையாக இருந்தது.

என்னைப் பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சிகளும் அழைத் தனர். எமது நிலைப்பாட்டை விளக்குமாறு கூறினர். இவ்வுலகத்தின் மேல் ஆத்திரம் கொண்டிருந்த நேரம். மே 22 அன்வலிட் திடலில் நாம் அனுமதி எதுவுமின்றி ஒன்றுகூடி தாய்மண்ணில் உயிர்நீத்த எமது சகோதரர் களுக்காக அமைதி வணக்கங்களும் அஞ்சலிகளும் செய்தநேரம். ‘பிரான்ஸ் தொலைக்காட்சி ஐந்து தமிழ் மக்களிடம் பேட்டி எடுத்துக் கொண்டிருந்தது. உலக நாடுகள் ஒரு இனமக்களின் படுகொலைக்கான காரணமாக இருந்தன’ என்ற ஆத்திரம். தொலைத் தொடர்பாளர்களை இடைமறித்தேன்! ‘இந்த உலக நாட்டினர் அமைதி காக்க அருகதை அற்றவர்கள். பிணங்களுக்கு மேலே அரசியல் செய்யத் தெரிந்தவர்கள்! அமைதி பேண அருகதை அற்றவர்கள்’ என்று கூறி நிறுத்திக்கொண்டேன். ‘தமிழ் மக்கள் தமது தாய் நாட்டின் விடுதலைக்காக எதையும் தியாகம் செய்யக் கூடியவர்கள்’ என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் எமது 60 நாள் போராட்டம் பற்றிய நேரத்தில் கூறினேன். இன்று எம்மிடம் ஒரு கடமை தரப்பட்டிருக்கிறது. எமது தாய் நாட்டில் எம்மிடம் ஓர் அரசு இருந்தது. அந்த அரசை உலக நாடுகள் இலங்கையுடன் சேர்த்து அழித்துவிட்டன. இன்று அந்த நாட்டைக் கட்டிக்க ரத்து மீண்டும் தாய் மண்ணிற்கு இட்டுச் செல்ல வேண்டிய கடமை எம்மிடம் தரப்பட்டுள்ளது. அதுவரை உறங்கமாட்டோம்! சிங்கள பயங்கர வாதிகளையும் உறங்கவிடமாட்டோம். உலக அரங்கில் நீதி கிடைக்கும் வரை உறங்கமாட்டோம்!

*ஆகஸ்ட் 10, 2009*
*பிரான்ஸ்*

திருச்சோதி



படிப்பகம்

www.padippakam.com

# பேசாமல் பேசவைப்பார் பிரபாகரன்

*30 ஆனி 2009 புதன்கிழமை பரந்தன் இலங்கைச் செய்தி*

எங்கள் தேசியத் தலைவர் கொல்லப்பட்டார் என்று கொண்டாடிக் கொண்டிருக்கும் ஒட்டுக் குழுக்களுக்கு. தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்பு இல்லாமல் அவர்களுடைய செயற்பாடுகளையும் உங்களுடைய செயற்பாடுகளை அன்றிலிருந்து இன்றுவரை பார்த்துக் கொண்டிருக்கும் சாதாரண பொதுமகனின் வேதனை மிகுந்த வணக்கம்.

தமிழ்த் தேசியத் தலைவர் கொல்லப்பட்டார் என்பதை நாங்கள் நம்ப வில்லை என்ற உண்மையை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, உங்கள் கூற்றுப்படி உங்கள் எஜமானர்களான சிங்கள இராணுவத்தின் கூற்றுப் படியும் அவர் இல்லை என்கிற சூழலிலேயே உங்களுடன் பேச விரும்பு கிறேன். சரணடைய முன்வந்த புலிகளின் தலைமை நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டது என்று மகிழ்ந்து புலிகள் உங்களுக்குத் துரோகம் செய்தார்கள் என்ற உங்களது 27 வருடப் பாட்டைப்பாடி அதனை இதற்கு ஒப்பிடுகிறீர்களே, உண்மையில் உங்கள் மனத்தில் என்ன நினைத்து இருக்கிறீர்கள்? புரியவில்லை! உங்கள் பிரச்சினைகள் எல்லாம் பொது மக்கள் எவரும் இல்லாத இடத்தில் புலிகளும் நீங்களும் மட்டும் இருந்த தீவில் நிகழ்ந்ததா? நாங்களும் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம் நடந்தது எல்லாம் என்ன, நடந்துகொண்டிருப்பது என்ன என்று. ஒரே இலக்குடன் போராட்டத்தை ஆரம்பித்த நீங்கள் எதற்கு வெவ்வேறு இயக்கங்களை ஆரம்பித்தீர்கள் என்பதே புரியவில்லை.

எங்களுக்கு சிவகுமாரன் தொடங்கி வைத்தான். டெலோ அமைப்பின் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட பிரபாகரன் என்னும் துடிப்பும் வீரமும் நிறைந்த இளைஞன் வழி தொடர்ந்தான். சரி, சொந்தப் பிரச்சினையால் உமா மகேஸ்வரன் பிரிந்துபோனான். புளெட் அமைப்பை உருவாக்கினான். எல்லாம் சரி. அதன் பிறகு சேர்ந்த இளைஞர்கள் ஒன்று பிரபாகரனுடன் அல்லது உமாமகேஸ்வரனுடன் அல்லது டெலோவில் சேரவேண்டியதுதானே? எதற்கு மழைக்கு முளைத்த காளான்கள் மாதிரி புதுப்புது இயக்கங்களை உருவாக்கினீர்கள்? தமிழ் ஈழம் என்னும் ஒரே கொள்கைதானே உங்களிடம் அன்று இருந்தது?



படிப்பகம்

www.padippakam.com

கண்ணீர்த் துளி போல் இருக்கும் இலங்கையிலிருந்து பிரியப்போகும் தமிழீழத்தை ஆளுக்கொரு குறிச்சியாகப் பிரித்து ஆட்சி செய்யவா? 8 மாவட்டங்களைக்கொண்ட தமிழ் ஈழத்தை வென்றெடுக்க அமைக்கப் பட்ட இயக்கங்களின் எண்ணிக்கை தெரியுமா? 8 அல்லது அதற்கும்மேல்! டெலோ, எல்டிடிஈ, ஈபிஆர்எல்எஃப், டிஈஎல்எஃப், ஈபிடிபி, ஈஎன்டிஎஎஃப், ஈரோஸ், புளொட் இவை என் ஞாபகத்தில் இருப்பவை. இதைவிட இன்னும் அதிகமாக இருந்ததா என்று எனக்குத் தெரியாது. கிட்டு எங்கள் பிரச்சினை யைப் பேசித் தீர்ப்போம் என்று கோண்டாவிலில் வைத்து டெலோ தலைவர் உயிர்ப்பிச்சை கேட்டும் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை நினைவுகூருகிறீர்களே, உங்கள் பிரச்சினை என்ன என்று எங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறீர்களா? திம்பு பேச்சுவார்த்தைக்குப் போகும் வரையிலும் ஒற்றுமையாய் இராணுவத்தைத் தாக்கிய நீங்கள் அதன்பிறகு உங்களுக்குள் மோதிக்கொண்டீர்கள். கிடைப்பது எதுவானாலும் அதைப் பெற்றுக்கொள்வோம் என்ற சந்தர்ப்பவாதிகளுக்கும் தமிழ் ஈழம் என்ற நிலைத்த குறிக்கோள் வேண்டும் என்ற இலட்சியவாதிக்கும் இடையில் சிக்கி சிம்பு பேச்சுவார்த்தை சீரழிந்தது எமக்குத் தெரியும் தோழர்களே!

உங்களதும் புலிகளதும் போராட்டங்கள் என் வயதுடன் வளர்ந்தவை. நித்தம் நித்தம் அவதானித்ததையும் அனுபவத்தையும் மட்டுமே இங்குச் சொல்கிறேன். ஆனாலும் இந்தக் கொலைகள் விடயத்தில் உங்களுக்குள் நீங்கள் மோதிக்கொண்டபோது நீங்கள் இப்போது நினைவுகூரும் வாசுதேவாவை, பாரூக்கை, தெருவில் சுடப்பட்டுக் கிடந்த சிறி சபாரத்தினத்தை நினைத்து வேதனைப்பட்டிருக்கிறேன். எதற்கு இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று ஆத்திரப்பட்டிருக்கிறேன். எங்களைப் புலிகள் அழித்திருக்காவிட்டால் நாங்களும் எங்கள் மக்களுக்காகப் போராடியிருப்போம் என்று நீங்கள் சொல்வதைக் கேட்டு உண்மையாக இருக்குமோ என்று நினைத்திருக்கிறேன். எல்லாம் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் யுத்தம் ஆரம்பிக்கும் வரைக்கும்தான். புலிகள் காட்டுக்குப்போனதும் இந்திய இராணுவத்தின் ஆளுமைக்குள் நீங்கள் எங்களை நோக்கி வந்தீர்கள்.

நீங்கள் கூறியபடி சந்தர்ப்பம் உங்களுக்கும் தரப்பட்டது. என்ன செய்தீர்கள் தோழர்களே? எங்களுக்காகப் போராட வேண்டாம்; நாங்கள் அழிவதை, எங்கள் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் படுவதைத் தடுத்து நிறுத்தினீர்களா? இவற்றையெல்லாம் நீங்களே செய்தீர் களே? புலிகளை மட்டுமா நாங்கள் வளர்த்தோம்? உங்களையும் நாங்கள் தானே வளர்த்தோம்? 84-85களில் எங்கள் வீட்டில் இருந்து தினமும் 5 பேருக்குச் சாப்பாடு பார்சல் போகும். ஒரு நாளைக்கு ஒரு இயக்கம் என்னும் முறையில். ஆனால் புலிகளுக்கு உணவு கொடுத்ததாகச் சொல்லி



படிப்பகம்

www.padippakam.com

எங்கள் வீட்டு வாசலில் துப்பாக்கிகளோடு நின்றீர்கள்! உங்களுக்கும்தானே தந்தோம் என்பதை மறந்து என் சகோதரனை மூர்க்கத்தனமாகத் தாக்கினீர்களே? 1988இல் செயின்ட் ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவன் தேவகுமாரனை இந்திய இராணுவத்துடன் சேர்ந்து கைது செய்து முகமே அடையாளம் தெரியாதவாறு மூர்க்கத்தனமாகத் தாக்கினீர்களே? அவன் செய்த தேசத் துரோகம் இந்திய இராணுவம் செய்த கொடுமைகளைப் பற்றிய துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்ததுதான்.

உயர்தர பரீட்சை முடிவுகள் வெளியானபோது நீங்கள் பிணமாகத் தெருவில் போட்ட தேவகுமாரன் உயிரியல் பாடத்தில் தேறியிருந்தான். சொல்லுங்கள் தோழர்களே, இவர்கள் பெயராவது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? உங்களால் சுட்டுக்கொல்லப்பட்ட உயர்தர வகுப்பு ஆசிரியர் கிருஷ்ணானந்தனை, தெருவோரம் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்த முரசொலிப் பத்திரிகை ஆசிரியர் மகன் அகிலனை? இந்திய இராணுவம் செய்த கொடுமைகளைக் கண்டித்து மறியல் போராட்டம் செய்ததற்காகச் சுட்டுக்கொல்லப்பட்ட மருத்துவபீட மாணவன் சத்தியேந்திராவை? ஏதோ ஓர் உத்வேகத்தில் புலிகள் இயக்கத்துக்குப் போய்விட்டு பயிற்சியின் கடுமையைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 3 மாதத்தில் திரும்பி வந்து சாதாரண வாழ்க்கை நடத்திவந்த இளைஞன் மோகனை இந்திய இராணுவத்திற்குக்கூடத் தெரியாமல் விசாரணைக்கென்று அழைத்துச் சென்று அவனை இரண்டு நாள் கழித்துச் சந்தகக் கம்பாலேயே உடல் முழுதும் குத்திக் கொலை செய்து கொண்டுவந்து தெருவில் போட்டீர்களே, ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு? பெண்களைத் துன்புறுத்தி அவர்கள் கூந்தலைத் தாறுமாறாக வெட்டி மொட்டை அடித்த செயல் ஞாபகம் இருக்கிறதா? எங்கேயோ கேட்ட துப்பாக்கிச் சத்தத்திற்கு அருகில் இருந்த கல்லூரிக்குள் சென்று வகுப்பறைக்குள் நீங்கள் சரமாரியாகச் சுட்டதில் பலியான மாணவர்களை, படுகாயம் அடைந்த மாணவர்களை, ஆசிரியர் களை ஞாபகம் இருக்கிறதா? இவர்களை ஞாபகப்படுத்த எனக்கு எந்தக் குறிப்பேடும் தேவைப்படவில்லை. ஏனெனில் நான் பள்ளி செல்லும் போது வழியில் தெருவில் கண்டு சென்ற பிணங்கள் இவர்கள்.

பெண்களையும் சிறுவர்களையும் மயானத்துக்குச் செல்ல அனுமதிக்காத சமூகத்தில் உங்கள் தயவாலும் இந்திய இராணுவத்தின் தயவாலும் பிணங்களையும் டயர் போட்டு எரிக்கப்பட்ட எலும்புக் கூடுகளையும் நாங்கள் தெருவில் பார்த்தே வளர்ந்தோம்! உங்களால் பலவந்தமாக தேசிய இராணுவத்திற்கு என்று பிடித்துச் செல்லப்பட்ட என் ஒன்றுவிட்ட சகோதரன் இன்றுவரை உயிருடன் உள்ளானா இல்லையா என்று எமக்குத் தெரியாது. இவர்களில் யார் நீங்கள் சொன்னபடி கிட்டு அல்லது அவருடன் சேர்ந்த உங்கள் தலைவர்களையும் உறுப்பினர்களையும் கொன்றார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

துப்பாக்கிகளைக் கையில் வைத்திருந்த உங்கள் தலைவர்கள் உயிர்ப்பிச்சை கேட்டும் புலிகள் கேட்கவில்லை என்று சொல்கிறீர்களே, நாங்கள் உங்களுக்கு எதிராகவோ இந்திய இராணுவத்திற்கு எதிராகவோ சிறு தடியைக்கூட எடுக்காமல் அல்லவா உங்களிடம் உயிர்ப்பிச்சை கேட்டோம்? உங்கள் தலைவர்கள் பெயர் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறது! இவர்கள் பெயர் உங்களுக்கு ஞாபகம் இருக்குமா? கிடையாது. நாங்கள் பாவப்பட்ட பொதுஜனங்கள். ஆனால் உங்களால் கொலைகாரன் என்று சொல்லப்பட்ட கிட்டுவைச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கிட்டு மாமா என்றே அழைத்தோம். அவருக்கு ஒரு கால் போனதற்கே மக்கள் எப்படித் துடிதுடித்துப் போனார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். காரணம் அவர்கள் மக்களை நேசித்தவர்கள்.

நானும் என் அண்ணனும் வீட்டில் தனியே இருந்த சமயம் உள்ளே நுழைந்த இந்திய இராணுவத்தினர் எங்களைத் தனித் தனி மூலைகளில் மடக்கியபோது எனக்கு நடக்கவிருந்த கொடுமையின் முழு வடிவம்கூடத் தெரியாத வயதில் இராணுவத்தால் பக்கத்து அறைக்குள் நான் நெட்டித் தள்ளப்பட்டபோது நீங்களும் அருகில் நின்றீர்கள். விகாரச் சிரிப்புடன் வேடிக்கை பார்க்கத் தயாராக இருந்தீர்கள். என்னைப் பிடித்துத் தன்பின்னே நிறுத்தி தன் துப்பாக்கியைத் தன் சகாக்களை நோக்கி, என்னைக் காக்க ஒரு தமிழகத்துத் தமிழனால் மட்டும்தான் முடிந்தது! சொல்லுங்கள் தோழர்களே, உங்கள் கையில் இருந்த ஆயுதங்கள் யாரைக் காக்க யாருக்கு எதிராக ஏந்தப்பட்டவை? ராஜீவ் காந்திக்கு நன்றி - குறைந்த எண்ணிக்கை யிலேனும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களையும் அமைதிப்படையில் அனுப்பிவைத்ததற்கு. அவர்கள்தான் தங்கள் சகாக்களிடமிருந்து மட்டுமல்ல உங்களிடமிருந்து தங்களால் முடிந்த வரையில் எங்களைக் காத்தார்கள்.

மேலே நான் சொன்னது அத்தனையும் நடைபெற்றது. யாழ் மண்ணில் மூன்று தெருக்கள் அடங்கிய ஒரு சிறிய பகுதியில். அந்தக் காலப் பகுதியில் தாங்கள் உயர் ஜாதியினர் என்ற அகந்தையும் பரம்பரைக் கல்விமான்கள் என்கின்ற ஆணவமும் கொண்ட சுயநல சமூகமான எங்கள் முதல் தலைமுறைகளும் எங்கள் கல்வி பாதிக்கக் கூடாது என்பதைக் கருத்தாகக் கொண்டு, போனால்போகிறது என்று துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் அளவுக்கு மட்டும் சமூக அக்கறை கொண்ட எங்கள் தலைமுறைகளும் வாழ்ந்த இடத்தில், யாருடைய போராட்டத்துடனும் அதிகம் பட்டுக் கொள்ளாத மக்களுக்கு நீங்கள் நடத்திய கொடுமைகளின் சிறிய அத்தியாயம் இவர்களையும் ஆவேசம் உள்ளவர்களாக மாற்றியது. உங்கள் நடவடிக்கைகள் இவர்களுக்கே இப்படியென்றால் உண்மையாகவே முழுமனத்துடன் போராட்டத்தைப் பட்டியல் போட்டால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி இரத்தத்தில் தோய்ந்த இதிகாசங்கள் எழுதலாம்.



படிப்பகம்

www.padippakam.com

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்களோ கூடப் பிறந்த சகோதரரோ பெற்றோரோ தங்கள் மானத்தைக் காக்க முடியாது என்று உணர்ந்த பெண்களும், தாங்கள் சொல்லும் மந்திரங்களும் கற்பூரம் காட்டும் கடவுள்களும் தங்களைக் காக்க மாட்டா என்று பூணூலைக் கழற்றி எறிந்து விட்டு இளைஞர்களும் என எல்லாச் சமூகத்தவரும் இரவுகளில் வீட்டை விட்டு வெளியேறி கானகம் நோக்கிச் சென்றது, உங்கள் அட்டகாசங்களால் தான். தங்கள் மகள் வெளியேறிய பின்னர் இனி அவள் மானத்துடன் இருப்பாள் என்ற நிம்மதியில் நீங்கள் வந்து விசாரிக்கும்போது அவள் யாரோடோ ஓடிப்போய்விட்டாள் என்று தலை நிமிர்ந்து பெற்றோர் சொன்ன அதிசயம் நிகழ்த்திக் காட்டியவர்கள் நீங்கள். எங்கள் தேசியத் தலைவர் எத்தனை பெரிய தீர்க்கதரிசி என்பது அப்போதுதான் தெரிந்தது. அவர் இடத்தில் நின்று பார்க்க எனக்குக் கொஞ்சம்கூட அருகதை இல்லை என்றாலும் ஒருகணம் நின்று பார்க்கிறேன். நீங்கள் சொன்னபடி உங்களுடன் ஒற்றுமையாக நின்று போராடியிருந்தால் என்ன நடந்திருக்கும்? இது தமிழ்நாட்டு அரசியல் மேடையா, கூட்டணிகளை மாறிமாறி அமைத்துக் கொள்ள? ஆயுதப் போராட்டம் படைபலத்தை மட்டுமே நம்பி இருப்பது. போராடத் துணிந்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கையே கொஞ்சம். அதையும் எல்லோரும் பங்கு போட்டுக்கொள்வீர்கள்.

அதன் பிறகு போராட்டத்தின் ஆரம்பத்திலேயே காட்டிக் கொடுப்பவர் தலைமைக்கு ஓர் அமைச்சர் பதவி கிடைத்தவுடன் போராட்டத்தைக் கைவிடும் இயக்கம், ஏதோ கொஞ்ச அதிகாரம் வந்தால்போதும் என்று கைவிடும் இயக்கம், அதுகூட வேண்டாம்; மது, மாது, பதவி சுகம் கிடைத்தால் போதும் என்று கைவிடும் இயக்கம் என்று பிரிந்து சென்றால் போராடச் சேர்ந்த இளைஞர்களும் தவறான பாதைக்குப் போகநேர்ந்தால் ஒரே இலட்சியத்துடன் போராடுபவன் என்ன செய்ய முடியும்? உங்களை அவர்கள் தங்கள் இலட்சியப் பாதையிலிருந்து அகற்றியதால்தான் தமிழீழப் போராட்டம் மாபெரும் சக்தியாக எழுந்தது. இன்று உலக நாடுகள் அனைத்தும் ஐக்கிய நாடு வரைக்கும் தமிழர்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும் என்று சொல்கின்றன என்றால் அது விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற தியாகங்களாலும் சரித்திரம் வாய்ந்த வெற்றிகளாலும் எங்கள் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வழி நடத்தலாலும் மட்டுமேதான். அவர்கள் உங்களை அகற்றிய விதம் தப்பாக இருக்கலாம். ஆனால் நீங்கள் இலட்சியத்தின் தடைக் கற்கள்; அகற்றப்பட வேண்டிய வர்கள் என்பதை நீங்களே நிரூபித்து விட்டீர்களே? தலைவர்தான் ஆள வேண்டும் என்று இதைச் செய்யவில்லை.

போராட்ட இலக்கு தமிழீழம் என்பதாக மட்டும் இருக்க வேண்டும் என்றே இதைச் செய்துள்ளார். ஈரோஸ் இயக்கத்தைப் புலிகள் அப்படியே



படிப்பகம்

www.padippakam.com

உள்வாங்கிக் கொண்டதும் குட்டிமணி-தங்கத்துரை-ஜெகன் ஆகியோர் மாவீரர் பட்டியலில் இடம்பெற்றிருப்பதும் இதற்குச் சான்று. உங்களுக்கு வேலை மெனக்கெட்டு இதைச் சொல்ல வேண்டிய அவசியம் புலிகளுக்கு இல்லை! ஆனால் 'இப்போது நீங்கள் போடும் ஊடக ஊதல்கள் உங்கள் சுயரூபங்களை நீங்கள் காட்டிய காலப்பகுதிகளை அறியாத இளைஞர் களைக் குழப்பும். அதனால்தான் ஒரு சாதாரணக் குடிமனாக உங்களால் மக்களுக்கு நடத்தப்பட்ட கொடுமைகளில் சின்னஞ்சிறு பகுதியை மட்டும் எடுத்துச் சொன்னேன். இதோ உங்கள் மாபெரும் தலைவன் இறந்தான் என்று கேலிச் சித்திரம் வரைகிறீர்கள், துள்ளிக் குதிக்கிறீர்கள். களத்தில் சாதனைகள் புரிந்து தனி அரசையே நிறுவிக் காட்டியவர். தன் மக்களுக்கு உங்கள் எஜமானர்களால் வன்னியில் நடத்தப்பட்ட கொடுமைகளைப் பார்த்து மனமுடைந்து போய்விட்டார். தன் வீரர்களின் துப்பாக்கிகள் இனிமேலும் சத்தம் எழுப்பமாட்டாது என்று கூறிவிட்டார். அர்ப்பணிப்பும் வீரமும் நிறைந்து களமாடி சாதனை படைத்தவர்கள். ஆட்கடத்தலும், கப்பம் கோருதலும் வேறு சுகங்களும் என்று வாழ்ந்த உங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள் - தமிழர்களுக்காகப் போராடத் தயாரான எல்லா அமைப்பு களுடனும் சேர்ந்து அரசியல்ரீதியான போராட்டத்தை முன்னெடுப்போம் என்று. முடியுமா உங்களால்? என்ன செய்யப் போகிறீர்கள்? ஒரு காலத்தில் சிங்கள இராணுவத்திற்குக் காட்டிக் கொடுத்தே நன்றாக வாழ்ந்த உங்களை யும் தூக்கி எறிந்துவிட்டுக் கருணாவை மட்டும் தலையில் வைத்துக் கொண்டாடுகிறது.

சிங்கள அரசுக்கு இனிமேலாவது குரல் கொடுப்பீர்களா? இதோ வன்னியில் இருந்து வந்து முகாம்களில் கிடக்கிறோம்... வதை முகாம் களில் வதை படுகிறோம். கிளிநொச்சியில் வீடுகளுக்குள் உணவு உடை இரண்டுமே இன்றிக் கட்டிப்போடப்பட்டிருக்கிறோம்! பொலனறுவையில் எங்கள் உடல் உறுப்புகளை எடுப்பதற்காகக் கொல்லப்படுகிறோம். நீங்கள் முதன் முதலில் ஆயுதம் எடுத்ததன் நோக்கத்தில் சிறிது என்றாலும் நிறைவேற்ற எமக்காகக் குரல் கொடுப்பீர்களா? எங்களை முகாம்களை விட்டு எங்கள் வீடுகளில் குடியேற அனுமதிக்குமாறு குரல் கொடுப்பீர் களா? குறைந்த பட்சம் புலிகளால் எங்களுக்குக் கிடைக்கப்போகும் சிறு உரிமைகளை உங்கள் கூற்றுப்படி புலிகள் அழித்துவிட்ட காரணத்தால் புலிகளின் எதிரிகள் எல்லோருமாகவாவது ஒற்றுமையாக நின்று பெற்றுத் தருவீர்களா? முடியுமா உங்களால்?

முடிந்தால் நன்றி. முடியாவிட்டால் விடுங்கள். ஏனெனில் நாங்கள் போரின் வலிமையையும் வதையையும் சுமந்த உடலையும் மனத்தையும் மட்டுமல்ல அந்த மனத்துக்குள் விஸ்வரூபமெடுத்து நிற்கும் எங்கள் தலைவனையும் சுமந்து நிற்கிறோம். எங்கள் மனங்களுக்குள் மட்டுமல்



படிப்பகம்

www.padippakam.com

லாது சற்று உண்மையுடன் உற்றுப் பாருங்கள்... உளவுறுதியுடன் சாதித்துக் காட்டிய எங்கள் பெருந்தலைவனின் சிரித்த முகம் உங்கள் மனங்களுக் குள்ளும் இருக்கும். பிரபாகரன் என்பது வெறும் இரத்தமும் சதையும் கொண்டு உயிர் சுமந்து வாழும் ஓர் உடம்பல்ல, ஒரு துப்பாக்கிக் குண்டில் அழிந்து போவதற்கு! அது எங்களின் மந்திரச் சொல். அவர் மரணம் இல்லாப் பெருந்தலைவர். உங்கள் அத்தனை துரோகங்களையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும் பெரும் நெருப்பு! மீண்டும் எங்களை எழுந்து நிற்க வைக்கும் உத்வேகம். நீங்கள் கூறுவதுபோல அவர் இல்லையென்றாலும் கூட எங்களுக்குள்ளே விஸ்வரூபம் எடுத்து நிற்கும் எங்கள் தலைவன் எங்களை வழிநடத்துவான். அவருக்கு வந்துள்ளது அஞ்ஞாதவாசமோ அஸ்தமனமோ எதுவானாலும் அவர் பேசாமல் இருந்தே எங்களை வழிநடத்துவார். எங்கள் உரிமைகளை நிச்சயம் நாங்கள் வென்றெடுப்போம்!

*சமகாலச் சந்ததிகள்* பரந்தன்
*ஜூன் 03, 2009*



படிப்பகம்

www.padippakam.com

# அன்பு உறவுகளுக்கு ஒரு வேண்டுதல்

'சுதந்திரத் தமிழீழம் மலர வேண்டும். மீண்டும் புலம்பெயர்வாழ் தமிழீழ மக்கள் அனைவரும் ஒருமனத்துடன் தானைத் தலைவன் தம்பி பிரபாகரன் வழியில் இன்றைய கட்டாயத்தை உணர்ந்தவர்களாய் அணிதிரண்டு செயல்பட வேண்டும். காலத்தின் கோலமாய்த் தேவை அறிந்து செயல்பாடுகளின் ஒன்றான நமது தலைவரின் வாக்கின்படி போராட்ட வடிவங்கள் மாறலாம். விடிவு என்கிற விடுதலை கிடைக்கும் வரை போராட்டம் ஓயாது' என்னும் வேண்டுதலின்படி புலம்பெயர் மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழீழ மக்களும் சாத்வீகப் போராட்டங்களில் பங்குகொள்வதுடன் ஒவ்வொரு தமிழீழ மகனோ மகளோ தாங்கள் வாழ்கின்ற நாட்டின் அரச சட்டங்களை மதித்தவர்களாய்ப் போராடுவ துடன், அந்தந்த நாட்டின் நீதி- நிர்வாகங்களிடம் தமது தாய் நாட்டின் இன்றைய நிலை பற்றி எடுத்துக் கூறுங்கள். விசேசமாகத் தமிழீழ மக்களின் இன்றையத் தேவை என்ன என்பதை உணர்ந்தவர்களாய்ச் செயல்படுங்கள். உலகில் போராடாமல் சுதந்தரம் கிடைத்த நாடு என ஒன்றுமே இல்லை. ஆனால் அன்று அனுராதபுரத்தைத் தமிழ் மன்னன் எல்லாளனிடம் யுத்தத்தில் துட்டகமுனு என்னும் சிங்களவன் மீட்டதாகச் சரித்திரத்தை எழுதிவைத்திருக்கிறான்.

இதன் பின்னும் அனுராதபுரத்தின் முதலாவது பட்டனசபைத் தலைவன் உட்படப் பத்து நகரசபை உறுப்பினர்களாகத் தமிழர்கள் தெரிவு செய்யப் பட்டவர்கள். இவை எல்லாம் மறைக்கப்பட்ட சரித்திரம். இன்னும் கண்டியை ஆண்ட தமிழன் சிறிவிக்கிரமன் என்கின்ற இராயசிங்கன். கண்ணுச்சாமியின் அரண்மனைதான் தலதா மாளிகை. இவை மறைக்க முடியாத உண்மைகள். அலையென எழுந்த சுவடுகளைத் தேடித் தமிழீழ மண்ணின் சுதந்திரத்திற்காகச் சாத்வீக வழியில் செயல்பட வாருங்கள் அன்புத் தமிழ் உறவுகளே! உங்கள் மனக்கண்களைத் திறந்து பேசுங்கள். தமிழீழ வரலாற்றில் சரித்திரம் படைத்த விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திய தலைவனின் கரத்தைப் பலப்படுத்திய இனிய உறவுகளே! நாம் இந்த வேளையில் சோர்ந்துவிட்டால் எதிரி பலம் அடைந்துவிடுவான். சர்வதேசத்தில் இன்று தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் நியாய மான ஒரு பிரச்சினை எனச் சர்வதேசம் துணிந்து கூறுகிறது. இப்படியான



படிப்பகம்

www.padippakam.com

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டிய வரலாற்று முக்கியத்துவம் ஒவ்வொரு தாயகத் தமிழனுக்கும் உண்டு என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். நாம் அறியோம் என்று நாம் வாழ்வோ மானால் நம்மைவிடத் தேசத்துரோகிகள் இருக்க முடியாது!

எங்கள் சொந்த மண்ணில் அபலைகள் ஆக்கப்பட்டு நிர்க்கதியில் தள்ளப்பட்ட நிலையில்தான் நாம் புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் சிதறிப்பரவி அகதிகளாய் வாழும்நிலையில் சிங்களம் எங்களை விரட்டியதை மறக்க முடியாது! புலம்பெயர் தேசத்தின் உறவுகளே! நாம் தமிழர். அதனிலும் மேலாக எழுதினால் 'தமிழீழத் தமிழன்.' வரலாற்றுக் காலம் வாழ்ந்த தமிழன், பண்டைய தமிழன். அவன் பண்பாடு என்கின்ற உலகின் ஒளியான வாழ்வியல் இலக்கியத்தைப் பரப்பிய சமயங்களின் சன்மார்க்கத்தை உயிரென மதித்து வாழ்ந்த இமயவரம்பன். அந்த இமயத்தின் உச்சியில் கொடி ஏற்றிய வீரத்தமிழன். அந்த வரலாற்றை மீண்டும் சரித்திரமாக மாற்றிய வீரமுடன் இறுதிவரை போராடிய வரலாற்று நாயகன் நம் தலைவன் யாழ் கோட்டையில் தமிழீழத்தின் தேசியக் கொடியை ஏற்றிப் புகழ் பரப்பியதை மறக்க முடியுமா?

இல்லை, மண் மீட்கப்பட்டு எங்கள் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப் படும்போதும் பல ஆண்டுகாலம் தமிழ்த் தேசிய நிழல் ஆட்சி நடந்ததை யும் சிங்களமும் பாரதமும் அறியாத நிகழ்வல்ல. ஆனால் இன்று எமது உறவுகள் புதைக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்ட நிலையில் எஞ்சிய உறவுகளைப் பூட்டிய சிறை போன்ற முள்கம்பி வேலிக்குள் அடைக்கப் பட்ட நிலையில் நாம் அமைதிகாத்தால் உண்மை உறங்கிவிடும் அபாயம் தென்படவில்லையா? புலம்பெயர் உறவுகளே! அனைத்துத் துறைகளிலும் விடுதலையின் மூச்சாகக் கரங்கொடுத்த உணர்வாளர்களே! காலம் அறிந்து செயல்படுங்கள். எந்தவித மிரட்டலுக்கும் அஞ்சாத தமிழர்களாய்ச் சாத்வீக வழியில் செயல்பட எழுந்து வாருங்கள். தேசியத் தலைவர் கரத்தைப் பலப் படுத்திய உறவுகளே! அந்த மானமிகுவீரனின் வழியில் நின்று தமிழீழம் மலரும்வரை போராட வாருங்கள். நாடு கடந்த தமிழீழப் பிரகடனம் சிறந்த வழியென அடியேனும் எண்ணுகிறேன். உங்கள் கருத்தையும் ஒத்துழைப்பையும் தமிழீழ மண் விடுதலைக்காய்ச் செயல்படச் சாத்வீகப் போராட்டங்களில் பங்குபற்றுங்கள். இளையோரின் கைகளைப் பலப் படுத்துங்கள். புலத்தில் எல்லோரும் கைகோர்த்து நில்லுங்கள்.

தமிழரின் தாகம் - தமிழீழத் தாகம்.

நன்றியுடன்

ஆகஸ்ட் 25, 2009 — புங்கையூரான்



படிப்பகம்

www.padippakam.com

# 'அந்த ஐம்பது நாட்கள்'

உலகத் தமிழரெல்லாம் எட்டுத் திசைகளிலும் நின்று கூடிக் கதறிய நேரம். தமிழரல்லாத உலக அரசுகள் எல்லாம் அரசியல் வரலாறு காணாத ஒற்றுமையுடன் இனப்படுகொலைக்கு ஆசிர்வாதம் வழங்கிக் கொண்டிருந்த காலம். கணத்துக்குக் கணம் செய்திகள் மாறின. களங்கள் மாறின. கையறு நிலையில் கொடி உயர்த்திக் குரல் எழுப்பி நின்ற பாரிஸ் தமிழர்களுடன் நானும் ஒருவன். என் வாழ்நாளில் மறக்க முடியாத நாட்கள். உணர்வு மையத்தின் ஆழத்தில் இயங்கிய காலம். இதன் ஊடாக நான் விளங்கிக் கொண்ட சிலவற்றில் ஏதாவது ஒன்றை எழுத்துருவில் தருமாறு நண்பன் கவிஞர் கிறிஸ்ரியன் வேண்டுதலுக்கு இணங்க அதைத் தருகிறேன். ஆரம்ப நாட்கள் சிங்கள இராணுவத்திற்குக் கிளிநொச்சியில் கருமாதி செய்வோம் என நம்பிய காலம். வன்னியிலிருந்து அறிவித்தல் வருகின்றது மக்களை ஒன்றுதிரட்டி வீதியில் இறங்கி போர் நிறுத்தம் கோரிப் போராட்டம் நடத்துமாறு. ஆனால் நாங்களோ பரபரப்புச் செய்தியிலும் பழிவாங்கும் ஆவலிலும் இறுதி யுத்த நற்செய்தியிலும் மயங்கி நின்றோம்.

வன்னியின் வேண்டுதலுக்கிணங்க றீப்பப்லிக் சுதந்திர சதுக்கத்தில் ஐம்பதுக்குட்பட்ட உணர்வாளர்கள் ஒன்று கூடினோம். கொடியை உயர்த்திப் பதாகையை நிமிர்த்தினோம். நூற்றுக்கு மேற்பட்ட போலீஸ் காரர்கள் வந்தார்கள். அதிரடிப்படை உளவுத்துறை உட்பட. இந்த இடத்தில் போராட்டம் நடத்த அரசு அனுமதி தரவில்லை; தயவு செய்து கலைந்து போய்விடுங்கள் என மிகவும் மரியாதையுடன் வேண்டினார்கள். நாங்கள் அசையவில்லை. மறுபடியும் 'அங்கு நிற்கக்கூடாது; நின்றால் வலிமை யைப் பயன்படுத்த நேரிடும்' என உரத்த குரலில் கட்டளை இட்டார்கள்.

நாங்கள் உணர்ச்சி வசப்பட்டு அவர்களுடன் வாதாடத் தொடங்கி னோம். ஒருசில நிமிடங்களில் அவ்விடத்தில் இருந்து தூக்கி எறியப் பட்டோம். இதற்குப் பின்னர் வீதிப்போராட்டங்கள் நடைபெற்றன. அனுமதியும் கிடைத்தது. வன்னியில் களநிலை மாறமாற மக்களின் கொதிநிலை உச்சத்தைத் தொட்டது. பாஸ்பரஸ் குண்டு போடப்பட்டு இரண்டாயிரம் மக்கள் இறந்துவிட்டார்கள்! வீடுகளில் இருக்காதீர்கள், நாடாளுமன்றத்தில் கூடுகின்றோம்; உடனடியாக வாருங்கள் என டெலி


படிப்பகம்

www.padippakam.com

போன்கள் கதறுகின்றன. மக்கள் அலை அலையாக அவ்விடம் நோக்கி குவிகின்றார்கள்! பிரான்ஸ் நாட்டில் அதி உச்ச பாதுகாப்பு நிறைந்த அரசவளாகம். யாரிடமும் அனுமதி கோரவும் இல்லை, தரப்படவும் இல்லை! இங்கே நாங்கள் பெரும்பான்மையாகவும் போலீஸார் சிறுபான்மையாகவும் காட்சி அளித்தார்கள். அன்றிலிருந்து போலீஸ் எமக்குப் பாதுகாப்பும் தந்து அனுமதியும் அளித்தது.

இந்த நிகழ்வுகளில் இருந்து நான் யதார்த்த உண்மை ஒன்றைப் புரிந்து விட்டேன். ஒன்றுபட்ட மக்கள் போராட்டத்தின் முன் அரசு இயந்திரம்கூட அடிபணியும். இந்தப் புரிதல் எதிர்கால விடுதலை நோக்கிய பயணத்திற்கு அச்சாணியாக வேண்டும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

நேசன்
*ஆகஸ்ட் 15, 2009*



படிப்பகம்

www.padippakam.com

# ஏகோபித்த விருப்பங்கள்

கடந்த ஐம்பது நாட்களுக்கு மேலாக பிரான்ஸ் வாழ் தமிழ்மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த 'அடங்காப் பற்று' போராட்டம் நாளை மே 26, 2009 செவ்வாய்க் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பிரான்ஸ் யுனெஸ்கோ முன்பாக என அறிவிக்கப்பட்டது. இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றொழித்துப் பல்லாயிரக்கணக்கானவர் களை அங்கவீனர்களாக்கிய சிறிலங்கா இனவாத அரசினைச் சர்வதேச நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுத்தக் கோரியும், தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமான தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்களின் காப்பராக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்திருக்கும் பயங்கரவாதத்தின் தடையை நீக்குமாறும் மனிதாபிமான பணியினைத் தமிழர் தாயகப் பகுதிகளில் சர்வதேச மனிதநேய அமைப்புகள் சுதந்திரமாகவும் உடனடியாகவும் பணிபுரிய அனுமதியளிக்க வேண்டும் என்றும், பயங்கரவாத சிறிலங்கா அரசை சர்வதேச நாடுகள் வற்புறுத்த வேண்டும் என்ற அறிவித்தலை ஏற்று யுனெஸ்கோ முன்பாகக் கூடினார்கள். கொடி தூக்கி கோஷங்கள் எழுப்பி நின்றனர். ஈவிரக்கமின்றி நசுக்கிவிட்ட தாக சிங்களப் பேரினவாத அரசும் துணைநின்ற வல்லரசுகளும் நினைத்து விட்டன.

மேலும் பயமுறுத்தி முள்வேலிச் சிறைகளுக்குள் அடக்கி ஒடுக்கி யுள்ளனர். நாஜிகளுக்கும் பாசிசத்திற்கும் வேற்றுமை இல்லாத இலட்சணத்தைக் கொண்டிருந்தனர். இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி தனது புதிய கொள்கையை 1922இல் அறிமுகப்படுத்தினான். இதன் பெயர் பாசிசம் என்பதாகும். பண்டைய ரோமானியர்கள் அதிகாரத்தைக் குறிக்கும் வகையில் பாசிசம் என்னும் சின்னத்தை வைத்திருந்தனர். பாசிசம் என்பது ஒரு கோடரியைச் சுற்றி பல இரும்புக் கம்பிகள் கட்டப்பட்டன. மக்கள் அதிகாரிக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும் சர்வாதிகாரச் சின்னம் அது. கோடரி தலைவனையும் கம்பிகள் மக்களை யும் குறிக்கும். இதுவே பாசிசம்!

எம்மக்களை இன அடக்குமுறையும் இனஅழிப்புமான கொடூரத்தால் நசுக்கி, மிச்சமுள்ளதையும் ஈவுஇரக்கமின்றி எந்தவித சாட்சிகளும் இல்லாதவாறு அழித்துள்ளனர்! தமிழரின் உள்ளத்தில் சீற்றமும் பகைமை



படிப்பகம்

www.padippakam.com

யும் பொங்கிக் கொண்டிருக்கின்றன. சிங்களத்தின் கொடுமைக்கு அஞ்சிய தமிழனின் உள்ளக்கிடக்கையின் உணர்ச்சிக் கொதிப்பு வெளிவராமல் அடங்கியும் அடக்கப்பட்டும் கிடக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மாவீரர் களின் தியாகத்தாலும் மக்களின் முழுநம்பிக்கையாலும் கட்டப்பட்ட உன்னதமான உறுதியான நம்பிக்கை தளராத கோட்டை அவர்கள் கண்முன்னே இடித்துத் தகர்க்கப்பட்டு எரித்துச் சாம்பல் மேடாக்கப்பட்ட புழுதியும் இரத்தமும் பறந்து ஓடிய காட்சியில் ஏங்கிப்போய் நிற்கிறார்கள்! இன்று எல்லா நிர்ப்பந்த நிகழ்ச்சிகளுக்கும், இகழ்ச்சிகளுக்கும் மானபங்கப் படுத்தலுக்கும் அவமானங்களுக்கும் ஆளாகி நிற்கிறார்கள்.

இந்தப் போக்கு சிங்களத்தின் கழுத்தில் கத்தி விழுவதற்கான அடுத்த கட்ட நடப்பாக இருக்கலாம்! மக்கள் இப்போது கண்டுள்ள சரணாகதி திரும்ப அறுக்கும் கூர்வாளாக மாறும்போது பேரினத்தின் நெறி தவறிய போர் முறையின் முழுப் பொய்யும் சர்வதேசியத்தின் முன் தோலுரித்துக் காட்டப்படும். இந்தக் கட்டமைப்பின் கடமையுணர்வில் முழுப்பங்கும் புலத்துவாழ் மக்களின் எழுச்சியில் எழுந்து நிற்கும். யூத இனம் எந்த நாட்டையும் தனது சொந்த நாடு என்று சொல்லிக்கொள்ள இயலாத நிலையில் உலகமெங்கும் சிதறுண்டுக் கிடந்தாலும் தங்களது பகைவரை எதிர்த்துப் பழிவாங்கும் சக்தியைப் பெற்றவர்களாக 'ஒற்றுமையாக' மிளிர்ந்தனர். 'இந்த வழியைத்தான் புலத்துவாழ் தமிழர் பின்பற்ற வேண்டும்.' நமது ஒற்றுமை மிகப்பெரும் சக்தியாக எழும்போது ஆளும் வர்க்கத்தினரின் அடக்குதலிலும் நெருக்குதலிலும் இருந்து அடிமைப்படும் இனம் மீட்கப்படும். இந்த ஆண்டு 2009 தொடக்க காலத்து ஆளும் வகுப்பினரின் பயங்கரவாதத் தாண்டவத்தின் பின்பும் தமிழன் ஒத்துப் போக முடியுமா என்பதை...?

சர்வதேசத்துச் சமாதான மேதாவிகள் சிறிலங்காவின் நீதியற்ற செயல்கள் மேலும் மேலும் தொடர்வதைத்தான் விரும்புகிறார்கள்! இந்த நிலைமை நீடிப்பதற்கே உதவியும் செய்கின்றார்கள். சமாதானம்.. சமாதானம் என்று வாய்ப்பந்தல் போடும்போது சிறிலங்கா பயங்கரவாத யுத்தத்திற்கு ஆயுதங்களையும் ஆதரவையும் கொடுத்துத் தமிழனை அழித்துவிடும் சந்தர்ப்பம் வழங்குகிறது! இதைத்தான் எமது மக்கள் இங்கு யுனெஸ்கோ முன்பான வேண்டுகோளாகச் சாந்தமாக நின்று கேட்டனர். சுடுகாடாகக் கிடக்கும் தமிழர் பிரதேசத்தை வளப்படுத்தும் தீவிர சுரண்டல் முறையும் சிங்களக் குடியேற்ற வசதிகளும் தாராளமாக இடம்பெறத் தமிழரின் கேட்பாரற்றத்தனம் இல்லாத அசட்டுத் தனம்தான் சிங்களிசம் தங்களிடத்தை மேற்கொள்ளும் காரணியமாக மேலோங்கும்.

காலத்தின் நிலைக்கு இந்தச் சர்வதேசம் வழங்கும் மௌன அங்கீகாரம் 'ஓர் இனத்தின் மீது செலுத்தும் துஷ்பிரயோகம் என்பதைக் கேட்காது



படிப்பகம்

www.padippakam.com

விடும்.' தனிச் சிறப்பு மிக்க தமிழர் அனைத்திலும் மேலோங்கி வருவதைச் சிங்களப் பேரினவாதம் விரும்பவில்லை. ஆகவே ஆட்சியைத் துன்புறுத்தல் வழிகளில் திருப்புகின்ற போதினில் தனிநலம் பேணு பவர்கள் தங்களுடைய பிரியங்களையும் நலன் ஈடுபாடுகளையும் குறைத்து இனத்தின்பால் நிற்கும் நல்ல விடயங்களை ஆராய்ந்து அதற்கேற்ப வழிகளிலும் கவனம் செலுத்துவது நல்லது. இதனால் இடைவிடாது போராட்டங்களும் ஊர்வலங் களும் உங்கள் குரல்கள், உங்கள் தோள்கள், உங்கள் கோஷங்கள், உங்கள் உரிமை, உங்கள் சுதந்திரம் என நடைபெற்றாக வேண்டும். ஆனாலும் நீங்கள் நிற்கும் நிலம் எங்கள் நிலம். மக்களாட்சியில் மலர்ந்த புரட்சியின் புதிய பூமி பிரெஞ்சு தேசம். வன்முறை எழாதமட்டில் நாங்கள் உங்களுக்கு வழிகளையும் வீதிகளையும் திறந்து விட்டுள்ளோம். உங்களது பண்பும் சாந்தமுமான அனைத்துவித நற்பணிகளுக்கும் உங்கள் தேசம் மகிழ்ச்சியில் குளிக்கும்போது எங்கள் கோஷம் வாழ்த்தாக ஒலிக்கும். அந்தநாள் மலர வேண்டி நிற்கின்றோம்!

★★★

*எழுக....எழுக*

*உலகத் தமிழினமே எழுகவே!*

*தமிழரின் தாகத்தை உலகிற்குக் கூறவும்*

*தமிழரின் தாயகத்தைத் தமிழன் எப்படியான ஜனநாயக வழியில்*

எடுத்தியம்பி நிற்கிறான் என்பதைப் பறையடித்துக் கூறவும் உலகு தழுவிய கருத்துக்கணிப்பு எனும் வாக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இந்த வாக்கெடுப்பு 'பிரான்ஸ் தழுவிய கருத்துக்கணிப்பு.'

'2009 மார்கழி 12,13ஆம் தேதிகளில் நடந்து 99 வீதமான தமிழர்கள் வாக்களித்து இறைமையுள்ள சுதந்திரமான தனித் தமிழீழம்தான் எங்கள் விருப்பம்' என்று உறுதியோடும் சுதந்திரத்தின் சுயநிர்ணய வலிமையோடும் உலகிற்கு எடுத்துக்கூறி வரலாற்றுப் பதிவாகவும் வரலாறு காணாத அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். இந்த வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் வெளிப்பாட்டை மக்கள் முன்வைத்து பிரசாரங்களையும் அயராத சேவை யினையும் மேற்கொண்ட அனைவரும் பெருமைக்கும் போற்றுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

'தமிழீழ மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப் பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.'



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழத் தேசியத்தலைவர்

'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்'

அடுத்த பெரும் அறிவிப்பு 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்'. இப்பிரகடனம் மிகப் பெறுமதி வாய்ந்தது. இக்கைங்கரியத்தை உலகத் தமிழன் உண்மையுடனும் உரிமையுடனும் உணர்வுடனும் வரவேற்கிறான் அனைத்துலக சட்டமரபு நெறிகளுக்கு அமைவாக. தாயகத்திலும் வெளிநாடுகளிலும் பரவி வாழும் தமிழீழத்தவர்கள் தற்பொழுது 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' ஒன்றினை உருவாக்குதல் இன்றியமையாதது எனக் கருதுகின்றனர்: அந்த அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சியை செயற்குழுவின் தலைவர் சட்டத்தரனி வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். நாம் அதனை வழிமொழிந்து வரவேற்போம்.

இலங்கைத்தீவின் தமழ்மக்களாகிய நாம் தனித்துமான தேசியமும், பாரம்பரியமும், சுயநிர்ணய உரிமையும் கொண்டவர்கள் என்ற அடிப்படிடையில் இத்தீவின் வடக்கு கிழக்கு நிலப்பரப்பின் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தனித் தமிழீழ அரசு உருவாக வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

## தரங்களும் தவறுகளும்

சிறுசிறு அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. 14.04.2009 அன்று உலக அதிசயமான ஈபில் கோபுரத்தின் இடதுபுறமாக உள்ள பூங்காவிற்குள் சிங்களக் காடையர்கள் குழு திட்டமிட்டு நுழைந்து, தருணம் பார்த்து நின்ற வேளையில் இளைஞர்களுக்குக் கிடைத்த நம்பகமானத் தகவலை அடுத்து சிங்களக் காடையர்கள் துரத்திக் கலைக்கப்பட்டனர். பாரிஸ் புத்தவிகாரை உடைக்கப்பட்டதாகவும், புத்தத் துறவி ஒருவரைத் தமிழர் ஓட ஓட விரட்டியதாகவும் சிறிலங்கா சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் பொய்ப் பிரசாரமாகும்.

இதன் தாக்கத்தின் விறைப்பாக லாக்கொரணையில் உள்ள இந்துக் கோவில் தாக்கப்பட்டது. இரண்டு சிங்களக் காடையர்கள் பெட்ரோல் குண்டு எறிந்து சேதம் விளைவித்தனர். பிரெஞ்சுப் போலீசார் இருவரையும் கைது செய்திருந்தனர். வில்லியலேவல் எனுமிடத்திலிருந்து சிங்களக் காடையர் குழு பயங்கரமான ஆயுதங்களுடன் வெள்ளை வாகனம் ஒன்றில் புறப்பட்டபோது இடையில் மடக்கிப் பிடிபட்டது. றீப்பப்பிலிக் இரவு பத்துமணிக்குப் பல்லாயிரக்கணக்கான தமிழர் வீதிகளில் குந்தி யிருந்து தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தியபோது பாஸ்ரில் நோக்கிப் போகும் பக்கமாக நின்ற உல்லாசப் பயணிகள் பேருந்து ஒன்றின் சக்கரங் களுக்குத் தீ வைத்தது. இதன் சூத்திரதாரர்களும் கைது செய்யப்பட்டனர். 15ஆம் தேதி லாச்சப்பலில் நடந்த உண்ணா நோன்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட அன்று மக்கள் வீதிகளில் இறங்கி நின்றனர்! இந்த நிலை நீடித்திருந்த தருணம் கறுப்பு இனத்தவர் ஒருவர் ஒட்டுக்குழுவினரின் தூண்டுதலால் வாகனத்தை அத்துமீறி சனநெரிசலுக்குள் நுழைத்தபோது தகராறு ஏற்பட்டது. இதன் பின்புலத்தை சரியான முறையில் போலீசாரும் விசாரிக்கவில்லை. தமிழரும் கண்டுகொள்ளவில்லை! லாச்சப்பலில் இடம்பெற்ற கடை உடைப்புகள், வாகன எரிப்பு, கடைகளில் கப்பம் வேண்டுதல் என நடந்தேறி வருகின்றன. இத்தனைக்குள்ளும் சங்கிலிப் போராட்டம், மெழுகுத்திரிப் போராட்டம், சிறிலங்கா தூதரகம் முன் போராட்டம், இந்தியத் தூதரகம் முன் போராட்டம், சீனத் தூதரகம் முன் போராட்டம், நாடாளுமன்றம் முன் போராட்டம், நகரசபைகள் முன் போராட்டம், நீதிவேண்டி மாதத்தில் இரண்டு மூன்று முறையெனப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டங்களும் எழுச்சியான ஊர்வலங்களும் இடம்பெற்றவண்ணமாக இருந்தன. வெள்ளிக்கிழமைகள்தோறும் மெழுகுத்திரி அஞ்சலி நிகழ்வுகள் நடந்தன. இப்படி மௌனத்தில் மௌனம் புதைந்து கொலைகளையும் சிறைக் கொடுமைகளையும் பார்த்துப் பார்த்து சிறிலங்காவின் பொய்ப் பரப்புதலை முறியடிப்போமா என்று நாங்கள் நடத்திய போராட்டங் களைக் கேட்க வேண்டிய நேரம் இப்போது நம்மைநோக்கி வந்துள்ளது. இதை இன்னமும் உணராத புலத்துத் தமிழன் இப்போது தன் கவனத்தை வேறு திசைப் போக்கில் கொண்டுபோய் விட்டான். மிகக் கவலையாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com




தமிழர் வரலாற்றின் சிறப்பு மிக்க தேசியக்கொடி




உறவுகளுக்காகக் கொடியேந்திப் போரிடும் சந்ததியினர் - இராணுவப் பாடசாலை முன்



படிப்பகம்

www.padippakam.com



தமிழனின் ஆணை கிடைக்கும், தலைமுறை வாழ்வு செழிக்கும்



தாயக உறவுகளைக் காப்பதற்காக ஓடுகின்றனர்



படிப்பகம்

www.padippakam.com



ஊர்வதேசத்தின் முன் நீதிவேண்டி நிற்கும் தலைமுறை




போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும்வரை போராடுவோம்



படிப்பகம்

www.padippakam.com



கிளிச்சிசுவா நகரப்பிதா



உறவுகளைக் காக்க உண்ணா நோன்பிருக்கும் நான்கு இளைஞர்கள்



படிப்பகம்

www.padippakam.com



தமிழினப் படுகொலையை நிறுத்தும்படி வீதியில் கிடந்து புலம்புகின்றனர்



அதிரடிப் படையினரால் போராட்ட இடம் அனுமதி மறுக்கப்பட்டுக் கலைக்கப்படும் காட்சி



படிப்பகம்

www.padippakam.com



மனித உரிமை மீறல் நடக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உலக நாடுகளுக்கு உரிமை உண்டு. (லாச்சப்பல்)



லாகோர்னோவ் நகரப்பிதா உரையாற்றுகிறார்



படிப்பகம்



இடப்பெயர்வு என்பது கொடூரமானது என்பதை 1995 ஒக்டோபர் 30 யாழ் மக்கள் இடப்பெயர்வு நிரூபித்தது.



பிரான்ஸ் தமிழர் தங்களுடைய ஒட்டுமொத்த உணர்வையும் வெளிப்படுத்திய ஊர்வலம்



நீதி வேண்டி இரவுபகலாய் இருக்கும் காட்சி




வன்னி படுகொலை கண்டு

www.padippakam.com



வன்னி படுகொலையைக் கண்டித்து போராட்டம்.



தமிழீழ மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாட்டில்



படிப்பகம்




தமிழீழத்தில் பிஞ்சுக் குழந்தைகள் கொல்லப்படுவதை விளக்குகின்றனர்.



மேதின ஊர்வலத்தில் தமிழரின் கலைக்கோலம்

www.padippakam.com



அரசியல், சுதந்திரம், பொருளாதார சமத்துவம், சமூக சகோதரத்துவம் என்னும் விழுமியங்களை மனித சமுதாயத்திற்காக உவந்தளித்த பிரஞ்சு தேசத்தின் தலைநகராம் பாரீஸ் மாநகரில் ஏப்ரல் 18, 2009 அன்று கூடியுள்ள ஈழத்தமிழ்ச் சங்கங்களின் பிரநிதிகள் ஆற்றிய உரையைக் கேட்கும் மக்கள்.




தலைமுறையின் தலைமேல் விடுதலைப் போராட்டம்



படிப்பகம்



தலைவனின் ஆணை கிடைக்கும் தலைமுறை வாழ்வு செழிக்கும்




வாக்குறுதியை நம்பி நிமிர்ந்து நிற்கும் கோபுரம்போல் தமிழர்கள்

www.padippakam.com



கருவறுப்பில் உருவேறிய சிறிலங்கா பயங்கரவாதம்



முட்கம்பிச் சிறைக்குள் மூன்று லட்சம் தமிழர்கள்



படிப்பகம்

www.padippakam.com




இன அழிப்பை சித்திரிக்கும் கலைப்படைப்பு




இனவிடுதலை வேண்டிக் கடவுளைப் பணிதல்



படிப்பகம்

www.padippakam.com



போர் அல்ல கொடுமையான மனிதஉரிமை மீறல்கள் அங்கே நடக்கின்றன. இத்தாயின் கண்ணீரைப் பார்த்தாயினும் தெரிந்து கொள்ளுங்கள்



சிறிலங்கா பயங்கரவாதத்தின் காட்சிப்படுத்தல் வீதி நாடகம்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



அக்கினிக்கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன்

சிங்களப்
பேரினவாதத்தின்
கோரத்தாண்டவத்தில்
தமிழர் இருப்பு, உறுதியின்
கருவறுப்பில் துடிதுடித்து
மாண்டது தமிழினம்.
இன அழிப்பினால்
இலட்சத்திற்கும் மேற்பட்ட
உச்சத்தில் பொங்கியெழுந்த பிரான்ஸ் தமிழர் போராட்டமே இந்நூலின் மூலச்சரடு. கவிஞரின் பெரும் முயற்சியால் உருவான இந்நூல் எதிர்காலச் சந்ததியின் நினைவில் இருத்தி ஆவணப்படுத்த வேண்டியதாகும். புலத்துத் தமிழரின் போராட்டக் கொந்தளிப்பு புதிய எழுச்சியின் நிகழ்வுகளாய், நெருப்புப் பிளம்புகளாய் சிதறிய வரலாற்று வடிவமாகும். சுதந்திரம் அமுக்கப்படும்போது இனம் எழுகிறது; உலகத்திடம் நீதி கேட்டு போராடுகிறது.



படிப்பகம்